FOR FAVOUR OF REVIEW

# இலங்கைத்
# தமிழ் விழா மலர்

2672

நான்காம் தமிழ் விழா — யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம்

1951

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம் :: இலங்கை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அர்ப்பணம் ... ... ... | iii |
| | தமிழ் விழா மலர் ஆசிரியர் குழு ... ... | iv |
| | ஆசிரியர் முன்னுரை ... ... ... | v |
| | தமிழ் வளர்ச்சிக் கழகம் ... ... ... — சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகச் செயலாளர் | xiv |
| | தமிழ் விழா வாழ்த்து ... ... ... — மகா வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் | xvii |
| | சென்னைப் பிரதமரின் ஆசிச் செய்தி ... ... | xviii |
| 1. | இலங்கை ஆற்றுப்படை ... ... ... — சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல். | 1 |
| 2. | மட்டக்களப்புத் தமிழகம் ... ... ... — பண்டிதர் வி. சீ. கந்தையா | 9 |
| 3. | ஈழநாடும் இந்திய சிற்பமும் ... ... — க. நவரத்தினம் | 27 |
| 4. | இந்தியா சென்று புகழ் நிறுவிய ஈழத் தமிழர் ... — வித்துவான் க. கி. நடராஜன், பி. ஓ. எல். | 41 |
| 5. | இலங்கை அரசியலும் தமிழரும் ... ... — ச. அம்பிகைபாகன், பி. ஏ. | 60 |
| 6. | இலங்கை முஸ்லிம்களும் தமிழும் ... ... — எஸ். எம். கமால்தீன், பி. ஏ. | 73 |
| 7. | தமிழ்த் தூது ... ... ... — அறிஞர் தனிநாயக அடிகள், எம். ஏ., எம். லிற். | 84 |
| 8. | தமிழ்ப் பெண்கள் பண்புள்ளம் ... ... — பண்டிதை க. இராஜேஸ்வரி அம்மாள் | 96 |

பக்கம்

9. யாழ்ப்பாணப் பூர்வீக அரசின் வரலாற்றுச் சுருக்கம் 103
— பண்டிதர் அ. சிற்றம்பலம், பி. ஏ.

10. ஈழநாடும் தமிழும் ... ... ... 122
வித்துவான்–பண்டிதர் கா. பொ. இரத்தினம், பி. ஏ., பி. ஓ. எல்.

11. கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழுக்காற்றிய பணி ... 151
— கே. ஈ. மதியாபரணம், எம். ஏ.

12. ஈழத்தின் பிரசித்த இடங்கள் ... ... 163
— முதலியார் குல. சபாநாதன்

13. ஈழநாடும் சைவமும் ... ... ... 193
— மு. ஞானப்பிரகாசம், பி. ஏ., பி. எஸ்ஸி.

14. இலங்கை நாட்டுப் பாடல்கள் ... ... 202
— மு. இராமலிங்கம்

15. யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் 211
— அ. சரவணமுத்து, காரியதரிசி

16. நான்காம் தமிழ்விழா நிர்வாகசபை, அங்கத்தவர்கள் 215

# படங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கொம்பு முறிக்கத் தொடங்கல் – மட்டக்களப்பு ... | 8 |
| 2. | மட்டக்களப்பு நாடகக் கூத்துக் குழு ... ... | 8 |
| 3. | மட்டக்களப்பு — மண்டூர்க் கந்தசுவாமி கோயில் ... | 9 |
| 4. | முஸ்லிம் பெண்கள் — 'கதிர் துவைத்தல்' ... | 9 |
| 5. | சுந்தரமூர்த்தி சுவாமிகள் ... ... ... | 32 |
| 6. | நாளந்தா கெடிகே ... ... ... ... | 33 |
| 7. | தூபாராம ஆலயம் ... ... ... ... | 33 |
| 8. | கௌதம புத்தர் சிலை ... ... ... | 56 |
| 9. | தம்பதிகள் ... ... ... ... | 57 |
| 10. | சந்திரவட்டக் கற்படி ... ... ... | 57 |
| 11. | சிகிரியா ஓவியம் ... ... ... ... | 80 |
| 12. | பாறையில் ... யானை உருவங்கள் ... ... | 80 |
| 13. | மனித வடிவமும் குதிரைத் தலையும் ... ... | 81 |
| 14. | சிவதேவாலயம்—இல. 2. ... ... ... | 81 |
| 15. | பராக்கிரமவாகு ... ... ... ... | 104 |
| 16. | இலங்காதிலக விகாரை ... ... ... | 105 |
| 17. | சிவதேவாலயம் இல. 1. ... ... ... | 105 |
| 18. | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ... ... ... | 120 |
| 19. | வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை ... | 120 |
| 20. | இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை ... | 121 |
| 21. | அ. குமாரசுவாமிப் புலவர் ... ... ... | 121 |
| 22. | சேர் முத்துக்குமாரசுவாமி ... ... ... | 136 |
| 23. | திரு. பொ. குமாரசுவாமி ... ... ... | 136 |
| 24. | சேர் அம்பலவாணர் கனகசபை ... ... | 136 |
| 25. | நியாயவாதி திரு. எஸ். நாகலிங்கம் ... ... | 137 |
| 26. | திரு. ஏ. சபாபதி அவர்கள் ... ... ... | 137 |
| 27. | சேர் வை. துரைசுவாமி ... ... ... | 137 |

| | | |
|---|---|---|
| 28. | சேர் பொன். இராமநாதன் அவர்கள் ... ... | 152 |
| 29. | சேர் பொன். அருணாசலம் அவர்கள் ... ... | 153 |
| 30. | திரு. க. பாலசிங்கம் அவர்கள் ... ... | 153 |
| 31. | டாக்டர் எஸ். எவ். கிறீன் ... ... ... | 160 |
| 32. | டாக்டர் பேர்சிவல் ... ... ... | 160 |
| 33. | கண்டி புத்த தந்தக் கோயில் ... ... ... | 161 |
| 34. | பேராதனைப் பூங்தோட்டம் ... ... ... | 161 |
| 35. | மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் ... | 168 |
| 36. | ஸ்ரீமத் விபுலாநந்த அடிகளார் ... ... | 169 |
| 37. | முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை ... ... | 169 |
| 38. | டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி ... ... | 169 |
| 39. | கதிர்காம க்ஷேத்திரம் ... ... ... | 184 |
| 40. | கோணேஸ்வரம் ... ... ... ... | 184 |
| 41. | திருக்கேதீச்சரம் ... ... ... ... | 185 |
| 42. | நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ... ... | 185 |


★

## இலங்கைத் தமிழ் விழா மலர்

**விலை ரூ. 5-00**

தபாற் செலவு சதம் **50**


கிடைக்குமிடம் :

**க. நவரத்தினம்,**
சாந்திநிகேதன்,
பி. ஏ. தம்பி லேன்,
யாழ்ப்பாணம் (சிலோன்)

# அர்ப்பணம்

தமிழர் பண்பாட்டிற்கு ஈழத் துதித்து
ழத்த உத்தமர்களுள் பெருந்தலைவராய் ஒளி
தொண்டாற்றிய சேர் பொன்னம்பலம்
மநாதன் அவர்களின் நூற்றாண்டு விழாவும்
போது நிகழ்வதால்; இம்மலரை அப் பெருந்
கயாரின் நினைவு மலராக வெளியிட்டு எங்கள்
றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## தமிழ் விழா மலர் ஆசிரியர் குழு:

திரு. சு. நடேசபிள்ளை
திரு. செ. சின்னத்தம்பி (பிரதம ஆசிரியர்)
திரு. க. நவரத்தினம்
திரு. ச. அம்பிகைபாகன்
திரு. இராஜ அரியரத்தினம்

# ஆசிரியர் முன்னுரை

தமிழ்மொழியின் தாயகமாகிய தென்றமிழ் நாட்டிலே சென்ற சில ஆண்டுகளாகத் தமிழார்வம் அலைமொழித்துப் பெருகத் தொடங்கியது.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே." என்றும்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்." என்றும்,

"தெள்ளுற்ற தமிழ்அமுதின் சுவை கண்டார்
இங்குஅமரர் சிறப்புக் கண்டார்." என்றும்,

எங்கள் புதுயுகப் புலவன் — தேசியக் கவி — பாரதியார் வீரமுழக்கம் செய்தார்.

தமிழை மறந்திருந்த தமிழுலகம் விழித்தெழுந்தது. தமிழின் மதிப்புத் தடையின்றி உயர்ந்தது; தமிழ்ப் பற்றும் பெருக்கெடுத்தது. தமிழ் நாடெங்கும், அரசியலுட்பட, எல்லாத் துறைகளிலும் தமிழ் முழக்கம் செழித்தோங்கியது.

சிறையிருந்த செழுந் தமிழும் பழந் தமிழ்ப் பண்பாடும் மீண்டும் தமிழ்நாட்டில் — மக்கள் உள்ளத்தில் சிங்காசனம் ஏறின. 'அசைவில் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல' அவதரித்தார் ஞான சம்பந்தப் பெருந்தகை என்பர் சேக்கிழார். பாரதியின் ஆவேசக் கவிதா மாரியின் விளைவாக ஆங்கில மோகம் போன்ற அயல்மொழி வேகங்களெல்லாம் அழிந்தொழியத் தொடங்கின; அடிமை மனப்பான்மையும் மெல்ல மெல்ல நாட்டைவிட்டகன்றது; தமிழர் வாழ்வு தமிழ்ப் பண்பாட்டின் வழியைத் தழுவத் தொடங்கியது.

இகழப்பட்ட பழமை புத்துயிரும் புதுவாழ்வும் பெற்றது. தமிழ்க் கலாசாரப் புதுவாழ்வின் கோலங்களும், விழாக்களும், இயக்கங்களும் தோன்றலாயின. தமிழர் பண்பாடு செழித்து நிலைப்பதற்குரிய சில தீவிர முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. உதாரணமாகத் தமிழிசை இயக்கத்தைக் குறிப்பிடலாம்.

பல்லாண்டுகளாக ஒதுக்கப்பட்டிருந்த எங்கள் அரிய தமிழிசை, தமிழிசை இயக்கத்தின் விளைவாக இன்று தமிழ் நாட்டில் தலைமைப் பீடம் பெற்று மிளிர்வது யாமெல்லாம் அறிந்ததே.

தமிழர் பண்பாட்டின் புனருத்தாரணப் பெருமுயற்சிகளுள் இதுவோர் சிறந்த வெற்றி என்பதை மறந்திடலாகாது.

நீரற்ற தடாகத்தில் ஜீவநதி புகுந்தால் அங்கு ஒட்டிக் கிடந்த கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் உயிர்த்தெழுந்து பூத்தொளிரும் பொலிவேபோல், தமிழ்நாட்டில் வாடிக் கிடந்த கலைகள் யாவும் மீண்டும் உயிர்பெற்று — உருப்பெற்று — மறுமலர்ச்சி பெற்று வரும் எழில் தரு காட்சி நமக்கெல்லாம் பெரியதோர் நம்பிக்கையை ஊட்டுகின்றது. மறுமலர்ச்சியின் பெயரால் எத்தனையோ விபரீதங்கள் நிகழ்ந்துவருவனவும் உண்மையே. அவை நிலைக்கமாட்டா. எனினும் அவற்றை விரைந்து களைய வேண்டியதும் எங்கள் கடமை. ‘நிறை மதியிற் கறையுண்டு; ஆகையால் நிலாவை வெறுப்போம்’ என்பார்போன்று எங்கள் காவியக்கோயில்களையும் பூஞ்சோலைகளையும் எரிப்பேம், அழிப்பேம் என்கிற கோஷங்கள், இடி முழக்கங்கள் மறுமலர்ச்சிப் பெயரால் எழுப்பப்பட்டிருப்பனவும் யாம் அறிந்தனவே. இத்தகை விபரீதங்கள் வாலிப உள்ளங்களைக் கவர்ந்து கவ்விக்கொண்டாற் பெருங்கேடு விளையுமாகையால், இப்பொழுது நாட்டிற் பரவிவரும் துவேஷத் தீயினை விரைந்து அவிக்கவேண்டியதும் எங்கள் கடமை.

ஆகவே இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் — இருள் பிரியும் உதய காலத்தில் — எங்கள் பழமையின் உயர்வுக்கும் தூய்மைக்கும் ஏற்ற புனிதமான நெறியில் — உலகக் கண்கொண்டு பார்க்கும் பெருநோக்கான நெறியில் — தமிழ்மக்கள் தம் மனவாழ்வு துவேஷமறியா நடுநிலைப்பான்மையில் செழித்தோங்கும் வகையில் — புதுமை செல்லல் வேண்டும், வழிப்படுத்தப்படல் வேண்டும் என்னும் கருத்துக்கொண்ட புலவர் பெருமக்களும் நாட்டுத் தலைவர்களும் ஒன்று சேர்ந்து உழைக்க எண்ணலாயினர்.

இவ்வெண்ணத்தின் விளைவாகப் பல கழகங்கள் தமிழ் நாட்டில் எழுந்தன. அவற்றுளெல்லாம் இக்காலத்தில் தலைசிறந்த தொண்டாற்றி நிற்பது சென்னைத் தமிழ்வளர்ச்சிக் கழகமேயாகும்.

தமிழ் வளர்ச்சியின் பொருட்டுச் செய்யவேண்டியனவோ மிகப் பல. ஆனால் அவசியம் செய்து முடிக்கவேண்டிய சிலவற்றிலேயே இப்போது எங்கள் கருத்து ஊன்றி நிற்கின்றது.

அறிவின் எல்லைகள் நாளுக்குநாள் விரிந்துகொண்டே வருகின்றன. ஆராய்ச்சித்துறைகளுமோ பல்கிப் பெருகி வருகின்றன. இலக்கியத்துறையில் நிகரற்ற உயர்வினைத் தமிழ் அடைந்திருந்த போதினும்,—நெஞ்சை அள்ளும் காவியங்களும் கவிதைகளும் நிறையப் பெற்றிருந்தபோதினும், விஞ்ஞானம் போன்ற அறிவியல் துறைகளில் எங்கள் மொழி வளர்ச்சியடையாதிருப்பது பெருங்குறையே. தமிழர் நாகரிகத்திற்கு இதுவோர் தாழ்வேயாகும்.

அறிவின் எல்லைகளையெல்லாம் தமிழ்கொண்டு அளக்கும் நிலைமை ஏற்படும் வரையும் இத்தாழ்வு நீங்காது. உலகிடை விரிந்து கிடக்கும் அறிவுப் பெருக்கத்தையெல்லாம் சுருக்கமாகவேனும் நம் மக்கள் அறியக்கூடிய நிலைமை இன்னும் ஏற்படவில்லை. இப் பெருங்குறையை நீக்கும்பொருட்டுச் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்யும் தொண்டுகள் மிகவும் போற்றற்பாலன.

தக்கார் மூலமாகப் புத்தம் புதிய நூல்கள் — விஞ்ஞான நூல்கள் — வெளிவரச் செய்யும் முயற்சியிற் கழகம் ஈடுபட்டு உழைத்து வருகின்றது. 'கலைக் களஞ்சியம்' என்னும் பெருநூற்றொகையை இலட்சக் கணக்கான பொருட்செலவில் வெளியிட முற்பட்டிருக்கிறது. இதுவோர் செய்தற்கரிய செயல்; பயன்தரு பெரும்பணி. உலகிடைத் திகழும் வளரும் மொழிகளோடு நம்மொழி எத்துறையினும் பின்னிடாது பெருமிதத்தோடு நிற்கச் செய்யும் இப்பேருழைப்பினுக்குக் கற்றோரும் பொருளாளரும் தங்களாலியன்ற உதவியினை உலோபியாது செய்யவேண்டும்.

மொழியினை வளம்படுத்தினால் மட்டும் போதாது. மொழிக்குரிய மக்களனைவரும் மதம், அரசியல் முதலிய காரணங்களினால் தம்மிடையே எத்துணை வேற்றுமையுடையோராய் இருப்பினும், மொழியளவில் – மொழியினை வளர்க்கும் உயர்ந்த குறிக்கோளைப் பொறுத்த அளவில் — ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மிக்கோராய் விளங்கல் வேண்டும் என்பதை உணர்ந்த இக் கழகம் ஆண்டுதோறும் தமிழ்மக்கள் வாழும் முக்கியமான இடங்களில் விழா நடத்தி வருகின்றது.

தமிழர்கள் பல மதத்தினர். சைவர்கள், வைஷ்ணவர்கள், கிறீஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் என்ற மதப் பிரிவுகள் உண்டு. அரசியற் கொள்கையிலும் பல வேற்றுமைகள் உண்டு. எனினும் இவர்களெல்லாம் தமிழன்னையின் புதல்வர்கள்; ஆகையாற் சகோதரர்கள்; தமிழ்ப் பண்பாடு என்னும் ஒப்புயர்வற்ற முதுசொத்தின் சம உரிமையாளர்;

அமிழ்தினும் இனிய அருந் தமிழ்த் தொடர்பாற் கட்டுண்ட ஆற்றல் மிக்கதோர் தனிப் பெருங்குலம். இவர்களுடைய மன வாழ்வின் செழிப்பெல்லாம் தமிழ்மொழியின் செழிப்பொன்றிலேயே தங்கி இருக்கின்றது. ஆகையால் இவர்களெல்லாம் ஆண்டுக் கொருமுறையேனும் ஒன்று கூடி, நெஞ்சக் கலப்பும் கலாசாரக் குழைவும் பெற்றுப் 'பேதம் கெடுத்தெம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளைதன் பாதத் திறம்பாடிச்' செல்வதால் நிலைத்த பெரும் பயன் விளையும் என்பதைக் கருத்திற் கொண்டே, பணச்செலவு அமைப்புச் சிரமம் முதலியவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, இக்கழகம் இவ்விழாக்களை நடத்தி வருகின்றது. தமிழுணர்ச்சி பொங்கிப் பெருகுதற்கு இத்தகைய பெருவிழாக்களினும் பார்க்கச் சிறந்த சாதனங்கள் வேறு இல்லை.

முதலாவது விழா மதுரையில் நிகழ்ந்தது. 'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் துறைவாய் நுழைந்தோர்' அனைவரும், முதலாவது விழா மதுரையம்பதியில் நடந்தது மிகவும் பொருத்தமானதே யென மகிழ்வர்.

இரண்டாவது விழா பூர்வீகச் சோழரின் தலைநகராகிய திருவாரூரிற் கொண்டாடப்பட்டது.

மூன்றாவது விழா சேரமண்டலத்தைச் சேர்ந்த கோயமுத்தூரில் நிகழ்ந்தது.

வசனநடை தந்த நாவலர் பெருமானும் யாழ்நூல் தந்த விபுலாநந்த அடிகளும் தோன்றிய நாடும், சிதைவறியாத் தூய தமிழின் தனிநாடுமாகிய ஈழமண்டலத்தில் நான்காவது விழாவினை நடத்தாது வேறு எங்குதான் நடத்தமுடியும்!

ஆகையால் இவ்விழாவினை ஈழத்தமிழர் பண்பாட்டின் தலைமைப் பதியாகிய யாழ்ப்பாணத்தில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஈழத்தமிழன்பர்களுக்கு இதுவோர் அரிய சந்தர்ப்பம்; ஈழத்தமிழர் சரித்திரம் இதுவரை காணுதவோர் அரிய நிகழ்ச்சி.

ஈழத்திற்கும் தமிழுக்கும் சங்ககாலம் தொடக்கம் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. ஈழத்தமிழர் சரித்திரத்தின் பழைய பகுதி இருள்மூடிக் கிடக்கின்றது. தமிழை வளர்க்கும் வகையில் ஈழத்து முன்னோர் செய்தனவெல்லாம் விளக்கமாய் இல்லாவிட்டாலும், கடந்த

நூற்றாண்டிலும் அதற்கு முந்திய அண்மைக் காலத்திலும், ஈழத்திலே தமிழார்வமும் தமிழ்த்தொண்டும் மிகச் சிறந்து விளங்கியமை யாவரும் அறிந்ததே.

தமிழ் வளர்க்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு உழைக்கும் சங்கங்களும் புலவர்களும் ஈழத்தில் இன்றும் உண்டு.

யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலன சபை, ஆரிய – திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, யாழ்ப்பாணத்துக் கலாநிலையம், இராமகிருஷ்ண மடம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம் முதலிய சங்கங்கள் இயன்ற தமிழ்த் தொண்டுகள் புரிந்துவருகின்றன.

ஈழத்தில் மட்டுமன்றித் தமிழ்நாட்டிலும் பெரும் புகழ்படைத்து விளங்கும் மகாவித்துவான் கணேசையர் அவர்களது தமிழ்த் தொண்டு மிகவும் போற்றவேண்டியது. தமிழ்ப் பயிரை வாடாது வளர்த்து நிற்கும் இக் காலத்து ஈழத் தமிழ்த் தொண்டர்களில் ஐயர் அவர்களையே முதல்வராகக் கருதல்வேண்டும். தமது பழுத்த புலமையின் விளைவான அரிய விளக்கங்களையெல்லாம் சொரிந்து வெளியிட்ட தொல்காப்பிய உரை வெளியீடு ஒன்றே அவர்களது பெருமைக்கும் புகழுக்கும் போதிய சான்றாகும். ஐயர் அவர்களிடத்துப் பாடங் கேட்டு உய்ந்த மாணவர்களோ பெருந்தொகையினர்; அவரிடத்துப் பாடங் கேட்காது தமிழ்ப் புலமையில் உயர்ந்தோர் இந் நாட்டில் இப்போது இல்லை என்றுகூடச் சொல்லலாம்.

இந் நாட்டுப் புலவர் மணியாய்த் திகழ்பவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்கள்; பழைய புலவர் வரிசையில்வைத்து எண்ணப்படுபவர். அரிய பாடல்களால் தமிழ்ச்சுவை வளர்த்து அழியாப் புகழும் தேடிக் கொண்டார்கள். இலக்கண இலக்கியப் புலமையும் நிறைந்தவர்; பெரிய சிவபக்தர். எங்கள் உள்ளங்களில தமிழன்பு பொங்குவதற்குரிய பாடல்களைச் சொரிந்து உதவுவதோடு, கவிதா ஒளி பொழியும் தாகூர்த் தோற்றப் பொலிவாலும் எங்களைப் பூரிக்கச் செய்பவர்.

தென் தமிழ்நாட்டில் ஒரு பாரதி; ஈழத் தமிழ்நாட்டிலுமோர் பாரதி. தென் தமிழ்நாட்டுப் பாரதியோ ஆவேசக் கவி — வீரக் கவி; ஈழநாட்டுப் பாரதியோ சாந்தக் கவி — அழகுக் கவி. எங்கள் நவநீத கிருஷ்ண பாரதியின் மணியனைய பாக்கள் — சுவை விஞ்சிய பாக்கள் பல, குடத்துள் விளக்குப்போல் — ஈழத்து ஒரு சிலர்க்குமட்டும் இன்ப நுகர்ச்சி தந்து — உலகறியாது மறைந்துகிடப்பன தமிழுலகத்தின்

துரதிஷ்டமேயாம். இலக்கண இலக்கியப் புலமையோடு தமது அரிய கவித்துவ சக்தியையும் துணையாகக்கொண்டு தமிழ்த்தொண்டு புரிந்து வருகின்றார்கள்.

ஆங்கிலப் புலமையோடு தமிழ்ப் புலமையும் நிரம்பப்பெற்று தமிழர் பண்பாட்டின் சிறந்தவோர் ஒளிவிளக்காய்த் திகழ்பவர் திரு. நடேசபிள்ளை அவர்கள். இருமொழிப் புலமையோடு இருமொழிகளி லும் சிறப்பாகப் பேசும் ஆற்றலும் வாய்க்கப்பெற்றவர். துளியள வேனும் துவேஷம் கலக்காத தெளிவும் இனிமையும் உயர் கருத்துக் களும் மலிந்த இவர்களது சொற்பொழிவுகளால் தமிழுணர்ச்சியும் தமிழ்ப் பண்பாட்டு ஆர்வமும் இந் நாட்டிற் சிறந்து வளர்ந்து வருகின் றன என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

முதிய புலவர்களுள் இவர்களே விசேஷமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

தமிழ் வளர்க்கும் இளம் புலவர்கள் பலர் இருக்கின்றனர். அவர் களுட் சிலரைப்பற்றியேனும் கூறலாமெனின், எனக்கு அளிக்கப் பட்ட தாள் தொகையின் சுருக்கத்தால் அவர்கட்கெல்லாம் பொது வான பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு நிறுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் இவ்விரு கூட்டத்தார்க்குமிடையே ஒரு புலவர் கூட்டம் இருக்கின்றது. அவர்களுள் ஒரு சிலரைப்பற்றியாகுதல் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இக் கூட்டத்தில் தலைசிறந்து விளங்குபவர்களாகப் பண்டிதர் கணபதிப்பிள்ளை, வித்துவான் பெரியதம்பிப்பிள்ளை, முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகிய நால்வரையும் குறிப் பிடலாம்.

நூலறிவோடு நுண்மதியும் வாய்க்கப்பெற்று நாவன்மையில் மிகச் சிறந்து விளங்குபவர் பண்டிதர் கணபதிப்பிள்ளை. கம்பன் கவிதையைச் சுவைததும்ப விரித்துரைப்பதில், பிறரிடத்துக் காணாதவோர் தனிமுறை யைக் கையாள்பவர்; எதிர்த்தோரைப் புறங்கொடுத் தோடச்செய்யும் கண்டனப் பேச்சின் பேரெல்லை கண்டவர். இவர்களுக்குத் தமிழாசிரிய உலகத்தில் விசேஷ மதிப்பு உண்டு; இக்கால ஆசிரிய உலகத்தின் இலக்கியச் சுவைக்கு வித்திட்டவர் இவர் என்பதோடு, இக்கால வாலிப உலகம் விரும்பி யுண்ணும் இலக்கிய விருந்து அளிப்பவரும் இவரே யெனவும் குறிப்பிடவேண்டும். இக்காலத் தமிழ் வளர்ச்சித் தொண்டில் இவர் பங்கு மிகப் பெரியதே.

இலக்கண இலக்கியப் புலமையோடு கவித்துவ ஆற்றலும் சிறந்த நாவன்மையும் பெற்றுக் கிழக்கு மாகாணத்தின் தமிழ்ச்சுடராய் விளங்குபவர் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். நெல் விளைந்தால் தமிழ் விளையும் என்பதன் உண்மையைக் கிழக்கு மாகாணத்திற் காணக் கூடியதாக இருக்கின்றது. தமிழார்வத்தின் சிகரத்தை இன்று கிழக்கு மாகாணத்திற்றான் காண்கின்றோம். கிழக்கு மாகாணத் தமிழ்ப் பயிரைச் சமீப காலத்தில் வளர்த்த விசேஷ உரிமை இருவர்க்கு உண்டு. ஒருவர் மறைந்துவிட்டார் (விபுலாநந்த அடிகளார்); மற்றவர்தான் பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை. இவருடைய கவித்துவ சக்தியில் மலர்ந்த வாடா மலர்கள் பல. கீதை வெண்பாவைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். கிழக்கே தமிழ் வளர்கின்றது பெரியதம்பிப்பிள்ளையால் என்று சொல்லின் மிகையாகாது.

சங்கநூலாராய்ச்சியில் தலைசிறந்தவரும் கவித்துவ ஆற்றல் மிகப் பெற்றவரும் தமிழ்ப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதில் புகழ் பெற்றவரும் தெளிந்த பேச்சாளருமாகிய மூதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி அவர்கள் கொழும்புப் பகுதியிலே தமிழ் வளர்த்த செய்தி யாவரும் அறிந்ததே. ஆங்கில மோகம் கரைபுரண்டோடிய கொழும்பு மாநகரிலே, ஆங்கிலம் படித்த உத்தியோகத்தர் முதல் தமிழை வெறுத்த பள்ளிமாணவர் வரை, வேம்பெனக் கைத்த தமிழைக் கரும்பென அவர்களெல்லாம் இப்போது சுவைக்கும்படியான நிலைமை உண்டாகி இருக்கிறது. இந்த நிலைமை ஏற்படுவதற்கான தொண்டு புரிந்தவர்களுள் மிகச் சிறந்த ஸ்தானம் நல்லதம்பி அவர்களுக்கு உண்டு. கொழும்பு இஸ்லாமியச் சகோதரரிடையே தமிழார்வம் இப்பொழுது பொங்குகின்றது; இதற்குக் காரணமாகவுள்ளது சாகிராக் கல்லூரித் தமிழபிமானமேயாகும். மூதுதமிழ்ப் புலவர் அவர்கள் நெடுங்காலமாகச் சாகிராக்கல்லூரியில் ஆசிரியராக இருந்து செய்த தமிழ்த் தொண்டின் பலனை இப்போது கொழும்பு இஸ்லாமிய சமூகத் தமிழார்வத்திற் காண்கின்றோம். இலங்கை சுதந்திரம் பெற்றதை முன்னிட்டு நிகழ்ந்த மரதனோட்டப் பாடற் போட்டி முதற் பரிசும் இவர்க்கே அரசினரால் வழங்கப்பட்டது.

நாவலர் பரம்பரையில் வந்தவரும் தெளிந்த இலக்கண இலக்கிய நூற்புலமை வாய்க்கப்பெற்றவருமாகிய வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களுடைய தமிழ்த் தொண்டும் எங்கள் பாராட்டிற்குரியது. இலக்கணநூலறிவைப் பொருட்படுத்தாத இக்காலத்து இலக்ஷணமற்ற கல்வி முறையில் இவர்போன்ற இலக்கண வித்துவான்கள் புகழ்ஒளி பெரிதும் வீசப்பெறாது இருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் உண்மையான

தமிழ்ப் புலமையை விரும்பிய மாணவர்க்கு வித்துவான் அவர்களாற் கிடைக்கும் பெரும் பயன்களையெல்லாம் தமிழ்த் தொண்டாகவே பாராட்டவேண்டும். வித்துவானது தஞ்சைவாணன் கோவை உரையும் நன்னூல் விருத்தி உரையும் அவர்களுடைய தமிழ்த் தொண்டின் அரிய சின்னங்களாக விளங்குகின்றன. அடக்கம், பணிவு, எளிமை முதலிய பண்புகளின் பூரண விளக்கமாய், விளம்பரத்தை வேண்டாது வாழும் இவரது வாழ்வே தமிழர் பண்பாட்டின் சிறந்த அம்சத்தை எடுத்துக் காட்டுவதால், வாழும் வகையானும் வித்துவான் தமிழ்த் தொண்டு செய்துவருகிறார்கள் என்று கூறி மகிழவேண்டி யிருக்கிறது.

தமிழிலக்கியத் துறையில் உழைப்போர் பலர். ஏனைய கலைத் துறைகளில் உழைப்பார் இந்நாட்டில் இல்லையென்றும் கூறலாம். இசைத்துறையில் உழைத்து யாழ்நூல் தந்து அழியாப்புகழடைந்த விபுலாநந்த அடிகளாரின் பின் இத்துறைகளில் உழைப்பாரைக் காணேம்.

தமிழ்க்கலைகளின் சிறப்பை உலகிடை ஓரளவிற் பிரகாசிக்க வைத்தவர் எழுத்தறிபுலவர் ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள். ஆனால் அவர் எழுதிய விளக்கமெல்லாம் ஆங்கிலமொழியில் அமைந்தமையால் தமிழுலகிற்குப் பூரணமான பயனை அளிக்கவில்லை.

தமிழ்க்கலைகளாகிய ஓவியம் சிற்பம் முதலியவற்றைப் பற்றிப் போதிய அளவு ஆராய்ச்சியும் விளக்கமும் நிகழாதிருப்பது பெருங் குறையேயாகும். தமிழர் பண்பாட்டின் தனிச் சிறப்புக்கள் பல இக் கலைகளிலேயே இருக்கின்றன. ஆனால் இக் கலைத்துறைகளை ஆராய்ந்து விளக்கஞ் செய்வதுவோ மிக மிகக் கஷ்டம். இந்த நிலைமையில் 'தென்னிந்திய சிற்ப வடிவங்கள்' என்னும் அரியதோர் நூலை திரு. நவரத்தினம் அவர்கள் மிக முயன்று ஆராய்ந்து தெளிவான முறையில் வெளியிட்டமையால் ஈழம் பெருமையடைந்துளது. இத்தகையவோர் நூலைத் தென்றமிழ் நாடு இன்னும் வெளியிடவில்லை. ஈழத் தமிழர் பண்பாட்டின் முன்னேற்ற முயற்சிகளிலெல்லாம் முன்னணித் தொண்டராய் விளங்கும் திரு. நவரத்தினம் அவர்கள் அரிதின் முயன்று அமைத்த கலாநிலயத்தை மீண்டும் உயிர்ப்பித்து, அது வாயிலாகக் கலைத்துறை ஆராய்ச்சியினை வளர்த்துத் தமிழர் பண்பாடு உலகிடைப் பிரகாசமடையச் செய்வாராயின் பெரும்பயன் விளையும். தமிழ்த்தொண்டு இந்நாட்டில் இந்நாள் வளரும் வகையினை இது வரையும் ஒருவாறு குறிப்பிட்டோம்.

தமிழ்ப்பண்பாடு இந்நாட்டில் இந்நாள்வரை வளர்ந்த வகையினை மலரிலுள்ள ஏனைய கட்டுரைகள் ஒருவாறு விளக்குஞ் செய்கின்றன. இக் கட்டுரைகளை எழுதி உதவிய அன்பர்கட்கெல்லாம் எங்கள் நன்றியை உரித்தாக்கிக் கொள்ளுகின்றோம்.

இம்மலரை அணி செய்யும் சரித்திர சம்பந்தமான படங்களை வெளியிடுதற்குத் தம்மிடமிருந்த புகைப்படங்களைத் தந்துதவிய புதைபொருளாராய்ச்சித்துறையாளர்க்கும், ஈழகேசரி நிலையத்தாருக்கும் எங்கள் நன்றியை உரிமைப்படுத்திக் கொள்ளுகின்றோம்.

மலரை இவ்வளவு திருந்திய முறையில் அழகாகவும் விரைவாகவும் அச்சிட்டுதவிய திருமகள் அழுத்தகத்தார்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரியது.

விழாவின் விளைவாக இந்நாட்டில் தமிழ் வளர்க்கும் முயற்சிகள் வேகமுறுமென நம்புகின்றேம்.

காலவெள்ளத்தில் எத்தனையோ நாகரிகங்களும் பண்பாடுகளும் அழிந்தொழிந்து போயின.

உடை கப்பல் கப்பலாய்த் திரை ஆழியூடு செல்லுமோ?

எங்கள் பண்பாடு பட்டினம் பெற்ற கலமாய் இன்று வரையும் சிறப்போடு நிலவி வந்திருக்கிறது. பரந்து விரியும் விஞ்ஞானம் முதலிய பெருங்கடலிலெல்லாம் எங்கள் அருங்கலத்தைச் செலுத்தித் தமிழர் பண்பாட்டினை வளர்க்கவேண்டியிருக்கிறது.

சாதி மத பேதமின்றித் தமிழ்க்குலம் முழுதும் ஒன்று சேர்ந்து உழைத்தாலொழிய எங்கள் இலக்ஷியம் நிறைவேறாதாகையால், சைவர், வைஷ்ணவர், கிறீஸ்தவர், இஸ்லாமியர் முதலிய தமிழன்பர்கள் யாவரையும் ஒன்று சேருமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

செந்தமிழ் வாழ்க.

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

உயர்ந்த கவிதைவளம் நிறைந்தது நம் தாய்மொழியாகிய தமிழ். தெய்வத் தமிழ்க் கவிதை மற்ற மொழிக் கவிதைகளோடு சரி நிகர் சமானமான நிலையிலும் அதற்கு மேலாகவும் வைத்து எண்ணக் கூடிய பெருமை வாய்ந்தது. அந்த வகையிலே நாம் நல்ல அதிர்ஷ்டம் உடையவர்கள். தமிழ்மொழியின் சிறப்பிற்குக் காரணம் முக்கியமாக அதன் கவிதை என்றே கூறும்படி அவ்வளவு சிறந்த கவிதையை நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் எந்த மொழியின் வளர்ச்சிக்கும் கவிதை மட்டும் போதாது. இக் காலத்திலே ஒரு மொழியானது அதைப் பேசும் மக்களுக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமானால் அதிலே எல்லாக் கலைகளிலும் சிறந்த நூல்கள் இருக்கவேண்டும். விஞ்ஞானம், மனத்தத்துவம் என்றிப்படிப்பட்ட பல வகையான அறிவியல் துறைகளிலும் உரைநடை நூல்கள் நூற்றுக்கணக்காக வெளியாக வேண்டும். அவ்வாறு நூல்கள் வெளியாவதற்கு ஊக்கம் அளிக்கும் முக்கிய நோக்கத்தோடு தமிழ் வளர்ச்சிக் கழகம் 1946-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களின் நன் முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்றது. எந்தத் துறையில் நல்ல நூல் வெளியானாலும் அதைப் போற்றவேண்டும் என்பதும், அதை எழுதிய ஆசிரியருக்கு உற்சாகம் அளிக்கவேண்டும் என்பதும் இக் கழகத்தின் நோக்கமாகும். அதற்காக ஆண்டுதோறும் பரிசும், பரிசுப் பத்திரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்குவதற்கு நூல்கள் வெளியாகும் பல துறைகளும் பன்னிரண்டு பெரும்பகுதிகளாகப்பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. கவிதை இசைப்பாடல். 2. கணிதம், வானநூல், பொறியியல். 3. சிறுவர் இலக்கியம். 4. வைத்தியம், சுகாதாரம். 5. கல்வி, தத்துவம், மனத்தத்துவம். 6. இயற்கைநூல் விவசாயம். 7. சிறு கதை. 8. நாவல், நாடகம். 9. ஆராய்ச்சி. 10. கட்டுரை. 11. சரித்திரம், பொருளியல், அரசியல். 12. பௌதிகம், இரசாயனம் என்பனவாகும்.

இவற்றில் முதல் ஆறு பகுதிகள் ஒரு ஆண்டிலும் மற்ற ஆறு பகுதிகள் அடுத்த ஆண்டிலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே ஒரு துறையில் வெளியான நூல்கள் இரண்டாண்டுகளுக்கு

ஒருமுறை பஞ்சாயத்தார்களால் ஆராயப்படுகின்றன. ஒரு பகுதியில் சிறந்ததாகக் கருதப்படும் நூலுக்கு 500 ரூபாய் பரிசும், பரிசுப் பத்திரமும் அளிக்கப்பெறுகின்றன. அதற்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள நூல்கள் பாராட்டுப் பத்திரங்கள் பெறுகின்றன. பரிசுத் தொகையைச் சென்னை அரசாங்கத்தார் உதவ அன்போடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பரிசும், பத்திரங்களும் வழங்குவதை நிமித்தமாகக் கொண்டு ஆண்டுதோறும் தமிழ்த் திருவிழாக்கள் கொண்டாடப்பெறுகின்றன. முதல் விழா பாண்டியர் தமிழ் வளர்த்த மதுரையிலும், இரண்டாவது விழா மனுமுறை கண்ட சோழனுடைய திருவாரூரிலும், மூன்றாவது விழா சேர நாட்டுடன் இயைபுடைய கோயமுத்தூரிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. ஆயிரக்கணக்காக மக்கள் அவற்றிலே கலந்துகொண்டார்கள். தமிழ்த் திருவிழா வழக்கமாக இரண்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது. இலக்கியம், விஞ்ஞானம், அறிவியல் முதலிய பல்வேறு துறைகளின் அறிஞர்கள் சொற்பொழிவுகளும், மாலை நேரங்களிலே இன்னிசை, நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் அதில் முக்கிய அம்சங்களாகும். திருவிழாவையொட்டி ஒரு கலைக் கண்காட்சியும் நடைபெறுகின்றது. இவ்வாறு தமிழ்த் திருவிழா ஒவ்வொரு வருஷமும் மக்கள் எதிர்பார்த்திருக்கும் ஒரு முக்கிய விழாவாகிவிட்டது.

தமிழ் வளர்ச்சிக் கழகம் வேறொரு மிக முக்கியமான பணியை மேற்கொண்டிருக்கிறது. 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்திய சரித்திரத்திலேயே ஒரு பெருமை வாய்ந்த நாளாகும். அன்றுதான் நாடு சுதந்திரமடைந்தது. அந்த நாளன்று கழகத் தலைவர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழில் கலைக் களஞ்சியம் ஒன்று (என்சைக்கிளோபீடியா) தயாரிக்க வேண்டும் என்றும், அதற்கு மக்கள் உதவவேண்டுமென்றும் ஒரு வேண்டுகோள் வகுத்தார்கள். மக்களும் அரசினரும் அதற்கு ஆதரவுதர முன் வந்தனர். ஆங்கிலத்திலும், மற்ற மேல்நாட்டு மொழிகளிலும் சிறந்த கலைக் களஞ்சியங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலம் பௌதிகம், இரசாயனம் முதலிய இரசாயனத் துறைகளிலும், மற்ற கலைத் துறைகளிலும் எளிதாக விஷயங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறான நூல் ஒன்று தமிழில் இருக்குமானால் அது தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தயாரித்து வெளியிடத் திட்டமிட்டிருக்கும் கலைக் களஞ்சியம் பன்னிரண்டு தொகுதிகளாகச் சுமார் 9000 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். அதைத் தயாரிக்க 15 லக்ஷம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார், டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் முதலான அறிஞர்களைக்கொண்ட பதிப்பாசிரியர் கழகம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. பல அறிஞர்கள் வேறுவேறு துறைகளிலே கட்டுரைகள் எழுத ஏற்பாடு செய்வதற்கும், அவற்றைப் பரிசீலனை செய்வதற்கும் சுமார் 30 கமிட்டிகளில் இருந்து உதவ முன்வந்திருக்கிறார்கள். சுமார் எட்டு வருஷங்களிற் கலைக் களஞ்சியத்தை உருவாக்குவதெனத் திட்டமிடப் பட்டிருக்கிறது. இதற்கான காரியங்களைச் செய்வதற்கெனச் சென்னைச் சர்வகலாசாலையார் தங்கள் கட்டிடத்தில் ஒரு காரியாலயம் தந்து உதவியிருக்கிறார்கள்.

கோயமுத்தூரில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் என்ற ஒரு சிறந்த கல்வி ஸ்தாபனம் இருக்கின்றது. நல்ல முறையில் சிறுவர்களுக்குக் கல்வியளித்தல், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், கிராம சேவை செய்தல் முதலிய வேலைகளோடு ஆராய்ச்சி நூல்கள் வெளியிடும் பணியையும் இந்த ஸ்தாபனம் மேற்கொண்டிருக்கிறது. திருக்குறளுக்கு ஒரு விரிவான ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிடுவதென அவர்கள் இப்பொழுது திட்டம் வகுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஒத்துழைப்பையும் தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்து வருகின்றது. சமீபத்திலே இந்த ஆராய்ச்சிப் பதிப்பு முயற்சியை இந்தியக் குடியரசின் தலைவரான டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் பல துறைகளிலே மொழி வளர்ச்சிக்கான சேவைகளைச் செய்து வருகிறது.

# தமிழ் விழா வாழ்த்து

மகாவித்துவான், பிரமஸ்ரீ சி. கணேசையர்

## ஆசிரிய விருத்தம்

எந்நிலத்து மக்களினு முற்றோன்று மக்கடமிழ்
மக்க ளென்ப
எந்நிலத்து மொழிகளினு முற்றோன்று மொழிதமிழென்
மொழியே யென்ப
எந்நிலத்து நாகரிகந் தனினுந்தமிழ் நாகரிக
மேற்ற மென்ப
அந்நிலமாந் தமிழ்நிலத்து ளிலங்கையுமொன் றாகுமென்ப
தறிந்த தொன்றே. 1

அகத்தியன்முன் றென்மதுரை நிறுவுதமிழ்ச் சங்கமதி
லறையிந் நாளில்
மகத்துவஞ்சேர் தருபாண்டித் துரைநிறுவும் வடமதுரைத்
தமிழ்ச்சங் கத்திற்
சகத்திலுயர் வளங்கள்பெறு மெமதிலங்கைப் புலவர்களுஞ்
சார்ந்தி ருந்தே
தகத்தமிழை வளர்த்தனர்தென் னிந்தியநற் புலவரொடுந்
தழைநண் புற்றே. 2

இன்றுமெம திலங்கையுறும் புலவர்களுஞ் சால்புறுந்தென்
னிந்தி யாவி
னென்றியுறும் புலவர்களுஞ் சேர்ந்துநனி தமிழ்வளர்க்க
வுன்னி யிந்தத்
துன்றுநலம் பலவுறும்யாழ்ப் பாணநக ரிடைச்செய்விழாத்
துலங்கி யோங்கி
என்றுநறுந் தமிழ்க்குயர்ச்சி யளித்திடநன் கிறைவனரு
ளிசைக மாதோ. 4

## வெண்பா

வாழி தமிழ்ப்புலவர் வாழிதமிழ்ச் செய்யவிழா
வாழி தமிழினுயர் மாண்கலைகள்—வாழியவே
தொன்மைத் தமிழ்மொழியுந் துய்யதமிழ்த் தெய்வதமுந்
தன்மத் துடனே தவ. 4

# சென்னைப் பிரதமரின் ஆசிச் செய்தி

P. S. குமாரஸ்வாமி ராஜா
Chief Minister of Madras

Fort St. George
MADRAS
22-4-51

ஐயா!

தாங்கள் அனுப்பிய யாழ்ப்பாணம் நான்காவது தமிழ்த் திருவிழாவின் அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க சந்தோஷம். இவ்விழாவின் நிகழ்ச்சிகள் தமிழன்பர் யாவருக்கும் மிக்க பயனளிக்கும் என்று மனப் பூர்வமாக நம்புகின்றேன். விழா சிறப்புடன் நடைபெற என் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

தங்கள்
பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா.

திரு. சு. நடேசபிள்ளை,
வரவேற்புக்கழகத் தலைவர்,
நான்காவது தமிழ்த் திருவிழா,
யாழ்ப்பாணம்.

# இலங்கை ஆற்றுப்படை

திரு. சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்.,
யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவர்.

இந்தியாவினின்று இலங்கைக்கு முதன் முறையாக வருபவர்களில் அநேகர், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இது தானா என்று கேட்பதுண்டு. இந்தியாவில் இராமாயணத்தைப்பற்றி அறியாதார் இல்லையென்றே சொல்லலாம். ஆதலின், அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள், பண்டிதராயினும் சரி, பாமரராயினும் சரி, இலங்கையுடன் இராமாயணத்தையும் சேர்த்து நினைப்பது இயற்கையாகும். வடமொழியில் வான்மீகி முனிவராலும், தமிழில் கவிச்சக்ரவர்த்தி கம்பராலும் வர்ணிக்கப்பட்ட இலங்கை எது என்பதைப்பற்றி, இலங்கைக்குத் தமிழ் விழாவை முன்னிட்டு வருகின்ற அறிஞர்கள் ஆராய விரும்புவார்கள் என்பது திண்ணம். அவர்களது ஆராய்ச்சிக்குத் துணையாக இக் கட்டுரை சமர்ப்பிக்கப்படுகின்றது.

இராமாயணம் முழுவதும் கட்டுக்கதை என்ற கொள்கையுடையோரும் இக்காலத்தில் உளர். அவர்கள் இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையை ஒரு கற்பனை நாடாகக் கருதுவர். இராமாயணத்தைப்பற்றி ஜெர்மன் பாஷையில் ஓர் ஆராய்ச்சி நூல் எழுதிய ஜக்கோபி (Jacobi) என்பவர், சீதை என்ற சொல் உழவு சால் எனப் பொருள்படுமாதலின், இராமாயணம் உழவுத்தொழிலை உருவகப்படுத்தற்கு எழுந்த காவியம் என்று கூறினர். வேறு சில ஆராய்ச்சியாளர்கள், வட இந்தியாவிலிருந்த ஆரியர் விந்திய மலைக்குத் தெற்கே பரவிய வரலாற்றை இராமாயணம் விளக்குகிறதென்று கொள்வர்.

இராமாயணத்திற் சொல்லப்பட்ட செய்திகளில் ஓரளவு உண்மையுண்டென்ற கொள்கையுடைய மேனாட்டறிஞர்களில் பார்ஜிட்டர் (Pargiter) ஒருவராவர். அவர் இந்தியாவில் பல ஆண்டுகளாக உத்தியோகத்தில் அமர்ந்து, வடமொழி நூல்களிலுள்ள வரலாற்றுப் பகுதிகளைத் துருவி ஆராய்ந்தவர். இராமபிரான் சஞ்சரித்ததாக இராமாயணம் கூறும் இடங்களைப்பற்றி அவர் எழுதிய கட்டுரையில், தென்னிந்தியாவுக்கு அணித்தாயுள்ள இலங்கையே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கையாகும் என்று தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினர். இதுவே பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலுள்ள மக்கள் மனதில்

பதிந்த கொள்கையாக இருப்பினும், சில ஆராய்ச்சியாளர்கள் இதைப் பற்றி ஐயம் நிகழ்த்தி வேறு கொள்கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாராய்ச்சியாளர்களில் ஒரு சாரார், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந்தியாவுக்கப்பால் வெகு தூரத்திலுள்ள ஜாவா, சுமாட்ரா பிரதேசம் என்பர். வேறு சிலர், சர்தார் கீபே (Kibe) என்பவரைப் பின்பற்றி, இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இலங்கை இருந்ததாகக் கருதுவர். இந்த இரண்டு கொள்கைகளும் பொருத்தமற்றவையாகத் தோன்றுகின்றன. சாவகத்தீவு என்று தமிழிலக்கியம் கூறும் ஜாவா முற்காலத்தில் யவத்வீபம் என்று வடமொழியில் வழங்கியது. வான்மீகி முனிவர் கிஷ்கிந்தா காண்டத்தில் யவத்வீபத்தை இலங்கையினின்று வேறுபட்ட பிரதேசமாகவே காட்டியுள்ளார். சுக்ரீவன் கிழக்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது யவத்வீபத்தையும், தெற்குத் திசையிலுள்ள நாடுகளைக் கூறும்போது இலங்கையையும் குறிப்பிடுவதினின்று, இலங்கை யவத்வீபம் ஆகாதென்று வெள்ளிடைமலைபோல் விளங்கும். இனி, இலங்கை சமுத்ர மத்தியில் உள்ளதென்று வான்மீகி முனிவர் பன்முறையும் கூறுகின்றார். சமுத்ரமில்லாத இடத்தில் இலங்கை இருந்ததாக சர்தார் கீபே எண்ணுவது வெறும் கற்பிதமாகும்.

இலங்கை என்று இப்பொழுது வழங்கப்படுகின்ற தீவே பல நூற்றாண்டுகளாக இப்பெயருடன் விளங்கிவருகின்றது. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்நாடு இலங்கை என்றே வழங்கப்படுவது தமிழறிஞர் நன்கு தெரிந்ததாகும். அக்காலத்தில் இந்நாட்டை ஆண்ட மன்னனைக் "கடல் சூழிலங்கைக் கயவாகு" என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டினின்று இந்நாட்டின் சரித்திரத்தைத் தொடர்ந்து கூறும் மஹாவம்சம் என்ற பழைய இதிகாசத்தில் இந்நாடு ஆதிமுதல் அந்தம் வரையில் இலங்கை என்றே வழங்கப்படுகிறது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவினின்று இலங்கைக்கு வந்த விஜயன் என்ற அரசகுமாரன் அக்காலத்தில் இலங்கையிலிருந்த யக்ஷர்களுக்கு அரசியான குவேனியை மணந்த சரித்திரத்தை மஹாவம்சம் கூறுமிடத்து, இலங்கையின் மலைப்பிரதேசத்தில் யக்ஷர்களின் தலைநகரமாகிய இலங்காபுரி இருந்ததென்று குறிப்பிடுகின்றது. திரிகூடபர்வதம் என்கிற மலையின் உச்சியில் விளங்கிய இலங்காபுரியை இராவணன் தனது தலைநகரமாகக் கொண்டிருந்தான் என்று இராமாயணம் கூறுவது ஈண்டு நினைவுகொள்ளத்தக்கது.

திரிகூடபர்வதத்தைப் பற்றி, கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த வீரபாண்டியன் குறிப்பிடும் ஒரு சாசனம் எமது ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளது. இச் சாசனம் சில ஆண்டுகளுக்குமுன் புதுக்கோட்டை சமஸ்தானத்திற் கிடைத்தது. பாண்டியப் பேரரசைத் தென்னிந்தியாவில் நாட்டிய ஜடாவர்மன் சுந்தர பாண்டியனது சகோதரனாகிய வீரபாண்டியன் இலங்கையை வென்றது சரித்திரப் பிரசித்தமான செய்தியாகும். இச் செய்தியை வீரபாண்டியன் தன் சாசனத்திற் கூறும்போது, தனது வெற்றிக்கு அடையாளமாகப் பாண்டிய அரசின் மீன் இலச்சினையை இலங்கையில் திருக்கோணமலையிலும், திரிகூடபர்வதத்திலும் பொறித்ததாக விவரிக்கின்றான். இலங்கைக்கு அப்பாலுள்ள புதுக்கோட்டையிற் கிடைத்த இச் சாசனத்தின் ஒரு பகுதி முற்றும் உண்மையான செய்தியாகும் என்பதற்கு இப்பொழுதும் இலங்கையிற் சான்று இருக்கின்றது. திருக்கோணமலையிலுள்ள கோட்டை வாசலில் இன்றும் இரட்டைமீன் இலச்சினை விளங்குவதைக் காணலாம். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் போர்த்துக்கேயர் திருக்கோணமலையிலிருந்த சிவாலயத்தைத் தகர்த்த போதிலும், பாண்டிய இலச்சினைக் கல்வெட்டு அவர்களது கொடிய செயலினின்று தப்பி, இன்றும் சிதைவுபடாமலிருப்பது பெரிய விந்தையே. வீரபாண்டியன் திருக்கோணமலையில் மீன் இலச்சினை பொறித்தது உண்மையாயின், அவன் சாசனத்திற் கூறியவாறு, திரிகூடபர்வதத்திலும் அவ்விலச்சினையைப் பொறித்திருக்க வேண்டும். அவன் கூறும் திரிகூடபர்வதம் இலங்கையில் எப்பாகத்தில் உள்ளது? இதை யாம் அறிந்தால், இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை இந் நாடு தான் என்று அறுதியிட்டுத் தீர்மானிக்கலாம்.

இந் நாட்டை இராமாயணத்துடன் சம்பந்தப்படுத்தும் பல ஐதிகங்கள் கர்ண பரம்பரையாக வழங்கிவருகின்றன. சீதாபிராட்டி சிறைவாசமிருந்த அசோக வனம் இந் நாட்டின் உயர்ந்த சிகரங்களில் ஒன்றாகிய ஹக்கலா என்ற இடத்தைச் சார்ந்ததென்று அங்குள்ள சாதாரண மக்கள் வாயினின்று இப்பொழுதும் கேட்கலாம். இது சீதாதலாவா என்று கூறப்படும். இதற்கப்பால் சிறிது தூரத்திலுள்ள பாலுகமா என்ற இடம் அநுமானால் எரியுண்டதென்று சொல்லப்படுகின்றது. பாலுகமா என்பதன் பொருள் பாழடைந்த கிராமம் என்பதாம். இந்த இடத்தில் புற்பூண்டும் முளைப்பதில்லை. ஹக்கலாவிலிருந்து ஹப்புத்தலை என்ற இடத்திற்குப் போகிற வழியில் வெளிமடா என்னும் அழகிய கிராமத்தின் பக்கத்தில் இராமலங்கா என்ற ஓரிடம் இருக்கின்றது.

இங்கேதான் இராவணன் இறுதியாகப் போர் செய்து வீழ்ந்தான் என்றும், அதுமுதல் இவ்விடம் இராமலங்கா எனப் பெயர் பெற்றது என்றும் இங்குள்ள புத்த பிக்ஷுக்கள் ஒரு கர்ண பரம்பரையான ஐதிகத்தைக் கூறுகின்றார்கள். இதற்கருகில், தூரும்வெலா பன்சாலா என்ற இடத்தில் சீதாபிராட்டி தன் கற்புநிலையினின்று தவறவில்லை என்று இராமபிரான் முன்னிலையிற் சத்தியம் செய்ததாக ஓர் ஐதிகம் வழங்கி வந்ததென்று மேஜர் போர்ப்ஸ் (Major Forbes) 1840-ம் ஆண்டில் வெளியிட்ட "இலங்கையிற் பதினோராண்டுகள்" (Eleven years in Ceylon) என்ற தனது புத்தகத்திற் கூறியுள்ளார். இவ் வாங்கிலேயப் படை வீரர் நூறு ஆண்டுகளுக்கு முன் அடர்ந்த காடுகள் செறிந்திருந்த இம் மலைப்பிரதேசத்தில் குதிரைமேற் சென்று பல இடங்களைப் பார்த்து ஆங்காங்கு இருந்த சிங்கள மக்கள் வாயிலாக இராமாயண சம்பந்தமான பல ஐதிகங்களைக் கேட்டு, அவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். இம் மலைப்பிரதேசத்தில் இராவண எல்லா என்று ஒரு குன்று இருக்கின்றது. இதில் நீளமான ஒரு குகை உண்டு. இராவணன் தன் தலைநகரிலிருந்து அந்தரங்கமாக வெளிச்செல்வதற்கு இக் குகையை உபயோகித்து வந்தான் என்று சொல்லப்படுகின்றது.

மேற்கூறிய ஹக்கலா என்னும் இடத்திலின்று ஹப்புத்தலை என்னும் இடம் வரையிலுள்ள மலைப்பிரதேசம் எவருக்கும் வியப்பை உண்டாக்கக் கூடிய காட்சியைத் தருகின்றது. ஹக்கலாவினின்று பாலுகமாவுக்குச் சென்று, இம் மலைப்பிரதேசத்தின் உன்னதக் காட்சியை அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு, ஒருவித மருட்கை உணர்ச்சி உண்டாகிறது. மூன்று பக்கங்களையுடைய அகன்ற பிரதேசமாக இது காணப்படுகின்றது. மூன்று பக்கங்களிலும் செங்குத்தாக ஏறக்குறைய ஐயாயிரம் அடி உயரமுள்ள மலைத்தொடர்கள் பயங்கரத் தோற்றத்துடன் எழுகின்றன. இவற்றிற்கிடையில் முப்பதுமைல் அளவு அகன்று ஒரு பதிந்த வள்ளம்போல் ஏறக்குறையச் சம பூமியாக இப்பிரதேசம் விரிந்து கிடக்கின்றது. இதன் மத்தியில்தான் இராவணன் போர் செய்து வீழ்ந்த இடமெனப்படும் இராமலங்கா இருக்கின்றது; இதன் எல்லைப் புறத்தில்தான் எரியுண்டதாகச் சொல்லப்படும் பாலுகமா இருக்கின்றது. இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய வர்ணனைகளைப் படித்தவர்களுக்கு இதுதான் திரிகூடபர்வதமென்று ஐயமின்றி உடனே தோன்றும்.

திரிகூடபர்வதத்தின் உச்சியில் இராவணனது தலைநகரமாகிய இலங்காபுரி விளங்கிற்றென்றும், இந்நகரம் நிலவில் ஆகாயத்தில் மிதப்

பதுபோல் அநுமானுக்குத் தோன்றிற்றென்றும் இராமாயணம் கூறும். திரிகூடபர்வதத்தின் மூன்று பக்கங்களே இந்நகருக்கு இயற்கை மதில்களாக அமைந்திருந்தன. இக் காரணத்தால் இலங்காபுரியைப் பகைவர்கள் எவரும் அணுகமுடியாதென்று இராவணன் இறுமாந்திருந்தது வியப்பன்று. இப் பிரதேசத்தில் இப்பொழுதுள்ள பண்டாரவெலா, டியட்டலாவா என்ற நகரங்களும் இரவில் ஆகாயத்தில் மிதப்பனபோன்ற அழகிய காட்சியைத் தருகின்றன. இப் பிரதேசத்தின் தெற்கெல்லையாகிய ஹப்புத்தலையினின்று பகற்பொழுதில் தென்சமுத்ரத்தையும், அதன் பக்கத்தில் அம்பான்தோட்டத்திலுள்ள உப்பளத்தையும் பார்க்கலாம். இராமருடைய சேனை தென்சமுத்ரத்தின் கரையோரமாக வருவதை இராவணன் தன் தலைநகரிலிருந்து பார்த்தான் என்று இராமாயணம் கூறுவது இப்பிரதேசத்தின் அமைப்புக்குப் பொருத்தமாகவே உள்ளது. இராமருடைய சேனை தென்சமுத்ரக் கரையிலுள்ள டொண்ட்ரா (தேவேந்திர நுவரா) என்ற இடத்திலிருந்து மலைப்பிரதேசத்திலுள்ள அலுத்நுவரா என்னும் இடத்துக்குத் தேவர்கள் விழாவைப்போல, சூரிய சந்திரக் கொடிகளுடன் அணிவகுத்துச் சென்றதென்று ஹெத்தார கோறளையைப் பற்றிய ஒரு பழைய சாசனம் கூறுகின்றது. இதனின்று இராமர்சேனை இலங்காபுரிக்குச் சென்ற வழியைப்பற்றி இங்கு ஓர் ஐதிகம் இருப்பது புலப்படும். மலைத்தொடர்களை மதில்களாகக் கொண்ட இலங்காபுரியை இவ்வழியிலேதான் அணுகக் கூடுமென்பதை இராவணனது சகோதரனாகிய விபீஷணனிடமிருந்து உளவறிந்து இராமர்சேனை இவ்வழியாகச் சென்றதென்று யூகிக்கக்கிடக்கின்றது.

அநுமான் இலங்காபுரியை அடைந்து சீதையைக் கண்டு பின் இராமரிடம் திரும்பு காலத்தில், அரிஷ்ட பர்வதத்திற் சிறிது நேரம் தங்கியதாக வான்மீகி முனிவர் கூறுகின்றார். இப் பர்வதத்தைப் பற்றிய சான்று இந்நாட்டில் உள்ளது. அசோகன் மகனாகிய மஹிந்தன் தேவானம்பிய திஸ்ஸா என்ற இந்நாட்டு மன்னனைப் புத்த சமயத்துக்குத் திருப்பியபின், பௌத்த வழிபாட்டிற்குரிய இடங்களாகிய விஹாரங்கள் அநுராதபுரத்திலும் அதன் பக்கத்திலும் கட்டப்பட்டன. அவ் விகாரங்களுள் ஒன்று அரிட்ட விஹாரம் என்று மஹாவம்சம் கூறும். இவ் விஹாரம் இதற்கருகிலுள்ள ரிட்டிகலா என்ற மலையின் பெயரைத் தழுவியதாகும். கலா என்ற சிங்களச் சொல் மலையைக் குறிக்கும். அரிஷ்டம் என்ற சொல் அரிட்டம் என்று மருவி, பின் முதல் அகரம் காலகதியில் நழுவி, ரிட்டி என வந்ததென்று கூறப்படுகின்றது. இம்

மலை இராமாயணத்துடன் சம்பந்தப்பட்டது என்பதை இங்குள்ளவர் அறியாராயினும், இராமாயணம் கூறும் இலங்கை இந் நாடுதான் என்று நிச்சயித்தற்கு இம்மலையின் பெயர் ஓர் அரிய சான்றாக இருக்கின்றது.

இராவணன் வாழ்ந்த இடம் பாண்டிய நாட்டிற்கு எதிரில் இருந்ததாகச் சுக்ரீவன் தன் சேனை வீரர்களுக்குக் குறிப்பிட்டதை வான்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் 41-ஆம் சர்க்கத்திற் காணலாம். அப் பகுதியின் மொழிபெயர்ப்பை இங்குத் தருகின்றோம். "அகஸ்திய முனிவரின் அநுக்ரகம் பெற்று...... மஹாநதியாகிய தாம்ரபர்ணியைக் கடப்பீர்களாக. ...... அங்கிருந்து நடப்பீர்களாயின், பாண்டிய நகர துவாரத்தில் சுவர்ணமயமாகி முத்துக்களால் அலங்காரம் செய்யப்பெற்று நன்கு நிர்மிக்கப்பட்ட பொற்கவாடத்தைக் காண்பீர்கள். அங்கிருந்து சமுத்ரதீரம் சென்று சீதையைத் தேடும்பொருட்டு சமுத்ரத்தைத் தாண்டும் விஷயத்தை ஆலோசித்து நிச்சயித்துக் கொள்வீர்களாக. அங்கு சமுத்ரதீரத்தினிடையில் அகஸ்தியரால் வைக்கப்பட்ட மகேந்திரம் என்னும் பர்வதம் இருக்கின்றது. ......... அந்தச் சமுத்ர மத்தியில் இக்கரையில் நூறு யோஜனை விஸ்தீர்ண முடையதும் மனிதர்களுக்குப் போக முடியாமல் மிக்க விளக்கமுற்றதுமாகிய ஒரு தீவு இருக்கின்றது. அந்தத் தீவு முழுமையும் சீதா தேவியைத் தேடுங்கள். அந்தப் பிரதேசமே துர்ப்புத்தியும் தேவேந்திரனை நிகர்த்த தேஜஸ்ஸுடையவனும் இராக்ஷதர்களுக்குப் பிரபுவும் நம்மால் வதைக்கத் தகுந்தவனுமாகிய இராவணனுக்கு வாசஸ்தானம்." இங்குப் பாண்டியருக்குப் பழைய தலைநகரமாயிருந்த கபாடபுரமும் அதனோடு தொடர்புற்ற மஹேந்திர மலையும் குறிப்பிடப்பட்டுள்ளன. வான்மீகி முனிவர் இந்தச் சர்க்கத்தில் கூறியதையே தழுவிக் கம்பநாடரும்,

தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்
தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்பீரேல்
என்றுமவ னுறைவிடமா மாதலினா
லம்மலையை யிறைஞ்சியேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்
திருநதிபின் பொழியாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமா
நெடுவரையுங் கடலுங்காண்டிர்

என்று செய்யுளியற்றியுள்ளார். கம்பர் காலத்துக்கு ஏறக்குறைய நூறாண்டுகளுக்குமுன் வடமொழியில் இயற்றப்பட்ட சம்புராமாயணம் இலங்கையை "சிம்ஹளத்வீபம்" என்றே வெளிப்படையாகக் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் மிகப் பழையகாலந் தொட்டு இராமர் சேனை பாண்டிநாட்டைச் சார்ந்த சேது வழியாகத்தான் சென்றது என்ற கொள்கை இருந்து வருதற்கு ஒரு சான்று சங்க இலக்கியமாகிய அகநானூற்றில் 70-ஆம் செய்யுளிற் காணப்படுகின்றது. அது வருமாறு:

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறை கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் வழுங்கல் ஊரே.

இராமர் பாண்டிநாட்டைச் சார்ந்த தனுஷ்கோடியில் ஓர் ஆலமரத்தின் கீழிருந்து இரகசிய ஆலோசனை நடத்திய செய்தி இங்குக் கூறப்படுகின்றது. இச்செய்யுள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேசுவரத்தில் இராமர் சிவபெருமானை வழிபட்டார் என்ற ஐதிகம் பன்னெடுங் காலமாகப் பாரதக் கண்டம் முற்றிலும் வழங்கி வருகின்றது. கி. பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தசுவாமிகள் இந்த ஐதிகத்தை இராமேசுவரப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

"சேது" என்ற பெயர் பிரசித்தமானது. இச் சொல் அணையைக் குறிக்கும். தனுஷ்கோடியினின்று இராமரின் சேனை கடலைக் கடந்து இலங்கை செல்வதற்கு அணை கட்டியதாகச் சொல்லப்படுவதால், தனுஷ்கோடிக்கு இப் பெயர் மிகப் பழையகாலம் தொட்டு வழங்கி வருகின்றது. இவ்வணைக்குச் சான்றாக இப்பொழுதும் இவ்விடத்தினின்று இலங்கையைச் சேர்ந்த மன்னார்த் தீவு வரையில், மணல் திட்டுகளால் ஆகிய ஒரு தொடர் முப்பதுமைல் தூரம் கடலிற் காணப்படுகின்றது. இதை ஆங்கிலத்தில் ஆதாம் அணை (Adam's Bridge) என்று கூறுவர். இவ்வணையைப்பற்றி என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா (Encyclopaedia Britannica) என்ற பல்பொருட் பேரகராதியில் சில விவரங்களை அறியலாம். சில திட்டுகள் கடல் மட்டத்துக்கு மேலும், சில திட்டுகள் மூன்று அல்லது நாலடி ஆழத்துக்குக் கடலுள் அமிழ்ந்தும் இருக்கின்றன. ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இத் திட்டுகள் இடையீடின்றி ஒரே தொடராக இருந்தன என்றும், பின்னர் ஒரு கடுமையான புயல் வீசியபோது இவற்றில் இடையிடையே பிளவு ஏற்பட்டதென்றும் தெரியவருகின்றது. இயற்கையிலேயே அணைபோல இருந்த இம் மணல்திட்டுத் தொடரை ஒரு சேனை கடக்கத்தக்கதாக இராமரின் படைவீரர்கள் செய்தனரென்று கொள்ளுதல் தகும். இவ்வணை நூறுயோஜனை தூரமிருந்தது என்று வான்மீகிமுனிவர் கூறு

வதைக் கணக்கிட்டு இது நானூறு மைலுக்கு மேற்பட்டதாகையால், இப்பொழுது இலங்கையென்று வழங்கப்படும் நாட்டிற்கு இக்கணக்கு பொருந்தாது என்று வாதிப்பார் உளர். வான்மீகி வேறு பல சந்தர்ப்பங்களிலும் காவியரீதியில் நூறுயோஜனை என்ற பிரயோகத்தை அதிசயோக்தி அலங்காரமாய்ப் பன்முறை உபயோகிக்கின்றபடியால், இங்கு நூறுயோஜனை என்பது அதிக நீளத்தைக் குறிக்குமென்றே கொள்ளவேண்டும்.

மேற்கூறிய மணல் திட்டுகள் ஆரம்பிக்கும் இடமாகிய சேதுக்கரையைத்தான் வான்மீகிமுனிவர் மஹேந்திரதுவாரம் எனக் கூறினாரென்று யூகிக்க இடமுண்டு. மஹேந்திரமலை சேதுநாட்டினின்று திருச்செந்தூர், கன்யாகுமரி என்னும் இடங்கள்வரையில் பூமியில் அழுந்தியதாகச் செல்லும் கந்தமாதனம் என்கிற மலைத்தொடரைக் குறிக்கும் எனக் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறது. கன்னியாகுமரியின் பக்கத்தில் மஹேந்திரம் என்ற பெயருடன் ஒரு மலை இப்பொழுதும் உளது. சேதுநாட்டிலுள்ள திருவுத்தரகோசமங்கையில் ஆகமம் வெளிப்படுத்தப்பட்டது என்ற திருவிளையாடல் ஐதிகத்தை மாணிக்கவாசக சுவாமிகள்,

மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

என்று குறிப்பிடுவதால், மஹேந்திரம் சேதுநாட்டில் உள்ளது என்பது தெளிவாகின்றது.

இதுகாறும் காட்டிய ஏதுக்களால், இப்பொழுது இலங்கை என்று வழங்கும் இந் நாடே இராமாயணத்திற் கூறப்பட்ட இலங்கை எனத் தீர்மானிக்கலாம். கிரேக்க பாஷையில் கிறீஸ்து *சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன், ஹோமர் (Homer) என்ற மகாகவி இயற்றிய இலியடு (Iliad) என்னும் காவியத்திற் கூறப்பட்ட டிராய் (Troy) என்ற நகரம் அக் கவிஞரின் கற்பனையே அன்றி உண்மையில் இருந்ததில்லை எனப் பல மேதாவிகள் கருதியதுண்டு. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் (Archaeologists) டிராய் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அந் நகரத்தின் அமைப்பை நிரூபித்தனர். அதுபோல, இலங்காபுரி என்று இராமாயணத்திற் கூறப்பட்ட தலைநகரம் இந் நாட்டில் பூர்வீக காலத்தில் இருந்ததென்று வருங்காலத்தில் நிரூபிக்கப்படும் என்று நம்புகின்றோம்.



கோப்பு முறிக்கத் தோடங்கல் [பக்கம் - 17]



மட்டக்களப்பு நாடகக் கூத்துக் குழு [பக்கம் - 17]

— படம் - S. V. O சோமநாதர்.



மட்டக்களப்பு — மண்டூர்க் கந்தசுவாமி கோவில். [பக்கம் – 19]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்.



முஸ்லிம் பெண்கள் 'கதிர் துவைத்தல்'
— படம் – S. V. O. சோமநாதர்.

# மட்டக்களப்புத் தமிழகம்

**பண்டிதர் வி. சீ. கந்தையா,**
சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

உலகெங்கும் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் விழிப்புணர்ச்சியால் மக்களுள்ளத்திலே மூண்ட தேசபக்திக் கனலானது வளர்ந்து, தாய் மொழிக் கிளர்ச்சி எனும் ஒளிப் பிழம்பாக இன்று விளங்குகின்றது. சுதந்திர நாடுகளில் உள்ள தேசபக்தர்களெல்லாரும் தத்தம் தாய் நாட்டின் மானங் காக்கும் முதற் செயலாகத் தாய்மொழியைப் பேணி வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். இந்நிலைமையில் நம் தமிழ்மொழியின் பழமையும் செழுமையும் துலக்கி அது மீண்டும் உலகறிந்த சிறப்புற்றுத் திகழச் செய்தல் தமிழர்பாற் சார்ந்துள்ள இன்றையப் பெருங் கடமையாகும். இந்தியா, இலங்கை, பர்மா, தென்னாபிரிக்கா முதலிய பல நாடுகளிற் பரந்து வாழ்ந்து வரும் தமிழ்மக்களனைவரும் 'தமிழினம்' என்ற ஒரே தலைப்பில் ஒன்றுபட்டுத் தோளோடு தோள் சேர்ந்து உழைத்தாலன்றி இப் பெருங் கடமையை நன்கு நிறைவேற்றுதல் ஒல்லாது. இந்த அடிப்படையான ஒற்றுமையை வளர்க்கும் கருவியாகத் தனிப்பட்ட ஒவ்வொரு தமிழ்க் குழுவினருடைய சரிதமும், வாழ்க்கை, பண்பாடு, நாகரீக வளர்ச்சி என்பனவும் அறிந்துகொள்ளப்படுதல் அவசியமாகும். இக் குறிக்கோளில், ஈழநாட்டின் ஒரு பகுதியில் வாழும் பழந்தமிழ்க் குழு ஒன்றின் வரலாறு சுருக்கமாக இங்குக் கூறப்படுகின்றது.

"......................
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு
தெங்கி னிளநீரும் தீம்பலவி னள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக் களப்பென்னும் மாநாடு..................."

என்று யாழ்நூலகத்துப் புகழ்ந்து கூறப்பெறும் இப் பழந் தமிழகம், ஈழநாட்டின் கீழ்கடல் சார்ந்து, கிழக்கு மாகாணம் என்னும் அரசியற் பிரிவுள் அடங்கிக் கிடக்கின்றது. சிவஞொளிபாத

மலையிடத் தூறிக் கீழைக்கடல் சேரும் ஈழப் பேராருகிய மாவலி கங்கை இம் மாகாணத்தை, வடபாற் திருக்கோணமலை என்றும் தென்பால் மட்டக்களப்பு என்றும் எல்லை வகுத்துப் பாய்கின்றது. இவ்வாற்றிலிருந்து தெற்கே குமுக்கனுறு வரை சுமார் 130 மைல் நீண்டு, கிழக்கு மேற்காய் முறையே நெய்தலும், மருதமும், முல்லையும், குறிஞ்சியும் அணிபெற அமைந்து, சுமார் 70 மைல் அகன்று கிடப்பது இந்நாடு. இதன் நடுவணதாய் வடக்குத் தெற்காக நீண்டு மட்டக்களப்புவாவி கிடக்கின்றது. மட்டமான (ஆழமற்ற) நீர்நிலை எனும் பொருளமைந்த வாவியின் இப்பெயர் அதனிருமருங்கிலும் உள்ள நாட்டிற்குப் பெயராயிற்று என்று பெரும்பாலும் கொள்ளப்படுகின்றது. 'மட்டக்களப்புவ' எனும் சிங்களச் சொல்லின் திரிபாயமைந்த தென்று கருதுவர் ஒரு சாரார். இந்நாட்டு வளத்தில் ஈடுபட்ட புலவர்கள் இது 'மட்டுக்கலப்பு' (தேனுறு கலக்கும் நாடு) என்ற தமிழ்ச்சொற் பிறப்பி னமைந்ததே யென்று கூறி மகிழ்கின்றூர்கள்.

இந் நாட்டின் இயற்கை வனப்பைக் குறித்து யாழ்நூற் புலவர் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றூர்கள் :—

"மட்டக்களப்பிலே 30 மைல் நீண்ட வாவி ஒன்றுள்ளது. இது கடலொடு கலக்கும் வடகோடி அமிர்தகழி என்னும் புண்ணியப் பழம்பதிக்கு அணிமையானது. அழகிய தெற்குக் கோடிக்கு அணிமையாக மேற்குக் கரையிலே மண்டூர் எனும் புண்ணியப் பழம்பதி உளது. வாவியின் மேற்குக் கரை முழுவதும் மருதத் தண்பணையாகும். கிழக்குக் கரையில் உள்ள ஊர்கள் தெங்கு, மா, பலா முதலிய மரங்கள் செறிந்து கண்ணுக்கும் மனதுக்கும் உவகை தருவன. புலியன் என்னும் வேடர்குலத் தலைவன் அரசு புரிந்த விடமாதலின் முன்னளிலே 'புலியன் தீவு' என வழங்கப் பெற்றதும், இந்நாளிலே மொழிச் சிதைவினலே 'புளியந்தீவு' என வழங்கப்படுவதும், மூன்று மைல் சுற்றளவுடையதுமான அழகிய நகரம் ஒன்று காவிரி நடுவண் அமைந்த திருவரங்கம்போல மட்டக்களப்பு வாவியின் நடுவண் அமைந்துள்ளது. இந்நகர் மட்டக்களப்புப் பிரிவிற்குத் தலைநகராகும்." புளியந்தீவு எனும் இடப்பெயர் இப்பந்தியுட் கூட்டப்பட்டவாறு காரணத்தா னமைந்தமை போல, இங்குள்ள வேறு பல விடங்களும் காரணத்தாற் பெற்ற பெயர்களை உடையன.

சில உதாரணங்கள் :

காத்தான்குடி :- காத்தான் எனும் வேடனால் முதலிற் குடியிருக்கப் பெற்றது.

ஏறாவூர் :- (முக்குவரிட மிருந்து சோனகர் பரிசிலாகப் பெற்றுக் குடியேறும் வரை) ஒருவரும் குடியேறாதிருந்த ஊர்.

சத்துரு கொன்றான் :- பகைவர் கொல்லப்பட்ட இடம்.

சிங்காரத் தோப்பு :- அழகிய தோட்டங்களை உடைய இடம்.

வந்தாறுமூலை :- படைகள் வந்து ஆறியிருந்த பகுதி.

கிட்டங்கித்துறை :- நெல் சேர்க்கும் பெரிய களஞ்சியங்கள் கொண்டு வாவிக் கரையிலிருந்த துறை. (கிட்டங்கி—நெற் களஞ்சியம்).

மட்டக்களப்பு வாவியுள் பல தீவகங்கள் ஆங்காங்குள்ளன. அவற்றுட் பெரும்பாலானவை மருத வயல்களை உடையன. புளியந்தீவை யொட்டிய வாவியின் பகுதியிலேதான் 'இசையரமகளிர்' என்று பாராட்டப்பெறும் 'பாடும் மீன்களின்' (Singing Fish) இன்னிசை இடையறாது ஒலிக்கின்றது. மட்டு நகரத்திலிருந்து 'எழுவான்கரை' (வாவியின் கிழக்குக்கரை) வழியே தென்முகமாக ஒரு பிரதான பாதை கிராமங்களூடே செல்கின்றது. இப் பாதையில் 25-வது மைலில் உள்ள கல்முனை என்னுமிடம் இந்தப் பகுதியின் இரண்டாவது நகரமாகும். அங்கிருந்து தெற்கு நோக்கிச் செல்கையில் மட்டக்களப்பு நாட்டின் வயல் வளம் இனிதாகக் காட்சியளிக்கின்றது. பாதையின் வலப்புறமாகக் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு அடிவானம் வரையும் தோன்றும் பரந்த மருதத் தண்பணையின் காட்சி மிகுதியும் இன்பம் பயப்பதாயுள்ளது. உழவும், விதைப்பும், வெட்டும் ஒரே காலத்தில் வெவ்வேறு பகுதிகளில் நடைபெறலால் பல்வேறு தோற்றப் பொலிவு சான்ற இவ் வயற்பரப்பு, ஆங்காங்குள்ள வாய்க்கால் வடிகால்களினாலும், தாமரை, ஆம்பல், ஒல்லி என்பன நிறைந்த குளம் குட்டைகளினாலும் மேலும் புதிய அழகு வாய்ந்து காண்போர் கருத்தைக் கவர்ந்து தோன்றும். இடப்புறம் பார்த்தாலோ கடற்கரை சார்ந்து, அடர்ந்து வானுறவோங்கிய குலைத் தெங்குகளின் காட்சி. மக்கள் குடியிருக்கும் பகுதி அது. பழந்தமிழ் நூல்களிற் குறிப்பிடப்பெற்ற 'மன்றம்' ஆக அமைந்து "நரைமூதாளர் நாயிடக் குழிந்த" (முதியோர் பொழுது போக்காகக் கவறு ஆடுதலாற் குழிவு பெற்ற) இடங்களையுடைய பெரிய ஆல், அரசு, வேம்பு, வாகை முத

ளிய மரங்கள் சூழ்ந்த கோயில்கள் கிராமந்தோறும் காணப்படுவன. நானில வளமும் குவிக்கப்பெற்ற காட்சிச்சாலைகள் போன்று மிளிரும் சந்தைகள் இடந்தொறும் இடந்தொறும் கண்கொள்ளாக் காட்சி யளிக்கும்.

'படுவான்கரை' (வாவியின் மேல்கரை) வழியே பிரயாணம் செய்தாலோ கண்ணுக்கும் மனத்துக்கு மினிய புதிய வேறுகாட்சி; பழந்தமிழ்ப் பண்புடன் வாழும் உழவர் அங்கே காணப்படுவர். உழவர்தம் உயிர்போன்ற செல்வமான மந்தைகள் மேயும் முல்லைநிலத்தைச் சார்ந்துள்ள கழனிகள் தனியழகுடன் அங்குத் தோன்றுவ. முதிரை, கருங்காலி முதலிய மரங்கள் நிறைந்த பெரிய சோலைக் காடுகள் சிள்வண்டின் ஓசையாலும், ஆனை 'அரவத்'தாலும் செல்வார்க்கு அச்சத்தை விளைவிப்பன. அக் காடுகளிலும், மலைச் சாரல்களிலும் இருந்து எடுக்கப்படும் நறுந்தேனுக்கு அளவு கணக்கில்லை. இந்த மேற்குப் பகுதிச் செல்வம் "பாலோடு தேனூறு பாய்ந்தோடு நன்னாடு" என்று மட்டக்களப்புக்குப் பெரும் புகழையும் ஈட்டித் தந்துள்ளது.

சில இடங்களில் நானில வளமும் நெருங்கி அங்கங்கே விளங்கும் இந் நாட்டியற்கை அமைப்பு, பொய்கையார் எனும் புலவர் சேர அரசன் ஒருவனைப் புகழ்ந்து பாடியதாகவுள்ள:

"....................................
புனவர் தட்டை புடைப்பி னயலதை
இறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே."

—புறம். 49.

(சேனைப் பயிற் கொல்லைகளிற் கிளி கடிவார்தம் கருவி ஓசையினால் வெருண்டு, மருத வயல்களிலிருந்தும், நெய்தற் பொழில்களிலிருந்தும் பறவைகள் உடன் எழுந்து செல்கின்றன.)

என்ற பாடலை நினைவுறுத்துகின்றது. இதுபோன்று, மட்டக்களப்பு மகா வித்துவான் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இந் நாட்டின் நானில மயக்கினையும் குறித்துப் பாடிய:

"திருவளர் தாமரைத் தெண்ணீர்ப் பொய்கைவாய்
உருவ ஒண்சிறுஅர் மலராய்ந் துழக்கலின்
செழுநீர்ப் பறவைத் தொழுதிஆர்த் தெழுந்தே
கொழுமடற் றெங்கிற் குயிலொடு பயிலும்

தாட்டுணை ஆடவர் சதங்கைக் கூத்தொலி
சூட்டுமிசை மயிலந் தோகைதுபி லெழுப்பும்
பால்மலி எருமைப் பகட்டொடு மயங்கி
மால்மருப் பியானை வனந்தொறுந் திரியும்
குடம்பொழி பசுவினம் கண்துயி லிடந்தொறும்
மடம்பயில் மான்கணம் வண்புல் கறிக்கும்''

என்ற செய்யுளடிகளும் ஈண்டுக் கருதி இன்புறத்தக்கன. மேலும் அவர் இந் நாட்டுவளத்தை வர்ணித்துப் பாடியுள்ளதைப் பின்வரும் செய்யுட்களிலும் நாம் காணலாம்:

(1) "பால்பெருகும் தேன்பெருகும் பண்புடைய மன்னவர்செங்
கோல்பெருகும் படிவயற்பைங் கூழ்பெருகும் புனல்பரந்து
கால்பெருகும் கல்லார்க்கும் சொல்லாட்சி மிகப்பெருகும்
நூல்பெருகும் இடையார்க்கு நுவலறங்கள் பெருகுமால்."

(2) "..................................................
மட்டக் களப்புநீள் வளவயற் காய்த்த
நெல்லினும் பொலிக நல்யாண்டு பலவே."

(3) "புன்னைமரம் வளர்நெய்தற் புலவுமணற் கடற்கரையில்
தென்னைமரம் வளர்ந்தோங்கிச் செல்வமிக வளருமால
என்னைகுறை கலைமகளும் இனிதுகளி நடம்புரியும்
அன்னையெனு மட்டுநன்னாட் டம்மைதனக் கிணையெதுவோ."

(4) "மோட்டெருமை வெண்டயிரும் முப்பழமும் கற்கண்டும்
போட்டினிய சீனிதேன் பொருந்துசெந்நெல் வெண்சோற்றைக்
கூட்டிஒன்றாய்க் குழைத்ததனைக் குலக்குமரர் தமைக்கூவிக்
கூட்டுணுவார் அமிர்தமெனக் குறைவில்செல்வ மவர்க்கம்மா."

இங்குத் தந்த ஈற்றுச் செய்யுளடிகள் இங்குள்ளாரின் புதிதுண்ணும் வழக்கினை விவரிக்கின்றன. வெண்டயிருடன் கறி மிசையாது, சீனி, தேன் சேர்த்தொன்றாய்த் திரட்டி யுண்ணும் வழக்கம் மட்டக்களப்புக்கே தனித்துரியதொன்று.

இவ்வாறு நீர்வள நிலவளஞ் சான்ற மட்டுநன்னாடு 2500 வருடங்கட்கு முற்பட்டு இங்கே வாழ்ந்துவரும் பழந்தமிழ்க் குடிகளை உடையது. விஜயன் கி. மு. 540-ல் பாண்டி நாட்டிலிருந்து தமிழரைக் 'கதிரகால' என்னும் மலைச்சாரலில் குடியேற்றினன் என்றும், அப்பகுதி அக்காலத்து வேடராற் குடியிருக்கப் பெற்றதென்றும் மகா

வம்சம் என்னும் சிங்களச் சரித்திர நூலா லறிகின்றோம். அதிற் குறிப்பிடப்பெற்ற 'கதிரகால' மலைப்பகுதி சுமார் 1200 அடி உயர முள்ள குன்றுகளாக மட்டுநகரின் தென்மேல் திசையில் 17 மைல் தூரத்தே இன்றும் உளது. இக் குடியேற்றத்துக்கு நெடுங்காலத்துக்கு முற்பட்டது இராவணனாட்சி. அவனுடைய பக்திக்குரிய தலமான திருக்கோயிலும், அதன் தென்பால் கடலுள் அமிழ்ந்து தோன்றும் 'இராவணன் கோட்டை'களும் பழமையின் சின்னங்களாக இன்னமும் காணப்படுவ. விஜயனுடைய ஆட்சிக்குப் பின்னர்த் தொடர்ந்து சிங்கள ஆளுகையிலே இருந்த இத் தமிழகம் கி. பி. 200-ல் ஏலேல சிங்கன் எனும் சோழ அரசனுடைய படையெடுப்புக்கு இலக்காயிற்று. பின்னர் கி. பி. சுமார் 435-ல் குளக்கோடன் என்ற சோழ அரசன் படை திரட்டி வந்து இப் பகுதியைப் பிடித்துத் திருக்கோணமலைக் கோயிலையும், கோட்டையையும் கட்டித் தலைநகராக்கி 'வன்னியர்' என்னும் சிற்றரசர் எழுவரைத் தன் பிரதிநிதிகளா யங்கமர்த்தி ஆண்டானென்றும், அவனோடும் தமிழர் பலர் இங்குக் குடியேற்றப் பெற்றனரென்றும் கல்வெட்டுகளும், மகா வம்சமும் கூறுகின்றன. குளக்கோடனுடைய ஆட்சியின் பின்னர் நெடுங்காலத்துக்கு மட்டக் களப்புப் பகுதி கண்டிச் சிங்களவரின் கீழ்ப்பட்டுத் தமிழரசர்களால் ஆளப்பெற்று வந்துள்ளது. இடைக்காலத்தே கி. பி. 113-ல் கஜபாகு என்னும் சிங்கள மன்னன் சேர நாட்டிலிருந்து இலங்கைக்குப் பத்தினிக் கண்ணகி வழிபாட்டைக் கொண்டு வந்தானென்று சிலப்பதிகாரத்து வரந்தரு காதையால் அறிகின்றோம். இலங்கையில் பத்தினி வழிபாட்டை மட்டக்களப்பிற்றான் அவன் நிறுவினனோ என்று ஐயுறும் வண்ணம் கண்ணகி கோயில்களும், பண்டைய வழக்கத்தைத் தழுவிய அவ்வழிபாட்டு முறையும் இப் பகுதியிலேயே மிகுந்து காணப்படுகின்றன. இந்த வெவ்வேறு குடியேற்ற நிகழ்ச்சிகளினால், மட்டக் களப்புத் தமிழ் மக்கள் சேர சோழ பாண்டி நாடுகளில் எந்நாட்டினரின் சந்ததியினரென்பது தெளிவாகக் கூறுதற்கில்லை.

இங்குள்ளாரின் பழக்க வழக்கங்களை ஆராயும்போது, பழைய சேரநாட்டிலிருந்தனவாய், இன்று மலையாளக் கரையிற் காணப்படுவன சில, மேல்நாட்டு நாகரீக மயக்கில் மங்கி மறைந்துகொண்டிருக்கும் நிலையிற் காணப்படுகின்றன. மருமக்கட் தாயமுறையும், மந்திரப் பயிற்சிகளும், அதிகம் தேங்காய் கலந்த உணவுண்பதும், தலைக்குத் தேங்காயெண்ணெய் பூசுதலும், மங்கல நிகழ்ச்சிகளிற் குரவை அயர்தலும்

நாட்டுக்கூத்து நிகழ்த்துதலும் போன்றவை அவற்றுட் குறிப்பிடத் தக்கன. தாய்வழிக் குடியே பிள்ளையின் குடியாதலும், பெண்மைக்கு அதனால் முதன்மை கொடுத்துப் பேணி, மணம் முடித்த பின்னரும் பெற்றோர் தம் மகளை அவள் கணவனுடன் தம் வீட்டிலேயே வைத்திருக்கும் ஒழுகலாறும், பெண் வழிக்கென்றே சில ஆதனங்களைப் 'பெண்ணடி முதிசம்' ஆக எழுதி வைக்கும் வழக்காறும் இம் மருமக்கட் தாயத்தின் தொடர்பாக இன்னும் இங்கு கைக்கொள்ளப்படுகின்றன. பெண் மக்களும் பெற்றோர் வழிக்குப் பெருநிழலா யமைதலை ''ஆண் நிழலில் நின்று போ; பெண் நிழலில் இருந்து போ'' என்று இங்கு வழங்கும் பழமொழியால் நன்கு அறியலாம்.

மட்டக்களப்பு நாட்டின் மணமுறையானது ஆரியக் கலப்பற்ற தனிச்சிறப்பு வாய்ந்தது. மைத்துனர் குடியில் மணமக்கள் தீர்மானிக்கப் பெற்ற பின்னர்ப் பெண்வீட்டார் 'மாப்பிள்ளை' கேட்டு அவர் வீட்டுக்கு முறைப்படி போவதும், அப்பால் மாப்பிள்ளை வழியினர் அவ்வாறே 'பெண்பிள்ளை' வீட்டுக்குப் போவதும் நிகழ்ந்தபின் நல் 'முழுத்தம்' நிச்சயிக்கப்பெறும். அச் சுபநேரத்துப் பெண்பிள்ளை வீட்டிலே மணப்பலகையில் இருவர்க்கும் 'கண்ணூறு' கழித்த பின்னர்ப், பெண்ணின் தந்தையார் கைப்பிடித்துக் கொடுத்து மங்கல வாழ்த்துக் கூறுவார். பின்பு, 'கலத்தில் போடுதல்' என்னும் முக்கிய நிகழ்ச்சி இடம் பெறும். 'சேமக் கலக்கால்' மீதிட்ட பெரியதோர் வெண்கல வட்டியிற் படைத்த 'எழு மரக்கறி' கூட்டிய அறு சுவை யுண்டியை மணமகனும் மணமகளும் ஒருவர்க் கொருவர் மும்முறை யூட்டி உண்டு உறவு கலப்பர். இவ் வினையுடன், கூறை தாலி கட்டுதலும் நிறைவேறியதும் மட்டக்களப்புத் 'தேச வழக்க'ப்படி திருமணம் முடிந்ததாகக் கொள்ளப்படும். சில நாட்களின் பின்னர் மணமக்கள் மாப்பிள்ளை வீட்டுக்கும், தம் உறவினர் வீட்டுக்கும் செல்வர். இது 'கால்மாறிச் செல்லுதல்' என வழங்கும்.

மருதம் சான்று, ஈழ நாட்டின் மற்றைய பகுதிகளுக்கும் நெல் முதலிய உணவளித்துப் புகழ் ஈட்டிய இந் நாட்டுமக்களின் வேளாண் செய்கை முறைகளும் தனிப்பட்டவை. இங்கு வேளாண்மைச் செய்கை மூவகைப் படும். மழையை நம்பிச் செய்வது ஒன்று; இது, மாறு வாரி' (வானவாரி) என வழங்கும். நீர்ப்பாய்ச்சிச் செய்யப் பெறுவது மற்றொன்று; இது 'காலபோகம்' ஆகும். இவ்விரண்டுக்கும் இடைக் காலத்துச் செய்வதை 'இடைப்போகம்' என்பர். இங்குள்ள மிகுந்த

வயற்பரப்பு, நாற்று நடுதல், களை பிடுங்கல் என்பன பெரும்பாலும் இன்றியே நல் விளைவை அளிக்கின்றது. ஏக்கரொன்றுக்கு 150 புசல் விளையும் நிலமும் இங்குண்டு. இந்நாட்டில் உழுவித் துண்பாரைப் 'போடியார்' என்றும், உழவர் தலைவனை 'முல்லைக்காரன்' என்றும், உழவனைச் 'செய்கைக்காரன்' என்றும் பெயரிட்டழைப்பர். வயலிலே, விசேடமாகப் போரடுங் காலத்து, சூழூஉக்குறிகளையே பேசுவர். அவற்றுட் சில: பொலி (நெல்), களம் (சூடு மிதிக்கும் இடம்), வெள்ளம் (தண்ணீர்), வேலைக்காரன் (போர் கிளறும் வளைதடி), வாரிக்காலன் (மாடு), கரைஞ்சான் (வாழைப்பழம்), வலிச்சான் (ரொட்டி), வெள்ளோடன் (தேங்காய்), கூரைக்கோடு (வீடு), பொலிக்கொடி (வைக்கோல்), கணக்கன் (மரைக்கால்), குஞ்சுவாயன் (கைப்பெட்டி), பெருவாயன் (கடகம்), நெடுமுழவன் (கயிறு), கட்டு (வா, போ), பெருக்கம் (இல்லை) என்பன. தண்ணீர் இல்லை என்பதற்கு 'வெள்ளம் பெருக்கம்' என்று சேர்த்துப் பேசுவர். சூடு மிதிக்கும் தலைமை வாரிக்காலனை 'அரக்கன்' என்றும், 'சூடுபோடும்' (சூடுமிதிக்கும்) ஆரம்ப விழாவை 'அரக்குப் புதைத்தல்' என்றும், பொலிவிழாவின் முடிவை 'அரக்குக் கிளப்புதல்' என்றும் வழங்குவர். போரடும் காலத்துப் பாடப்படும் பொலிப் பாடல்கள் பல இங்கு நாடோடி இலக்கியமாக உண்டு:

"தாயே பொலி தம்பிரானே பொலி பூமிபொலி
பூமா தேவித்தாயே, மண்ணின்களமே மாதாவே
பொன்னின்களமே நிறைகுடமே பொலிபொலி பொலியோ."

"மாவிலுப்பைத் தோணி வெட்டிக்—கந்தர்
மாமாங்கம் போறாராம் பொலி பொலி பொலியோ."

"முன்னங்கால் வெள்ளையல்லோ—பொலிதன்மதாயே
முகம்நிறைந்த சிதேவி பொலிபொலி பொலியோ."

என்று, சூடு மிதிக்கும்போது, கடாக்கள் நோ மறந்து வேலைசெய்யத் தக்கதாக இந்நாட்டில் இன்குரற் தொடுத்துப் பாடப்படும் பொலிப் பாடல்கள், சித்திரை தொடக்கம் புரட்டாதி மாதம் வரையும் உள்ள பின்னிலா இரவு தொறும் நெடுந்தொலைவிலும் சென்றொலிக்கும்.

வயல் வேலைகள் முடிந்த ஓய்வு காலங்களில் மக்கள் கலைகளிற் கவனம் செலுத்தி வருகின்றார்கள். உடலுக்கும் உளத்துக்கும் பயிற்சி கொடுக்கும் அவை பெரும்பாலும் மக்களின் தொழில்களுடன் சம்பந்தம் பெற்றனவாயுள்ளன. வசந்தன் அடித்தல் இவற்றுட் பிரதான

மானது. பன்னிருவர் சேர்ந்து கோலடித்தாடும் இக்கூத்தில் 'அநுமான் வசந்தன்', 'அம்மன் பள்ளு', மாதவி நடனம், குயில் வசந்தன், செவ்வாய் வசந்தன், ஊஞ்சல் வசந்தன் போன்றனவும், 'வேளாண்மை வெட்டுவசந்தன்', 'உப்பட்டி கட்டு', 'சூடு மிதிப்பு', 'களை பிடுங்கல்' போன்றனவும் இடம் பெற்றுள.

"வாடை யாலே மழையும வருகுது
வாருங்கோ பள்ளர் உப்பட்டி கட்டுவோம்."

"தென்றல் வந்திடு தெற்குத் திசையினில்
சென்று காரிருள் மண்டி ஒதுங்குது."

என்று தம் தொழில் முறைகளைக் கூறி வசந்தனடித் தாடுதல் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும். மட்டக்களப்பு நாட்டின் வளத்தையும், மக்களின் தொழில், பண்பு, நாகரீகம் என்பவற்றையும் உள்ளுறையாகக் கொண்டெழுந்த நாடோடி இலக்கியமான இவ்வசந்தன், பாடல்களிற் பலவற்றை, அண்மையிற் காலஞ்சென்ற யாழ்ப்பாணத்து அறிஞர் சதாசிவ ஐயரவர்கள் திரட்டி நூலாக அச்சேற்றித் தமிழர்க் களித்துள்ளார்கள். அவர் தொண்டு வாழ்க.

மேலும், தென்மோடி, வடமோடி, விலாசம் எனும் பாகுபாட்டுள்ளமைந்த பல நாட்டுக் கூத்துகள் இங்குள்ளாரால் முறைப்படி ஆடப்படுகின்றன. பழந்தமிழ் நாடக இலக்கண அமைதியும், நல்ல நடையும், பொருட் பொலிவும் கொண்டு மிளிரும் அநிருத்த நாடகம், இராம நாடகம், தருமபுத்திர நாடகம் என்பன இவற்றுட் குறிப்பிடத் தக்கவை. ஆடவர் அரங்கேறித் திறம்படக் கூத்தாடிப் பெறும் புகழை, நல்ல மணமகனுதற்கோர் மேலதிகமான சிறப்பாக முன்னோர் கருதுவர்.

வசந்தனையும், நாட்டுக் கூத்துகளையும் விட இன்னோர் உணர்ச்சியூட்டும் பொழுதுபோக்கு, 'கொம்பு விளையாட்'டாகும். நாடு மழைவளம் குன்றி, பசியும் பிணியும் மிகுந்து மக்கள் அல்லற்படுங் காலத்து, அவை நீங்கி மழையும் வளமும் சுரக்குமாறு கண்ணகியம்மனைச் சாந்தி செய்யும் ஒரு விழாவாக இது நடத்தப்படுகின்றது. விழாக் காலத்து மக்கள் அனைவரும் 'தென்சேரி' (கண்ணகி கட்சி), 'வடசேரி' (கோவலன் கட்சி) என்று பிரிந்து நின்று கொம்பு முறித்து, அம்மனுக்குச் சடங்கு செய்து தேர் இழுத்துக், 'குளுத்தி'

பாடி வழிபாடாற்றுவர். வடசேரி, தென்சேரி என்பன 'வாரம்' என வழங்கப்படும். இந்த வாரப் பிரிப்பில் மாத்திரம் மக்கள் தந்தையின் சேரியைக் கைக்கொள்ளும் உரிமையுடையர். இவ் விளையாட்டில்:—

"தவிட்டங் காயான் தென்சேரியான்—அவன்
தன்மானம் சற்று மில்லாண்டி
அவிட்டுத் தலைப்பாவைக் கையி லெடுத்தே
அஞ்சி அதோஓடிப் போறாண்டி."

"வாழைக் காயான் வடசேரியான்—அவன்
மான ஈனம் கெட்டவண்டி
பெண்பிள்ளை பேச்சுக்கு ஆற்றாமலே அவன்
பேரழிந்தே வெட்கிப் போறாண்டி."

என்பனபோல ஒரு சேரியார், மற்றைச் சேரியாரை வசை பேசிப் பாடுதலும் வழக்காறாகும். இவ் விழாவின் முடிவில் மக்கள் வேண்டியாங்கு மழை பெய்து வருதல் இன்றும் கண்டு வியக்கத்தக்க நிகழ்ச்சியாகும். கழுதாவளை என்னும் ஊர் இக் கொம்பு விளையாட்டிற் பெயர் போனது. இங்கே 'கொம்புச் சந்தி' என்னும் பெயருள்ள இடமுண்டு. குளுத்தியின்போது கேட்கப்பெறும் கண்ணகி கதை சம்பந்தமான பாடல்கள் மிக இனிமையானவை.

ஆண்டுதோறும் வைகாசி வளர்மதி நாட்களிற் 'சடங்கும்', நிறைமதி நாளன்று 'குளுத்தி' யும் கண்ணகியம்மன் கோயில்களிற் தவறாது நடைபெற்று வருகின்றன. சிலப்பதிகாரத்திற் காணப்படுவதுபோற் தெய்வம் ஆடிக் 'கட்டுச் சொல்லும்' முறையும் இங்குண்டு. இவ்விழாக் காலத்தே சிலப்பதிகார விரிவுரை போன்று விளங்கும் 'கண்ணகியம்மன் வழக்குரை' கோயில்தோறும் பாடப்பெறும். ஓலைச் சுவடியாகவே கிடைப்பதும், பழந்தமிழ் நடையைப் பின்பற்றி யுள்ளதுமான இந்நூல் முழுவதும் இசைப் பாடல்களாலானது. கண்ணகி காரணமாக மதுரை எரிந்த பின்னர் அப் பத்தினித் தெய்வத்தின் கோபத்தீயைத் தணித்துக் குளிர் செய்தற்காகப் பலி கொடுத்துச் சடங்கு செய்து அவளருள்பெற்று மக்களுய்ந்ததாக அவ்வளவிலே நூல் முடிவடைகிற காரணத்தாற்போலும் 'வழக்குரை' என்று இதற்குப் பெயராயிற்று.

"கோடப் புருவே கொடுவாராய் வெற்றிலையே
அன்றனைய கோய்பிணிகள் இன்றே அகன்றோட."

"தட்டான் பொடியாக்த் தார்வேந்தன் நீறுகச்
சுட்டெரித்துப் போட்டதொரு தோகாய் குளிர்ந்தருளாய்." ||

என்று இருவர் சேர்ந்து இசையுடன் இவற்றைத் தொடர்ந்து பாடுதல் கேட்போர் தம்மை அகம் குழைந்தின்புறச் செய்யும்.

இந்நாட்டு மக்களின் சமயம், வழிபாட்டுமுறை என்பவற்றை ஆராயும்போது பழமையாக இங்குச் சைவசமயமே இருந்திருத்தல் தெரிகின்றது. பிள்ளையார், அம்மன், முருகன் ஆலயங்கள் பலவாய் எங்கும் காணப்படுவனவாயினும் முருகன் வழிபாடே பெருவழக்கா யுள்ளது. திருக்கோயில், அமிர்தகழி, மண்டூர், கொக்கட்டிச்சோலை போன்ற இடங்களிலுள்ள ஆலயங்கள் இவர்களின் பழமையான சமய வழிபாட்டுமுறைகளுக்குச் சான்றாக உள்ளன. கடற்கரை சார்ந்துள்ள திருக்கோவில் இராவணனுடைய தொடர்புடைய தலம் என முன்னர்க் கண்டோம். இலங்கையை எரிக்குணவு செய்த பின்னர் அநுமன் தன் வால் நெருப்பை அவித்த சந்தனச் சேறமைந்த திருக்குளமுடைய தும், இராமரால் பூசிக்கப்பெற்ற இலிங்கம் உடையதென்று கருதப் படுவதுமான பழம்பதி அமிர்தகழி. மண்டூர் இப்பகுதியிற் பிரசித்தி பெற்ற முருகவேள் கோயில். தில்லைமண்டூர் எனவும், சின்னக் கதிர்காமம் எனவும் சொல்லப்படும் இவ்வாலயத்தில் மௌன பூசையும், மிகப் பழங்காலத்ததான 'கந்தழி' வழிபாட்டு முறையும் நடைபெறு கின்றன. தான்தோன்றீசுவரர் கோயில்கொண்டுள்ள கொக்கட்டிச் சோலை இந்நாட்டில் உள்ள ஒரு பழைய சிவஸ்தலமாகும். மிகப் பழமையான சிற்ப வேலைப்பாடமைந்த தேர் இவ்வாலயத்து மட்டுமே உண்டு. இந்த ஆலயங்களின் வரலாறும், இவை பெற்ற மானியங் களும் பொறித்த செப்புப் பட்டயங்களையும், கல்வெட்டுகளையும் நாம் இன்னமும் காணலாம். தம்பிலுவில் அம்மன் கோவிலுக்கு அளிக்கப் பெற்ற மானியமொன்று திருக்கோவிலில் உள்ள பின்வரும் கல்வெட் டிற் குறிப்பிடப் பெற்றுள்ளது :—

"சிறிசங்கபோதி பருமரான திரிபூவன சக்கிரவர்த்திகள் சிறி விசய வாகுதேவர்க்கு ஆண்டு பத்தாவதில் தை ஶ 20-ந் திகதி சிவஞான சங்கர கோவிலுக்குக் கொடுத்த வோவில இதைத் தன்மத்துக்கு அகித்தம் செய்தானுகில் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்."

இதிற் குறிப்பிடப்பட்ட அரசன் 1-ம் விஜயபாகு (கி. பி. 1075) ஆவன். இப்படியான கல்வெட்டுகளையிட்ட குறிப்புகள் சில, மட்டக்

களப்பு வரலாற்றை ஆங்கிலத் தெழுதிய முதலியார் S. O. கனக ரத்தினம் அவர்களால் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன.

அருகிவரும் நிலையில் இங்கே உள்ளனவான 'நாகபடம்', 'மேலீடு', 'காதுப்பூ', 'காறை', 'கைக்கட்டு' எனும் ஆபரணங்கள் பழங் காலத் தொடர்புடையன. ஆண்கள் வாலிப வயதடைந்ததும் முதல் முதல் முகசவரம் செய்து, ஆண்மைக்கு அறிகுறியாகக் 'கடுக்கன்' அணிந்து கொள்ளும் வழக்கமும் மறைந்து வருகின்றது. ஊர்த்தலை வனைத் தெரிந்து இங்கே 'கடுக்கென்றவர்' எனும் பெயரால் அழைப் பர். இத்தொடரில் வரும் 'கடுக்கென்றல்' எனும் சொல் "கடுத்த பின் தேற்றுதல் யார்க்கும் அரிது" எனும் திருக்குறளில் வரும் 'கடுத்தல்' எனும் சொல்லின் கருத்திலேயே இருப்பது கருதத் தக்கது. 'பதினெண்குடிவேளாளர்' பற்றித் தொல்காப்பியத்திற் கேள்விப்படுகின்றோம். வேளாளர்களையும், முக்குவரையும், வேறு சில வகுப்பினரையும் 'குடிப்' பெயரால் அழைக்கும் வழக்கம் மட்டக் களப்பில் இன்றும் நிலவுகின்றது. தீபாவளிபோன்ற பண்டிகைகளி லும் பார்க்க, சித்திரை வருடப் பிறப்பினையே இங்குள்ளார் சிறப் புறக் கொண்டாடுவது சிந்திக்கத்தக்க ஒன்று. சில இடங்களில் இப் போது கிடைக்கும் கருங்கல்லிற் செதுக்கப்பெற்ற பெரிய கட்டில், நாற்காலி என்பனவும், எஃகினாற் செய்த வாள், ஈட்டி போன்ற ஆயுதங் களும், செம்பு நாணயங்களும், புதுமை தெரியும் பழமையான சில நகைகளும், மயில், மீன் என்பன எழுதிய கொடிகளும் இப் பகுதி மக்களின் பழைய நாகரீக வளர்ச்சி போன்றவற்றைக் காட்டும் சின் னங்களாகும்.

இப்படிப் பலவேறான பண்புகள் கொண்ட தமிழ்ச்சாதியாருடன் இந்நாட்டிலே, பழமையான சோனகச் சாதியினரும் ஐக்கியமாக வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் அராபியாவிலிருந்து வந்து கி. பி. 8-ம் நூற்றாண்டிற் குடியேறிய வியாபாரிகளின் சந்ததியார். தமிழையே தாய்மொழியாகக் கொண்டோர். இம்மக்கள் காத்தான்குடி, கரவாகுப் பகுதி, நிந்தவூர், சம்பான்துறை, அக்கரைப்பற்று, ஏறாவூர் முதலிய இடங்களிற் செறிந்து வாழுகின்றார்கள். மட்டக்களப்பின் மொத்தக் குடிசனத்தொகையான 203186-ல், 85375 பேர் சோனகர் என்றும், 102264 பேர் தமிழர் என்றும், மீதிப்பேர் பறங்கியர், சிங்களவர் முதலியோர் என்றும் 1946-ம் ஆண்டின் குடிசன மதிப்பு அறிக்கை யின்படி தெரிகின்றது. இப்பகுதிச் சோனகர் பழம் பண்பாடும்,

கட்டுப்பாடும் உடையோர். 'கவி' என்று வழங்கப்படும் நாட்டுப்பாடல்களைப் பெருவழக்கமாக இவர்களிடைக் கேட்கலாம். அப் பாடல்கள் பெரும்பாலும் அகச்சுவை தழுவிச் சொல்லழகும், பொருணயமும் பொதிந்து விளங்குவன.

'வாழைப் பழமே எந்தன் வலதுகையிற் சர்க்கரையே
ஏலம் கிராம்பே உன்னை என்னசொல்லிக் கூப்பிடட்டும்."

"குஞ்சு முகமும்—உன் கூர்விழுந்த மூக்கும்
நெற்றி இளம்பிறையும்—என் நித்திரையில் தோணுதடி."

"காவ லரணே மச்சான் கள்ளனுக்கு முள்ளரணே
வேலி யரணே மச்சான் வேணுமென்ற கள்ளனுக்கு."

"கடலே இரையாதே கற்கிணறே பொங்காதே
நிலவே எறியாதே என் நீலகண்டார் வருமளவும்."

என்பனபோல நல்ல உவமைகளும், சொல்லடுக்கும் கொண்டுள்ள கணக்கிறந்த 'கவி'கள் இம்மக்களின் வாழ்க்கைப் பண்புகளை நன்கு அறிதற்குக் கருவியாகின்றன.

இவையும், இவைபோன்று அகச்சுவையும் புறச்சுவையும் தழுவித் தமிழ் பேசும் மக்களிடையே வழங்கும் பிற கவிகளும், பண்டைய குருகுலக் கல்வி முறையை ஒட்டிப் பள்ளிச்சிறுர் பாடும் 'எண்ணெயச் சிந்து'களும், மற்றும் தனிப்பாடல்களான அகவல்கள், காவியங்கள், வசைப்பாடல்கள், ஊஞ்சற் பாட்டுகள், பள்ளுப் பாடல்கள் என்பனவும், முன்னர்க் கண்ட 'குளுத்தி', 'வழக்குரை', 'பொலிப்பாட்டு' என்பனவும் இவைபோன்ற பிறவுமாய் இந்நாட்டு வழக்கில் உள்ள அச்சேருத பண்பட்ட இலக்கியங்கள் யாவற்றையும் தமிழ் உலகிற்கு வெளிப்படுத்தல் அறிஞர் கடனும்.

இச் சிறப்புக்கள் வாய்ந்த மட்டக்களப்பு நாடு பண்டு சிங்கள ஆட்சியில் நெடுங்காலம் இருந்து வந்துள்ளது. கண்டி மன்னர்க்குத் திறை கொடுத்து ஆண்ட தமிழ்ச் சிற்றரசர்கள் தமிழர் பண்பாட்டை வளர்த்து வந்திருக்கிறுர்கள். அக்காலத்து இங்கிருந்தோர் கண்டி நகருக்குப் பொதி எருதுகளிற் சென்று வியாபாரம் செய்துவந்துள்ளார்கள். கண்டிக்குச் சென்றுவந்த தமிழ் வியாபாரிகள் கூறிய அநுபவமொழியாக உள்ள "அட்டை கடியும் அரிய வழிநடையும், கட்டை இடறுதலும் காணலாம் கண்டியிலே" என்னும் தொடர்,

பழமொழியாக இங்கு வழக்கத்தில் இருக்கின்றது. மண்டூர், சம்பாந்துறை எனும் இடங்களிலிருந்து கண்டிக்குச் சென்ற பழைய கிட்டிய பாதைகள் தூர்ந்த நிலையில் இன்னும் உளவாம்.

சிங்களரின் நீண்ட ஆட்சிக்குப் பின்னர் அவரிடமிருந்து போர்த்துக்கீசரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் முறையே இந்நாட்டைக் கைப்பற்றியுள்ளனர். போர்த்துக்கேயராற் தொடங்கப்பட்டு, டச்சுக்காரரால் கி. பி. 1864—ல் முடிக்கப்பெற்ற கோட்டை ஒன்று புளியந்தீவில் உளது. ஒல்லாந்தருடைய ஆட்சியின்போதிருந்து தினம் மாலை 4—15 மணிக்கு இக்கோட்டையில் ஒரு பீரங்கி வெடிச்சத்தம் கேட்கப்பட்டு வந்தது. இங்குள்ள வெயிற் கொடுமைக்காக மாலை 4—15 மணி தொடக்கம் இரா 9 மணி வரையுமே அவர்கள் வேலை செய்து வந்தனரென்றும், அவரை வேலைக்கழைக்கும் அறிவிப்பான பீரங்கிவெடி, ஆங்கிலேயர் காலத்து உத்தியோகத்தர் வேலை கலைதற்குரிய அறிவிப்பாக மாறியதென்றும் அறிகின்றோம். இப் பழைய பீரங்கி சுடும் வழக்கம் மிக அண்மையிற் கைவிடப்பட்டமை வருந்தத்தக்கதாகும். கோட்டைக்கல்லாறு எனும் இடத்திற் காணப்படும் சிதைந்த கோட்டை அத்திவாரமும், கிணறும் ஒல்லாந்தருடைய ஆட்சியை மேலும் நினைவூட்டுவன.

இவ் வெளிநாட்டாரின் சந்ததிகளாகப் பல போர்த்துக்கீச, ஒல்லாந்த மக்கள் மட்டக்களப்பில் வாழுகின்றனர். ஆங்கிலக் குடிகளும் சிலர் உளர். இங்குக் குடியேறிய ஆங்கிலேயர் பெரும்பாலும் மட்டக்களப்பிற் பெரிய தென்னந் தோட்டங்களை அமைத்து, தென்னையின் ஆக்கத்தில் இங்குள்ளோர்க்கும் ஊக்கமளிப்பாராயினர். திருக்கோவில், பட்டிருப்பு முதலியவிடங்களில் உள்ள மிகப் பெரிய தென்னந் தோட்டங்கள் அவர்களுடைய இம்முயற்சியின் பயனே.

வெளிநாட்டாரின் ஆட்சிக்காலத்தே, மதபோதனையை அடிப்படையாகக் கொண்டு, கிறிஸ்தவ சபையாரால் உலகியற் கல்வியும், அறிவியற் கல்வியும் முதல்முதல் இங்கு பரப்பப்பெற்றன. புதுக் கல்வியைத் தொடர்ந்து மக்களிடையே மத மாற்றமும், கிளர்ச்சியும் தோன்றலாயின. பின்னர் 1925—ல் உயர்திரு. விபுலாநந்த அடிகளாரால் தாபிக்கப்பெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கமானது, சமய சமரச நோக்கைப் பரப்பி, மத வேறுபாடு காரணமா யுண்டான வெறுப்பை நீக்கி அமைதியையும் இங்கே நிலைநாட்டிற்று. தீண்டாமைப் பிரச்சினை மக்கள் வாழ்க்கையை இந்நாட்டிற் பாதித்ததாகத்

தெரியவில்லை. இன்று மக்களனைவரும் தமக்குள் சாதி சமய வேறு பாடின்றி ஒன்றி வாழ்கின்றார்கள். வெளியிடங்களிலிருந்து அறிமுகம் குறித்தும் குறியாதும் புதிதாக வருவோரை மகிழ்ந்து வரவேற் றுபசரித்து, விருந்தயரும் பண்பில் மிகுதியும் சிறந்து, "வந்தாரை வாழ வைக்கும் மட்டக்களப்பு" எனும் பழம் புகழை இங்குள்ளார் நிலை நிறுத்தி வருகின்றனர். இப் பண்புகளும், இயற்கை வனப்பு, இயற்கை விளைபொருட்கள் என்பனவும் பிறரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளலால், ஈழத்தின் மற்றைய பகுதிகளின் அன்பையும் இந்நாடு பெற்றுள்ளது. இந்நாட்டை நோக்குவார் "உழவ ருழாதன நான்குபய னுடைத்தே" என்னும் தொடரை நினைவு கூராதிரார்.

மொழிவளத்தை ஆய்ந்து பார்க்கின், பழமையான நல்ல தமிழ் மொழி வழக்கு இங்கே இருப்பதை அறியலாகும். தமிழுலகிலேயே இன்று வழக்கொழிந்து போனதும், தொல்காப்பியர் காலத்ததுமான 'கா' என்னும் அசைநிலை இடைச்சொற் பிரயோகம் இங்கே இருக் கின்றது. எலுவன், எல்லா, ஏலா என்ற பண்டை விளிப்பெயர்க ளின் திரிபான 'இல' என்பதனுடன் 'கா' அசைச்சொல்லும் சேர்ந்து 'இலக்கா' என்னும் விளியாகிக் கிராம மக்களிடை வழங்குகின்றது. இதனை "மட்டக்களப்பிலே ஆட்வர் தோளிலுங்கா, அரிவையர் நாவி லுங்கா" என்று ஒரு யாழ்ப்பாணத் தமிழறிஞர் குறிப்பிட்டுக் கூறி யுள்ளார். இன்னும் இந்நாட்டு வழக்கில் இருக்கும்: மறுகா (மறு கால்), அப்புதல் (பூசுதல்), ஏமம் (யாமம்), முடுகு (கிட்டப்போ), ஒப்பிளை (ஒப்புவமை), நறணை (நறுநெய்), ஓண்ணு (ஒல்லா), திறுகு (திரும்பு), கொள்ளை (அதிகம்), விரசு (துரத்து, நெருங்கு), மப்பிலி (மயிற்பீலி), உவட்டு (பெருக்கு), பொருப்பத்தல் (பொருட்படுத்தல்), வண்ணக்கன் (கணக்கறிவன்) என்பன போன்ற சொற்கள் பழமை யான மூலப்பிறப்பினை உடையன. 'கணகாட்டு' (தொல்லை), 'கப்பக னார்' (பூசை செய்வோர்), 'கணத்தை' (சிறுபற்றைக்காடு), 'போட்டா' (பெருவரவை), 'கோப்புத்த' (கமுகுமட்டை), 'கிணட்டை' (சிறு வாழைக்குலை) என்பன போன்ற சொல்வழக்குகள் சிங்கள மொழித் தொடர்பால் பெற்ற கலப்பாகும். இன்னும் டச்சுச் சொற்களாக: மேசை, கதிரை, அலுமாரி, அலவாங்கு போன்றவையும் கலந்து வழங்குவ.

இந்த இலக்கியங்களும் பண்பாடும் நிறைந்த சூழ்நிலையிற் காலந் தோறும் பல பெரியார்கள் தோன்றித் தமிழ்த் தொண்டாற்றி

வந்துள்ளார்கள். தமிழ் வரலாறு முதலிய பல நூல்களின் ஆசிரியரும், உலகியல் விளக்க உரையாசிரியரும், மதுரைத் தமிழ்ச்சங்கப் பரீட்சகருமாகிய வித்துவான் ச. பூபாலபிள்ளை யவர்களையும், நாடக வல்லுநரும், மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தினருமாகிய வித்துவான் அ. சரவணமுத்தன் (ஈழத்து நாணலம் நித்திலக்கிழார்) அவர்களையும் தமிழுலகு நன்கறியும். சிறந்த தமிழ் ஆசிரியர்களாயும், எழுத்தாளர்களாயும், சரித்திர விற்பன்னர்களாயுமிருந்து தமிழுக்கு ஆக்க வேலைகள் செய்து போந்தார் பலராவர். அவர்களுள்: சின்னவப் புலவர், வித்துவான் பொ. வைத்திலிங்க தேசிகர், டக்டர் M. கோவிந்தர், S. O. கனகரத்தினம், R. N. சேதுகாவலர் பாதிரியார், D. W. கதிர்காமர் என்பார் குறிப்பிடத் தக்கவர்கள். மேலும் மிக அண்மையில் நம்மிடை வாழ்ந்து நம்முட் கலந்தவரும், மட்டக்களப்புக் காரைதீவு தோற்றுவித்த முத்தமிழ் முனிவருமாகிய பன்மொழிப் பண்டிதர் விபுலாநந்த அடிகள் தமிழ் இசைச் செல்வமான யாழ்நூல் மூலம் இந்நாட்டின் பெயரைப் பொன்னெழுத்திற் பொறித்துச் சென்றுள்ளதையும் நாமறிவோம். அப் பெரியாருடைய மதிப்பும் அன்பும் பெற்று அவர்களையே மெய்ம்மறந்துருகச் செய்த குழைவு பொருந்திய மீட்சிப் பத்துப் பாடல்களின் ஆசிரியரான திரு. ஏ. பெரியதம்பிப்பிள்ளை என்பார் இந்நாட்டில் இன்று வாழும் ஒரு புலவர் திலகமாவார். 'இலங்கைமணித் திருநாடு' எனும் தம் பாடலாற் பரந்த புகழ் பெற்ற இப்பெரியார் 'பகவத்கீதை வெண்பா' எனும் நூலை இனிய செந்தமிழில் யாத்து வைத்திருக்கிறார்கள். அந்நூலும், இன்னூராது நூற்றுக் கணக்கான மற்றைய தனிப்பாடல்களும் அச்சேறி வெளிவருங்காலத்து மட்டக்களப்பு நாட்டின் புகழ் மேலும் மிக்கோங்கும் எனக் கூறல் மிகையாகாது. இன்னும், கணபதிப்பிள்ளைப் புலவர், சின்னவப் புலவர், கா. அருணாசல தேசிகர், சோமசுந்தர உபதேசியார் போன்ற பெரியோர் தம் வரகவிகளினாலும், செந்தமிழ்ப் பிரசங்கங்களாலும் பொதுமக்களுடைய நன்மதிப்பைப் பெற்று வாழ்கின்றார்கள். இவர்களுடைய புலமையைப் பயன்படுத்தி நலனடைதல் தமிழர் கடமை.

எவ்வளவு பழமையும், பெருமையும் பெற்றிருந்தபோதிலும், மட்டக்களப்புத் தன் இயற்கையமைப்பினாலே இங்குள்ளாரை மற்றோருடன் கலந்துவாழ இயலாமற் செய்துள்ளது. மட்டக்களப்புவாவி நாட்டை இருநெடுங் கூறாக்கியிருத்தலால், வேண்டியபோது அதன் இருகரையினரும் தம்முட் சந்தித்தல் ஒல்லாதாயிற்று. மற்றைய

மாகாணங்கட்கும் இந் நாட்டுக்கும் இடையில் உள்ள மலை, ஆறு, பள்ளத்தாக்குப் போன்றன புறத் தொடர்புக்குத் தடையாயின. நாட்டின் செல்வத்தில் மயங்கிவந்த அயல் நாட்டவரும் கற்குடா, மட்டக்களப்பு, அறுகம்குடா போன்ற கடற்துறைகளை அஞ்ஞான்று அமைத்து, அவற்றின் மூலம் வளத்தை வாரிச் செல்வதிலேயே கருத்தாயிருந்தனர். சில வருடங்களின் முன்னர்தான், அரசியலறிவும் சட்டநூல் வல்லாருமாகிய E. R. தம்பிமுத்து அவர்களின் அருமுயற்சியினால் நிறைவுபெற்ற கல்லடிப் பாலம் மட்டக்களப்பின் தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் ஒரு பிணைப்பை ஏற்படுத்தி வைத்தது. நகருக்கு அண்மையில் அமைந்ததும், இலங்கையிலேயே பெரியதுமாயமைந்த இந்தப் பாலமும், வாழைச்சேனைக்கருகில் உள்ள 'ஓட்டமாவடிப் பால'மும் மிகுந்த அழகும் பயனும் பொருந்தியன. இவையிரண்டும், வெளியூர்களுடன் இணைக்கப்பெற்ற புதிய பிரயாண சாதனங்களும், மட்டக்களப்பினர்க்கு அயல் நாடுகளுடன் இருந்த கலாசாரத் தொடர்பை இலகுவில் வளர்க்கக் கருவியாயின. கால வெள்ளத்திற் கரைந்துபோன நாட்டின் பழஞ் செல்வம் மீட்கப்படுதற் கேதுவாக, பிரமாண்டமான, புதிய அமுதசுரபிபோன்ற 'கல்லோயா' அணைக்கட்டு வேலைகள் இங்கு நடைபெற்று வருகின்றன. "ஈழத் துணவு" என்று சங்கச் சான்றோர் தந்த பழம் புகழை, மட்டக்களப்பு நாடே வருங்காலத்தில் இவற்றால் இலங்கைக்கு மீட்டுக் கொடுக்கும் நிலை இன்னும் வெகு தூரத்தில் இல்லை எனலாம்.

இப்படிக் கலைவளம், நிலவளம் என்பன நிறைந்து ஈழத்தின் ஒரு புறத்துக் கிடக்கும் மட்டக்களப்புத் தமிழகமும், காலப்போக்கை ஒட்டி மற்றைத் தமிழ்ப் பகுதிகளுடன் சேர்ந்து உழைத்துத் தமிழன்னைக்குச் செய்யவேண்டிய கடமைகளில் தன் பங்கை நிறைவேற்ற வேண்டும். நாட்டின் பழமையை மட்டும் பாராட்டிச் சும்மா இருப்பதை ஒழித்து, இங்குள்ள அறிஞர் யாவரும் ஒன்றுபட்டு, அப் பழமையிற் புதுமலர்ச்சி கண்டு இப் பகுதியின் தொன்னலம் தூர்ந்து போகாது வளர்த்து வரவேண்டும். இந் நாட்டில் மறைந்துபோகும் நிலையில் உள்ள பண்டைய நாடோடி இலக்கியங்களையும், கல்வெட்டுப் போன்ற சாதனங்களையும் திரட்டி வெளியுலகுக்குக் காட்டி, "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை யில்லை; திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றுக்கும் நம்மை இலக்கியமாக்கிக் கொள்ளல் வேண்டும். இந் நாடு போன்று அங்கங்கே சிதறிக்கிடக்கும்

மற்றைய தமிழகங்களிலுள்ள மக்களுடைய தனிப்பட்ட பண்புகளையும் தேடித்தேடி அறிந்து, அவர் தம்முடன் பிணைந்து, இந்தியத் தமிழன், இலங்கைத் தமிழன் — அதிலும் யாழ்ப்பாணத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன் — என்பனபோன்ற பேதம் நீங்கித் தமிழர் ஒன்றுபட்டு வாழ்தற்கும் நம்மாலானதைச் செய்தல் வேண்டும். இப்படியான பல நற்பயன்கள் கைகூடுதற்காய்த் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினராற்றும் நற்பணிகள் கைகூடுதற்கு நம்மாலான முழு ஒத்துழைப்பையும் நாமளித்தல் அவசியம். இடந்தொறும சென்று காலத்துக்கேற்றபடி தமிழ் விழாக்கள் நடத்தி, இலக்கிய மலர்கள் வெளியிட்டு, காட்சிச்சாலைகள் வகுத்து, தமிழ்ப் பண்புகளை வெளிப்படுத்தித் தமிழினுடைய பழஞ் சிறப்பை மலர்வித்து நிலைநாட்டிவரும் இக் கழகத்தாரின் தொண்டுகள் நிலைபேறுள அரிய பயன்களைச் செய்ய நம் கன்னிமைகுன்றுச் செந்தமிழணங்கின் இன்னருள் என்றும் உடனிற்பதாக. நாட்டின் வாழ்வே நமது வாழ்வு. நமது வாழ்வே நாட்டின் வாழ்வு. தமிழ் வாழ்வே தமிழன் வாழ்வு. தமிழன் வாழ்வே தமிழ் வாழ்வு.

# ஈழ நாடும் இந்திய சிற்பமும்

திரு. க. நவரத்தினம்

*சீன மிசிரம் யவனரகம்—இன்னும்*
*தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை*
*ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக*
*நன்று வளர்த்த தமிழ்நாடு.*

எனச் சுப்பிரமணிய பாரதியார் கூறியதற்கு அமையத் தென்னிந்தியத் தமிழ்நாடு ஈழமெனப் பெயரிய இலங்கையுடன் பலதுறைகளிலும் தொன்றுதொட்டுத் தொடர்புடையதாக விளங்கியது. இத் தொடர்புக்குரிய சான்றுகள், சங்க இலக்கியங்களிலும், இரு நாட்டுச் சரித்திரங்களிலும், சிலாசாசனங்களிலும், கர்ணபரம்பரைக் கதைகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன.

இலங்கை மக்களிற் கூடிய தொகையினர் சிங்களராவர். அவர்களுக்கு அடுத்ததாகத் தொகையிற் கூடியோர் தமிழர்களே. தமிழர்கள் என்பது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் எல்லாரையும் குறிக்கும்.

**இலங்கையில் தமிழரும் சிங்களரும்**

கி. மு. 500 ஆண்டுகளுக்கு முன்னர் விஜயனும் அவனது கூட்டத்தாரும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறினார்கள் என்பதும், சிங்களர் அவர்களின் சந்ததியார் என்பதும் மகாவம்சம் முதலிய பௌத்த நூல்களாற் துணியப்படும். ஆனால், இக் காலச் சரித்திர ஆராய்ச்சியாளர், பௌத்த நூல்களிலுள்ள விஜயன் வரலாற்றை அங்கீகரியாது, சிங்களர்கள் ஆரியர்களின் வழித்தோன்றல்களெனப் பொதுப்படக் கூறுகின்றார்கள். இன்னும் சிலர், சிங்களர் ஆரியர்களின் வழித்தோன்றல்களெனக் கூறுவதோடு சிங்களரிடத்தே திராவிடக் கலப்பும் உண்டென்று வற்புறுத்துகின்றனர். டக்ரர் ஜி. சி. மென்டிஸ் கூறுவதாவது :

"சிங்களச் சாதிக்கு ஆக்கம் கொடுத்த இன்னுமொரு சாதியினர் திராவிடராவர். அத் திராவிடர் இத் தீவில் எப்போது குடியேறினார்கள் என்பதற்குரிய சான்றுகள் கிடையா. இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாகவும், சமாதானக் குடிகளாகவும் திராவிடர் இலங்கைக்கு மிகப் பழைய காலந் தொடங்கி வந்தார்கள். ............ கிறீஸ்

தாப்தத்தின் ஆரம்பந் தொடங்கிச் சில நூற்றுண்டுகளாகத் திராவிடர் சிங்களச் சாதியின் ஆக்கத்திற்குத் துணைபுரிந்தே வந்திருக்கிறார்கள்.[1]"

ஆரியர் வருகைக்கு முன்னும் இலங்கையில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதை எல்லாரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். எனவே அம் மக்கள் எப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதே இன்று ஆராய்ந்து அறியவேண்டிய விஷயமாகும். பூர்வீக இலங்கைமக்களை, சிங்களர், தராச்சர், இலம்பகர்ணர், பலிபோஜகர், மோரியர், கலிங்கர் என்னுங் கூட்டங்களைச் சேர்ந்தவர்களென மகாவம்சங் கூறுகின்றது. இக் கூட்டங்கள், திராவிடர் தென்னிந்தியாவிற் குடியேற முன்பு அங்கு வாழ்ந்த மக்களினத்தைச் சேர்ந்தவர்களாயிருத்தல் வேண்டும் என்பது டக்ரர் மெண்டிஸ் அவர்களின் கருத்தாகும்.[2] திராவிடர்கள் பிறநாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்தவர்கள் என்னும் முடிவை எல்லாரும் ஏற்றுக் கொள்வதில்லை. தமிழ் நாட்டுப் பழைய கதைகளிலாவது, சங்க இலக்கியங்களிலாவது இக் கொள்கைக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. திராவிடர் ஆதிகாலந் தொட்டுத் தென்னிந்தியாவிலேயே யிருந்தனர் என்றும், அங்கிருந்தே உலகத்தின் பல பகுதிகளுக்குஞ் சென்று குடியேறினர் என்றும் இத்துறையில் ஆராய்ந்தார் பலர் கூறுகின்றனர். (Dravidian India Vol. I — Dravidian Origin 22-64). எனவே, திராவிடர் தென்னிந்தியாவிற் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்தனரென்றும், மகாவம்சம் கூறும் பிரிவுகள் அவற்றுட் சில என்றும், நாம் கொள்ளுதல் பொருத்தமுடைத்தென்க. அங்கு காணப்பட்ட பிரிவினரே இலங்கையிலும் விஜயனுக்கு முன்னர் குடியேறியிருத்தல்வேண்டும்.

திராவிடர்களாகிய பழந்தமிழர், கி. மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியா, எகிப்து, பாரசீகம் முதலிய நாடுகளிற் குடியேறி வாணிபம் நடத்தி வந்தனரெனச் சரித்திர நூலாசிரியர்கள் கூறுகின்றனர். சுமேரியர்களின் முன்னோர் திராவிடராயிருத்தல் வேண்டுமென H. R. Hall என்பவர் கூறுகின்றார். கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுமேரியத் தலைநகராகிய 'ஊர்' (Ur) என்னும் பட்டினத்தில் தென்னிந்தியத் தேக்கமரத் துண்டுகள் காணப்பட்டன. கி. மு. 2000, 3000 ஆண்டுகட்கு முன் எகிப்தில் தென்னிந்திய கருங்காலி, தந்தம், பருத்திநூற் புடைவை முதலியன வாணிபப் பொருட்களாக உபயோகிக்கப்பட்டனவாம்.[3] இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன் சுமேரியா,

1. இலங்கைப் பூர்வ சரித்திரம் — பக். 12.
2. இலங்கைப் பூர்வ சரித்திரம் — பக். 8.
3. History of Tamils — P. T. Srinivasa Iyangar.

எகிப்து, சீரியா, பாரசீகம் முதலிய நாடுகளுடன் வாணிபம் நடத்திய திராவிடர், கி. மு. 600 வரையிற்றான் இலங்கையை அடைந்தார்களெனக் கூறுவது பொருந்தாது. அக்கால உலகமெங்கும் கப்பலோட்டிச் சென்ற தமிழ் மாலுமிகள் இலங்கையையும் நன்கு அறிந்திருப்பார்கள் என்றே கொள்ளவேண்டும். எனவே, ஆரியர்கள் இலங்கைக்கு வருமுன் தமிழர்களாகிய திராவிடர் இலங்கையிற் குடியேறினார்களெனக் கொள்ளுதல் பொருத்தமானதென்க. பண்டைக்கால இந்து சமய இதிகாசங்களும், புராணங்களும் இலங்கையையும் இந்தியாவையும் தொடர்புபடுத்தியே கூறுகின்றன. மனித உற்பத்திக்காலம் தொடக்கம் இத்தொடர்பேற்பட்டதென்பது புராண இதிகாசங்களின் முடிபாம்.

**தமிழ் நூல்களும் ஈழமும்**

ஈழத்துப் பூதந்தேவனா ரென்னும் புலவர் மதுரையில் வாழ்ந்தாரெனத் தமிழ்ச்சங்க நூல்கள் கூறுகின்றன. இவ் வீழம் எதுவென்பது ஆராய்வதற்குரியது. பட்டினப்பாலையில் :

“கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத் துணவுங் காழகத் தாக்கமும்”

எனவரும் அடிகளிலும், சிலப்பதிகாரத்தில் :

“கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்”

எனவரும் அடியிலும், மணிமேகலையில் :

“ஈங்கித னயலகத் திரத்தின தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
அறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலின்”

எனவரும் அடிகளிலும் ஈழம் குறிப்பிடப்படுவது காண்க.

‘ஈங்கிதன்’ என்னும் மணிமேகலைச் சொற்றொடர், நாகதீபமெனவும், மணிபல்லபம் எனவும் வழங்கப்படும் யாழ்ப்பாணத்தையே குறிக்கின்றதென்று சிலர் கருதுகின்றார்கள்.

**இலங்கையிற் சைவமும் பௌத்தமும்**

ஈழ நாட்டில் மிகப் பண்டைக்காலந் தொட்டுச் சிவனை வழிபடுஞ் சைவசமயம் பரவியிருந்ததென்பதற்கு, மகாவம்சமென்னும் இலங்கைச் சரித்திர நூலிலும், தேவாரத் திருமுறைகளிலும் சான்றுகளுள. தமிழ்நாட்டிற் காலத்துக்குக் காலம் சிறப்படைந்து வீரம் செறிந்து

வாழ்ந்த சேர, சோழ, பாண்டிய பல்லவ, மன்னர்கள் தங்கள் ஆதிக்கத்தை இலங்கைமீதும் செலுத்தினர்களென்று இருநாட்டுச் சரித்திர நூல்களும் கூறுகின்றன.

அரசியற் றொடர்பின் பயனாகவும், சமயத் தொடர்பின் பயனாகவும் சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய கலைத்தொடர்பு இரு நாட்டுக்கும் ஏற்பட்டுச் சிறந்த முறையில் வளர்ந்துவந்தது. கி. மு. 3-ம் நூற்றாண்டிலே தேவநம்பியதீசன் காலத்தில் பௌத்தசமயம் இலங்கையிற் புகுந்தது. அன்று தொடங்கி இன்று வரையும் சிங்களருடைய சமயம் பௌத்த சமயம் என்பதை யாவரும் அறிவர். இலங்கையின் வடபகுதியிலும், கீழ்ப்பகுதியிலும் வாழ்ந்த தமிழர்களிடத்தே சைவசமயம் நன்கு வளர்ந்து நிலைபெற்றது. இலங்கைச் சரித்திரத்தின் மத்திய காலத்திலும் அதற்குப் பின்னும் தமிழரசர்கள் இடைக்கிடை ஆதிக்கம் பெற்றபோது இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் சைவசமயம் சிறுகப் பரவியது.

புத்தசமயம் இலங்கையிற் பரவியபோதே இந்திய கலாசாரப் பண்புகளும் இங்கு பரவின. இந்தியாவில் அக்காலத்தில் மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட கலாசாரப் பண்புகள் யாவும் சமயத்தையே ஆதாரமாகக்கொண்டு வளர்ந்தன. அரசியல், கல்விமுறை, கலை, சமூகஅமைப்பு என்பன எல்லாம் சமய வளர்ச்சிக்கு அடிகோலின. இத்தகைய இயல்புவாய்ந்த இந்தியாவிலிருந்து, இலங்கைக்கு வந்த புத்த சமயமும் இந்தியாவின் கலாசாரங்களையும் பண்பாடுகளையும் இலங்கையிலும் வளர்த்தது. தர்மச் சக்கரவர்த்தியாகிய அசோகன் காலத்தில் பௌத்த சமயம் இந்தியாவில் எந்தச் சிறப்புக்களைக்கொண்டு விளங்கியதோ அந்தச் சிறப்புகள் யாவும் இலங்கையிலும் அக்காலத்திற் பரவின. அசோகன் மகன் மகிந்தனே இலங்கையிற் பௌத்த சமயத்தைப் பரப்ப முன் வந்தான். மகிந்தனின் சகோதரியாகிய சங்கமித்தா என்பவரே வெள்ளரசை இலங்கைக்குக் கொண்டு வந்தார். சங்கமித்தாவின் வருகை யாழ்ப்பாணத்தோடு தொடர்புற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுழிபுரத்துக்கருகில் வெள்ளரசும், கோதைமனுவை, திசமனுவை என்ற கிராமங்களும் காணப்படுகின்றன. இவற்றை ஆதாரமாகக்கொண்டு சங்கமித்தா வெள்ளரசம் முளைகளோடு யாழ்ப்பாணத்து வடபகுதித் துறையொன்றில் இறங்கினரென்றும், தேவநம்பியதீசன் வெள்ளரசை வரவேற்பதற்காக வடகரைக்கு வந்து தங்கினனென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்கள். தீசன்

தங்கினமையால் தீசமஹாவை யென்றும், போதி இறக்கப்பட்டமையால் போதிமஹாவை யென்றும் பெயர் பெற்றுப் பிற்காலத்தில் அவை திச மஹாவை, கோதமஹாவை எனத் திரிந்தன என்றும் அவ்வாராய்ச்சி யாளர் விளக்குகிறார்கள். திசமஹாவை பருளாய் விநாயகர் கோவி லுக்கு முற்பக்கத்திலுள்ளது. கோதமஹாவை திருவடிநிலைக்கருகி லுள்ளது.

மேலே கூறியவற்றைச் சிந்திக்குமிடத்து, தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் போக்குவரவுக் கனுகூலமான பல துறைமுகங்கள் யாழ்ப் பாணத்தின் வடபகுதியில் இருந்தன என்பதும், அவற்றொன்றிலே வெள்ளரசு இறக்கப்பட்டதென்பதும் நன்கு புலப்படும்.

புத்த சமயமும் புத்த சமயக் கலைப் பண்புகளும் கி. பி. 8-ம் நூற்றாண்டுவரையும் இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் நன்கு மதிக் கப்பட்டு விருத்தியடைந்தன. புத்த சமயக் கலைப் பண்புகள், சிற்பம், ஓவியம், இலக்கியம் ஆகியனவற்றில் நன்கு செறிந்தன.

இலங்கையில் நன்கு பரவிய பௌத்த சமயம், சிங்கள அரசர்களின் ஆதரவைப் பெருமளவிற் பெற்றுக்கொண்டதால் மற்றெந்த நாட்டி லும் பார்க்க இலங்கையில் அச்சமயம் நன்கு நிலைபெற்றது. இந்தியா வில் சைவ வைஷ்ணவ சமயங்கள் மேம்பட்ட காலத்திலே பௌத்த கலைப் பண்புகள் சிதைந்தபோதும் அவை இலங்கையில் இன்றும் நின்று நிலவுவது கவனிக்கத்தக்கதாகும். புத்த சமயத்தையும் அதன் கலைப் பண்புகளையும் இக்காலத்தில் நன்கு தெரிந்துகொள்வதற்கு இலங்கையே முதல் ஸ்தானமாகத் திகழ்கின்றது.

**இந்தியச் சிற்பமுறைகள்**

அசோகச் சக்கரவர்த்தி காலந்தொடக்க மேற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் சமயப் புரட்சிகளாலும் இந்தியாவிற் பலதிறப்பட்ட சிற்பமுறைகள் தோன்றி விருத்தியடைந்தன. இந்தியச் சிற்பமுறை கள் பலவாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன: — மௌரியசிற்பம், மதுராச்சிற்பம், காந்தாரசிற்பம், அமராவதிச்சிற்பம், (ஆந்திர) குப்த சிற்பம், சாளுக்கியசிற்பம், பல்லவசிற்பம், சோழசிற்பம், பாண்டியசிற் பம், விஜயநகரசிற்பம், நாயக்க (மதுரை) சிற்பம், சேதுபதிகள் சிற்பம் (இராமேசுவரம்) என்பனவாம். வெவ்வேறு காலங்களிற் தோன்றிய அரசர்களுடைய அனுசரிப்பின் பயனாய்ப் பலதிறப்பட்ட சிற்பமுறைகள் ஒன்றன்பின்னொன்றாய்த் தோன்றின.

இந்திய அரசர்களது ஆதிக்கம் சென்று நிலைபெற்ற எல்லா நாடுகளிலும் இந்திய கலைப் பண்புகளும் இந்து சமயமும் பரவின. இந்தியாவுடன் சமயத்துறையிலும் அரசியற்றுறையிலும் மிக நெருங்கிய தொடர்புடையதாய் இலங்கை விளங்கியதென முன்னரே கூறப்பட்டது. இத் தொடர்பால் இந்திய கலைப் பண்புகளாகிய சிற்பம், ஓவியம், இலக்கியம், இசை, நடனம் என்பன யாவும் இன்றும் இலங்கையில் நன்கு காணப்படுகின்றன.

**பௌத்த ஆலயங்கள்**

அசோகன் காலத்தில் இந்தியாவில் வளரத்தொடங்கிய புத்த சமயம் கி. பி. 4-ம் நூற்றுண்டு வரையும் மேன்மேலும் சிறப்புற்றுப் பரவியது. முதன் முதலாகப் புத்த ஆலயங்களை அசோக மன்னன் கட்டுவித்தான். அவனின் முன்மாதிரியைப் பின்பற்றிப் பிற்காலத்தில் அரசுசெலுத்திய பௌத்த அரசர்கள் பௌத்த தாதுகோபங்களையும், ஆலயங்களையும், அறவோர் பள்ளிகளையும் நாட்டின் பல பாகங்களிலும் கட்டுவித்தனர். இலங்கையிலும் அவ்விதமே பௌத்த சமய நிலையங்கள் பல இந்தியாவைப் பின்பற்றிக் கட்டப்பட்டன.

இலங்கையிலே பௌத்த சமய நிலையங்களிலுள்ள சிற்பங்கள் யாவும் இந்திய சிற்பமுறைகளைத் தழுவியனவாய்க் காணப்படுகின்றன. இந்திய சிற்ப இயல்புகளைக் கொண்ட பொருட்களும் அவை போன்றனவும் இலங்கையின் பல பாகங்களிலுமுண்டு. இலங்கை, யாவா, சுமத்திரா, கம்போடியா முதலிய நாடுகளிற் காணப்படும் சிற்பப் பொருட்களை இந்தியசிற்பம் என்னும் பெரும்பிரிவில் வைத்தே கலைப் புலவர்கள் ஆராய்கின்றனர். இக்காரணம் பற்றியே இலங்கை முதலிய நாடுகளின் சிற்ப வளர்ச்சி இந்திய சிற்ப வரலாற்று நூல்களில் எடுத்துக் கூறப்படுகின்றது. இலங்கைச் சிற்பம் இந்தியச் சிற்பத்தின் ஒரு பிரிவெனக் கூறின் அது மறுக்கமுடியாத உண்மையென்க. இலங்கைச் சிற்பப் பொருள்களில் புதிய அம்சங்கள் சில காணப்படுகின்றன. என்றாலும், அவை இந்தியச் சிற்பத்துக்கு வேறுபட்டவையென ஆராய்ச்சியாளரால் எண்ணப்படுவதில்லை. சிங்களச் சிற்பம், சிங்கள ஓவியம், சிங்களக் கலை எனத் தனித்த துறைகளிருப்பதாக எக்கலைப் புலவர்களும் கூறுவதில்லை. சிங்கள மக்களும் அன்றுதொட்டு இன்றுவரையும் இந்தியக் கலையையே தமது சொந்தக் கலையாகப் போற்றி வளர்த்து வந்திருக்கிறார்கள். சிங்களர்களும் இந்திய மக்களின் ஒரு பிரிவினர் என்பதை அவர்களின் கலைவரலாறு நன்கு நிரூபிக்கின்றது.



சுந்தரமூர்த்தி சுவாமிகள் [பக்கம் – 37]

உபயம்: 'ஈழகேசரி', சுன்னுகம்



நாளந்தா கேடிகே [பக்கம் – 37]

உபயம்: அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி



தூபராம ஆலயம் [பக்கம் – 37]

உபயம்: அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி

**இலங்கையில் சிற்ப வளர்ச்சி**

இலங்கையின் சிற்ப வளர்ச்சியை நான்கு பிரிவுகளாக வகுத்து ஆராயலாம். முதலாம் பிரிவு தேவநம்பியதீசன் காலந் தொடங்கி 8-ம் நூற்றாண்டுவரையும் உள்ள வளர்ச்சியாகும். இதை அனுராதபுரக் காலம் எனலாம். இரண்டாம் பிரிவு, 9-ம் நூற்றாண்டு தொடங்கிப் 14-ம் நூற்றாண்டு வரையும் உள்ள வளர்ச்சியாகும். இதைப் பொல்லனறுவைக் காலம் எனலாம். மூன்றாம் பிரிவு, 15-ம் நூற்றாண்டு தொடங்கி 18-ம் நூற்றாண்டு வரைக்கும் உள்ள வளர்ச்சியாகும். இதைக் கண்டிநகர்க்காலம் எனலாம். நான்காம் பிரிவு, 19-ம் நூற்றாண்டும் அதற்குப் பிந்திய காலத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியாகும். இதைக் கொழும்பு நகர்க் காலம் எனலாம். இந்திய சிற்ப முறைகளை இந்நான்கு கால எல்லைகளுக்குள்ளும் வைத்து இருநாட்டுச் சிற்பத் தொடர்பையும் ஆராய்தல் பொருத்தமாகும். மௌரிய, மதுரா, ஆந்திரா, குப்த, பல்லவ சிற்ப முறைகள் அனுராதபுரக் காலத்தைச் சேர்ந்தவை; சோழ பாண்டிய சிற்ப முறைகள் பொல்லனறுவைக் காலத்தைச் சேர்ந்தவை; விஜயநகர, நாயக்க (தென்மதுரை), சேதுபதிகள் சிற்ப முறைகள் கண்டிநகர்க் காலத்தையும் அதற்குப்பிந்திய காலத்தையும் சேர்ந்தவை யென்க.

## அனுராதபுரக் காலம்

**1. மௌரிய சிற்பமுறை**

அனுராதபுரக்காலம் தேவநம்பியதீசன் காலந் தொடங்கி 9-ம் நூற்றாண்டின் இறுதியோடு முடிவடைகிறது. தீசன் மிகுந்தலையிலும், அனுராதபுரத்திலும் தாதுகோபங்களைக் கட்டுவித்தான். அனுராதபுரத்தில் இன்று காணப்படும் தூபாராம தாதுகோபம், தீசன் கட்டிய தாதுகோபம் அழிந்தபின்பு கட்டப்பட்டதாகும். துட்டகைமுனு (கி. மு. 107 – 77) 'ரூவான் வெலிசய' என்னும் தாதுகோபத்தையும், லோவமகாபாயா என்னும் உபோசத மாளிகை (விரத இல்லம்) யையும் கட்டுவித்தான். இத் தாதுகோபங்கள் இந்தியாவில் மௌரிய சிற்பகாலத்திறுதியில் அமைக்கப்பட்ட சாஞ்சித் தாதுகோபத்தையே பின்பற்றிச் செய்யப்பட்டவையாம். துட்டகைமுனு ரூவான்வெலிசயவில் அடக்கஞ் செய்வதற்குத் தேவையான ஞாபக சின்னங்களை ஆந்திர நாட்டினின்று பெற்றானென்றும், அக்காலத்தில் அந்நாட்டுத் தாதுகோப அமைப்பு முறைகள் இலங்கையிற் பரவின என்றும் கூறப்படுகின்றன.[1] தீசனையும் துட்டகைமுனுவையும் பின்பற்றி அனுராதபுர

1. Buddhistic Remains in Andhra by K. R. Subramaniam M. A., — P. 141.

அரசர்கள் தாதுகோபங்களையும் ஆலயங்களையும் (விகாரைகள்) அறவோர் பள்ளிகளையும் அமைத்தனர். அவை யாவும் அவ்வக்காலத்தில் இந்தியாவில் விருத்தியடைந்த முறைகளைப் பின்பற்றியனவாகும்.

## 2. ஆந்திரச் சிற்பமுறை

'சிராவத்தியின் அற்புதச் செயலையும்', 'மாயாதேவியின் கனவையும்' விளக்கும் சித்திரங்களே இலங்கையிற் காணப்படும் பழமை பொருந்திய சிற்ப வடிவங்களாம். அவை ஆந்திரச் சிற்பமுறையைத் தழுவிச் செய்யப்பட்டன. கொழும்பு நூதன பொருட்சாலையில் அவற்றை இப்பொழுது காணலாம். அவற்றினத்தைச் சேர்ந்த வேறு சித்திரங்கள் 'சேதவனராம' தாதுகோபத்தின் பலிபீடத்தை அலங்கரித்தற்காக இலங்கையிற் செதுக்கப்பட்டனவாம். அங்ஙனஞ் செதுக்கப்பட்டனவற்றுள் நாகராஜனையும், உபதேசிக்கும் போதிசத்துவரையும் குறிக்கும் வடிவங்கள் மிகச் சிறந்தன. ரூவான்வெலிசய தாதுகோபத்தின் பக்கத்தில் மூன்று நின்றபாவனையுடைய புத்த உருவங்கள் காணப்பட்டன. அவை அமைப்புமுறையில் அமராவதிச் சிற்பங்களை ஒத்திருந்தன[1]. ஆந்திரநாடு சிறப்புற்று விளங்கிய காலத்தில் அந்நாட்டுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பேற்பட்டது.

> "இலங்கையில் பௌத்த சமய நூல்கள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டகாரணத்தால் அந்நாட்டுக்கு அநேக யாத்திரிகர்களும் பண்டிதர்களும் சென்றனர். நாகார்ச்சுனரும், ஆரியதேவரும் அந்நாட்டிடம் தொடர்புள்ளவர்களாயிருந்தனர். பிற்காலத்தில் புத்த தேவரும் புத்த தத்தரும் அந்நாட்டு நூல்நிலையங்களைப் பயன்படுத்தினர்"

என ஒரு அறிஞர் கூறுகின்றார்.[2] இத்தகைய தொடர்பு ஆந்திரச் சிற்பமுறைகளை இலங்கையிற் பரவச் செய்தது.

## 3. குப்த சிற்பமுறை

அனுராதபுரக் காட்டில் பத்மாசனமிட்டுத் தியானத்திலமர்ந்த பாவனையுடைய புத்தபகவானின் ஒரு திவ்விய வடிவங் காணப்படுகின்றது. இது இலங்கையிற் காணப்படும் புத்தரது வடிவங்களெல்லாவற்றிலும் தலைசிறந்தது. இவ்வடிவம் குப்தகாலச் சிற்பமுறையிலக்கணங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்டது. டக்டர் ஆனந்தக் குமாரசாமி

1. Buddhist Art — Vogel. P. 84.
2. Buddhistic Remains & Andhra History — P. 141.

யவர்கள் இவ்வடிவம் 4—ம் நூற்றூண்டினதாயிருக்கலாமெனக் கருது கிறூர்கள். குப்த சிற்பமுறைக்குச் சேர்ந்த வேறிரண்டு உருவங்களின் தலைகள் கொழும்பு நூதன பொருட்சாலையிற் காணப்படுகின்றன. அவை போதிசத்துவரதும் மைத்திரேயரதும் தலைகளாகும். ஈசுர முனிய விகாரையின் சுவரிற் காணப்படும் தம்பதிகளின் சிற்பமும், அனுராதபுரி இராணிமாளிகை வாசலிற் காணப்படும் சந்திரவட்டக் கற்படியும், சிகிரியாமலை ஓவியங்களும் குப்த சிற்பமுறையில் அமைந்தனவாம். சிகிரியா ஓவியங்கள் அஜந்தா ஓவியங்களைப் பின்பற்றி இலங்கையிற் காசியப்பன் காலத்தில் வரையப்பெற்றவை. குப்த மன்னர் காலத்தில் இந்தியாவில் புத்தசமயங் குன்றி இந்துசமயம் வளர்ச்சிபெற்றதால் அன்றுதொடங்கி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சமயத்தொடர்பு அருகிவிட்டது. அதன் பின்னர் இலங்கையிற் பௌத்த சமயப் பண்புகள் யாவும் பெரும்பாலும் பிறநாட்டுத் தொடர்பின்றியே வளர்ந்தன. இலங்கையின் பல பாகங்களிலும் இன்று காணப்படும் போதிசத்துவ வடிவங்கள் குப்த காலத்தனவாதல் வேண்டும். இலங்கையிற் கண்டெடுக்கப்பட்ட கண்ணகி வடிவங்களுட் சிறந்ததை லண்டன்மாநகரில் இப்போது வைத்திருக்கிறூர்கள். அதன் பிரதியொன்று கொழும்பு நூதனசாலையிலுண்டு. இவ்வடிவத்திலுள்ள சிற்பமுறைகள் குப்த காலத்தன என்பது டக்டர் ஆனந்தக் குமாரசாமி அவர்கள் கருத்தாம்.

கண்ணகி வழிபாட்டையும் உருவத்தையும் இலங்கைக்குக் கொண்டு வந்தவன் 1—ம் கயவாகுவாகும். அவன் சேரன் செங்குட்டுவன் காலத்தில் இலங்கையை ஆண்ட மன்னனென்பது சிலப்பதிகாரத்தில் வரும்,

> “அது கேட்டுக் கடல்சூ ழிலங்கைக் கயவாகு என்
> பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்ட முந்
> துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவ
> ளென ஆடித் திங்கள் அகவையி னங்கோர் பாடி
> விழாக்கோள் பன்முறை யெடுப்ப மழை வீற்றிருந்து
> வளம்பல பெருகிப் பிழையா விளையு ளுடாயிற்று”.

என்னும் அடிகளாற் தெளியப்படும். கயவாகு இலங்கைக்குக் கொண்டுவந்த வடிவம் சேரன் செங்குட்டுவனுல் இமயச் சிலைகொண்டு அமைத்த வடிவத்தின் பிரதியாகவே இருத்தல்வேண்டும். எனவே, அக்காலத்தில் இலங்கையிற் காணப்பட்ட கண்ணகி வடிவங்கள் யாவும்

சேரன் செங்குட்டுவனால் அமைக்கப்பட்ட வடிவத்தை ஒத்தன என்பது ஒருதலை துணிபாம்.

### 4. பல்லவ சிற்பமுறை

இரண்டாவது காசியப்பன் மகன் மானவர்மன் (641 – 650), இரண்டாவது தாதோபதீசன் (650 – 658) என்பாரால் முறியடிக்கப்படவே, அவன் பல்லவ அரசனான 1–ம் நரசிம்மவர்மனிடம் சரணடைந்து, பல்லவ அரசசபையில் வாழ்ந்து அவனுதவியால் இலங்கைக்கு மறுபடியும் அரசனானான். பல்லவர்களது ஆதிக்கம் தென்னிந்தியாவிற் சிறப்படைந்திருந்த காலத்தில் அவர்களது தொடர்பை இலங்கை பெற்றிருந்தமையாற் பல்லவ சிற்பமுறை இலங்கையிற் பரவ நேர்ந்தது.

ஈசுரமுனிய விகாரையிலுள்ள பாறையின் பிளவுக்கிருபக்கத்திலும் காணப்படும் யானையுருவங்கள் மகாபலிபுரத்திலுள்ள கங்காவதாரச் சிற்பவுருவங்களை நினைவூட்டுகின்றன என்று டக்ரர் ஆனந்தக் குமாரசாமியவர்கள் கூறுகிறார்கள். இப் பாறையின் மேற்புறத்தே செதுக்கப்பட்ட மனித வடிவமும் குதிரைத் தலையும் பல்லவ சிற்பமுறையில் அமைந்துள்ளன.

## பொல்லனறுவைக் காலம்

### 1. சோழ சிற்பமுறை

தென்னிந்திய தமிழ்நாட்டில் பல்லவர் ஆதிக்கம் அழிந்தபின் சோழர் வலுப்பெற்றனர். 1–ம் இராஜராஜன் (993 – 1014) சோழ அரசர்களுள் முதன்மைபெற்று விளங்கினான். அவ்வரசன் இலங்கையை வெற்றிகொண்டு பொல்லனறுவையைத் தலைநகராக்கி ஆண்டுவந்தான். சோழராதிக்கம் இலங்கையிற் பரவியபோது அவர்களின் அரசியல் முறையும், சமயமும், சிற்பமும் பரவத் தொடங்கின. இராஜராஜன் "வானவன் மாதேவி ஈசுவர முடையார்" எனப் பெயர் கொண்ட ஒரு சிவாலயத்தை (சிவ தேவாலயம் இ. 2.) பொல்லனறுவையிற் கருங்கற் திருப்பணியாக அமைத்தான். இராஜராஜனாற் றொடங்கப் பெற்ற இவ்வாலயம் 1–ம் இராஜேந்திரனால் முற்றுவிக்கப்பட்டது. இவ்வாலயத்தில் இராஜேந்திர சோழனதும் (1020 – 1042) ஆதி இராஜேந்திரசோழனதும் (1070) சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது கர்ப்பக்கிரகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மண்டபம் முதலிய அங்கங்களையுடையதாயும், கர்ப்பக்கிரகத்துக்குமேல் அழகிய விமானத்தையுடையதாயும் அமைந்திருக்கின்றது. இராஜராஜன் காலத்தில் மாதோட்டத்திலும் இராஜராஜேஸ்வரம் என்னும் ஒரு சிவாலயம்

கட்டப்பட்டது. தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீச்சரமே மாதோட்டத்திலுள்ள தலமாகும். தேவாரத்தில் திருக்கேதீச்சரம் மாதோட்ட நன்னகரின் பாலாவியின் கரைமேலுள்ள தலமாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, திருக்கேதீச்சரமே சோழரால் புதுப்பிக்கப்பட்ட தலமாகிய இராஜராஜேஸ்வரமாகும்.

அங்கத்துறு நோய்கள்அடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கம்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

—சுந்தரர்.

திருக்கேதீச்சரத்திற் கருகிலுள்ள மாளிகைத் திடலென்னும் கிராமத்தில் இராஜராஜேஸ்வரியின் ஆலயம் ஒன்று இன்று காணப்படுகின்றது. காலஞ்சென்ற திரு. தா. பொன்னம்பலபிள்ளை அவர்களே இதற்குச் சொந்தக்காரராக விருந்தனராம். அக்கோயில் இன்றும் அவரது குடும்பத்தினரின் பராமரிப்பிற்றானிருந்துவருகின்றது. இதன் பூர்வசரித்திரம் ஆராய்ந்தறிதற்குரியதாகும்.

நாளந்தாவிலுள்ள கெடிகே என்னும் ஆலயம் சோழ சிற்பமுறையிலே அமைந்ததென்பது டக்ரர் ஆனந்தக் குமாரசாமி அவர்கள் கருத்தாம். இதன்காலம் கி. பி. 1040 என ஊகிக்கப்படுகிறது.

கொழும்பு நூதன பொருட்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் சைவத் திருவுருவங்களே சோழ சிற்பமுறையி லமைந்த இலங்கையிற் காணப்படுஞ் சிறந்த வடிவங்களாம். அங்குள்ள சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருவுருவத்திலும் பார்க்கச் சிறந்த சிற்பவடிவம் எந்நாட்டிலுமில்லையெனக் கலைப் புலவர்கள் கருதுகிறார்கள். அங்குள்ள எல்லாத் திருவுருவங்களும் பொல்லனறுவையிலுள்ள சைவாலயங்களின் பக்கத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டவை.

சோழர்களது ஆதிக்கம் இலங்கையிலழிந்த பின்னர், 1-ம் பராக்கிரமபாகு பொல்லனறுவையிற் பல பௌத்த ஆலயங்களையும் மாளிகைகளையும் அமைத்து நகரைச் சிறப்பித்தான். அவனாற் கட்டுவிக்கப்பெற்ற கட்டடங்கள் யாவும் தென்னிந்திய சிற்பமுறையைப் பின்பற்றி யமைக்கப்பட்டன.[1] தூபராம ஆலயமே ஏனையவற்றிலும்

1. பராக்கிரமபாகு மகாதூப ஆலயத்தைப் பாண்டி நாட்டுச் சிற்பிகளைக் கொண்டு கட்டுவித்தமையால் அதற்கு தமிழதூப என்னும் ஒரு பெயருமுண்டு என குலவம்சம் கூறும். — அதி. 78. ப. 111.

சிறப்பாகத் தூய சோழ சிற்பமுறையில் அமைந்திருக்கிறது. பேர்சி பிறவுண் என்னும் ஆங்கிலச் சிற்பநூற் புலவர் கூறுவதாவது :—

> "தூபராம ஆலயம் சோழர்களமைத்த சிவாலயங்களைப் பின்பற்றித் திராவிட முறையிலமைக்கப்பட்டிருப்பினும், அமைப்பு முறையிற் கருங்கற்களாற் கட்டப்படாத வேறுபாடுடையது. இவ் வேறுபாட்டைத் தவிர மற்றெல்லாவிதத்திலும் தூபராம ஆலயம் சோழர் முறையைப் பின்பற்றினதாயினும்[1], சோழர் ஆலயங்களின் சிறப்பு இதன்கண் பொருந்தவில்லை."

பொல்லனறுவையைப் புதுப்பித்த பராக்கிரமபாகுவும் அவனுக்குப் பின் வந்தோரும் சோழ சிற்பமுறையிலேயே கட்டடங்களை அமைத்து வந்தார்களென்பது அங்கு அழிந்துகிடக்கும் ஆலயங்களையும் மாளிகைகளையும் கண்ணுறுவார்க்கு நன்கு புலனாகும். பொல்லனறுவையிலுள்ள பொத்கல் விகாரைக்குச் சமீபத்திற் காணப்படும் பாறையிற் செதுக்கப்பட்ட வடிவமே இலங்கையிற் காணப்படும் சிறந்த கற்சிற்ப வடிவமாகும். அது பராக்கிரமபாகுவின் வடிவமென்று வழங்கப்படுகின்றது. இவ்வடிவத்தில் யாவாவிற் காணப்பட்ட அகத்திய முனிவரது வடிவத்திலுள்ள சிற்ப இயல்புகள் அமைந்திருக்கின்றன. பராக்கிரமபாகுவின் வடிவமெனக் கொள்ளப்படுமிது சோழர்காலத்தது.

## கண்டிநகர்க் காலமும் அதற்குப் பின்னும்

### 1. பாண்டிய, விஜயநகரச் சிற்பமுறைகள்

சோழருக்குப் பின்பு பாண்டியரும், விஜயநகர மன்னர்களும் இலங்கையை இடைக்கிடை ஆண்டனர். அவர்களாண்ட காலத்தில் அவர்களின் சிற்ப முறைகளும் இலங்கையிற் பரவின. பொல்லனறுவையிற் காணப்படும் சிவ தேவாலயம் (இல. 1) மானவர்மன் குலசேகரபாண்டியன் (1270 – 1310) காலத்ததாதல் வேண்டும். இவ்வாலயமே இலங்கையிற் காணப்படும் இந்து ஆலயங்களெல்லாவற்றிலும் அழகிற் சிறந்ததென்று டக்ரர் ஆனந்தக் குமாரசாமி அவர்கள் கருதுகின்றார்கள்.

விஜயநகர அரசர்களாகிய 2-ம் ஹரிகரனும் (1379 – 1406), 2-ம் தேவராயனும் (1438) இலங்கையைத் தமது ஆதிக்கத்தில் வைத்திருந்தனர். கடலடேனியாவிலுள்ள இலங்காதிலக விகாரை விஜயநகரச் சிற்பமுறையி லமைந்தது. கண்டிநகர்க் காலத்தில் இலங்கை

1. Indian Architecture – Ceylon — P. 205.

யிலே சிறந்த சிற்ப ஆலயங்களேனும், மாளிகைகளேனும் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் கண்டியில் புத்த தந்த ஆலயத்தி னொருபகுதியும் களனியாவிலுள்ள ஆலயமும் புதிய முறையில் தென்னிந்திய சிற்ப அம்சங்கள் பல பொருந்த அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேசுரம் எனப்படுஞ் சிவன் கோயிலை சேர் பொன். இராமநாதன் அவர்கள் மதுரைச் சிற்ப முறையும், சேதுபதிகள் சிற்பமுறையும் கலந்த கருங்கற் றிருப்பணியாக அமைத்தார். இவ்வாலயத்தின் வடபகுதிப் பிராகாரம் முற்றுப் பெறாது குறையாகக் கிடக்கின்றது. அப்பகுதி முற்றுப்பெற்றால் அக் கோயில் இலங்கையில் 20-ம் நூற்றாண்டில், திராவிட சிற்பமுறையிலமைந்த ஒரு சிற்பக் களஞ்சியமாய் விளங்கும். பொன்னம்பலவாணேசுவரத் திருப்பணியைப் பூரணப்படுத்திச் சைவத்தையும், கலையையும் வளர்ப்பது அதற்குத் தர்மகர்த்தாவாக விளங்கும் சேர் அருணாசலம் மகாதேவா அவர்கள் கடமையாகும்.

சோழ சக்கரவர்த்தியாக விளங்கிய இராஜராஜன் காலத்திற் சிறந்து புகழ்பெற்ற இராஜராஜேஸ்வரம் என்னும் திருக்கேதீச்சரம் இன்று ஒரு சிறிய ஆலயமாக விளங்குகிறது. அதனைச் சிறந்தமுறையிலமைக்க இலங்கைச் சைவமக்கள் பெருமுயற்சி செய்கின்றனர். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தைத் தென்னிந்திய சிற்ப முறைக்கிணங்க அமைத்தல் விரும்பத்தக்கது. சுதந்திர இலங்கையில் அக்கோயில் ஒரு திராவிட சிற்ப மாணிக்கமாக விளங்கவேண்டுமென்று எல்லாரும் ஆவல்கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

இதுவரையிற் கூறியனவற்றிலிருந்து இலங்கைச் சிங்கள மக்கள் புத்தபகவானது சிறந்த தர்மத்தை ஏற்றகாலந் தொடங்கி இந்திய கலைப்பண்புகளையே தமது சொந்தப் பண்பாகக் கொண்டனரென்றும், அதன் விருத்திக்குக் காலத்துக்குக்காலம் பெருந்தொண்டுகள் ஆற்றினரென்றும் நன்கு புலனாகும். பௌத்த சமயக் குரவர்களும், அரசர்களும், பொதுமக்களும் இத்தொண்டில் ஈடுபட்டார்களென்பது சரித்திரப் பிரசித்தம். கலை யென்னும் அழியாப் பாலமே ஈழத்தையும் பாரத பூமியையும் அன்றுதொட்டு இன்றுவரை இணைத்துநிற்கிறது. மேலைத்தேச நாகரிகத்திலும், அதன்வழிப்பட்ட வாழ்க்கைப்பண்பிலும் கவர்ச்சிகொண்ட சிலர் இப் பாலத்தை உடைத்தெறியப் பெரு முயற்சி

செய்கின்றனர். சுதந்திர இந்தியாவும் சுதந்திர இலங்கையும் இந்தியக் கலையென்னும் அன்னையின் சிறந்த இரு தவப் புதல்வர்களாக ஒற்றுமையோடும் வீரத்தோடும் வாழ்வது, இரு நாட்டுக் கலை வளர்ச்சிக்கும் ஒரு தலையாக வேண்டப்படும்.

அரும்பெருங் கலைச் செல்வத்தையும், புத்த தர்மத்தையும் அளித்த இந்தியத் தாய்க்கு, கலாயோகியாகிய டக்ரர் ஆனந்தக்குமாரசாமி யவர்களைக் காணிக்கையாக ஈழம் அளித்தது. இந்தியக் கலைகளின் பண்புகளை உலகரங்கிலேற்றிப் புகழ வைத்த உத்தமத் தமிழ் மகன் ஆனந்தக்குமாரசாமியே யாவர். இக்கால உலகில் டக்ரர் ஆனந்தக்குமாரசாமியை அறியாதார் இந்திய இலங்கைக் கலைப் பெருமைகளையும் அறியாதவரேயாவர் என்று கூறுவது மிகையாகாது. இந்தியக் கலையைப் போற்றி, ஆனந்தக்குமாரசாமியை வாழ்த்தி வாழ்வது, தமிழ்மக்கள் கடனாகும்.

"கூருமா னந்தக் குமாரசா மிப்பெயர்பூண்
பேரறிஞன் வந்து பிறந்திலனேல்—பாரதநாட்
டொண்கலைகள் தாமெங்கே ஓதுசிவ ஞானநுண்கலைக்கூத் தெங்கே நுவல்."

தமிழ்மொழி வாழ்க! தமிழ்க் கலைகள் வாழ்க!!

# இந்தியா சென்று புகழ் நிறுவிய ஈழத் தமிழர்

வித்துவான் திரு. க. கி. நடராஜன் B. O. L.

"சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்"

என்று இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியார் பாடினர். இவ்வடிகளைப் படிப்போர் உள்ளத்தில் பண்டிருந்த சேதுவின் நினைவும் பிற்காலத்து அஃதடைந்த சிதைவும், மீளவும் தமிழ் மக்கள் அதனை மேடுறுத்தி வீதிசமைக்க வேண்டும் என்னும் வேட்கையும் எழாமலிருக்க முடியாது. இச் சேதுவை முதன் முதல் அமைத்தோர் இராமர் தூதுவனாகிய அநுமந்தனும் (சொல்லின் செல்வன்) அவன் பரிவாரங்களும் ஆவர் என்று இராமாயணங் கூறா நிற்கும். ஆயின், இராமாயண காலத்துக்கு முன்னும் பின்னும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே தொடர்பு ஏற்பட்டிருந்தது என்று நன்கு ஊகிக்கக் கிடக்கின்றது. பூதலம் என்று சிருஷ்டிக்கப்பட்டதோ அன்றே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே தொடர்பு உண்டு என்று கூறவேண்டும். ஏனெனில், இருபத்திரண்டு மைல் தூரமுள்ள நீர்ப்பகுதிமட்டுமே இவ்விரு நாடுகளையும் பிரித்து நிற்கின்றது. இலங்கை, இந்தியாவின் ஓர் உறுப்புப்போன்று விளங்குவதைக் காண்கின்றோமல்லவா? உலகப் படத்தில் இவ்விரு நாடுகளையும் பார்க்கும் போது, இவ்விரு நாடுகளும் சிருஷ்டிகாலந் தொடக்கமே தொடர்புள்ளவை என்ற எண்ணம் எவர் மனத்திலும் உதியாமற் போகாது.

**பண்டமாற்று**

மிகப் பழங்காலத்திலேயே ஈழநாட்டுக்கும் தென் தமிழ்நாட்டுக்குமிடையே மிகச் சிறந்த முறையிற் பண்டமாற்று நிகழ்ந்துவந்ததென்று தெரிகிறது. இந்தியாவிலிருந்து உணவுப் பொருள்களையும் பிறவற்றையும் ஈழநாடு பெற்றுவந்தது மாத்திரமல்ல, ஈழநாடும் தமிழகத்துக்கு உணவுப் பொருள்களை உதவிவந்தது என்று ஈழநாட்டு வரலாற்று நூல்கள் கூறுநிற்கும். இலங்கை வரலாற்று நூல்கள் இதை எடுத்துக் கூறுவதில் அதிகம் பெருமையில்லை. பண்டைத் தமிழ் நூல்களே இதற்குச் சான்று பகர்கின்றன. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பட்டினப்

பாலை தமிழிலுள்ள மிகச் சிறந்த நூல்களுள் ஒன்ருகும். இது, தன்மைநவிற்சியிற் சிறந்து விளங்கிய ஆசிரியர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பட்டது. இந் நூலில், அக் காலத்துச் சோழநாட்டுத் தலை நகராகத் திகழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தி(பூம்புகாரி)ல் வேற்று நாட்டிலிருந்து வந்து இறக்கப்பட்ட பொருள்கள் வரிசையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அப் பொருள்களில் ஈழ நாட்டிலிருந்து சோழ நாடு போந்த பொருளும் ஒன்று. அஃது என்ன பொருள் என்று அறிய எம் மனம் விரைகின்றதல்லவா? அஃது உணவுப் பொருள் என்று அறிகின்ருேம். "ஈழத்துணவும்" என்பது ஆசிரியர் உருத்திரங்கண்ணனர் கூற்ருகும். ஈழத்தில் முத்துண்டு (சிலாபம் முதலிய இடங்களில்); இரத்தினம் உண்டு (இரத்தினபுரியை அடுத்துள்ள பகுதியில்). அவை இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனவோ அல்லவோ நாம் அறியோம். ஆயின், ஈழத்து மணியும் ஈழத்து முத்தும் அப் பழந்தமிழர் நகரில் இறக்குமதியாயின என்று கூருமல், "ஈழத்து உணவும்" என்று ஆசிரியர் கூறிப்போந்தமை, பண்டைக்காலத்து ஈழநாடு தமிழ்நாட்டுக்கு விருந்தளித்தது என்பதை ஞாபகப்படுத்தி எமக்குப் பெருமிதம் அளிக்கின்றது. இஃது உடற்குணவு. செவிக் குணவுஞ் செல்லாமலிருந்திருக்குமா? யார் கண்டார்?

இனி, நிலநூலமைப்பு முதலாந் தொடர்புகளும் பண்டமாற்றுத் தொடர்புகளும் ஒருபுறமிருக்க, கலைப்பண்பில் — தமிழ்ப் பண்பாட்டில் — இவ்விரு நாடுகளுக்குமிடையே எத்தகைய தொடர்பு இருந்தது என்பதை ஆராய்வாம். அதுவே இக் கட்டுரையின் நோக்கமாம். அதிலும், சிறப்பாக ஈழநாட்டிலிருந்து இந்தியாபோந்து தமிழ்மொழி யாக்கத்துக்குப் பணியாற்றிப் புகழ்நிறுவிய பெரியோரைப் பற்றியே இக் கட்டுரையில் எழுதுதல் வேண்டும் எனத் தமிழ் விழாச் செயலாளராற் பணிக்கப்பட்டுள்ளேம்.

ஆகவே, தமிழ்மொழியாக்கத்திற்கும் கலையாக்கத்திற்கும் தொண்டாற்றும் முறையில், இந்தியாவுக்கும் ஈழநாட்டுக்குமிடையே பண்டொருகால் நிலவிப் பின் சிதைந்துபோன சேதுவை மேடுறுத்தி வீதியமைக்க முயன்ற பெரியோர்களை ஈண்டு நினைவு கூருகின்றேம்.

**சங்க காலம்**

சங்க காலம் எது என்று நிச்சயிப்பதிலே ஆராய்ச்சியாளர்களிடம் கருத்து வேற்றுமை காணப்படுகின்றது. அந்த ஆராய்ச்சியுள் நாம் இப்போது நுழைய விரும்பவில்லை. ஆயின், சங்க காலம் எனப்படுங்

காலம் தமிழ்மொழி வரலாற்றில் மிகப் பழையகாலம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றாராகலின், அத்தகைய பழங்காலத்திலேயே "தொன்மா விலங்கை" (சிறுபாணாற்றுப்படை – அடி 119.) எனப் போற்றப்பட்ட இலங்கையில் நாகர் என்னும் பழங்குடி மக்கள் தமிழ்மக்களாய் வாழ்ந்தனர் எனவும், சங்கமிருந்து தமிழாராய்ந்த புலவர் பெருமக்களுள் ஒருவராகிய முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் ஈழத்திருந்த இப் பழங்குடியாகிய நாகர் குலத்தைச் சேர்ந்தவர் எனவும் கூறுவாருமுளர். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. கடைச் சங்கப் புலவருள் ஒருவராயிருந்த ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் ஈழத்து மரபினரே என்பது துணிபு என்று எம் ஆசிரியர் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் கருதுகின்றார்கள். இப் புலவர் மதுரை ஈழத்துப் பூதன்றேவன் எனவும் படுவர். இவர் மதுரையில் வந்து தங்கிய ஈழத்துப் பூதனது மகன் தேவன் ஆவார் என்பது ஷெ எம் ஆசிரியர் கருத்தாகும். ஆகவே, கடைச்சங்க காலத்துக்கு முன்னும், கடைச் சங்க காலத்தும், அதற்குப் பின்னும் ஈழ நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்குமிடையே கலைத்துறையிலும் தமிழ் இலக்கியத் துறையிலும் பெரியதொரு தொடர்பு இருந்துவந்தது என்பது ஆன்றோர் துணிபாகும். இவ் வீழத்துப் பூதந்தேவனார் பாடிய இனிய பாக்களுள் சங்க நூல்களில் ஏழு பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நற்றிணையில் ஒரு பாட்டுக் காணப்படுகின்றது. குறுந்தொகையில் மூன்று பாட்டுக்கள் காணப்படுகின்றன. அகநானூற்றிலும் மூன்று பாடல்கள் உள. இன்னும் இவர் பாடிய பாடல்கள் எத்தனை சிதைந்தனவோ யார் அறிவார்? எடுத்துக்காட்டாக, இப் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடல்களுள் ஒன்றை மட்டும் ஈண்டுத் தருகின்றோம்: உடன்போக்குக்குத் தோழி சம்மதிக்கின்றாள். அவள் தலைவியை நோக்கி, "நீ தலைவனோடு உடன் செல்லுதலே நன்று" என்கின்றாள். உடன்போக்கு, தலைவியின் நெஞ்சிற்கு உவந்ததன்றாகலின், அதைக் கூறுவதற்குமுன் தலைவியை வாழ்த்துகின்றாள். பின், "தோழீ! மிக்க வலிமையையுடையதும் பிளந்த வாயை உடையதும் ஆகிய பெரிய ஆண் புலி ஒன்று அண்ணல் யானையின் அணிமுகத்தில் (அவ் யானையைக் கொல்வதற்காக) பாய்ந்தது. ஆனால், யானையைக் கொல்வதற்குப் பதிலாகத் தான் யானையின் கொம்பினால் குத்தப்பட்டு இறந்தது. அதுகாலை, அந்த யானையின் வெள்ளிய கொம்பைத் தன் இரத்தத்தால் செவ்விய கறையைக் கொள்ளுமாறு செய்தது. அப் புலி பாய்ந்ததனால் வெண்கோடு சிவந்த மறுக்கொண்டதே யல்லாமல்

அந்த யானைக்கு ஊறுபாடு ஒன்றும் நேர்ந்திலது. இறந்து கிடந்த வேங்கையின் (புலியின்) வரியைப்போல விளங்குகின்றது வேங்கை மரத்திலிருந்து முறிந்து விழுந்து கிடக்கும் வாடிய பூக்களோடு கூடிய கொம்பர். பிளவையுடைய கல்முழையிலுள்ள மேற்காற்றால் வீழ்த்தப் பட்ட அக் கிளையைப்போல அப் புலி இறந்துகிடக்கும் உயர்ந்த மலை நாட்டையுடையவன் தலைவன். (ஆதலால்) அவனோடு நீ போகுந் திறத்தை எண்ணுவாயாக" என்று நயமாகக் கூறுகிறாள் அத்தோழி. தலைவனோடு உடன்போதல் பாலைநிலம் வழியாக நடைபெற வேண்டும். பாலையில் ஏதாவது ஏதம் வருமோ என்று தலைவிக்கு அச்சம் எழவும் கூடுமல்லவா? அவ் வச்சத்தைப் போக்குதற்காக "அவனுடைய நாட்டிலுள்ள யானை தன்னை எதிர்த்த வலிமிக்க புலியைத் தான் எதிர்க்காமலே கொம்பினால் வீழச்செய்தது" என்று தோழி மிகத் திறம்படக் கூறுகின்றாள். அச் செய்யுள் வருமாறு:—

நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி இரும்புலிப் பகுவாய் ஏற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇ விடர்முகைக்
கோடை ஒற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரு மாறே. (செய். ௩௫௩)

அணிமிக்க இச் செய்யுளை இங்கு நினைவுகூருதல் இக் கட்டுரைக்கு எல்லாவகையிலும் பொருத்தமுடையதாகும்.

**ஞானப்பிரகாசர்**

இனி, ஏறக்குறைய முந்நூற்றிருபது வருடங்களுக்கு முன் வசித்த ஒரு பெரியாரிடம் வருவோம். அப்போது யாழ்ப்பாணத்தைப் பறங்கியர் அரசாண்டனர். பறங்கியருடைய கொடுமைக்குச் சான்றாகப் பல கதைகள் கூறப்படும். அவர்கள் பசுவதை செய்பவர். ஒரு போது, இப் பறங்கி அரசாங்கத்தார் ஒரு கட்டளை பிறப்பித்தனர். அஃதாவது குடிகள் ஒவ்வொருவரும் முறை முறையாக ஒவ்வொரு பசுவை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும் என்பது. நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் முன்னோராக இருந்த ஞானப்பிரகாசர் என்பவரால் இதைப் பொறுக்க முடியவில்லை. சிவகாருண்யம் நிறைந்த இவர் உள்ளம் பசுக் கொலைக்கு உடன்தையாக ஒப்பவில்லை, ஆகவே, தன்னுடைய முறை வருவதற்கு முன்னேயே

அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். முதலில், சிதம்பரஞ் சென்றார். அங்கிருந்து கௌடதேசம் சென்று ஒரு பிராமண சந்நியாசியிடம் தருக்கம், வியாகரணம் முதலியவற்றை யெல்லாம் நன்கு கற்றார். கற்றபின், திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து, அங்கு சந்நியாசம் பெற்று ஆகமங்களையும் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு ஆராய்ந்தார். பின், இவர் நடராச தரிசனஞ் செய்ய விரும்பித் திருவண்ணாமலையை விட்டுச் சிதம்பரத்துக்குச் சென்று, அங்கு நீடித்தகாலம் வசித்திருந்தார். இவர், சிதம்பரத்தில் அமைத்துள்ள ஞானப்பிரகாசம் என்னும் திருக்குளம் இந்திய — ஈழத் தொடர்புக்குச் சான்றுபகர்ந்த வண்ணம் இன்றும் நின்று நிலவுகின்றது. இவர் வடமொழியிலும் வல்லுநர். வடமொழியில் சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாததீபிகை, சிவயோகசாரம் என்னும் நூல்களுக்கு இவர் வியாக்கியானம் எழுதியிருக்கின்றார். தமிழில் சிவஞானசித்தி சுபக்கத்துக்கு ஓர் உரை இயற்றியுள்ளார். வடமொழியிலுள்ள பௌட்கராகமத்துக்கும் இவர் ஒரு விரிவுரை எழுதியுள்ளார் என்பர்.

**நாவலர்**

இவர் மரபில் வந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இந்திய — ஈழப் பாலத்தை அமைத்து அதை உறுதியாக நிலைபெறச் செய்தவர்களுள் தலைசிறந்தவர் ஆவர். நாவலர் என்ற சிறப்புப் பெயரானேயே தமிழ்நாடு முழுவதிலும் அறியப்பெற்ற இவர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த தொண்டுகள் அளப்பில.

"நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்க ளெங்கேப்ர சங்கமெங்கே?"

என்று கேட்டார் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள். நாவலரவர்களின் தொண்டுகள் உலகறிந்தவை. எழுதப் புகின் பெருநூலாக எழுதத்தக்கவை. இவர் யாழ்ப்பாணத்திற் பிறந்தமை யாழ்ப்பாணம் செய்த தவப்பயனும். தமிழ் நாட்டில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்களை ஆராய்ந்து, நன்கு பரிசோதித்து, பிழையறப் பலர்க்கும் பயன்படும்படி அச்சுவாகனமேற்றுந் தொண்டில் முன்னின்று முதன்முதலாக உழைத்த பெரியார் இவரேயன்றி வேறு யாவர்? இந்திய மக்களை இத்துறையிற் கண்விழிக்கச் செய்த பெரியார்கள் இவரும் இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் ஆவர். இவர்களைப் பின்பற்றியே டாக்டர் உ. வே. சாமி

நாதையரோ பிறரோ அத்துறையில் ஈடுபட்டுழைக்கத் தலைப்பட்டன ரெனின், அது புனைந்துரை யாகாது; உண்மையேயாம். தமிழுள்ள அளவும் சைவம் உள்ள அளவும் நாவலர் திருநாமத்தைத் தமிழ்நாடு மறக்கமுடியாதல்லவா? அம்மட்டோ, தமிழில் தக்க வசனநூல்கள் இல்லாக்குறை நீடித்த காலமாக இருந்து வந்தது. இவர் காலத்துக்கு முன் இருந்த ஒருசில உரைநூல்களும் கடினமானவை. நன்கு கற்றோரானன்றி மற்றையோராற் படித்துணர முடியாதவை. கற்றோரும் மற்றோரும் எளிதிற் கற்றுணரத்தக்க முறையில் இனிய, இலகுவான நடையில் இவர் பல நூல்களை இயற்றினார். பழைமையின் சிறப்பும் புதுமையின் எளிமையும் ஒருங்கமைய வசன நூல்களை எழுதினோர் இவரேயன்றி வேறு யாரே உளர்? வசனநூல்களை எழுதுவதில் இவரைப் பின்பற்றித் தொண்டாற்றிவந்த திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் பிறரும் இவர் உரைநடையைப் பாராட்டியுள்ளனர். திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இவரை "வசனநடை கைவந்த வல்லாளர்" என்று மனமாரப் போற்றுவதை நாம் காண்கின்றோம். ஆகவே, தமிழில் வசனநடைக்கு இவர் தந்தை ஆவர் என்னின் அது மிகையாகாது. இவர் வசனங்களின் அமைப்பென்னே! சொற்களின் சித்திரமென்னே! படிப்போர் மனத்தில் அவ்வுரைநடை சென்று தைக்குஞ் சிறப்பென்னே! உண்டுபடுத்தும் பக்தி முதலாம் உணர்ச்சிகளென்னே! இலக்கண வழுக்கள் நுழையாது எழுதும் அவதானமென்னே! இவர் வசனநூல்களைப் படிப்போர் எவரும் இவற்றைப் பாராட்டாம லிருக்கமுடியாது. ஆங்கிலத்தில் உள்ள குறியீடுகளை (தரிப்புக்களை) முதன்முதலாகத் தமிழ் உரைநடையிற் புகுத்தியவரும் இவரே. 1823-ம் ஆண்டு தொடக்கம் 1879-ம் ஆண்டு வரை தமிழ்நாடு செய்த தவப்பயனாக வாழ்ந்த இந் நைஷ்டிகப் பிரமச்சாரி செய்த தொண்டுகள் அளப்பில. சென்னையில் ஓர் அச்சியந்திர சாலையை அமைப்பித்துப் பல சைவநூல்களையும், திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, சேனாவரையம், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, பிரயோகவிவேகம், நன்னூல்விருத்தி, கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம், சைவசமயநெறியுரை, தருக்க சங்கிரகம் முதலாம் நூல்களையும் பிழையற நன்கு பதிப்பித்த பெருமை இவருக்கே உண்டு. இவர்தம் பெரியபுராணவசனம் ஆங்கில உரைநூலாசிரியருள் ஒருவராகிய 'லாம்ப்' (Lamb) என்பார் எழுதிய "செகசிற்பிய நாடகக் கதைகளை" (Lamb's Tales from Shakespeare) ஞாபகப்படுத்துகின்றது. செகசிற்பியாரின் நாடகங்களின் பெற்றி நன்கு புலப்படும்படி 'லாம்ப்' எங்ஙனம் அக்கதைகளைச் சிறப்பாக எழுதினாரோ

அங்ஙனமே சேக்கிழார் உள்ளப்பாங்கு படிப்போருள்ளத்தில் நன்கு படியுமாறு சிறந்த பக்திச்சுவை வாய்ந்த முறையில் இனிய எளிய நடையில் இவர் இந்நூலை எழுதியுள்ளார். இவர்தம் பெரியபுராண சூசனத்தின் அருமையை எவரே மறுப்பர்? இவர் சிதம்பரத்திற் கருங் கல்லால் அமைப்பித்துள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை அண்ணு மலைப் பல்கலைக் கழகத்துக்கு அடிகோலிவிட்டு இன்றும் அங்கு நின்று திகழ்கின்றது. இஃது ஈழ – இந்தியத் தொடர்பை நாளும் பறை சாற் றிக்கொண்டு விளங்குகின்றது என்கின்றோம்.

மிஸ்றர் பெர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோட்கிணைந்து விவிலிய நூலைத் தமிழில் முதன்முதல் மொழிபெயர்த்தவர் இவரே. அக் காலத்தில் வேறுஞ் சிலர் அந்நூலை மொழிபெயர்த்தனர். ஆயின், சென்னையில் இந்நூல்களைக் காரணிகர் போன்றிருந்து அவற்றின் நன்று தீது ஆராய்ந்த மழவை மகாலிங்கையர் போன்றவர்கள் நாவல ரவர்கள் மொழிபெயர்ப்பே மற்றெல்லார் மொழிபெயர்ப்பினுஞ் சாலச் சிறந்தது என்று அபிப்பிராயந் தெரிவித்தனரென்றால், நாவலரவர் களின் மொழிபெயர்ப்புத் திறனை நாம் நன்கு ஊகித்துக்கொள்ளலா மன்றோ? இவர்பால் கிறீஸ்தவமக்கள்தாமும் பெருமதிப்புடையவர்க ளாக இருந்தார்கள் என்பதற்குச் சான்றாகச் "சைவ போதகர்கள்" (Hindu Pastors) என்னுந் தலைப்பில் இவரைப்பற்றி அவர்கள் எழுதி யுள்ளனவற்றில் ஒரு பகுதியை மட்டும் அகழ்ந்தெடுத்துத் தருகின் றோம். அஃதாவது: "The Principal orators, both of whom had been day-pupils in our Jaffna School, were Arumugavar, the first and most frequent, and the presiding genius through all the movement, and a friend of his, named Cattigasayar, the former of the Velala or agriculturist caste, good-looking, intelligent, studious, reserved, of grave demeanour and blameless life, * * * had been for a long period, day after day, the worthy companion and valued assistant of the gifted and plodding Mr. Percival. ........"

**சிவசம்புப் புலவர்**

நாவலர் காலத்திலேயே வசித்த சிவசம்புப் புலவர் இந்திய – ஈழத் தொடர்பைப் பெருகச் செய்தவர்களில் மற்றொருவர். இவர் யாழ்ப் பாணத்துள்ள உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். இளம் பிராயத்திலேயே கவிபாடும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவர். இராமநாதபுரம் இரவிகுல விஜய ரகுநாத பாஸ்கரசேதுபதி மீது கல்லாடக் கவித்துறையும்,

நான்மணிமாலையும், இரட்டைமணிமாலையும் வேறு தனிக்கவிகளும் பாடிச் சென்று அவர் முன்னிலையிலேயே வித்துவான்கள் பலர் கூடிய சபையிலே அரங்கேற்றி அவர் மதிப்பும் பரிசிலும் பெற்றவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் மீதும் ஒரு நான்மணிமாலை பாடியுள்ளார். இவர் பாடிய பிரபந்தங்கள் ஏறக்குறைய அறுபது வரையிலுள்ளன. செய்யுள்கள் இயற்றியதோடமையாது மறைசையந்தாதியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படலவுரை முதலிய உரை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

**சபாபதி நாவலர்**

ஏறக்குறைய இக் காலத்திலேயே வசித்தவர் சபாபதி நாவலர் ஆவர். இவர் யாழ்ப்பாணம் தென்கோவையைச் சேர்ந்தவர். ஆறுமுக நாவலரவர்களுக்கும் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும் மாணாக்கர். இவர் வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் வல்லவர். ஆங்கிலமுங் கற்றவர். இவர் சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராக இருந்தவர். பின், கல்வித்துறையிற் பெரிதும் ஈடுபட்டுத் திருவாவடுதுறை ஆதீனத்தையடைந்து, அங்கு நாவலர்ப் பட்டமும் பெற்று ஆதீனப் புலவராகவுந் திகழ்ந்தவர். உயர்ந்த தமிழ் நடையில் சொற்பொழிவாற்றும் திறம் படைத்தவர். சிவஞானபாடியம் நன்கு கைவரப்பெற்றவர். சிவஞான முனிவரைத் தம் குலதெய்வமாகக் கொண்டவர். இவர் வேறுபல நூல்களை எழுதியிருந்தாலும் இவர் எழுதிய திராவிடப் பிரகாசிகையே இவருக்குத் தனிப்பெருமை அளித்தது. இதுவே முதன்முதலாகத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கூற எழுந்த நூலாகும். இந் நூலில், "தமிழ்ப்பொதுவெல்லை"யைப் பற்றிப் பேசுங்கால் இவர் கூறும் வார்த்தைகள் அவதானிக்கத்தக்கவை. அவை வருமாறு:—

"சிறுகாக்கைபாடினியார் தெற்குங் கடல் எல்லை கூறியது குமரியாறு கடல்கொண்ட பிற்காலத்துச் செய்ததெனை அறிக. தமிழ் வரம்பு இங்ஙனஞ் சிதைந்து வேறுபட்டுச் சுருங்கியதுபோல அகன்று விரிந்ததும் உண்டு. தமிழ் அவ்வாறு வளர்ந்து அகன்று விரிந்தன ஈழநாடு முதலியவாம்" என்பது. இதுபோலவே, செந்தமிழ் நிலத்தைப் பற்றிப் பேசும் பகுதியில், "மற்றெவ்விடனாயினு மாகுக, ஒரு நிலத்தின்கண் முந்துநூல் பற்றி வழக்குஞ் செய்யுளுமாகிய செந்தமிழாராய்தலுறும் நன்மக்கள் உளராங்கால் அதுதன்னைச் செந்தமிழ்

நிலன் அன்றெனை விலக்கல் கூடாது. என்னை? இலக்கணம் உள்வழி இலக்கியமாதல் ஒருதலை யாகலின் என்பது" என்று கூறுவர். இதனால், ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கு மிடையேயுள்ள தொடர்பை இவர் மிக நன்றாக எடுத்துக் காட்டியுள்ளார் என்பது எம் கருத்து.

**தாமோதரம்பிள்ளை**

1832-ம் ஆண்டு தொடக்கம் 1901-ம் ஆண்டுவரை வாழ்ந்த இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் தமிழ் நூல்களைப் பதிப்பித்தலிற் செய்த அரும்பணி தமிழ் மக்களால் என்றும் நன்றியறிதலோடு நினைவுகூரத் தக்கது. இவர் ஆங்கிலம் நன்கு கற்றுப் புதுக்கோட்டையில் நீதிமன்றத் தலைவராகக் கடமையாற்றியவர். நீதிமன்ற வேலைகளின் நடுவே இவர் தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் எடுத்துக்கொண்ட ஊக்கமும் உழைப்பும் தமிழன்பர்கள் அனைவர்க்கும் உணர்ச்சி பயப்பனவாம். இவர் பழைய ஏடுகளை ஆராய்ந்த காலத்து அநுபவித்த கஷ்டங்களை இவர் எழுதியுள்ள வார்த்தைகளிலிருந்து நாம் ஊகித்துக்கொள்ளலாம். "ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி, எழுத்துக்களோவென்றால், வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுதுகிடக்கின்றது. .........." இப் பகுதியிலிருந்தும் இது விஷயமாக இவர் எழுதியுள்ள ஏனையவற்றிலிருந்தும், இவரது தமிழன்பும், தமிழ் நூல்களை அச்சுவாகனமேற்றவேண்டும் என்று இவருக்கிருந்த ஆர்வமும், அத் துறையில் இவர் எடுத்துக்கொண்ட சிரமமும் நன்கு புலப்படுகின்றன. இவர் பல நூல்களை அச்சிடுவித்து வெளியிட்டனரேனும், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி என்னும் இம் மூன்றும் இவர் அச்சுவாகனமேற்றிய நூல்களுள் தலைசிறந்தவை. இவற்றை முதன்முதலாக அச்சிட்டுத் தமிழுலகத்துக் குதவிய பெருமை இவருக்கே உரியது எனின், இந் நூல்கள் உள்ளவரை தமிழ்நாடு இவரை மறக்க முடியாதன்றோ? வீரசோழியம், இறையனா ரகப்பொருள், இலக்கண விளக்கம் என்னும் நூல்களும் ஆராய்ச்சி மிகுந்த பதிப்புரைகளோடு இவரால் வெளியிடப்பட்டன.

"ஏட்டி லிருந்த அருந்தமிழ் நூல்க ளெனைப்பலவுந்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குபு செந்தமிழ்சேர்
நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திரன் நண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே."

என்று இவர் சுன்னுகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களாற் பாராட்டப் பெற்றவர் ஆவர். இவர் ஈழ — இந்தியத் தொடர்பை எத்துணை உரம் பெறச் செய்துள்ளார் என்பது இயம்பவும் வேண்டுமோ ?

**கனகசுந்தரம்பிள்ளை**

யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்த திரு. கனகசுந்தரம்பிள்ளை யவர்கள் சென்னைக் கிறீஸ்தவ கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரிய ராக விளங்கியவராவர். இவர் "இல்லாண்மை" என்னும் ஓர் உரை நடைநூல் இயற்றியுள்ளார். நூல்களைப் பிழையற அச்சிடுவதில் பலருக்கு இவர் உதவிபுரிந்தவராவர். சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட மேற்கொண்ட தமிழகராதிக்கு இவர் சிலகாலம் தலைமை பூண்டு பணியாற்றியவர். தமிழ் நாவலர் சரிதை முதலிய நூல்களைப் பிழையறக் காலக்குறிப்புடன் இவர் வெளியிட்டிருக்கின்றார்.

**குமாரசுவாமிப்புலவர்**

1850-ம் ஆண்டு தொடக்கம் 1922-ம் ஆண்டுவரை வாழ்ந்த சுன்னுகம் திரு. அ. குமாரசுவாமிப்புலவ ரவர்கள் கல்வித்துறையில் ஈழநாட்டுக்குப் பெரும் புகழ் ஈட்டித்தந்தவராவர். இவர் இந்தியா சென்று அங்கு வதியாவிட்டாலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய ஸ்ரீமாந் பாண்டித்துரைத் தேவரவர்கள் இவர்தம் பெரும் புலமையை அறிந்து இவரை அச் சங்கத்தில் ஓர் அங்கத்தவராம்படி வேண்ட, அவ் வேண்டுகோட் கியைந்து அங்கத்தவராகித் தமிழ் வளர்ச்சிக்குக் காலந் தோறும் வேண்டுவன புரிந்து வந்தவர். இவர் "செந்தமிழ்" ப் பத்திரி கைக்கு எழுதிவந்த அரிய கட்டுரைகளைத் தமிழகம் முழுவதும் படித்துப் பாராட்டின. இவர் நுண்மாண் நுழைபுலம் படைத்தவர். இவரும் காலஞ்சென்ற சேதுசமஸ்தான வித்துவான் ஸ்ரீமாந் ரா. இராகவையங்கார் அவர்களும் இரண்டு தமிழ் இரத்தினங்களென்று போற்றப்பட்டவராவர். 1910-ம் ஆண்டில் இவர் மதுரைக்குச் சென்று, அங்கு பாண்டித்துரைத்தேவர் அவர்களாலும், சுப்பிரமணியக் கவிராயர், அருணாசலக்கவிராயர், நாராயணஐயங்கார், ரா. இராக வையங்கார் முதலிய வித்துவான்களாலும் செய்யப்பட்ட உபசரணையை யும் பாராட்டையும் பெற்றவர். அவ்வாறே திருவாவடுதுறை யாதீனத் துக்குச் சென்றபோது, அவ் வாதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பல வாணதேசிகரால் பெரிதும் கௌரவிக்கப்பட்டுப் பரிசிலும் வழங்கப் பெற்றனர். இவர் தமிழிற் பெரும் புலமை படைத்து விளங்கியதோடு

வடமொழியிலும் பேரறிவு படைத்திருந்தார். இவரது செய்யுட் டிறனையும் இருமொழிவன்மையையும் இவரியற்றிய மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா முதலியவை காட்டும். பல பதிகங்களும், ஊஞ்சல்களும் பிறவும் இவராற் பாடப்பட்டன. கலித்துறை பாடுவதில் இவர் மிக்க ஆற்றல் படைத்தவர். இவர் தாம் அச்சிடும் நோக்கமாக எழுதிவைத்திருந்த ஓர் அகராதிப் பிரதியைச் சென்னையிலிருந்து இங்குவந்த "சான்டலர்" என்பவருக்குக் கொடுத்துதவினார். நல்லூர் திரு. கு. கதிரைவேற்பிள்ளையவர்களால் மிகப் பெரிய தமிழகராதி தொகுக்கப்பட்டபொழுது அவர்க்கு இன்றியமையாத துணைவராய் விளங்கினார். இதுவேயுமன்றி இலக்கியச் சொல்லகராதி ஒன்றையும் தொகுத்து வெளியிட்டார். அம்மட்டோ ஸ்ரீயுக்த ராஜராஜேசுவர சேதுபதியவர்களின் விருப்பத்திற் கிணங்கி, ஏறக்குறைய நானூறு புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியுள்ள தமிழ்ப் புலவர் சரிதம் ஒன்றையும் எழுதி வெளியிட்டார். அதுமட்டுமல்ல, இவர் இராமாவதாரத்துப் பாலகாண்டத்தைத் திருத்தப் பதிப்பாக வெளியிட்டார். இதற்கு ஓர் அரும்பதவுரையும் எழுதியுள்ளார். இவர் வடமொழியிலிருந்து "சிசுபாலவதம்" என்னும் நூலைச் சுவைபடத் தமிழில், உரைநடையில் மொழிபெயர்த்தார். கலைசைச் சிலேடை வெண்பாவுக்கு இவர் எழுதிய உரையே அந் நூற்கு முதலுரையாகும். இவர் எழுதிய வினைப்பகுபத விளக்கம் என்னும் நூல் இவர்தம் நுண்மாணுழைபுலத்துக்குச் சான்றுபகரும். இன்னும் இவர் செய்தவற்றையெல்லாம் கூறப்புகின் பெருகும். சுருங்கச் சொல்லுகில், குமாரசுவாமிப் புலவரவர்கள் தமிழகம் முழுவதாலும் அறியப்பட்ட ஒருவர்; தமிழுக்குப் பெருந் தொண்டுபுரிந்த அறிஞர்; ஈழத்துக்குத் தனிப் புகழ் ஈட்டிய சதுரராவர்.

**சபாரத்தினமுதலியார்**

கொக்குவில் சபாரத்தினமுதலியார் அவர்கள் தென்னிந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மகா சமாஜத்துக்குத் தலைமை பூண்டவர். இவர் சிறந்த சைவ சித்தாந்த அறிஞராகிய திரு. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்களின் நண்பர். இவர் "இந்துமதத்தின் பிரதான அம்சங்கள்" (The Essentials of Hinduism in the Light of Saiva Siddhanta) என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். "சித்தாந்ததீபிகை" என்னும் ஆங்கில சஞ்சிகைக்குக் காலந்தோறும் இவர் பல சிறந்த கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி யுதவியுள்ளார்.

**கதிரைவேற்பிள்ளை**

இந்திய — ஈழத் தொடர்பை நிலைநாட்டியவர்களுள் திரு. நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மற்றொருவராவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலியைச் சேர்ந்தவர். இவர் இந்தியா சென்று சென்னை இராயப்பேட்டையில் "பாலசுப்பிரமணிய பக்தஜனசபை" என்ற சபையையும் வேறு பல சபைகளையும் நிறுவிப் பெரும்பணி புரிந்தவர். மிக்க வாக்குவன்மை படைத்தவர். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களின் ஆசிரியர். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களே இவர் சொற்பொழிவின் பெற்றியைப் புகழ நாம் கேட்டுள்ளோம். கடல்மடை திறந்தாற்போலப் பலமணிநேரம் ஆயாசமின்றிக் கேட்டார்ப் பிணித்துக் கேளாதாரும் வேட்பப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர் என்ப. இவர் கல்வித்திறன் இவர் தொகுத்த தமிழ்ப்பேரகராதி, சைவபூஷண சந்திரிகை, சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்களால் தெரியவரும். இவர் ஆரணி நகர சமஸ்தான வித்துவானாகவும் இருந்தவர். சைவசித்தாந்த சரபம் என்னும் பெயரும் பெற்றவர்.

**ம. க. வேற்பிள்ளை**

மட்டுவில் திரு. க. வேற்பிள்ளை அவர்கள் சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியாசாலையில் பல ஆண்டுகளாக ஆசிரியராக இருந்து பலருக்குக் கல்வி கற்பித்து வந்தவர் ஆவர். இவர் ஆறுமுக நாவலரவர்களுடைய மாணாக்கர். இவர் பல உரைநூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் திருவாதவூரடிகள் புராணத்துக்கு இவர் எழுதிய உரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம். இவர் உரையின் சிறப்பு நோக்கி இவருக்கு உரையாசிரியர் என்னும் பெயரும் வழங்கப்பெற்றது. இவர் செய்யுள் செய்வதிலும் வல்லவராதலின் "பிள்ளைக்கவி" என்று பாராட்டப்பெற்றனர். இவர் செய்த செய்யுள்நூல்களுள் "ஈழமண்டல சதகம்" சிறப்பு வாய்ந்தது. புராணப் பிரசங்கஞ் செய்வதிலும் இவர் வல்லுநர். இவரிடம் கல்வி கற்றோர் இந்தியாவிற் பலருளர்.

**கணபதிப்பிள்ளை**

யாழ்ப்பாணத்துப் புலோலியைச் சேர்ந்த திரு. வ. கணபதிப்பிள்ளை அவர்கள் நெடுங்காலம் காஞ்சிபுரத்திலே பச்சையப்ப வித்தியாசாலையில் தமிழ்ப்பண்டிதராக விளங்கியவர். அதன் பின்னர்த் திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரிப் பிரதம தமிழாசிரியராக நியமிக்கப்பட்டுத் தம் வாழ்க்கை முழுவதையும் இந்தியாவிலேயே கழித்தவர். இவர் தமிழில் மட்டுமன்று, சமஸ்கிருதத்திலும் நல்ல பாண்டித்தியமுடையவர். இவர் பெரும்பாலும் வடமொழி நூல்களைத்

தழுவி வில்ஹணீயம், இரகுவம்ச சருக்கம் முதலாம் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் கவிபாடுந் திறமையும் படைத்தவர்.

**ஆறுமுகத்தம்பிரான்**

திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்து சைவசித்தாந்த நூல்கள் முதலியவற்றை நன்கு கற்று முதன் முதலாகப் பெரியபுராணத்துக்குச் செறிவும் நுட்பமும் வாய்ந்த உரையை எழுதி வெளியிட்ட ஆறுமுகத்தம்பிரானவர்களும் யாழ்ப்பாணத்தவரே யாவர். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் மாணாக்கர் என்ப.

**செந்திநாதையர்**

திருப்பரங்குன்றத்தில் நெடுங்காலம் வசித்துவந்த காசிவாசி செந்திநாதையரவர்கள் வடமொழியும் தமிழும் ஆங்கிலமும் கற்றுணர்ந்தவர். இவர் காசியிற் சில்காலம் வசித்தவராதலின், காசிவாசி செந்திநாதையர் என அறியப்பட்டவராவர். இவர் எவரும் பாராட்டுதற்குரிய நீலகண்ட பாடிய மொழிபெயர்ப்பு நூலொன்றை இயற்றியுள்ளார். சிவஞானபோத வசனாலங்கார தீபம், தேவாரம் வேதசாரம் முதலாம் பிற நூல்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

**சுவாமிநாத பண்டிதர்**

யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த சுவாமிநாத பண்டிதர் அவர்கள் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை யவர்களின் மாணாக்கர். இவர் இந்தியா சென்று திருவாவடுதுறை யாதீனம் முதலிய ஆதீனங்களில் நெருங்கிப் பழகியவர். இவர் அதிககாலம் இந்தியாவில் வாசஞ் செய்தவர். இவர் சிதம்பரத்தி லிருக்குங் காலத்திற் சபாபதி நாவலரிடமிருந்து சிவஞான பாடியத்திற் சில பாகங்களை ஒருவாறு பெற்று அச்சிட்டு வெளிப்படுத்தினர். முழுநூலாக இல்லாவிடினும் இதுவே முதன் முதலாக அச்சில் வெளிவந்த சிவஞானபோதமாகும். தேவார அடங்கன் முறையையும் (தலமுறையாக) இவர் திருத்தமாகவும் அழகாகவும் பதிப்பித்துள்ளார். இவர் வெளியிட்ட மற்றொருநூல் திருக்கோவையாருண்மையாகும். இவர் திருச்செந்தூரில் ஒரு வித்தியாசாலையைத் தாமே ஸ்தாபித்து நடாத்தினர் என்ப. அன்றியும், இவர் தென்னிந்தியாவில் பல ஊர்களுக்குச் சென்று சென்று சைவப் பிரசங்கம் நடாத்தி வந்தனர்.

**இலக்கணச்சாமி**

அண்மையில் சிவபதமடைந்த முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவராவர். இவர் இலக்

கணச்சாமி என்றே பெரிதும் அறியப்பட்டவர். இவர் இளம்பிராயத்திலேயே தென்னிந்தியா சென்று அங்கு வடமொழி தென்மொழிகளை நன்கு கற்றுச் சந்நியாசம் பெற்றுக்கொண்டு சிதம்பரத்திலுள்ள சிவஞானத் திருத்தளியில் பழனி ஈசான சிவாச்சாரியார், கோவை சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் முதலியோருக்குச் சித்தாந்தங் கற்பித்த ஆசிரியராக விளங்கியவர். சிவஞான மாபாடியத்தை ஆராய்ந்து முதன் முதலாக முழுநூலாக வெளியிட்டவர் இவரே. மேடி சிவக்கவிமணியவர்கள் எழுதிய பெரியபுராண உரைக்கும் இவர் பெரிதும் உதவியாயிருந்தார்.

**அம்பலவாண நாவலர்**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீமத் அம்பலவாணநாவல சுவாமிகள் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையிற் பிறந்தவர். இவர் நெடுங்காலம் இந்தியாவிலேயே தம் காலத்தைக் கழித்தவர். தமிழும் வடமொழியும் நன்கு கற்றவர். சமயத்துறையில் பெரிதும் உழைத்தவர். உமாபதி சிவாசாரியார் இயற்றிய பௌஷ்கராகம விருத்தியைச் சிறந்த முகவுரையோடு பதிப்பித்தவர்.

**விசுவநாதபிள்ளை**

இவர்களேயன்றி ஆங்கிலக் கல்வித்துறையில் ஈடுபட்டவர்களுள், சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக B. A. பட்டம்பெற்ற தமிழர் யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த கரல் விசுவநாதபிள்ளை அவர்களாவர். அத்துறையிலும் ஈழம் தென்னிந்திய மக்களுக்கு முன்னணியிலே நின்றது என்று யாம் பெருமிதமடையக் கூடியதாக இருக்கின்றது.

**கனகசபைப்பிள்ளை**

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியா சென்று மிக்க இளம்பிராயத்திலேயே B. A. பட்டம் பெற்றுப் "பட்டதாரிப் பையன்" (Boy Graduate) என்று பலராலும் குறிப்பிடப்பட்ட திரு. V. கனகசபைப்பிள்ளை அவர்கள் தமிழுக்கு ஒரு புதுத்துறையில் தொண்டாற்றியவராவர். இவர் யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்தவர். சிலர் பழைய தமிழ் நூல்களை வருந்தித் தேடி அச்சிட்டு வெளியிடுதலாகிய தொண்டில் ஈடுபட்டு உழைத்தனராயின், திரு. கனகசபைப்பிள்ளை அவர்கள் தமிழரின் பண்டைக்காலத்து நாகரிகச் சிறப்பை, அப்பழைய நூல்களைக் கல்லாத தமிழரும் வேற்றுமொழி

யாளரும் படித்தறியக் கூடியதாக ஓர் அரிய ஆராய்ச்சித் தொண்டில் ஈடுபட்டார். இவர் பிறந்தது 1855–ம் ஆண்டில் என்பர். இவர் இந்தியாவிற் சென்னையில் வசித்தவர். ஸேர் பொன். இராமநாதன் முதலியவர்களோடு சென்னை அரசாங்கக் கல்லூரியிற் கல்வி கற்றவர். இவர் சட்டப் பரீக்ஷையிலும் (B. L.) சித்திபெற்றவர். எனினும், இவர் நெடுங்காலம் வழக்கறிஞர்த் தொழிலை நடாத்தவில்லை. நெடுங் காலம் இவர் இந்திய தபாற் பகுதியிலேயே கடமை பார்த்தார். அப்பகுதியில் மிக உயர்ந்த உத்தியோகம் வகித்தவர். இவ்வுத்தி யோக வேலைகளின் மத்தியில் இவர் தமிழாராய்ச்சியில் மிக்க ஊக்கங் கொண்டு உழைத்தார். இவர் தம் பலதுறைப்பட்ட அறிவுவளத்தின் பலனாக "1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர்" (The Tamils Eighteen Hundred Years Ago) என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். இஃது ஓர் ஆராய்ச்சிப் பெருநூலாகும். தமிழ்நாடு, தமிழ் இலக்கி யத்தின் பழைமை, சிலப்பதிகாரத்தின் காலம் என்றித்தகைய பல அரிய விஷயங்களை நாம் இதன்மூலம் அறியக்கிடக்கின்றது. இத் துறையில் இவ்வகையில் முதன்முதலாக வெளிவந்த நூல் இதுவே யெனலாம். ஆகவே, இத்துறையிலும் ஈழநாட்டுமக்கள் தென்னிந்திய மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கினர் என்று கூறின், மிகையாகாது. இவர் ஆங்கிலத்தில் அரிய செய்யுட்களையும் இயற்றியுள்ளார். எட் வேட் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது, அவர்மீது இவர் ஆங் கிலத்தில் இயற்றிய சிறந்த பாக்கள் "சென்னை மெயில்" (Madras Mail) பத்திரிகையில் வெளியிடப்பட்டன. தமிழ் நூல்களை வெளியிடுவதி லும் இவர் பெரும்பணி யாற்றியுள்ளார் என்று சொல்லுதல்வேண் டும். எனெனில், இவர் தமது உத்தியோக சம்பந்தமாகத் தென் னிந்தியாவின் பல பாகங்களுக்குஞ் செல்லும்போதெல்லாம் ஆங்காங்கு கிடைக்கும் தமிழ் ஏட்டுச் சுவடிகளைப் பிரதிபண்ணுவித்து வைத்துக் கொள்ளும் வழக்கமுடையவர். அவ்வாறு சேர்த்த பலநூல்களைப் பதிப்பாளர்களுக்குக் கொடுத்துதவியும் உள்ளார். டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுக்குப் பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதி காரம் முதலியவற்றின் பிரதிகளை இவர் கொடுத்தனர் என்ப. இவர் ஆங்கிலத்தில் இயற்றிய அடிஆராய்ச்சிநூல் ஈழ – இந்தியத் தொடர்பை என்றும் ஞாபகப்படுத்திக்கொண்டு விளங்கும் என்பதிற் சந்தேகமும் உண்டுகொல்! இந்நூலைப் பாண்டித்தியம் மிக்க ஸ்ரீமதி கனகசலிங்க மவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள் என்று அறிகின்றோம். இம் மொழிபெயர்ப்பு இதுவரை அச்சில் வாராதது பெருங் குறை யாகும்.

**பொன்னம்பலப்பிள்ளை**

இன்னும், ஈழநாட்டிலிருந்து இந்தியாசென்று ஆங்கு உயர்தர உத்தியோகம் வகித்துத் திகழ்ந்தவர்களுள் இருவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவர்களுள் ஒருவர் திரு. தா. பொன்னம்பலப்பிள்ளை அவர்களாவர். இவர் யாழ்ப்பாணத்திற் பிறந்து தென்னிந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்தில் உயர்தர உத்தியோகத் தமர்ந்திருந்து, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சிவசைலத்தில் ஆறுதலடைந்திருந்தவர். இவர் வரலாற்றாராய்ச்சியிற் பெரிதும் ஈடுபட்டுழைத்தவர். இவர் எழுதிய "வஞ்சிமாநகர்" என்னும் நூல் நுட்பமான ஆராய்ச்சிக் குறிப்புக்களையுடைய நூலாகும். இவர் எழுதிய பல கட்டுரைகள் "தமிழரின் பழைமை" (Tamilian Antiquary) என்னுஞ் சஞ்சிகையிற் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜத்துக்குத் தலைமைதாங்கியவருள் ஒருவராவர். மனோன்மணீய நாடகாசிரியர் திரு. சுந்தரம்பிள்ளை யவர்களின் ஆப்த நண்பர். தனித்தமிழியக்கத்துக்கு அடிப்படை கோலியவர்களுள் இவரும் ஒருவராவர்.

**செல்லப்பாபிள்ளை**

இவர்தம் சோதரர் திரு. T. செல்லப்பாபிள்ளை B. A., B. L. அவர்கள் திருவனந்தபுரத்திற் பிரதம நீதிபதி (The Chief Justice of Travancore) ஆகக் கடமைபார்த்தவர். இவர் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையை நிறுவியோருள் ஒருவராவர். அன்றியும், ஆங்கில இந்து சாதனப் பத்திரிகையின் முதல் ஆசிரியராகக் கடமைபார்த்தவரும் ஆவர்.

**சிதம்பரசுவாமிகள்**

செப்பறைச் சிதம்பரசுவாமிகள் ஈழநாட்டவர். இவர் இந்தியாவில் சிதம்பரத்திலும் திருநெல்வேலியிலும் செப்பறையிலும் வதிந்து தில்லையில் இன்றும் நின்று நிலவும் சிவஞானத் திருத்தளியை நிறுவியவர். வடமொழி தென்மொழியாகிய இருமொழிகளிலும் உள்ள சித்தாந்த சமய நூல்களையும் நன்கு கற்றவர். அப்பர்சுவாமிகள் திருவிருத்தத்துக்கும் சிவப்பிரகாசத்துக்கும் செவ்விய உரை எழுதியுள்ளார். தொல்காப்பியச் சண்முக விருத்தி மறுப்பு முதலியன இவர் எழுதிய எதிர் நூல்களாம்.

**வேறு சிலர்**

இங்ஙனமே, இன்னும் சிதம்பரத்தில் நெடுங்காலம் வதிந்து தமிழ்த் தொண்டு புரிந்துவந்த நல்லூர்ச் சதாசிவப்பிள்ளை அவர்களும், கோப்பாய் பொன்னம்பலபிள்ளை யவர்களும், தில்லைநாதத் தம்பிரான்



கௌதம புத்தர்–சிலை [பக்கம் – 34]

உபயம்: 'ஈழகேசரி', சுன்னாகம்



தம்பதிகள் [பக்கம் – 35]

உபயம் : அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி



சந்திர வட்டக் கற்படி [பக்கம் – 35]

உபயம் : அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப்பகுதி

அவர்களும் பிறரும் யாழ்ப்பாணத்தவர் ஆவர். இவர்களெல்லோரும் ஈழத்துக்கும் இந்தியாவுக்கு மிடையேயுள்ள தொடர்பை வளர்த்து வந்த பெரியோர்களாவர்.

**விபுலாநந்தர்**

கடைசியாக நாம் குறிப்பிடவிரும்பும் பெரியார் ஸ்ரீமத் விபுலாநந்த அடிகளாராவர். கடைசியாக ஏன் குறிப்பிடுகிறேமெனின், இவர் மிக அண்மையில் வசித்தவர். ஈழநாட்டில் மட்டக்களப்பைச் சொன்ன ஊராகக் கொண்டவர். தமிழில் பாண்டித்தியம் பெற்றதுமன்றி ஆங்கிலத்திலும் மிக்க அறிவு படைத்தவர். இக்கால விஞ்ஞான சாஸ்திரக் கலையில் B. Sc. பட்டம் பெற்றவர். வடமொழியுந் தெரிந் தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசும் ஆற்றல் வாய்ந் தவர். ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டவர். சிலகாலம் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குப் பிரதமாசிரியராகக் கடமையாற்றியவர். அதன் பின், இவர் இராமகிருஷ்ண ஆதீனத்தைச் சேர்ந்து துறவியாகித் தமிழுக்கும் சமயத்துக்குந் தொண்டு புரிந்துவந்தார். இவர் இந்தியாவி லிருந்த காலத்தில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேரா சிரியராகக் கடமைபார்த்துப் பல பட்டதாரி மாணவர்களுக்குத் தமிழ் போதித்தார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் தமிழ்ப் பேராசிரியராக மட்டுமல்ல, கீழ்நாட்டுக் கலையாராய்ச்சிப் பகுதித் தலைவ ராகவும் (The Dean of the Oriental Studies) விளங்கினர். சிலகாலம் 'பிரபுத்த பாரதம்' என்னும் உயர்தர ஆங்கில சஞ்சிகைக்கும் 'இராம கிருஷ்ண விஜயம்' என்னுந் தமிழ்ச் சஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்தவர். கைலாசம்வரை யாத்திரைசெய்து திரும்பியவர். இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக இவ்வுலக வாழ்வை ஒருவும்வரை பணியாற்றியவர். பழந் தமிழ் நகராகிய மதுரையில் நடைபெற்ற தமிழ் மகாநாட்டுக்கும் ஏனைய பல மகாநாடுகளுக்கும் காலத்துக்குக் காலம் தலைமை தாங்கினவர். தமிழ்க் கலைச் சொல்லகராதி ஆசிரியர் குழுவினருள் ஒருவராக இருந்தவர். செகசிற்பியார் நாடகங் களைத் தழுவித் தமிழில் நாடக நுட்பங்கள் நிறைந்த மதங்க சூளா மணி என்னும் நூலை இயற்றியவர். இராமகிருஷ்ண ஆதீனத்தாரின் வேண்டுகோட்படி விவேகாநந்த சுவாமிகளின் நூல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அவற்றுட் சில பகுதிகள் இன்னும் அச்சில் வெளிவந்தில. இவையனைத்தையும்விட, இவர்தம் ஆராய்ச்சி வன்மைக்கும் கணிதம் முதலிய பல் கேள்வித்துறைபோகிய அறிவுக்கும் சான்ருக விளங்குவது இவரியற்றிய யாழ்நூலாகும். தமிழில் இசை

பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல்கள் இல்லாத குறையைப் போக்க வேண்டும் என்ற நோக்கங்கொண்டே இந் நூல் எழுந்ததாகலின், இது தமிழ்க் கலைக்குச் செய்த பெரியதொரு தொண்டாகும். இந் நூல் உள்ளவரை தமிழ்நாடு சுவாமிகளை மறக்க முடியாது. இதனால் ஈழ நாட்டுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள தொடர்பை வளர்ப்பதில் விபுலாநந்த அடிகள் எத்துணைத் தொண்டாற்றியுள்ளார் என்பது கூறாதே போதரும். செய்யுள் இயற்றுவதிலும் இவர் வல்லுநர்.

ஈழ — இந்தியத் தொடர்பை வளர்ப்பதற்குப் பணியாற்றிய பெரியோர்கள் இன்னும் பலர் இருந்தார்கள்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

என்றாங்கு இந்தியா சென்று அங்கு வதியாவிட்டாலும், இங்கிருந்த வண்ணமே ஈழ — இந்தியத் தொடர்பை வளர்த்த பெரியோரே அவர். ஆயின், ஈழத்திருந்து இந்தியா சென்று அங்கு வதிந்து புகழ் நிறுவிய பெரியோரைப்பற்றியே இக் கட்டுரை பேசவேண்டும் என்பது தமிழ் விழாச் செயலாளர் கருத்தாமாகலின், யாம் இவ்வளவில் அமைகின்றோம்.

**ஆனந்தக்குமாரசுவாமி**

ஆயின், மற்றொருவகையில் தமிழ் மக்களுக்கும் தமிழ்க்கலைக்கும் பெருந்தொண்டாற்றிய ஒரு பெரியாரை நாம் குறிப்பிடாதொழியின், இக் கட்டுரை பூர்த்தியடையாது. அவர் சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களின் அருந்தவப் புதல்வரும் உலகப் பிரசித்தி பெற்றவருமாகிய டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமி யவர்களாவர். என்றும் அழியாத பெரும்பணியைச் செய்தவருள் இவர் தலைசிறந்தவராவர். இவர் ஈழ நாட்டிற் பிறந்தவர். இவர் இந்தியாவுக்குச் சென்று, இரண்டு ஆண்டுகள்வரை அங்கு வதிந்து தஞ்சாவூர் முதலாம் இடங்களில் இந்திய நுண்கலைகளாகிய நாட்டியம், நாடகம், சிற்பம், சித்திரம், ஓவியம் முதலியவற்றை ஆராய்ந்து கற்றவர். அதனோடமையாது வடநாட்டுக்குஞ் சென்று அங்கும் பல கலைநிலையங்களை அடைந்து ஆராய்ச்சி செய்தவர். வங்கநாட்டுக் கவி இரவீந்திரநாததாகூர் அவர்களோடு பெருநட்புப் பூண்டு இந்திய கலைத்துறைகளில் மிக்க பாண்டித்திய மடைந்தவர். பின், இவர் இங்கிலாந்து சென்று இடைக்காலச் சிங்கள க்கலை (Mediaeval Singhalese Art) என்னும் நூலை எழுதி வெளியிட்டதோடு நந்திகேஸ்வர அபிநய தர்ப்பணம் என்னும் நூலையும்

வெளியிட்டுப் பின் அமெரிக்கா சென்றார். அங்கு பொஸ்டனில் உள்ள கீழைத்தேசக் கலைப்பொருள் நிலையப் பகுதித் தலைவராக (The keeper of the Oriental Art in the Fine Arts Museum at Boston) நியமனம் பெற்று இவ்வுலக வாழ்வை ஒருவும்வரை அங்கேயே கடமை பார்த்து வந்தார். நடராஜ நடனம் (The Dance of Shiva), இந்தியக் கலைகளின் வரலாறு (History of Indian and Indonasian Art), இராஜபுதன ஓவியங்கள் (Rajput Paintings), புத்தரும் அவர் போதனைகளும் (Buddha and the Gospel of Buddhism) என்றித்தகைய அரிய ஆராய்ச்சி நூல்களை இவர் எழுதியவர். அவைமட்டுமல்ல, ஐந்நூற்றுக்குக் குறையாத கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். இவரைவிடச் சிறப்பாக இந்தியக் கலைகளை ஆராய்ந்தோர் உலகிலேயே இல்லை. இஃது அறிஞருலகம் ஒப்புக்கொண்ட பேருண்மையாகும். இந்தியக் கலையின் திட்ப நுட்பங்களையும் அருமை பெருமைகளையும் உலகறிய எடுத்துக்காட்டிய தனிச்சீர்த்தி படைத்த இவரும் ஈழநாட்டவர் என்று கூறிக்கொள்ள நாம் எத்துணைப் பெருமிதம் அடைய வேண்டும். இந்தியக்கலை உள்ள அளவும், தமிழ்க்கலை உள்ள அளவும், நடராஜ வடிவத்தின் பெருமையை உலகம் மதிக்குமளவும் தமிழ்க் கலைஞன் டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமியை உலகம் மறக்கமுடியாதன்றோ?

இவ்வாறே (1) பழந்தமிழ் நூல்களை வருந்தித் தேடி அச்சிற் பதிப்பித்தலிலும், (2) மொழிபெயர்ப்பு நூல்களை எழுதுதலிலும், (3) சிறந்த வசனநூல்களைத் தருதலிலும், (4) உரையில்லாதிருந்த பல நூல்களுக்கு உரை எழுதுவதிலும், (5) பேச்சுக்கலையை வளர்ப்பதிலும், (6) அகராதி தொகுப்பதிலும், (7) தமிழ்மொழி வரலாற்று நூல்களை எழுதுவதிலும், (8) பழந்தமிழர் பெருமைகளை உலகறியுமாறு ஆங்கிலத்தில் ஆராய்ச்சி நூல்கள் எழுதுவதிலும், (9) இசை நூல்கள், ஏனைக் கலைநூல்கள், கலைகளின் பெருமை தெரிக்கும் நூல்கள் ஆகியவற்றை எழுதுவதிலும் ஈழநாட்டுத் தமிழ்ப்பெருமக்கள் தனித்தனி அவ்வத்துறையில் முதன்முதலாக முன்னின்று அவ்வவற்றை அழகுறச் செய்துகாட்டி ஏனைத் தமிழ்மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கினர் எனின், அது சாலவும் பொருந்தும். இத்தகைய பெருமக்கள் சரிதங்களை மிக விரிவாக எழுதவேண்டுமென்பதே எம் பேரவா. ஆயின், இப்போது தமிழ்விழா மலருக்குப் பொருந்துமாற்றால் இயன்றவரை சுருக்கியே எழுதியுள்ளேம்.

"பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க."

# இலங்கை அரசியலும் தமிழரும்

திரு. சு. அம்பிகைபாகன், பீ. ஏ.

இலங்கையில் சிங்களரோ தமிழரோ முன்பு குடியேறினவர் எனபது விவாதத்துக்குரிய விஷயமாகும். ஆனால் சிங்களச் சாதியார் இலங்கையிற் குடியேறின காலந்தொட்டு, தமிழரும் இங்கு வசித்து வந்துள்ளா ரென்பதற்குப் போதிய ஆதாரமுண்டு. இலங்கையை ஆண்ட முதற் சிங்கள மன்னனான விசயன் என்பவன், தனக்குப் பட்டமகிஷியாகப் பாண்டி நாட்டு இராசகுலக் கன்னிகையையே கொண்டான் என்றும், அவனைப் பின்பற்றி அவனுடைய தோழர்களும் பாண்டி நாட்டுக் கன்னிகைகளையே விவாகஞ் செய்துகொண்டன ரென்றும், மகாவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. இச் சம்பவம் நடந்த காலம் கி. மு. 5-ம் நூற்றாண்டு என்பது சரித்திர ஆசிரியர் துணிபு.

பின்னர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஏலேலசிங்கன் என்னும் சோழநாட்டு இளவரசன் ஈழநாடு முழுவதையும் அநுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். அவன் மனுநீதிகண்ட சோழனைப்போல், நீதி திறம்பாது அரசாண்டு வந்தபடியால் எல்லா மக்களுடைய நன்மதிப்பையும் பெற்றான். ஈற்றில் அவனைத் துட்டகைமுனு என்னும் சிங்கள அரசன் தோற்கடித்தபோதிலும், அவனுக்கு மிகவும் மரியாதை காட்டினான். ஏலேலசிங்கனைத் தகனஞ்செய்த இடத்தைக் கடந்து செல்லும் ஊர்வலங்கள் எல்லாம், பேரிகை முதலியவற்றை ஒலிக்காது, அமைதியாகப் போகவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான்.

அடுத்தபடியாக, 11-ம் நூற்றாண்டில் சோழசாம்ராச்சியம் தலையெடுத்த காலத்தில், அதாவது இராசராச இராசேந்திர சோழர் காலத்தில், ஈழநாடு சோழர் ஆட்சிக்குட்பட்டது. அக் காலத்தில் பொல்லநறுவை என்று சொல்லப்படும் புலஸ்திய நகரமே, சோழர் தலைநகரமாக விளங்கியது. சோழர் காலத்து அங்கு கட்டப்பட்ட ஒரு சிவன் கோவில், இப்பொழுதும் நன்னிலையிலிருப்பது குறிப்பிடத் தக்கது. பொல்லநறுவையிற் கண்டெடுக்கப்பட்ட நடராச விக்கிரகமும், நால்வர் விக்கிரகங்களும் சிற்பத் திறமை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இவற்றை இப்பொழுது கொழும்பு நூதன பொருட்காட்சிச் சாலையிற் காணலாம்.

14-ம், 15-ம் நூற்றூண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்தி என்னும் அரசர் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு, ஒரு தனி இராச்சியம் நடத்திவந்தனர். இக் காலத்தில்தான் இரகுவம்சம் என்னும் காவியத்தைத் தமிழில் இயற்றிய அரசகேசரி என்னும் புலவன் வாழ்ந்தான்.

**பிரித்தானியர் ஆட்சி ஆரம்பம்**

இதன்பின்னர் 18-ம் நூற்றூண்டு முடியும்வரையும் இலங்கைக் கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயராலும், டச்சுக்காரராலும் ஆளப்பட்டுவந்தன. ஈற்றில் 1796-ம் ஆண்டில் பிரித்தானியர் இப் பகுதிகளைக் கைப்பற்றி, சென்னை மாகாணத்தோடு இணைத்தனர். ஆனால் சென்னை மாகாணத்திலிருந்து வரிகளைச் சேகரிப்பதற்கு அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர் (Dubashes) இலங்கையில் நடைமுறையிலிருந்த முறைகளை அனுசரியாது, தங்கள் முறைப்படி வரிகளைச் சேகரித்தபடியால் 1797-ம் ஆண்டில் இலங்கையில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக, சென்னை மாகாணத்திலிருந்து இலங்கை பிரிக்கப்பட்டுக் குடியேற்ற நாட்டு முறைப்படி ஆளப்பட்டு வந்தது.

1793-ம் ஆண்டு தொடக்கம் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியர் ஆட்சியின்கீழ் வந்தபோதிலும், கண்டி இராச்சியம் தனி இராச்சியமாக நாயக்கர்வம்சத்தைச் சேர்ந்தவர்களால் ஆளப்பட்டுவந்தது. கண்டி ஒரு சிங்களப் பிரதேசமா யிருந்தபோதிலும், அங்கு இராசாங்கபாஷை தமிழாகவே யிருந்தது. 1815-ம் ஆண்டில் கண்டிப் பிரமுகர்களுக்கும் பிரித்தானியஅரசாங்கத்துக்கு மிடையில் எழுதப்பட்ட ஒப்பந்தத்துக்குத் தமிழிலேயே கைச்சாத்திடப்பட்டது. கடைசிக் கண்டி அரசனை ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பிரித்தானியரால் பிடிக்கப்பட்டு வேலூர்ச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு 1832-ம் ஆண்டில் மரணமடைந்தார். இப்பொழுதும் தஞ்சாவூரில்வசித்துவரும் இவருடைய சந்ததியாருக்கு, இலங்கை அரசாங்கம் உபகாரப் பணம் கொடுத்து வருகிறது.

**சட்டசபை நிறுவப்படுதல்**

1798-ம் ஆண்டு தொடக்கம் 1833-ம் ஆண்டு வரைக்கும் தேசாதிபதியே இலங்கையை ஆண்டுவந்தார். அவருக்கு ஆலோசனை கூறுவதற்கு முக்கிய உத்தியோகஸ்தர்களைக்கொண்ட ஒரு சபை யிருந்தது; சனங்களின் பிரதிநிதிகளுக்கு இதில் இடம் கிடையாது. அரசாங்கம்

இப்படி நடந்துவரும் காலத்தில் 1829-ம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து கோல்புறூக், கமரென் என்பவர்களை, அங்கத்தவர்களாகக்கொண்ட ஒரு விசாரணைச் சபை அனுப்பப்பட்டது. இச் சபையின் ஆலோசனைப்படி ஒன்பது உத்தியோகஸ்தர்களையும், ஆறு உத்தியோகஸ்தரல்லாதவர்களையும் கொண்ட ஒரு சட்டநிரூபண சபை 1833 ம் – ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. உத்தியோகஸ்தரல்லாதவர்களும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களே. இவர்களில் மூவர் முறையே சிங்களர், தமிழர், பறங்கியர் சார்பாகவும், மற்றைய மூவரும் ஐரோப்பியர் சார்பாகவும் நியமிக்கப்பட்டனர். இந்தச் சபையை சட்ட நிரூபண சபையென்றும் (Legislative Council), உத்தியோகஸ்தரை மாத்திரம் கொண்டு அரசாங்கத்தை நடத்துவதற்குத் தேசாதிபதிக்கு உதவியாயிருந்த சபையைச் சட்ட நிறைவேற்றுச் சபை யென்றும் (Executive Council) கூறுவது மரபாகும். காலத்துக்குக் காலம் சட்ட நிரூபண சபையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், 1931-ம் ஆண்டு வரைக்கும் சட்ட நிறைவேற்றுச் சபையிற் பெரும் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

**தமிழ்ப் பிரதிநிதிகள்**

இனி, தமிழர் சார்பாகச் சட்டநிரூபண சபையிலிருந்த சிலரைக் கவனிப்பாம். முதல் முதல் நியமிக்கப்பட்டவர், அரசினர் தமிழ் மொழிபெயர்ப்பாளராக விருந்தவரும், சேர் முத்துக்குமாரசுவாமியின் தந்தையுமாகிய திரு. குமாரசுவாமிமுதலியார் ஆவர். இவர் இலங்கையில் அடிமை முறையை அகற்றுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தார்.

இவரின்பின் தமிழ்ப் பாவலர் சரிதத்தை (Tamil Plutarch) ஆங்கிலத்தில் எழுதிய திரு. சைமன் காசிச்செட்டி என்பவர் நியமிக்கப்பட்டார். இவருக்கு ஆங்கில பாஷையில் இருந்த திறமையை அக்காலத்துத் தேசாதிபதி ஸ்ரீவார்ட் என்பவர் பாராட்டியுள்ளார். சைமன் காசிச் செட்டிக்குப் பின் குமாரசுவாமிமுதலியார் மகன் சேர் முத்துக்குமாரசுவாமி நியமிக்கப்பட்டார். இவர் சட்டநிரூபண சபையில், மக்கள் குறைகளை எடுத்து வாதித்து மிகவும் புகழ் படைத்தனர். இவர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டபோதிலும், அரசாங்கத்துக்குப் பணிந்தது கிடையாது. இந்தப் பண்பு இவருக்குப்பின் தமிழ்ப் பிரதிநிதிகளாக விளங்கிய இவரது மருமக்களாகிய சேர் பொன்னம்பலம் இராமநாதன், திரு. பொன்னம்பலம் குமாரசுவாமி, சேர் பொன்னம்பலம் அருணாசலம் முதலியோர்களிடத்தும் காணப்பட்டது.

அக்காலத்தில் இலங்கை அரசாங்கம் கிறிஸ்து மதத்தைப் பரப்புவதற்கு அரசாங்கப் பணத்தை உபயோகித்து வந்தது. இதை எதிர்த்து; சேர் முத்துக்குமாரசுவாமி ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இப்பிரேரணைக்குச் சார்பாகப் பேசுகையில் புத்தர், இந்துக்கள், மகமதியர் முதலியோரிடமிருந்து பெறும் பணத்தைக் கிறிஸ்துமத பரிபாலனத்துக்கு உபயோகிப்பது கிறிஸ்துமத தர்மத்துக்கே மாறானதென்று வாதாடினார். ஈற்றில் இவருடைய கட்சியே வெற்றியடைந்தது. இந்த விவாதத்தில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவைப் படித்த குடியேற்ற நாட்டு மந்திரி, இப்படியொரு சொற்பொழிவை நிகழ்த்தக்கூடியவரிருக்கும் நாடு சுயராச்சியம் பெறுவதற்கு மிகவும் தகுதிவாய்ந்தது என்றார்.

சேர் முத்துக்குமாரசுவாமி இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கி, 'பரிஸ்டர்' பட்டம் பெற்றார். இதற்குமுன் கிறிஸ்தவர்களும், யூதர்களுமே இப்பட்டத்தைப் பெற முடிந்தது. இவர் லோட் பாமஸ்ரன், டிஸ்ராலி முதலியவர்களுடைய நண்பனாயிருந்தபடியால் பழைய சட்டத்தை மாற்றுவிக்க முடிந்தது. கீழைத்தேச வாசிகளில் இவரே முதல் முதல் 'பரிஸ்டர்' பட்டத்தைப் பெற்றார். இவருடைய கலைத்திறனை இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு விக்ரோறியா ராணிக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட அரிச்சந்திர நாடகத்திலிருந்து நாமறியலாம். இவர் நாட்டுக்குச் செய்த சேவைகளுக்காகச் 'சேர்' பட்டம் வழங்கப்பட்டது.

**புகழ்பெற்ற புரவலர்**

திரு. பொ. குமாரசுவாமி சட்டநிரூபண சபையிலிருந்த காலத்தில் (1893 – 1898) வெறுந்தரை நிலத்தைப்பற்றி ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தை எதிர்த்துப் பேசுகையில், இதைப் பகற்கொள்ளை யென்றார். தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர் தேசாதிபதி தலைமையில் நடக்கும் சட்டநிரூபணசபையில் இப்படிப் பேசுவதற்கு எவ்வளவு துணிவு வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். மேலும் சில 'கிறிமினல்' வழக்குகளுக்கு 'அப்பீல்' கேட்கும் உரிமையை நீக்குவதற்கு அரசாங்கத்தார் எத்தனித்தனர். இதை எதிர்ப்பதற்குக் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் திரு. பொ. குமாரசுவாமி மது அருந்திய மயக்கத்தோடு வழக்குகளை விசாரிக்கும் ஒரு நீதிபதியைத் தமக்குத் தெரியுமென்றும், அவர்போன்ற நீதிபதிகளிருக்கும் வரையில் 'அப்பீல்' கேட்கும் உரிமை யிருக்கவேண்டு

மென்றுங் கூறினர். இக்கூற்றை நிரூபிக்கும்படி அரசாங்கத்தார் கேட்ட பொழுது, ஒரு விசாரணைச்சபையை நியமித்தால் அதற்கு முன்பாக விஷயங்களைக் கூறுவதாக அறிவித்தார். இதற்குமேல் அரசாங்கம் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவர் நியமிக்கப்பட்ட ஐந்துவருட காலம் முடிவடைந்ததும், மக்கள் இவரையே திரும்பவும் நியமிக்கும்படி கேட்டும் தேசாதிபதி உடன்படவில்லை. முன்பு நியமித்துப் பட்ட பாடு போதுமென்று எண்ணினர் போலும் இத் தேசாதிபதி.

திரு. பொ. குமாரசுவாமிக்குத் தமிழில் ஆர்வமும் அறிவுமுண்டு. இவர் தூண்டுதலாலேயே திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை பல அரிய நூல்களை வெளியிட்டார். டாக்டர் சாமிநாதையர் சங்க இலக்கியங்களை வெளியிட்டபோது, காலத்துக்குக் காலம் பொருளுதவி செய்து ஊக்கப்படுத்தினர். திருக்கேதீச்சரம் என்னும் பாடல்பெற்ற ஸ்தலம், மறுபடியும் இந்துக்கள்வசம் வர உதவி செய்தவர் இவரே.

**பரோபகாரி**

யாழ்ப்பாணத்தின் விழிப்புக்குப் பலவகையாலும் உழைத்தவர் அப்புக்காத்து நாகலிங்கமென்பவர். இவர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலுள்ள ஒரு பிரபல குடும்பத்தில் பிறந்து, யாழ்ப்பாணம், கொழும்பு, கல்கத்தா முதலிய இடங்களிற் கல்வி பயின்று, நியாய வாதியாக விளங்கியவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய ஸ்தாபனங்களை ஸ்தாபித்த, திருவாளர்கள் பசுபதிச்செட்டியார், காசிப்பிள்ளை, சபாபதி முதலியவர்களைக் கொண்ட குழுவுக்குத் தலைவராக விளங்கினர். இவர்கள் சம்பந்தப்படாத ஒரு இயக்கத்தை அக்காலத்தில் அறியமுடியாது. வடமாகாண அதிகாரியாக விளங்கிய துவையினம் என்பவர், சர்வாதிகாரியாய் மாகாண நிர்வாகத்தைச் சீர்கெட்ட முறையில் நடத்துவதைச் சகிக்க முடியாத திரு. நாகலிங்கம் இதை எதிர்த்துப் பெருங்கிளர்ச்சி செய்தார். தமிழர்களைத் தூஷித்துக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு மனுச்செய்த சேர் ஆர்தர் கோர்டன் என்னும் தேசாபதி 1890-ம் ஆண்டில் இளைப்பாறிய பொழுது அவருக்குப் பாராட்டுப் பத்திரம் படித்துக் கொடுப்பதைத் தடுத்தவரும் இவரே.

இவர் கடைசியாகப் பங்குபற்றிய கூட்டம் யாழ்ப்பாணமக்கள் 1897-ம் ஆண்டில் சுவாமி விவேகானந்தருக்கு அளித்த வரவேற்புக் கூட்டமே. இவர் இறந்தபொழுது 'இந்துசாதன'த்தில் வெளிவந்த தலையங்கத்தின் ஒருபகுதி பின்வருமாறு :

“இராமன் ஆண்டாலென்? இராவணன் ஆண்டாலென்? எமக்கென்ன! நாமேன் தலையிட்டு அவதிப்படுவான் என்று நினைந்து எம் நாட்டுக்கு எக்கேடு வந்தாலும், அதனை நீக்க யாதும் பிரயத்தனம் செய்யாது, கபடமனத்தோடு பதுங்கி ஒதுங்கிக் கிடப்பாரைப்போன்றிராது, என்னென்ன இடர் நேரிட்டபோதிலும், அதையெல்லாம் சட்டை செய்யாது தேசவிருத்திக்கேற்ற நன்மைகளைச் செய்து முடிப்பதே, தமக்கு விரதமாய்க் கொண்டொழுகிய எம் மன்னன் ஸ்ரீ நாகலிங்கம்பிள்ளையைப்போல் யார் இனி எமக்கு வாய்க்கப்போகின்றார்.”

**யாழ்ப்பாணப் பிரதிநிதி**

1906–ம் ஆண்டு தொடக்கம் 1917–ம் ஆண்டுவரைக்கும் தமிழ்ப் பிரதிநிதியாக விளங்கிய சேர் அம்பலவாணர் கனகசபை சமாதானத்தைப் பெரிதும் விரும்பியவர். இவர் இப்பதவிக்கு வரமுன் யாழ்ப்பாணத்திற் சிறந்த நியாயவாதியாக விளங்கியவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபை முதலியவற்றுக்குத் தலைவராக இருந்தவர். இவர் நியமனம் ஆகும்வரைக்கும் தமிழர் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் கொழும்புவாசிகளாகவே இருந்தனர். இவரைப்போன்ற ஒரு தலைவர் கிடைத்தமையும், யாழ்ப்பாணத்துக்கு 1905–ம் ஆண்டில் புகையிரதம் வந்தமையுமே இவர் நியமனத்துக்குக் காரணங்கள். சைவாலயங்கள் மடாலயங்களைப் பரிபாலிப்பதற்கான சட்டம் (Trust Ordinance) இவரது பெரும் பிரயாசையாலேயே ஆக்கப்பட்டதாகும். இவர் 1927–ம் ஆண்டில் இறந்தபொழுது, இவரைப்பற்றி ‘இந்துசாதன’த்தில் வெளிவந்த கட்டுரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

“இன்னும் அந்தப் பரோபகார சீலர் அத்துவக்காத்து நாகலிங்கத்தின் அகால மரணத்தின்பின் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற சமயசம்பந்தமான சபைகள், பொதுசன நன்மைக்கான சபைகள் என்னும் இவைகளிலெல்லாம் சேர் கனகசபையே தலைமை வகித்து வந்தார். அப்படியாகத் தலைமை வகித்தற்கான அறிவு, ஆற்றல் எல்லாம் இவரிடத்திலே ஒருங்கு பொருந்தி விளங்கியதாகும்.”

**முதல் இலங்கைப் பிரதிநிதி**

1912–ம் ஆண்டில் கல்வியறிவுடைய இலங்கை மக்களுக்கு, ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டது. இதிற் பங்குபற்றி, டாக்டர் வேர்ஞண்டோ என்னும் சிங்களருடன் போட்டி

யிட்டு வெற்றிபெற்ற சேர் இராமநாதனின் சேவையை இங்கு ஆராய் வது பொருத்தமாயிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தை மையமாக வைத்துக்கொண்டு சிங்கநோக்காக அவருடைய வாழ்க்கையை நோக்கு வோம். இவர் 1879-ம் ஆண்டில் இவருடைய மாமனார் சேர் முத்துக் குமாரசுவாமி இறந்தபொழுது, தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட் டார். பின்னர் பதின்மூன்றுவருடம் 'சொலிசிற்றர் ஜெனரல்'லாயிருந்து, மூன்றுமுறை 'அற்றேணி ஜெனரல்'லாயும் கடமை பார்த்தார். 1905-ம் ஆண்டில் இப்பதவியிலிருந்து இளைப்பாறி அமெரிக்காவுக்குச் சென்று சமயசம்பந்தமான சொற்பொழிவுகள் செய்தார். இதன் பின்னர் இலங்கை திரும்பிக் கல்வி சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுதுதான் இலங்கை மக்கள் கேள்விக்கிணங்கி மேற் கூறப் பட்ட போட்டியில் தலையிட்டு வெற்றி பெற்றார்.

இப்படி இலங்கை மக்கள் பிரதிநிதியாக இருந்த காலத்தில், 1915-ம் ஆண்டில், சிங்களமக்களுக்கு ஒரு பேராபத்து ஏற்பட்டது. கண்டி, கம்பளை முதலிய இடங்களில் புத்தர்களுக்கும் மகமதியர்களுக்கு மிடையில் பள்ளிவாசல்களுக்கு முன்பாக மேளவாத்தியத்துடன் ஊர்வலம் கொண்டுசெல்வது பற்றிக் கலவரமுண்டானது. இந்தக் கலவரத்தைச் சிங்கள மக்கள் அரசாங்கத்தை வீழ்த்தச் செய்தார்க ளென்று தேசாதிபதி எண்ணி இதை அடக்குவதற்குக் கடுமையான முறைகளைக் கையாண்டார். கலவரத்தோடு சம்பந்தமில்லாத அநேக சிங்கள மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். சேர் டி. பி. ஜயதிலக, இப்போதைய முதல் மந்திரி சேனநாயகா முதலிய சிங்களத் தலைவர்கள் சிறையிலிடப்பட்டனர். அக்காலத்தில் இவர்களைக் காப்பாற்ற முன் வந்தவர், சேர் பொன். இராமநாதன் அவர்களே. இலங்கை அர சாங்கத்தின் அநீதிகளை எடுத்துக் கூறுவதற்காக, முதலாம் உலக யுத்தம் நடந்த காலத்தில், நீர்மூழ்கிக் கப்பல் முதலியவற்றால் ஏற் படும் அபாயங்களையும் பொருட்படுத்தாது, இங்கிலாந்துக்குச் சென் றார். அங்கு குடியேற்றநாட்டு மந்திரிக்கும், பாராளுமன்ற அங்கத் தினருக்கும் உண்மையை எடுத்து விளக்கி அநீதியான செயல்களுக் குக் காரணராகவிருந்த தேசாதிபதி சாமேஸ் என்பவரைப் பதவியி லிருந்து நீக்குவித்தார். இவர் வெற்றியுடன் இங்கிலாந்திலிருந்து திரும்பியபோது இலங்கை மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொழும்புத் துறைமுகத்திற் கூடி குடை, கொடி, ஆலவட்டம் முதலிய விருதுக ளுடன் வரவேற்று, ஒரு குதிரைவண்டியில் இருக்கச் செய்து வண் டியை அவர்களே இழுத்துச் சென்றனர். இக்காலத்தில்தான் சேர்

இராமநாதனுக்கு இலங்கையின் முடிசூடாமன்னர் என்ற பெயர் ஏற்பட்டது.

இதற்குப் பின்னரும், இவர் 1930-ம் ஆண்டில் இறக்கும்வரை, சட்டநிரூபணசபையில் இருந்து தொண்டாற்றினர். எனவே, ஏறக்குறைய ஐம்பதுவருடகாலம் சட்டநிரூபண சபையி லிருந்திருக்கின்றனர். இதற்குமேலாக இவர் யாழ்ப்பாணத்திற் கல்வி சம்பந்தமாகச் செய்த பணி அளவிடற்கரியது. இவரால் பெண்களுக்கென ஸ்தாபிக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியும் ஆண்களுக்கென ஸ்தாபிக்கப்பட்ட பரமேஸ்வரக் கல்லூரியும் இவருக்கு இருபெரும் ஞாபக சின்னங்களாக விளங்குகின்றன.

**ஒப்பற்ற பத்திராசிரியர்**

1917-ம் ஆண்டு தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு. ஏ. சபாபதி அவர்கள் முப்பத்துநாலு வருடகாலம் 'இந்துசாதனம்' ஆங்கில வெளியீட்டுக்கு (Hindu Organ) கௌரவ ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். கொழும்பில் தொடக்கப்பட்ட ஒரு பத்திரிகைக்குப் பெரும் சம்பளத்தில் இவரை ஆசிரியராக வரும்படி கேட்டபொழுதும், அதை மறுத்துவிட்டார். இவருடைய ஆசிரிய வாசகங்கள் விஷயங்களைச் சீர் தூக்கி மனிதரின் தரம் அறிந்து எழுதப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. மலையாளத்தோடு செய்துவரும் புகையிலை வியாபாரமே, யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைக்கு உயிர்நாடியாகவிருந்து வருகிறது. 1892-ம், 1910-ம் ஆண்டுகளில் இவ் வியாபாரத்துக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை நீக்கும் பெருமை திரு. சபாபதி அவர்களுக்கே உரியது. பின்னர் இவர் சட்டசபையிலிருந்த காலத்தில், பர்மா அரிசியைப்பற்றி இராசப்பிரதிநிதிக்கு (Viceroy) அனுப்பப்பட்ட தூதுக் கோஷ்டியில் இவர் ஒரு அங்கத்தவராயிருந்தார்.

**சுதந்திர இயக்கம்**

முதலாம் யுத்தத்தின்பின் கீழைத் தேசங்களிற் பலதுறைகளிலும் விழிப்பேற்பட்டது. இந்தியாவில் வங்காளப் பிரிவினை காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சி இலங்கையையும் தாக்கியது. 1915-ம் ஆண்டில் நடந்த கலகமும், அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் கையாண்ட முறைகளும், இலங்கை மக்களிடையில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியது. இவற்றின் பயனாக, இலங்கையில் சுதந்திர இயக்கம் ஏற்பட்டது. இந்த இயக்கத்துக்குத் தலைவராய் விளங்கியவர், திரு. பொ. குமாரசுவாமி, சேர் பொன். இராமநாதன் ஆகியவர்களின் இளைய

சகோதரரான சேர் பொ. அருணுசலம் அவர்களே. இவர்கள் கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையில் கல்விகற்று, இலங்கை 'சிவில் சேர்விஸ்' உத்தியோகத்தில் அமர்ந்து, அக்காலத்தில் அவ்வுத்தியோகத்தில் பெறக்கூடிய பெரும் பதவிகளையெல்லாம் பெற்றவர். உத்தியோகத்திலிருக்கும்பொழுது, அரசினர் சார்பாகச் சட்டநிரூபணசபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். அப்பொழுதுகூட வேதம், உபநிடதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள் எடுத்துக்காட்டி அரிய சொற்பொழிவுகள் செய்தார். அந்தக்காலத்தில் ஒருமுறை தேசாதிபதி உத்தரவுபெற்று அரசாங்கத்தார் கொண்டுவந்த பிரேரணைக்கு மாறுக வாக்களித்தார்.

உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்னர், தீவிரமாக அரசியல் வாழ்வில் ஈடுபட்டார். இவர் 1917-ம் ஆண்டில் இலங்கைத் தேசிய மகாசபையின் ஆதரவில் நிகழ்த்திய "எமது அரசியற் குறைகள்" என்னும் சொற்பொழிவே சுதந்திர இயக்கத்தின் சங்கநாதமாக விளங்கியது. 1918-ம் ஆண்டு இலங்கை மக்களுக்கு வெளியிட்ட செய்தியில், அரசியல் வாழ்க்கையில் மக்கள் கைக்கொள்ளவேண்டிய இலட்சியங்களைத் தெளிவாக விளக்கினர். இதில் அரசியற் சுதந்திரம் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமானதென்றும், இந்தியத் தலைவர்களான காந்தி, கோகலே முதலியவர்களை இலங்கை வாலிபர்கள் பின்பற்றவேண்டுமென்றுங் கூறினர். இவர் தொடர்ந்து செய்த முயற்சியின் பயனுகவே, 1919-ம் ஆண்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. காங்கிரசின் முதற் தலைவர் சேர் பொ. அருணுசலம் அவர்களே.

**1921-ம் ஆண்டு அரசியல் சீர்திருத்தமும் தமிழரும்**

1921-ம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த அரசியற் சீர்திருத்தத்தின் பயனுக, முதல்முதல் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் (Territorial Representation) வழங்கப்பட்டது. கொழும்பில் வசிக்கும் தமிழருக்கு ஒரு தொகுதி ஏற்படுத்துவதற்கு உடன்பட்டிருந்த சில சிங்களத் தலைவர் பின்பு இதை மறுத்தனர். இதனுல் சிங்களத் தலைவரில் தமிழர் வைத்திருந்த நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்பட்டது. காங்கிரசின் தந்தையாக விளங்கிய சேர் பொ. அருணுசலம் அதை விட்டு விலக நேரிட்டது. 1921-ம் ஆண்டில் ஏற்பட்ட பிணக்கு இன்றும் தீர்ந்தபாடில்லை. இச் சந்தர்ப்பத்தில் சிங்கள மக்கள் தாராளமாக இருந்திருந்தால் இந்த நிலைமை ஏற்படுவதைத் தடுத்திருக்கலாம்.

**பொருளாதார நிபுணர்**

நெடுங்காலமாகச் சட்டநிரூபணசபையிலும் சட்டநிறைவேற்றுச் சபையிலும் அங்கத்தவராயிருந்தவரும், மதுரைத் தமிழ்ச்சங்க அகராதியைத் தொகுத்த வைமன் கதிரைவேற்பிள்ளையின் மகனுமாகிய திரு. பாலசிங்கம் அவர்களின் சேவையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். அவரைப்போல் நாட்டுக்கு நலன் விளைக்குந் திட்டங்களைத் தயாரித்தவர் கிடையாது. உப்புநீர் நிறைந்த பல கடலேரிகளை (lagoons) நன்னீர்த் தடாகங்களாக மாற்றலாம் என்ற திட்டத்தை முதல்முதல் வெளியிட்டவர் இவரே. இத் திட்டம் இப்பொழுதுதான் யாழ்ப்பாணத்திற் சிறிய முறையில் கையாளப்பட்டுவருகிறது. இலங்கையில் ஆயுள்வேத வைத்தியத்துக்கு ஒரு இடம் இருக்குமேயானால் அது இவர்களின் தீரா உழைப்பின் பயனே. இலங்கையில் அரசினர் ஈட்டு வங்கி (State Mortgage Bank) முதலிய வங்கிகள் ஸ்தாபிப்பதற்குக் காரணமாகவிருந்தவரும் இவரே. இலங்கையின் இயற்கை வனப்பை உலகுக்கு வெளிப்படுத்தி உல்லாசப் பிரயாணிகளை இங்கு வரச் செய்யவேண்டுமென்று சட்டசபையில் வெளியிட்டுப் பிரசாரம் செய்தவரும் இவரே. தேசிய பாஷைகளில் அரசாங்க அலுவல்களை நடத்தவேண்டுமென்ற கருத்தை இவர்கள் 1931-ம் ஆண்டிலேயே வெளியிட்டுள்ளார்கள்.

**கிழக்கு மாகாணப் பிரதிநிதி**

இலங்கையில் தமிழ்மக்கள் பெரும்பாலும் வசிக்கும் பிரதேசங்கள் வடமாகாணமும் கிழக்கு மாகாணமுமே. இவற்றுள் கிழக்கு மாகாணம் நீர்வளம், நிலவளம் பொருந்திய பிரதேசம். இது சோழநாடு போன்று சோறுடையது. இப்படியிருந்தும் இம் மக்களின் பிரதிநிதிகள் 1921-ம் ஆண்டு தொடக்கமே சட்டசபையிலிருந்துவருகின்றனர். இவர்களின் பிரதிநிதிகளுள் திரு. ஈ. ஆர். தம்பிமுத்து என்பவர் விசேஷமாகக் குறிப்பிடப்படவேண்டியவர். இவர் கிழக்கு மாகாண மக்களின் குறைகளை நன்கறிந்திருந்தனர். மட்டக்களப்புத் தென்பகுதியையும், மட்டக்களப்பு வடபகுதியையும் இணைக்கும் கல்லடியிலுள்ள பெரும் பாலம் இவரின் முயற்சியினாலேயே இடப்பட்டது. இப் பாலம் இவருக்கு ஒரு ஞாபகச் சின்னமாக விளங்குகின்றது.

**தொழிலாளர் தோழர்**

இலங்கையின் பொருளாதாரச் சிறப்புக்குக் காரணமாகவிருப்பவை றப்பர், தேயிலை, தென்னைப் பொருட்களே. இவற்றுள் றப்பர்,

தேயிலை உற்பத்திக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர்கள் தென்னிந்திய தொழிலாளர்களே. இவர்கள் காடுகளை வெட்டி நிலங்களைப் பண் படுத்தி றப்பர், தேயிலைத் தோட்டங்களை உண்டாக்கினர். இலங்கை வாசிகளுள் இவர்களின் சேவைகளையும், இவர்கள் பட்ட கஷ்டங்களையும் உணர்ந்து இவர்களுக்காகப் பாடுபட்டவர் சேர் பொ. அருணாசலம் அவர்களே. தோட்ட முதலாளிகளின் உத்தரவின்றி வெளியேறும் அநேக இந்தியப் பெண்களும் சிறுவர்களும் அக்காலச் சட்டப்படி சிறைப்படுத்தப்பட்டனர். குடியேற்றநாட்டு மந்திரி முதலியோருக்கு விண்ணப்பஞ்செய்து இச்சட்டத்தை இவர் நீக்குவித்தார். சில காலத்துக்கு முன்பு தோட்ட முதலாளிகள் அனுமதியின்றி யாரும் தோட்டங்களுக்குட் போய்த் தொழிலாளரைச் சந்திக்க முடியாது. அக்காலத்திற் பல கஷ்டங்களுக்குள் தொழிலாளருக்காகப் பாடுபட்டவர் காலஞ்சென்ற தொழிலாளர் தோழர் திரு. நடேசையர் அவர்களாகும்.

**யாழ்ப்பாணம் வாலிபர் மகாநாடு**

இந்திய தேசிய இயக்கத்தாற் கவரப்பட்ட திருவாளர்கள் எஸ். நடேசன் (இப்பொழுது செனேற்றர் நடேசன்), எம். பாலசுந்தரம், எஸ். எச். பேரின்பநாயகம் முதலியோரால் மாணவர் மகாநாடு என்ற பெயரோடு 1924-ம் ஆண்டில் இச்சபை தாபிக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் பெறுதல், வகுப்புத் துவேஷத்தை ஒழித்தல், தீண்டாமையைப் போக்கல், தமிழ் மொழியை வளர்த்தல் முதலியனவாகும். 1927-ம் ஆண்டில் காந்தியடிகள் இலங்கைக்கு வருவதற்கு முக்கிய காரணராக விருந்தவர்கள் வாலிப மகாநாட்டாரே. 1929-ம் ஆண்டில் நடைபெற்ற மகாநாட்டுக்கு, தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் தலைமை வகித்தார். 1931-ம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த டொனமூர் திட்டத்தைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை இவர்களே ஆரம்பித்தனர். இந்தப் பகிஷ்கார இயக்கத்துக்கு, அக்காலத்தில் ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்தியாய யாழ்ப்பாணத்திற் செய்த பிரசங்கங்கள் உதவி புரிந்தன.

**டொனமூர் திட்டம்**

டொனமூர் திட்டம் நடைமுறையிலிருந்த பதினாறு வருடங்களும் (1931 — 1947) சிங்களத் தலைவர்கள் அத் திட்டத்திலுள்ள குறைகளை நீக்கி டொமினியன் அந்தஸ்துப் பெறுவதற்குத் தீவிர முயற்சிகள் எடுத்தனர். ஆனால் சிறுபான்மைக் கட்சியினர் தங்கள் நிலையைப்

பாதுகாக்க முயன்றனர். சிங்களத் தலைவர்களின் சில செயல்கள் சிறுபான்மைக் கட்சியினரின் அச்சத்தை அதிகரிக்கச் செய்தன. இக் காலத்திற்தான் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் சமபல பிரதிநிதித்துவம் (Balanced Representation) இருக்கவேண்டுமென்ற கொள்கை வலுப்பெற்றது. இதற்குத் தலைவராக விருந்தவர் இப்பொழுது மந்திரியாக விருக்கும் கனம் பொன்னம்பலம் அவர்களே. சிறுபான்மையினருக்கும் சிங்களத் தலைவர்களுக்குமிடையில் சமரசம் ஏற்படுத்தத் தகுதிவாய்ந்த சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி அரசாங்கசபைத் தலைவராயிருந்தபடியால், இத் துறையில் தீவிரமாக உழைக்க முடியவில்லை. இது இப்படி யிருந்தபோதிலும், அவர்கள் பத்து வருடகாலம் தமிழருடைய தலையணியாகிய தலைப்பாகையுடன் சபாநாயகராக வீற்றிருந்தது, தமிழர் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயமாகும். இக் காலத்தில் உள்நாட்டு மந்திரியாகவிருந்த சேர் அருணாசலம் மகாதேவா காலத்துக்குக் காலம் சிறுபான்மைக் கட்சியினருக்குக் கூறிய புத்திமதிகள் அப்போது பயன்தரவில்லை.

**சோல்பரித் திட்டம்**

இலங்கையின் அரசியல் நிலையை விசாரணைசெய்து, வேண்டிய ஆலோசனைகளைக் கூறுமாறு பிரித்தானிய அரசாங்கம் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஒரு விசாரணைச் சபையை 1944-ம் ஆண்டில் நியமித்தது. இச் சபை இலங்கைக்கு வந்து பல கட்சியினரையும் சந்தித்து தனது அறிக்கையை வெளியிட்டது. இதிற் பிரித்தானிய அரசியல்முறை (Cabinet Government) போன்ற ஒரு முறை இலங்கையில் அமைக்கப்பட வேண்டுமென்றும், உள்நாட்டு விஷயங்களில் இலங்கை வாசிகளுக்கு முழுச் சுதந்தரமிருக்கவேண்டு மென்றும், சிறுபான்மைக் கட்சியினரின் கோரிக்கையான சமபல பிரதிநிதித்துவ மென்னும் கொள்கையை ஏற்க முடியாதென்றும் விசாரணைச்சபையினர் கூறினர். இச் சபையின் ஆலோசனைகளைப் பிரித்தானிய அரசாங்கம் ஏற்று ஒரு வெள்ளையறிக்கையை வெளியிட்டது. இவ் வறிக்கை அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டபொழுது ஸ்ரீ சேனநாயகா சிறுபான்மைக் கட்சியினரைச் சிங்கள மக்களில் நம்பிக்கை வைக்கும்படி கேட்டுச் சிறந்ததோர் சொற்பொழிவாற்றினர். தமிழரைக் குறித்து ஸ்ரீ சேனநாயகா கூறியவை இங்கு குறிப்பிடத்தக்கவை: " பல நூற்றுண்டுகளாகச் சிங்களரும் தமிழரும் பரஸ்பர ஒற்றுமையுடன் வாழ்ந்துள்ளார்கள். அவர்களுடைய அரசர்கள் எம்மை ஆண்டுள்ளார்கள். எங்கள் அரசர்கள் அவர்களை ஆண்டுள்ளார்கள். ......... நாம் அவர்களுடைய (தமிழர்)

சிறந்த இயல்புகளை அறிவோம்; நாம் அவற்றை மதிக்கிறோம்; அச் சிறந்த இயல்புகள் இத்தீவின் நலத்துக்குத் தேவை. அவர்களை எங்களுடன் ஒத்துழைத்து உதவிபுரியுமாறு வேண்டுகின்றேன்." இச் சந்தர்ப்பத்தில் திரு. எஸ். நடேசன் சிங்களருக்கும் தமிழருக்கு மிடையில் பரஸ்பர ஒற்றுமை ஏற்படவேண்டிய அவசியத்தைக் குறித்து ஒரு சொற்பொழிவு செய்தார்.

1947-ம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் எதிர்க் கட்சியி லிருந்தபோதிலும் 1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக் கம் கனம் ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் அரசாங்கத்தோடு ஒத் துழைத்து வருகிறது. இதுவரையிலும் தமிழ்க் காங்கிரசிலிருந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இதன் பின்னர் தமிழ்க் காங்கிரசி லிருந்து விலகி, தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்துப் பிரசாரஞ் செய்து வருகிறார். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் பாரதி வாக்கைத் தமிழருக்கு ஞாபகப்படுத்தி இக் கட்டுரையை முடிப்பாம்.

# இலங்கை முஸ்லிம்களும் தமிழும்

திரு. எஸ். எம். கமால்தீன், பீ. ஏ. (சிலோன்)
ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு.

இலங்கை முஸ்லிம்கள் இத்தீவுடன் நெடுங்காலத் தொடர்புடையவராவர். இவர்களுடைய முன்னோர்கள் அரேபிய நாட்டிலிருந்து வர்த்தகத்தினிமித்தம் இங்கு வந்தமையும், பின்னர் இலங்கை முஸ்லிம்களுக்கும் தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட நெருங்கிய தொடர்பும், இலங்கையில் வர்த்தக நோக்கத்துடன் புகுந்த போர்த்துக்கீசர் ஒல்லாந்தர்களின் காலத்தில் முஸ்லிம்களுக்கும் இந்த ஐரோப்பியர்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டிகளும், இங்கெடுத்துக் கூறுவதற்கு மிகவும் நீண்ட விஷயங்களாகும். எனவே நாம் அவர்களுடைய மொழியையும் கலாச்சாரத்தையும்பற்றி ஓரளவு அறிந்து கொள்ளுவதற்கு ஏதுவான ஒரு சில விஷயங்களை மட்டும் இங்கு கூறுவோம்.

இன்று சோனகர்கள் என்று அழைக்கப்படும் முஸ்லிம்கள் பல நூற்றண்டுகளுக்கு முன்னர் இங்கு நேரடியாகவும் இந்தியாவினூடாகவும் வந்த அரேபியர்களின் சந்ததியினராவர். அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்து கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்தே இந்தியாவிற்கு வர்த்தக நிமித்தம் அந்நாட்டு மக்கள் வந்தனர். அவர்கள் இந்தியாவின் கரையோரங்களிற் குடியேறித் தென்னட்டுத் தமிழ்மக்களுடன் கலந்துவிட்டனர். தமிழ்நாட்டுப் பெண்களை விவாகஞ் செய்தனர். தமிழ் மொழியையே அவர்களுடைய மொழியாகக் கொண்டனர். தமிழ்ப்பண்பாடுகள் அவர்களிடம் நிரம்பின. ஆனல் அவர்களுடைய மதம் மாத்திரம் எவ்வித மாற்றமுமடையவில்லை. இஸ்லாத்தின் ஐக்கிய சக்தி அவர்களை ஒரு தனிச் சமுதாயமாகத் திகழச் செய்தது. இந்த மக்கள் சுமார் எட்டாவது நூற்றண்டில் இலங்கையில் வியாபாரத்தின் பொருட்டுக் குடியேறினர்கள். ஆனல் நாம் முன்பு கூறியதுபோல அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையே நேரடியான தொடர்பும் அரேபியர்களின் குடியேற்றமும் ஏற்பட்டதென்பதை எவராலும் மறுக்கமுடியாது.

இலங்கையின் தென்மேற்குக் கரையிலுள்ள வேருவிலையில்தான் முஸ்லிம்கள் முதலாவதாகக் குடியேறினர்கள். எட்டாவது நூற்றண்

டிலே அப்துல் பின்மர்வான் என்ற கலீபாவின் கொடுங்கோலாட்சியில் நின்றும் தப்பிவந்த அரேபியர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் குடியேறினார்களென்று கூறப்படுகிறது. ஸேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் என்பாரும் எட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் அரேபியர்கள் இலங்கை வந்ததாகக் கூறுகிறார். இபுனு பதூதா என்ற பிரசித்திபெற்ற அரேபியப் பிரயாணி கி. பி. 1344-ம் ஆண்டில் இலங்கை வந்தார். அக்காலத்தில் இங்கு வசித்த முஸ்லிம்களின் நடவடிக்கைகளைப்பற்றி இவர் தமது நூலிற் கூறுவதிலிருந்து இக்காலந் தொட்டே முஸ்லிம்கள் பெருந்தொகையாகக் குடியேறினர் என்று கொள்ளலாம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலே போத்துக்கீசர் இத்தீவிற்கு வந்து சேர்ந்தனர். வர்த்தக நோக்கத்துடன் வந்த இவர்கள் இங்கு ஏற்கனவே வந்து குடியேறியிருந்த முஸ்லிம்கள் நாட்டின் வியாபாரம் முழுவதையும் தம் கைவசப்படுத்தியிருக்கக் கண்டார்கள். இவர்கள் இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் புத்தளம், வேருவிலை, அளுத்காமம், காலி, வெலிகாமம் போன்ற ஊர்களிலே தங்கி வியாபாரம் நடத்தி வந்தனர். இவர்கள் இந்தியாவிலிருந்து அரிசி, துணி, எண்ணெய் முதலிய பொருட்களைத் தங்கள் கப்பல்களிலே இங்கு கொண்டுவருவார்கள். இலங்கையிலிருந்து பாக்கு, மிளகு போன்ற பொருட்களையும், இந்தியாவிலே மிகவும் விரும்பி வாங்கப்பட்ட யானைகளையும் இங்கிருந்து ஏற்றிச் செல்வார்கள். இந்தப் போக்குவரத்துக்களுக்கெல்லாம் புத்தளம் ஒரு முக்கிய துறைமுகமாக விளங்கியது. கண்டி அரசர்கள் தங்களுக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் இவர்கள் மூலமே பெற்றுவந்தனர். இது இந்தியாவுடன் இவர்கள் நடத்திவந்த வியாபாரமாகும். இதைவிட முக்கியமானது இவர்கள் ஐரோப்பாவுடன் நடத்திய வர்த்தகம். இவர்கள் இலங்கையிலிருந்து முத்துக்கள், இரத்தினங்கள், யானைத் தந்தங்கள் ஆகிய விலைமதிப்புள்ள பொருட்களை வாங்கிச் சென்று ஐரோப்பிய நாடுகளிலே மிகுந்த இலாபத்திற்கு விற்றுவந்தனர்.

இவ்விதமாக ஆரம்பித்த இவர்களுடைய வர்த்தகம், பிற்காலத்தில் போத்துக்கீசரினதும் ஒல்லாந்தரினதும் போட்டியினாற் பெரிதும் பாதிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இலங்கை முஸ்லிம்கள் இன்றுகாலம் வரை பெரும்பாலும் வியாபாரிகளாகவே இருந்து வருகின்றனர்.

முஸ்லிம்களென்னும் பெயர் ஒரு பொதுவான பெயராகும். அதாவது இஸ்லாத்தைப் பின்பற்றும் அனைவருக்கும் வழங்குவது இப்பெயர். இப்பெயர் எந்த ஒரு மொழியைப் பேசும் கூட்டத்தையோ அல்லது தனிப்பட்ட இனத்தையோ குறிப்பதன்று. எனவே, இலங்கை முஸ்லிம்களின் மொழியைப்பற்றியும், கலாச்சாரத்தைப்பற்றியும் பேசுமுன் இவர்களிடையே உள்ள பிரிவுகளைப்பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

இலங்கை முஸ்லிம்களுள்ளே இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. முதலாவது பிரிவு இலங்கைச் சோனகர்களாகும். இரண்டாவது பிரிவு மலாயர்களாகும். இன்னும் இங்கே இந்திய முஸ்லிம்களும் (போராக்கள், மேமன்கள், ஆப்கானியர், தென்இந்திய முஸ்லிம்கள்) இருக்கின்றனர்.

நாம் முதலாவது கூறிய பிரிவினர்தான் இங்கு வந்த அரேபியர்களின் சந்ததியினரும் தென்இந்தியாவிலிருந்து வந்து குடியேறினவர்களும் ஆகும். ஆனால், தென்னிந்தியருடன் இவர்களுக்கேற்பட்ட நெருங்கிய தொடர்பு இவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பெரிதும் பாதித்துவிட்டது. எனவே, இன்று நாம் எல்லாத்துறைகளிலும் இவ்விருதரத்தினருக்குமிடையே ஒருமைப்பாட்டைக் காண்கிறோம்.

மலாயாவிலிருந்தும், இந்தோனேஷியாவிலிருந்தும் இங்கு வந்தவர்கள்தான் மற்றைப் பிரிவினராகும். ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்தில் பெருந் தொகையான போர்வீரர்கள் அந்நாடுகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டனர். இவர்கள் இந்த நாட்டிற் குடிபதியாக இன்று இலங்கை முஸ்லிம்களில் ஒருபிரிவினராக இருந்து வருகின்றனர். இவர்களுக்கு 'மலாயர்' என்ற பெயர் வழங்கிவருகிறது.

இலங்கை முஸ்லிம்கள் மிகவும் சிறுபான்மைக் கட்சியினராவர். இலங்கையில் 1946 - ம் ஆண்டில் எடுக்கப்பட்ட சனசங்கியைப்படி இவர்களின் தொகை 4,36,556. இலங்கையின் மொத்த சனத்தொகையில் இவர்கள் தொகை 6·6 சத வீதமாகும். இவர்கள் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் பரந்து காணப்படுகின்றனர். இலங்கையின் எந்த ஒரு பெரும்பிரிவிலும் (டிஸ்திரிக்கிலும்) இவர்கள் பெரும் பான்மையினராயில்லை. இலங்கையின் எல்லா மாகாணங்களிலும் இவர்கள் சிறு சிறு கூட்டத்தினராகவே காணப்படுகின்றனர். மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய பெரும்பிரிவு (டிஸ்திரிக்கு)களில்

மாத்திரமே இவர்கள் தொகை ஓரளவிற்குக் கூடுதலாகக் காணப்படுகின்றது. இந்தப் பகுதிகளிற் கூட இவர்கள் தொகை மொத்த சனத்தொகையில் 100 க்கு 50 வீதமாகவாவது இல்லை. இந்த விபரங்களைக் கீழ்வரும் அட்டவணையிற் காணலாம் :—

சனத்தொகை **1946**

| பெரும் பிரிவு | | | முஸ்லிம்கள் தொகை | மொத்த சனத்தொகையில்முஸ்லிம்களின் சத விகிதம் |
|---|---|---|---|---|
| கொழும்பு | ... | ... | 74,326 * | 6·6 |
| களுத்துறை | ... | ... | 25,576 | 5·6 |
| கண்டி | ... | ... | 55,482 | 7·8 |
| மாத்தளை | ... | ... | 9,681 | 6 2 |
| நுவர எலியா | ... | ... | 5,740 | 2 2 |
| காலி | ... | ... | 14,258 | 3·1 |
| மாத்தறை | ... | ... | 9,217 | 2·6 |
| அம்பாந்தோட்டை | ... | ... | 3,971 | 2·7 |
| யாழ்ப்பாணம் | ... | ... | 5.786 | 1·4 |
| மன்னார் | ... | ... | 10,563 | 33·5 |
| வவுனியா | ... | ... | 2,265 | 9·3 |
| மட்டக்களப்பு | ... | ... | 85,958 | 42·3 |
| திரிகோணமலை | ... | ... | 23,800 | 31·3 |
| குருநாக்கல் | ... | ... | 21,159 | 4·4 |
| புத்தளம் | ... | ... | 13,914 | 32·3 |
| சலாபம் | ... | ... | 4,936 | 3·5 |
| அனுராதபுரம் | ... | ... | 15,301 | 11·0 |
| பதுளை | ... | ... | 13,085 | 3·5 |
| இரத்தினபுரி | ... | ... | 6,249 | 1·8 |
| கேகாலை | ... | ... | 15,548 | 3·9 |

இதிலிருந்து ஒரு முக்கியமான அரசியல் உண்மை வெளிப்படுகிறது. அதென்னவெனில், இந்த நாட்டின் அரசியலில் முஸ்லிம்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்குக் கிழக்கு மாகாணப் பகுதிகள் மாத்திரமே சந்தர்ப்பமளிக்கின்றன என்பதே. இலங்கை அரசியலில் முஸ்லிம்களின் குரல் இப்பகுதியிலிருந்தே கேட்கக்கூடியதா யிருக்கின்றது. எனவே, நாம், இலங்கை முஸ்லிம்களின் அரசியல் நிலை, மொழி, கலாச்

* கொழும்பு முனிசிப்பாலிட்டியிலுள்ளவர்கள் தொகை.

சாரம், எதிர்கால நிலை ஆகியவற்றைப் பற்றிப் பேசும்பொழுது இப்பகுதி மக்களுக்கு முக்கியத்துவமும் அவர்களுடைய உரிமைகளுக்கு மதிப்பும் கொடுக்கவேண்டியவர்களாகின்றோம்.

இலங்கை முஸ்லிம்களுள் பெரும்பாலோர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆனால் பண்டைக்காலந் தொட்டு வியாபாரஞ் செய்து வந்துள்ள இவர்கள் தற்காலத்திலும் அதே உயர்நிலையில் இல்லை. இதற்குக் காரணம் இவர்கள் இதர சமூகத்தினர்களுடன் போட்டியிட வேண்டியவர்களா யிருக்கின்றனர். மேலும் கல்வித்துறையில் இவர்கள் பின்னடைந்திருப்பதும் ஒரு முக்கிய காரணமாகும்.

இலங்கையில் ஆங்கில ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து ஆங்கில மொழிக்கு அரசாங்கத்திற் செல்வாக்கு ஏற்பட்டது. அரசாங்க உத்தியோகங்களுக்கு இம்மொழி அத்தியாவசியமாயிருந்தது. ஆனால் முஸ்லிம்கள் இம்மொழியின் தன்மையை அக்காலை உணரவில்லை. மேலும் ஆங்கிலக்கல்வி மதத்திற்கு முரணானது என்ற கொள்கையும் பரவியிருந்தது. இதனால் முஸ்லிம்கள் இந்த நாட்டின் அரசியலில் அநாதைகளாகிவிட நேர்ந்தது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் முஸ்லிம்கள் ஆங்கிலத்தைப் புறக்கணித்ததன் காரணமாய் உண்டான தீங்குகளை உணரலாயினர். இந்தியாவில் சேர் செய்யிது அஹ்மத்கான் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லிம்களிடையே புத்துணர்ச்சி யூட்டிவந்தார்கள். அவர்களே இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கும் வழிகாட்டியாயிருந்தார்கள். ஜனாப் எம். சி. சித்திலெப்பை, ஜனாப் ஏ. எம். வாப்புச்சி மரைக்கார் ஆகியோர்களினதும் இன்னும் பல ஊழியர்களினதும் முயற்சியால் அல்மதறஸதுல் சாஹிரா என்ற பாடசாலை கொழும்பில் 1891-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இன்று இலங்கை முஸ்லிம்களின் பிரதம கல்வி நிலையமான சாஹிராக் கல்லூரியாகத் திகழ்கின்றது.

இனி, இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியைப்பற்றிக் கவனிப்போம். இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை. எந்த ஒரு சமூகத்தினருக்கும் தமது தாய்மொழியைப்பற்றிய சந்தேகம் இருப்பதற்கிடமில்லை. ஆனால், இலங்கை முஸ்லிம்களைப் பற்றியவரையில் ஒருசிலர் மத்தியில் சந்தேகங் காணப்படுகிறது. இதற்குக் காரணம் சிங்களர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம்கள் சிங்களம், தமிழ் ஆகிய இரு

மொழிகளையும் பேசுகிறார்கள். இவர்களுக்குத் தமிழ் அவ்வளவு சாதாரணமாக வருவதில்லை. எனவே இம் மொழியை விட்டுச் சிங்களத்தைப் படிக்கலாமென்ற எண்ணம் சிலருக்கு ஏற்படுகிறது. இன்னும் அரபுத் தமிழென்று ஒன்று இருப்பதாகக் கருதுகிறவர்கள் அதனைப் பயில நினைக்கின்றனர். ஆனால் இவ்வெண்ணங்கள் அர்த்தமற்றவை யென்பதை உணர்வது கடினமன்று.

வடமாகாண, கிழக்குமாகாண இலங்கைச் சோனகர்கள் தூய்மையான தமிழையே பேசிவருகின்றனர். இவர்களிற் பெரும்பாலோருக்குத் தமிழைவிட வேறு மொழி தெரியாது. இவர்களுடைய உரிமைகளுக்கு விசேஷ மதிப்பளிக்க வேண்டுமென்பதை நாம் முன்பே விளக்கிக் கூறியுள்ளோம். இலங்கையின் இதர பகுதிகளில் வசிக்கும் சோனகர்கள் பெரும்பாலும் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் பேசக்கூடியவர்களா யிருப்பார்கள். ஆனால் தமிழ் பேச அறியாதவர்கள் இவர்களிடையே கிடையாது. மேலும் முஸ்லிம் பெண்கள் சிங்களத்தில் அதிகப் பரிச்சயமில்லாதிருப்பதும், அனைவரும் தம் வீடுகளில் தமிழை மாத்திரமே பேசுவதும் இங்கு கவனிக்கத்தக்க விஷயங்களாகும். சிங்களர் நிரம்ப வசிக்கும் கிராமங்களிலும்கூட முஸ்லிம்களின் வீடுகளில் தமிழ்மொழி மாறாது நிலவிவருகின்றது. ஆனால் அவர்கள் பேசும் மொழியில் சிங்களப்பதங்கள் வெகுவாகக் கலந்திருக்கும். உதாரணமாகக் காலிப் பகுதிகளில் உள்ள சோனகர்களின் பேச்சுக்கும் (இதைச் சோனகம் என்பர்) மட்டக்களப்புப் பகுதிகளில் உள்ளவர்களின் பேச்சுக்கு மிடையே மிகுந்த வித்தியாசமுண்டு. ஆனால் இந்த வித்தியாசத்தின் காரணமாக ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாமற் போவதில்லை.

அரபுத் தமிழ் என்று நாம் முன்னர் குறிப்பிட்டதைப் பற்றியும் ஒரு விளக்கம் இங்கு அவசியமாகின்றது. இதனை ஒரு தனிமொழியாக நாம் எவ்வாற்றானும் கொள்ளவேமுடியாது. இந்தமொழி அரபிகளாலோ அல்லது தமிழர்களாலோ புரிந்துகொள்ளக் கூடியதன்று. தமிழ் மொழியை அரபு எழுத்துக்களால் எழுதுவதே இந்த முறை. அரபு தெரியாத தமிழர்களுக்கு இதை வாசிக்க முடியாது. அரபிகள் இதை வாசிக்க முடிந்தபோதிலும் சொற்களின் கருத்தை அறிய முடியாது. மார்க்க சம்பந்தமான பல அரபுச் சொற்களைத் தமிழில் எழுதுவது சிரமமாகத் தோன்றியிருக்கவேண்டும். மேலும் அரபு எழுத்துக்களுக்கு முஸ்லிம்களிடையே கூடுதலான மதிப்பு மிருந்திருக்க வேண்டும். இவை

போன்ற காரணங்களுக்காகத்தான் தமிழை இவ்வாறு எழுதியிருக்க வேண்டும். ஆனால் இவ்வித அரபுத் தமிழில் தனிப்பட்ட இலக்கணமோ அல்லது சிறப்பான பௌதீக நூல்களோ கிடையா. ஆகவே, இதனை ஒரு தனி மொழியாக முஸ்லிம்கள் கொள்ளலாம் என்னும் கூற்று அறியாமையின் பாற்பட்டதாகும்.

இலங்கை மலாயர்கள் விஷயத்தில் ஒரு வித்தியாசம் உண்டு. இவர்களுக்குத் தனிப்பட்ட ஒரு தாய்மொழி யுண்டு. இவர்கள் தமது வீடுகளிலே மலாய் மொழியைப் பேசுகின்றனர். ஆனால் இம்மொழி இவர்களிடையே பேச்சளவில்தான் காணப்படுகின்றது. எழுத்து வடிவில் உபயோகப்படவில்லை. மேலும் இவர்களனைவரும் தமிழை நன்கு பேசக்கூடியவர்கள். இவர்கள் பள்ளிவாசல்களில் தமிழிலேயே 'குத்பா' பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. பள்ளிக்கூடங்களிலே தமிழைப் பயின்றும் வருகின்றனர். இவர்களுக்கும் இதர முஸ்லிம் களுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பின் காரணமாக இவர்கள் அனை வரும் தமிழுடனே சம்பந்தமுடையவர்களாகி விடுகின்றனர்.

இனி ஒரு சிலர் அபிப்பிராயப்படுவதுபோல் இலங்கை முஸ்லிம்கள் தமிழைவிட்டு வேறு ஒரு மொழியைப் பின்பற்றுவது சாத்தியமாகுமா என்பதைக் கவனிப்போம். அரபுமொழி, ஆங்கிலம், சிங்களம் ஆகிய வைகளுள் ஒன்றை எதிர்காலத்தில் நமது மொழியாகக் கொள்ளலாம் என்று சிலர் கூறக்கூடும். இது அசாத்திய மென்பது மிகவுந் தெளிவு. அரபுமொழியை அறிந்தவர்களையும் பேசுகிறவர்களையும் இன்று நாம் விரல்விட் டெண்ணிவிடலாம். அத்தகைய ஒரு மொழியை நாம் தாய் மொழியின் அளவிற்கு உயர்த்திவிடுதல் அசாத்தியமாகும். ஆனால் மார்க்க, கலாச்சார சம்பந்தமான காரியங்களுக்கு இம்மொழி இன்றி யமையாததாக இருத்தலின் முஸ்லிம் பாடசாலைகளில் அவசியம் இதனை ஒரு கட்டாய பாடமாக ஆக்கவேண்டும்.

அடுத்தபடியாக ஆங்கிலத்தை எடுத்துக்கொள்வோம். இன்றைய உலகில் இம்மொழியின் முக்கியத்துவத்தை எவரும் மறுக்கமுடியாது. மேலும் உயர்தரக் கல்விக்கு இம்மொழி அத்தியாவசியமாகும். எனி னும் இதனை நாம் எவ்வாற்றானும் தாய் மொழியின் அளவுக்கு ஏற்றுக் கொள்ளுதல் முடியாது. புதிய கல்வித்திட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று ஒரு சலுகை கொடுக்கப்பட்டது. ஆனால் இந்தச் சலுகையை நாம்

ஒதுக்கி விடவேண்டியது அவசியமாகும். ஏனெனில், நாட்டின் இதர சமூகத்தினர் தேசிய மொழிகளாகிய சிங்களம், தமிழ் ஆகியவைகளைப் பாடசாலைகளில் ஊக்கமாகப் பயின்றுவரும்போது, நாம் மாத்திரம் நாட்டின் அரசியலில் செல்வாக்கிழந்துவரும் ஆங்கிலத்தை மாத்திரம் படித்துவந்தோமானால் எதிர்காலத்தில் நமது சமூகம் மிகவும் சங்கடமான நிலையை எய்தும். எனவே நமது தாய்மொழியாம் தமிழை நாம் நமது ஆரம்பப் பாடசாலைகளில் துரிதமாகப் புகுத்தல் வேண்டும்.

சிங்கள மொழியை முஸ்லிம்களுள் ஒரு பகுதியினர்தானும் ஏற்றுக்கொள் வதற்கு நியாயமில்லை. முஸ்லிம்களுக்குப் புதிதான ஒரு மொழியை ஏற்று அந்தத் தாய்மொழியின் நிலைக்குக் கொண்டுவர நினைப்பதைவிடப் பெரிய ஆபத்துக் கிடையாது. இலங்கையின் மேற்குப் பகுதியிலுள்ள சிலர் சிங்களத்தைப் பயில நினைத்தபோதிலும் வடமாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம்கள் தங்கள் தமிழை ஒருக்காலும் விட்டுவிடப்போவதில்லை. எனவே, சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்குள் இரு மொழிப் பிரிவுகள் ஏற்படுவது விரும்பத்தக்க தன்று. மேலும் சிங்களத்தில் எவ்விதமான இஸ்லாமிய இலக்கியமும் கிடையாது.

எனவே, எல்லாவித அனுசரணைகளையும் உத்தேசித்துத் தமிழையே முஸ்லிம்கள் முயன்று விருத்திசெய்ய வேண்டுமென்பது தெளிவு. இன்று தமிழ் முஸ்லிம்களிடையே மிகுந்த சிறப்புடன் விளங்கிவரு கின்றது. முஸ்லிம்களின் பள்ளிகளிலே தொழுகைப் பிரசங்கங்கள் தமிழிலே செய்யப்படுகின்றன. கணக்கற்ற இஸ்லாமிய இலக்கிய நூல்களைத் தமிழ்நாட்டு முஸ்லிம் புலவர்கள் உதவியுள்ளார்கள். இவற்றை விவரிக்கப் புகுந்தால் விரியுமாதலின் ஒரு சில நூல்களின் பெயர்களை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன். உமறுப் புலவரின் சீறுப் புராணம், காசீம் புலவரின் திருப்புகழ், மஸ்தான் சாகிபின் பாடல்கள், முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், மதீனத் தந்தாதி, நாகை யந்தாதி, இராஜநாயகம் போன்றவைகள் சிறந்த இஸ்லாமிய இலக்கிய நூல்களாகும். ஜனாப் அ. க. அப்துல் ஹமீது பாகவி அவர்கள் திருக் குர்ஆனை மிகவும் அழகான முறையில் தமிழில் மொழிபெயர்த் துள்ளார்கள். தமிழிலுள்ள இஸ்லாமிய நூல்களுள்ளே நாம் இதனை மிகச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இன்னும் ஜனாப் பா. தாவூத்ஷா அவர்கள் எத்தனையோ சிறந்த இஸ்லாமிய நூல்களைத் தமிழுலகத் திற்கு உதவியுள்ளார்கள். தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள



சிகிரியா ஓவியம் [பக்கம் – 35]

உபயம்: அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி



பாறையில்......யானை உருவங்கள் [பக்கம் – 36]

உபயம்: அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி



மனித வடிவமும் குதிரைத் தலையும் [பக்கம் – 36]

உபயம்: அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி



சிவ தேவாலயம் – இல. 2 [பக்கம் – 36]

உபயம்: 'ஈழகேசரி', சுன்னாகம்

முஸ்லிம்களுக் கிடையே நெருங்கிய கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகின்றது இந்தத் தொடர்பு தமிழின்மூலமே பலப்பட்டு வருகிறது. இலங்கை முஸ்லிமகள் இந்த முக்கியமான கலாச்சார சம்பந்தத்தை இழப்பது விரும்பத்தக்கதன்று.

இனி, இலங்கை முஸ்லிம்களுக்கும் தமிழுக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பைச் சற்று விளக்குவோம். முஸ்லிம்கள் பெரும் பான்மையினராக வதியும் பகுதி கிழக்குமாகாணம் என்றேம். இந்தப் பகுதி மக்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர் கள். கடற்கரையோரத்தில் மீன்பிடித் தொழிலும் செய்கிறார்கள். இம் மக்கள் தூய்மையான தமிழ்மொழியையே பேசி வருகிறார்கள். இவர்களுடைய் பழக்கவழக்கங்கள் யாவும் தமிழ்நாட்டு மக்களின் தன்மை களைப்போன்றே யிருக்கும். இவர்களிடையே பல புலவர்களு மிருந்திருக் கிறார்கள். இந்நாட்டு மக்களின் நாவிலே கவித்துவம் குடிகொண் டிருக்கும். பொருட் செறிவான பாடல்களை இவர்கள் சர்வ சாதாரண மாகப் பாடுவார்கள். ஒருவரை யொருவர் விளையாட்டாகஏசிக்கொள் வதும் பாட்டிலேயே, பெண்களும் கூடப் பாடுவதில் சமர்த்தர்கள். இலக்கண வரம்பைப் பற்றி அவர்கள் நினைப்பதில்லை. நினைத்த மாத் திரத்தில் தங்கள் மனதில் தோன்றியவைகளைப் பொருள் நிரம்பிய பாடல்களாக வெளியிடுவார்கள். இந்த நாட்டுப் பாடல்களை மிகுந்த சிரத்தையுடன் பலர் சேகரித்து வருகிறார்கள். இவ்வரிய சேவைக்கு முஸ்லிம்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இலங்கையின் வடமாகாண மக்களும் தமிழ்மொழியைப் போற்றி வருகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர் யாவராயினும் தமிழ் அபிமானம் உடையவரே. இங்கும் பல முஸ்லிம் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். தென்னாட்டு முஸ்லிம் புலவர்களுக்கும் இப் பகு திப் புலவர்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு மிருந்துவந்திருக் கிறது. அ அசனா லெப்பை என்பவர் புகழ்ப்பாவணி என்னும் ஒரு சிறிய நூலை இயற்றியுள்ளார். இவர், தற்போதைய ஸாஹிராக் கல் லூரி அதிபர் ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் பெரிய தந்தைய ராகும். இவரது நண்பரான சுலைமான் லெப்பை என்பவரும் தமிழ்ப் புலமை வாய்ந்தவர். 1895-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலிருந்த முஸ் லிம் புலவர்கள் குலாம் காதிறு நாவலர் அவர்களின் காகைத் திரிபந் தாதியை அச்சிட்டு வெளியிட்டனர்.

புத்தளத்தைப் பற்றி முன்னர் ஒரு இடத்திற் குறிப்பிட்டோம். இந் நகரம் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு ஒரு முக்கிய தானமா யிருந்துவந்தது. இப் பகுதியிலும், மன்னூர்ப் பகுதியிலும் பல புலவர்களிருந்தனர். கற்பிட்டிப் பகுதியிலே குருடரான ஒரு புலவர் இருந்திருக்கிறூர். சந்தர்ப்பத்திற் கேற்ப இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். மன்னூரை அடுத்த எருக்கலம்பிட்டியில் பக்கீர் முஹியித்தீன் என்ற ஒரு புலவர் இருந்திருக்கிறூர். இவர் இஸ்லாமிய தத்துவங்களையும் நபிகள்நாயகத்தைப் பற்றியும் பாடிய பாட்டுக்கள் பல.

இனி, சிங்களம் மிகுந்து விளங்கும் பகுதிகளைப் பற்றிக் கூறுவோம். எவ்வளவு சிங்களவர் மிகுந்த பகுதியா யிருந்தபோதிலும் முஸ்லிம்கள் அத்தனை சிங்களவர்களுக்கு மத்தியிலும் தமிழைப் பாதுகாத்து வந்திருப்பது மிகவும் வியக்கத்தக்க விஷயமாகும். நீர்கொழும்புப் பகுதியை நாம் கவனித்தால் அங்கு முஸ்லிம் அல்லாத தமிழ் மக்கள் இன்று காலப்போக்கிற் சிங்களத்தை அதிகமாகப் பேசி வருகிறூர்கள். இவர்களிடையே தமிழ் அருகிப் போகவும் கூடும். ஆனுல் முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் தமிழ் அவர்கள் மத்தியில் மாருத இடம் பெற்றிருக்கிறது.

வேருவிளை, ஹம்பாந்தோட்டை, அளுத்காமம் போன்ற முஸ்லிம் நகரங்களில் தமிழ் சிறப்பாக வழங்கி வருகிறது. இப் பகுதிகளில் நடைபெறும் கந்தூரி முதலிய விழாக்களுக்குச் சென்ருல் அங்கெல்லாம் தமிழிலே அந்தந்த ஸ்தலங்களைப் பற்றிய பாடல்கள் இயற்றப்பட்டு யாவராலும் விரும்பிப் படிக்கப்படுவதை இன்றும் காணலாம். வேருவிளையிலே அலியார் மரிக்கார் என்ற ஒரு தமிழபிமானி இருந்திருக்கிறூர். இவர் சில பாடல்களும் இயற்றியுள்ளார். முன்கிரீன் மாலையென்ற ஒரு நூலையும் தமது முயற்சியால் அச்சிட்டுள்ளார்.

மாத்தறையில் காசீம் என்ற ஒரு தமிழன்பர் பலகாலமாகப் பாட்டுக்கள் புனைவதில் ஈடுபட்டுள்ளார். இதுபோன்ற உதாரணங்கள் பல கூறலாம். இவையனைத்தும் இலங்கை முஸ்லிம்களுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும் அவர்கள் எவ்வாறு தமிழைப் பேணி அதற்குத்தொண்டாற்றி வந்துள்ளார் என்பதையும் காட்டுகின்றன. இந்தத் தொடர்பை விருத்தி செய்வதே எமது நோக்கமா யிருக்கவேண்டும். இலங்கையின் அரசியல் மொழிகளாகத் தமிழையும் சிங்களத்தையும் ஆக்குவதற்கு முயற்சிகள் தற்போது நடந்துவருகின்றன. வெகு சீக்கிரத்தில் இம் மொழிகள் முக்கியத்துவம் பெறும் என்பது நிச்சயம்.

ஆனால், தமிழுக்கு அரசாங்கத்திற் போதிய கௌரவ மளிக்கப்படாமல் போய்விடக் கூடுமோ என்ற சந்தேகம் இருந்து வருகின்றது. தமிழைப் புறக்கணிப்பதற்காகச் செய்யப்படும் எவ்வித முயற்சியையும் தமிழ் மக்கள் கண்டிப்பாக எதிர்த்தே தீர்வார்கள். இலங்கை முஸ்லிம்களும் தங்கள் தாய்மொழியாம் தமிழைப் பாதுகாக்க நிச்சயமாகத் துணிவுடன் முன் வருவார்கள் என்று உறுதியாகக் கூறலாம்.

முஸ்லிம்கள் மத்தியில் தமிழை விருத்திசெய்ய எதிர்காலத்தில் சில முயற்சிகள் அவசியமாயிருக்கின்றன. இஸ்லாமிய இலக்கிய நூல்களைப் பாடசாலைகளிலே படித்துக் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்தல் வேண்டும். இஸ்லாமிய இலக்கிய நூல்களைக் கல்லூரிகளிற் படித்துக் கொடுப்பதற்கான உருவில் அமைத்து உதவவேண்டியது, இளம் முஸ்லிம் எழுத்தாளர்களின் கடமையாகும். தமிழிலுள்ள இலக்கிய நூல்கள் பல ஹிந்துக்களின் புராண சம்பந்தப்பட்டவைகளா யிருத்தலின் முஸ்லிம்களுக்கு இவைகளைப் புரிந்துகொள்வது கடினமாயிருப்பதுடன் அவைகளின் கருத்துக்கள் பல. அவர்களுடைய கலாச்சாரத்திலிருந்து வித்தியாசமுடையனவாயு மிருக்கின்றன. எனவே கூடுமானவரை முஸ்லிம் மாணவர்களுக்கு அவர்களுடைய கலாச்சாரத்துடன் சம்பந்தமான நூல்களையே படித்துக் கொடுக்கப்படவேண்டும். இன்னும், பாடசாலைகளில் தமிழ் வாசகப் புத்தகங்களும் அவசியம் அவர்களுக்கு ஏற்ற முறையில் அமைந்தவைகளாக இருத்தல் வேண்டும். இன்னும் தமிழ்ச் சங்கீதத்தை இவர்களிடையே வளர்ப்பதற்கான முயற்சிகள் செய்யப்படவேண்டும். இன்று அரசினரால் நடத்தப்படும் சீனியர் பரீட்சைக்குத் தமிழ் ஒரு கட்டாய பாடமாக இருக்கிறது. முஸ்லிம் மாணவர்களுக்கு இப் பாடத்தில் இதுகாறும் சலுகை காட்டப்பட்டு வந்தது. ஆனால் இந்தச் சலுகை இப்போது நீக்கப்படப் போகிறது. அவ்வாறு நீக்கப்படும்போது முக்கியமாக மேற்குப் பகுதியிலுள்ள முஸ்லிம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். இது மிகவும் சிறு பான்மையினரான முஸ்லிம்களுக்குப் பெரும் கஷ்டமாகும். எனவே நாட்டில் முன்னேற்ற மடைந்துள்ள இதர சமூகத்தினர் சற்றுத் தாராள மனப்பான்மையுடன் இவ் விஷயத்தில் நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். தமிழிலே பிற்போக்கான பகுதிகளிலுள்ளவர்களுக்குக் கூடுதலான வசதிகளை யளித்துத் தமிழ் மக்களின் கூட்டத்திலே அவர்களனைவரையுஞ் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதமான முயற்சிகள் செய்யப்படின் இலங்கை முஸ்லிம்களிடையே தமிழ் மிகவும் சிறப்பாக வளரும். இலங்கைத் தமிழ்மக்கள் கூட்டத்திலே அவர்களும் ஒரு பகுதியினராயிருந்து உற்சாகத்துடன் உழைத்துத் தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்வார்கள்.

# தமிழ்த் தூது

தமிழ் இலக்கியக் கழகத் தலைவர்
அறிஞர் தனிநாயக அடிகள், *M. A., M. Litt., S. T. D.*

தமிழ்மக்களுட் சிலரும் தமிழ்மக்கள் அல்லாதார் சிலரும் தத்தம் இயல்பிற்கு ஒவ்வும் வகையிலெல்லாம் தமிழிற்காக அரும்பணியாற்றி வருகின்றனர். வேற்றுமொழிகளுடனும், நாடுகளுடனும், மக்களுடனும் தொடர்புடைய தமிழர் தம் மொழி, நாடு, இனம் இவை மூன்றின் மாண்பை ஒப்பிட்டு அறிந்து அதனைப் பிறர்க்குக் கூற விரும்புவதில் யாதும் வியப்பின்று.

இத்தகைய தொண்டில் முதன்முதல் ஈடுபட்டவர்களுள் அந்தணரும் குறிஞ்சிப்பாட்டினை இயற்றி ஐந்திணை இலக்கணம் ஆரிய மன்னர்க்குப் புகட்டியவருமாகிய கபிலர் குறிப்பிடத்தக்கவராவர். நம் காலத்தில் வேற்று நாடுகளுக்கு ஒருவாறு தமிழின் பெருமையைக் காட்டியவர் ஈழநாட்டவரும், இந்தியக் கலைகளில் இணையற்ற தேர்ச்சி பெற்றவருமாகிய ஆனந்தக்குமாரசுவாமியாவர். இவரிருவருடைய காலத்துக்குள் இதே நோக்கத்துடன் பலர் உழைத்திருக்கின்றனர். இப் பலருடைய அறிவும் ஆற்றலும் படைத்தேனல்லேனாயினும், உலகச் செலவு செய்து தமிழ்க்கலைத் தூது நிகழ்த்த எனக்கும் வாய்ப்பு நேரிட்டதென்று பெரிதும் உவந்து அத்தொண்டினை மணமற்ற சிறுமலராங்கு தமிழன்னையின் துணையடியில் வைக்கின்றேன்.

நாட்டை விட்டுப் பெயர்ந்து ஏறக்குறைய ஈராண்டுகளாகிய பின் தமிழ்த் திருநாட்டை மீண்டும் என் கண்கள் பார்த்தன. இவ் ஈராண்டுகளில் யான் மலாயா, சீனம், ஜப்பான், வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, நடுஅபிரிக்கா, வடஅபிரிக்கா, இத்தாலி, சீனம், பலத்தீனு, எகிப்து இந் நாடுகளைக் கண்டுவந்தேன்.

தமிழைப் பொறுத்தவரை யானடைந்த பெரும் வியப்பு தமிழும், தமிழரும் உலகிற் பரவியிருக்கும் வகைகண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ்மொழிக்குச் செல்வாக்குண்டு. நடு அமெரிக்காவின் தீவுகளாகிய திரிநாடு, ஜமேக்கா, அட்லாண்டிக் தீவுகளாகிய மார்த்தீனிக், அபிரிக்காவின் பல பிரிவுகள், இன்னோரன்ன இடங்களுக்

குச் சென்ற தமிழர் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்துவருகின்றனர். ஆயினும் மலாயாவிற்குச் சென்றபொழுது யான் அடைந்தது போன்ற வியப்பு வேறு எவ்விடத்திலும் அடையவில்லை. ஆங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும்பகுதியினர். அங்குத் தமிழில் நாட்செய்தித்தாள்கள் நான்கு ஐந்து வெளியிடப்படுகின்றன. சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய பேரூர்களின் வானொலி நிலையங்கள் தமிழில் நாள்தோறும் ஒலிபரப்புகின்றன என்றறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். மேலும் யான் அங்குச் சென்றிருந்தக்கால் மலாயாவின் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவத் திட்டங்கள் வகுத்து வந்தனர். அப் பல்கலைக் கழகத்தில் தமிழிற்கும் ஒரு பேராசிரியக் கட்டில் நிறுவவேண்டுமென்று இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் முயன்றுவந்தது களிப்பிற்குக் காரணமாயிற்று.

தமிழ் ஒலிகள் ஊர்ஊராக உரையாடுதலில் வேறுபடுவது குறிக்கற்பாலது. மலையாள நாட்டின் எல்லையிலிருப்போர் மலையாளம் பேசுவதுபோல் தமிழ்ப் பேசுவர். சிங்கள நாட்டிலிருப்பவர் சிங்களத்தைப்போல் தமிழை உரைப்பர். இவ்வாறே மலாயாவில் சீனமொழியைப்போலும், அமெரிக்கத் தீவுகளில் ஆங்கிலத்தைப்போலும் தமிழை உரைத்து வருகின்றனர்.

தமிழன் தன்மொழியைக் காதலிப்பதுபோல் வேறெவரும் தம் மொழியைக் காதலிப்பதையோ, தமிழ்ப்புலவர் தம்மொழியைப் போற்றுவதுபோல் வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம்மொழியைப் போற்றுவதையோ கண்டிலேன். சேக்கிழாரை விரித்துப் பார்மின். தமிழ் எனும் சொல்லைத் தம் செய்யுளில் அமைக்கவேண்டுமெனின் அதற்கு அடையில்லாமல் எழுதப் பின்வாங்குவர். 'செந்தமிழ்,' 'இன்றமிழ்,' 'வண்டமிழ்,' 'தண்டமிழ்,' 'அருந்தமிழ்,' 'செழுந்தமிழ்,' 'தீந்தமிழ்,' 'உயர்தமிழ்,' 'கோதில்தமிழ்,' 'தேன்பொழியும் செந்தமிழ்,' என்றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர். இனி, தேவாரங்களைப் பாடினார் எனும் பொருளில் 'தமிழ் பாடியறைந்தார்,' 'தமிழ்மாலைகள் சாற்றினார்' என்று புலவர் கூறுவதை யாம் நினைந்து நினைந்து இன்புறும் கடப்பாடுடையேம். மேலும், திருமூலர் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்று கூறுவதுபோலெல்லாம் பிறமொழிப் புலவர் தம்மொழியைப் போற்றிக் கூறியதாகத் தெரியவில்லை. தமிழரின் இத் தமிழ்ப்பற்றுத்தான் மலாயாவின் தமிழர் என் விரிவுரைகளைக் கேட்க நெடுந்தொலைவிலிருந்து வருவதற்கும், யான் செய்த சிறு

தொண்டைப் பெரிதாய்ப் போற்றுதற்கும் காரணமாக இருந்தது. உலகிலிருக்கும் தமிழரனைவரும் தம்மொழிக்குத் தொண்டாற்ற ஒன்று கூடுவரேல் தமிழ்முரசு உலகெங்கும் பிறங்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

வேற்றுநாடுகளிற் குடியேறியிருக்கும் தமிழர் தமிழை ஒருவாறு மறப்பதற்கு அவர்கள் சூழ்நிலை காரணமாக இருப்பதால் அந்நாடுகளின் மொழிகள் வாயிலாகவும் தமிழின் புகழைப் பரப்புவது நம் கடமையாகும். வேற்றுநாடுகளுக்குத் தமிழ்நாட்டிலிருந்து கல்விப் பொருட்டோ, வணிகம்பொருட்டோ, அரசியற்பொருட்டோ செல்லும் தமிழரனைவரும் தமிழ் வரலாற்றையும் தமிழ் இலக்கியங்களையும் நன்குணர்ந்து செல்வாராயின் அவரும் தமிழ்க்கலைத் தூதைப் பெரிதும் நிகழ்த்துதற்கு வழிகளைக் காண்பர். சென்ற நூறு ஆண்டுகளில் மேல்நாட்டார் சிலர் தமிழைப்பற்றி ஒருவாறு அறிந்திருக்கின்றனர். ஆயினும் பண்டைப் பண்புபடைத்த சீனம், ஜப்பான் முதலிய நாடுகளிலும், தமிழ்க்கலைகளும் பண்பாடும் பரவியிருந்த சாவகம், புட்பகம் போன்ற நாடுகளிலும், தமிழினது புகழை எடுத்துக் கூறும் தொண்டை ஆற்றுவார் இலர். சென்ற பல ஆண்டுகளாக மேற்றிசை நோக்கியே நம் எண்ணங்களைச் செலுத்தி வந்திருக்கின்றனம். ஆசியப் பரப்பில் நடுநாட்டவராயிருக்கும் தமிழர் நாற்றிசையிலும் தம் எண்ணங்களைச் செலுத்தித் தமிழ்த்தொண்டாற்றுவது இன்றியமையாதது.

ஜப்பான்நாட்டில் பல பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அக்கழகங்களில் வடமொழிப் பயிற்சி சிறிதளவேலேனும் உளது. ஆயின் தமிழ்ப் பயிற்சியோ அறவே இல்லை. "திராவிடக் கலைகளைப்பற்றியும் பண்பாட்டைப்பற்றியும் யாம் அறிய விரும்புகின்றனம். ஜப்பானிய மொழியில் அவற்றைப்பற்றி அறியத்தக்க நூல்கள் எமக்குக் கிடைத்தில. ஆங்கிலத்திலும் மிகக் குறைவே" என்று ஜப்பானில் கீழ்த்திசைக் கலைமொழியாசிரியரொருவர் எனக்குக் கூறினர். ஆயினும் பல நூல்நிலையங்களில் போப் ஐயருடைய (Hand Book of Tamil Grammar) என்னும் துணை நூலினைக் கண்டேன்.

தோக்கியோப் பேரூரில் 'மாரூசென்' என்பது ஒரு புத்தக விற்பனைக் கடை. அங்குப் புதுநூல்களையும் பழையநூல்களையும் விலைக்குப் பெறலாம். அவர்களுடைய பழையநூல் விற்பனை நிலையத்திற்குச் சென்றக்கால் போப் ஐயருடைய பல நூல்களையும், தீட்சிதரின் சிலப்பதிகார மொழிபெயர்ப்பையுங் கண்டேன்.

செய்தித் தாள்களுக்கு ஜப்பானியநாட்டில் மிக்குயர்ந்த வளம். மைனிச்சி, அஸாஹி எனும் செய்தித் தாள்கள் ஒவ்வொன்றும் முப்பது நூறாயிரம் படிகளுக்குமேல் நாள்தோறும் செலவாகின்றன. இவற்றின் ஆசிரியர்கள் என்னைத் தம் செய்தித் தாள்கள் வழியாய் ஜப்பானிய மக்களுக்கு நற்சொற்கள் சில கூறுமாறு வேண்டினர். அப்பொழுது "மேற்றிசை கீழ்த்திசை வேற்றுமைகள் ஒழிந்து, உலகமாந்தர் தமிழ்ப்புலவரின் 'யாதும் ஊரே, யாவருங் கேளிர்' எனும் பரந்த 'ஒன்றே உலகம்' எனும் மனப்பான்மையை வளர்க்க வேண்டு" மென்றுங் கூறினேன். இனி, இவ்வாறே உலகின் வேறு பல இடங்களிலும் என் நற்சொல்லையும் கையெழுத்தையும் (Autograph) விரும்பியவர்க்கும், விருந்தினரின் நூல்களிலும் (Visitors Book) சங்கப்புலவரின் இவ்வழகிய அடியினைத் தமிழ் எழுத்தில் பொறித்து, ஒத்த மொழிபெயர்ப்பையும் கேட்பார் மொழியில் வரைந்தனன். ஆங்கிலத்திலும், ஸ்பானிய மொழியிலும் இனிதெனெ ஒலித்தன அச்சொற்கள் :

"Every Country is my Country
Every man is my kinsman."

"Todos los Pais son mi pais
Todos los hombres son mis hermanos."

பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழைப்பற்றிய ஆங்கில நூல்களின் இன்மையை யறிந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் என் வேண்டுகோளுக்கு இசைந்து ஜப்பானிய பல்கலைக் கழகங்களுக்குப் பல நூல்களை நன்கொடையாக அளித்தார். இவ்வாறு நன்கொடையாக நூல்களை உலகெங்கும் அனுப்பித் தமிழின் உரிமைகளை நிலைநாட்டவும் கூடும்.

யான் தமிழ்நாட்டைவிட்டு தோக்கியோவை அடைந்து இரண்டு கிழமைகளாயினபின் நண்பரொருவர் என்னை விருந்துக்கு அழைத்தார். அவ்விருந்தில் எனக்குப் பெருமகிழ்வூட்ட எண்ணி ஜப்பானிய உணவை வழங்காது தமிழ் உணவாகிய சோறும் கறியும் வழங்கினார். உண்ணும்பொழுது அவர் தன் வானொலிப் பெட்டியை அணுகி அதனை இயக்கினார். உடனே புது டில்லியிலிருந்து தமிழ்ப்பாட்டுக் கேட்டது. இவ்வளவு தொலைவிலும் நாவுக்கும் செவிக்கும் தமிழ் விருந்து கிடைத்ததே என எண்ணி மகிழ்ந்தேன். ஆயினும் புது டில்லியிலிருந்துவந்த தமிழ்ச் செய்தியும், இசையும் வடமொழி ஒலியுடைய

தாகவே இருந்தன. தமிழில் இல்லாத ஒலிகளையும், தேற்றங்களையும் இந்திய வானொலி நிலையத்திலிருந்து இடைவிடாது பரப்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் ஒலி பரப்பு தமிழ் ஒலியுடையதாகவே அமையுமாறு தமிழர் கடைப்பிடியாய் நிற்றல் நலமாகும்.

ஜப்பானிய மொழி திராவிட மொழிகளுடன் தொடர்புடைய மொழியன்று. ஆயினும், தமிழைப்போல் ஒட்டுநிலை வகுப்பினைச் சார்ந்தது. ஜப்பானிய செய்யுட்களில் இறைச்சிபோன்ற சில பண்புகள் உள. நம் சங்க இலக்கிய அகப்பாடல்களின் உரையாசிரியர் அப்பாடல்களுக்குக் கொளு எழுதியிருப்பதுபோல ஜப்பானியப் பாடல்களுக்கும் அந்நாட்டுப் புலவர் கொளு எழுதியுள்ளனர். சிறப்பாக, ஜப்பானிய இலக்கியத்தில் 'தங்கா' எனப்படும் செய்யுள் முப்பத்தோர் அசைகளைப் பேரெல்லையாகக்கொண்டு நம் குறுந்தொகைச் செய்யுட்களைப்போல் கருத்திலும் கொளுவிலும் விளங்குகின்றது.

ஜப்பானியர் இயற்கையின் எழிலில் பெரிதும் ஈடுபட்டு வளர்பவர். மலர்களைச் செப்பில் ஒழுங்குபடுத்தி வைப்பதில் அவர்கள் தம் பெண்மணிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளித்து வருகின்றனர். ஆயினும் ஹாவாய்த் தீவுகளில் மலர்களையும் மாலைகளையும் இன்னும் பெரிதாய்ப் பேணுகின்றனர். ஹாவாய்த் தீவுகளுக்கு யான் சென்ற பொழுது சங்க இலக்கிய காலத்தின் நினைவு என்னை அறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில், அங்குத் துறைமுகத்திற்கு வந்த மக்களனைவரும் கண்ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்தனர். விருந்தாக வந்தவர்க்கு மாலைகளைச் சூடினர். வழியனுப்புவோர்க்கும் மாலைகளைச் சூடி விடைபெற்றனர், பாடினர். 'அலோஹா' எனும் ஹாவாய் இசையினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். இப் பெண்டிரும், ஆடவரும் சங்ககாலத் தமிழ்மக்களைப் போல் எனக்குத் தோன்றினர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சி யின்று.

ஹாவாய்த் தீவில் விண்ணும் மண்ணும் எழில் படைத்திருக்கின்றன. தெளிவான நீலவானம். நிலத்தைச் சூழ்ந்த பசுமையான ஒலி கடல்நீர், பறவைகள், பூக்கள், மரஞ்செடிகள் இவை யாவும் யான் கண்ட வேறு ஊர்களில் இல்லா நிறத்தையும், மணத்தையும் படைத்தனவாய் இருந்தன. என் உலகச் செலவில் யான் கண்ட நாடுகளில் ஹாவாய்த் தீவுகளே எழிலிற் சிறந்தவை. இங்குள்ள வெப்ப தட்ப நிலைகள் அஞ்சத்தக்கனவல்ல. என்றும் உடல்நலத்துக்கு உறுதுணையானவையே.

பசிபிக் பெருங்கடலின் நடுவிலிருக்கும் இத் தீவுகள் கீழ்த்திசை நாடுகளையும் மேற்றிசை நாடுகளையும் இணைக்கும் பாலமாய் விளங்குகின்றன. ஹாவாய்த் தீவில் யான் தங்கியபோது அங்குக் கீழ்த்திசை மேற்றிசைத் தத்துவப் பேரறிஞர் மாநாடு நிகழ்ந்தது. இத்தகைய பேரவையைக் கூட்டுவதற்கு இதைவிடப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பது அரிது. ஹாவாய்த் தீவுகளிலும், பொதுவாகப் பசிபிக் பெருங்கடலின் தீவுகளிலும் நம் சங்ககாலப் பழக்க வழக்கங்களிற் சில இடம்பெறுவதாகத் தோன்றுகின்றன. மலர்களை அகவொழுக்கத்திற்கும் புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையாண்டு வருகின்றனர். அந் நாட்டவர் முற்காலத்தில் பெரும்பாலும் இந்திய நாடுகளுடன் தொடர்புடையவராகவே இருந்திருப்பர் போலும். இவர்களின் வரலாற்றை மேலும் அறிய விரும்புபவர் ஆசிரியர் பீற்றர் பக் (Peter Buck) என்பவர் எழுதிய "Vikings of the Sunrise" என்னும் நூலைப் படித்து அறிக.

ஹாவாய்த் தீவில் வாட்டுமல் எனும் இந்திய வணிகர் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார். அவர் சிந்துமாகாணத்திலுள்ள ஹைதராபாத் எனும் ஊரவர். ஹாவாயில் பெரும் செல்வம் படைத்த வணிகராக விளங்குகின்றனர். அவர் அமெரிக்கப் பெண்மணியை மணம் செய்தனர். இம் மணத்தால் நிகழ்ந்த இந்திய—அமெரிக்க உறவின் பயனாக இவரிருவரும் தம் செல்வத்தின் ஒரு பகுதியை முதற் பணமாக நிறுவி, இந்தியாவில் அமெரிக்கக் கலைகளைப்பற்றியும், அமெரிக்காவில் இந்தியக் கலைகளைப்பற்றியும் ஆசிரியர் வழியாக அறிவு பரப்பிவருகின்றனர். இத் தொண்டிற்கு அவர் ஒதுக்கிய முதல் பதினைந்து நூறாயிரம் வெண்பொற்காசுகள் (15 லட்சம் ரூபாய்). இவ்வாறு தமிழ்ச் செல்வரனைவரும் முதல் திரட்டி தமிழ்த்தூது நிகழ்த்துவாராயின் நம் கலைகள் பாரெங்கும் பரவுவதற்கு வழி காண்பர்.

ஹாவாய்த் தீவுகளை ஐக்கிய அமெரிக்காவின் வாயில் என்று கூறுவர். இத் தீவுகளிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் மேற்குக் கரை இரண்டாயிரம் கல் தொலைவிலிருக்கின்றது. எனினும், ஹாவாய்த் தீவினர் அதனை அக்கரை (Mainland) என்று அழைக்கின்றனர். நண்பகலில் வானூர்தி ஏறினால் அன்று மாலை சன்பிரான்சிஸ்கோ எனும் பேரூர்க்குப் போய்ச் சேரலாம். ஐக்கிய அமெரிக்காவிலிருப்பவர் பிற நாடுகளைப்பற்றியும், பிற மக்களைப்பற்றியும், பிற இலக்கியங்களைப்பற்றியும் அறிய அவா உடையவர். அவர்களுடைய பல்கலைக் கழகங்களிலும்,

கல்லூரிகளிலும், கூட்டங்களிலும், வேற்றுநாட்டுச் சொற்பொழிவாளரை அழைப்பது பெரு வழக்காம். சொற்பொழிவுகள் கேட்பதிலும், விருந்துகளுடன் கூட்டங்களைக் கூட்டுவதிலும், விருந்தோடு விரிவுரைகள் நிகழ்த்துவதிலும் ஐக்கிய அமெரிக்கா பிறநாடுகளைவிடத் தேர்ச்சி பெற்றது. ஆதலால் ஐக்கிய அமெரிக்காவில் ஓராண்டில் யான் தமிழைப்பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது பெரும் வியப்பன்று. பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கிழமைக்கு ஒருமுறை மாணவர் பொதுக் கூட்டம் (Convocation) கூட்டி ஆசிரியரையும் பேரறிஞரையும் வரவழைத்து விரிவுரைகள் நிகழ்த்துவிப்பர். அங்ஙனம் அழைக்கப்படுபவர்க்கு இருநூறு அல்லது முந்நூறு வெண் பொற்காசுகளைச் சம்பளமாகக் கொடுப்பர். அங்குச் சொல்வன்மையுடையவர் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலேயே தம் வாழ்நாட்களைக் கடத்தலாம். இப் பல்வேறு கழகங்களுக்குச் சொற்பொழிவாளரை அனுப்ப இதற்கென வணிகக் குழுக்கள் (Agencies) இருக்கின்றன.

இனி, தமிழ்த் தொண்டாற்றுதற்கு அமெரிக்க வானொலி நிலையங்களும் எனக்குப் பெருந்துணையாக இருந்தன. ஒவ்வொரு பெரிய நகரிலும் இரண்டு மூன்று வானொலி நிலையங்கள் உண்டு. அங்கு என்னை அழைத்துப் பேட்டி வழியாகப் பத்துப் பதினைந்து வினாடிகள் என்னைப் பற்றியும், தமிழ் நாட்டைப்பற்றியும், தமிழ்க் கலைகளைப்பற்றியும் இந்திய அரசியலமைப்பைப்பற்றியும் வினவினர். ஒளிக் காட்சி (Television) வழியாகவும் என்னை மக்களுக்குக் காட்டினர். அயலாரொருவர் ஓர் ஊருக்குச் சென்றால் அவ்வூர்ச் செய்தித்தாள் நிருபர் அவரைத் தேடிப் பிடித்துத் தம் செய்தித் தாளுக்கு வேண்டிய பொருள்பற்றிக் கேட்டெழுதுவதில் மிக்க ஆர்வம் காட்டுவர். இவ்வாறு விரிவுரை வாயிலாகவும் வானொலி, செய்தித்தாள் வழியாகவும், தமிழ்த்தூது நிகழ்த்துவது அமெரிக்காவில் எளிதாகும்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழைப்பற்றியும், தென்னாட்டைப்பற்றியும் அறிந்தவர்கள் ஒரு சிலரே. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பிக்க வல்ல ஆசிரியரொருவரைப் பெற முயன்றனர். ஆயினும் அவர்கள் ஒருவரைக் கிடைக்கப் பெற்றாரோ, பெற்றிலரோ யான் அறியேன். நியூ யார்க்கில் இருக்கும் மொழிப் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் (Berlitz School of Languages) என்னை ஆசிரியராக இருக்கும்படி கேட்டனர். சில பல்கலைக் கழகங்களில்

தொடர்ந்து மூன்று திங்கள்களாகப் பாடம் நடத்த அழைத்தனர். எனக்குப் பல ஊர்களில் விரிவுரை நிகழ்த்துவதுடன் ஓரிடத்தில் கற்றுக்கொடுப்பது அரிதாதலின் யான் உடன்படவில்லை. கொலம்பியா, ஹாவார்டு, கலிபோர்னியா போன்ற பல்கலைக் கழகங்களில் கீழ்த்திசை நாடுகளைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி நடந்துவருகிறது. ஆயினும் தமிழைப்பற்றிய ஆராய்ச்சி மிகக் குறைவேயாம். ஸ்டான்போர்டு (Stanford) பல்கலைக் கழகத்தில் இந்தியக் கலைகளைப்பற்றி விரிவுரை நிகழ்த்தும் ஆசிரியரொருவர்க்கு P. T. ஸ்ரீநிவாச ஐயங்கார் ஆங்கிலத்தில் எழுதிய தமிழர் வரலாற்றைக் கொடுத்தேன். அவர் அந்நூல் தமக்குப் புதியதோர் உலகைக் காட்டியதாகப் பேருவகையுடன் கூறினர். மொழிநூலைக் கற்ற சிலர் திராவிட மொழிகளின் தனித் தன்மையை ஒருவாறு உணர்ந்திருந்தனர். ஆயினும் இந்திய மொழிகளென்றால் சமஸ்கிருதம் என்றும், இந்தியக் கலைகளென்றால் வடகலைகளென்றும், இந்திய நாடென்றால் சிந்து கங்கைப் பெரும் வெளியென்றும், இந்தியப் பேரூர்களென்றால் பம்பாய், டில்லி, கல்கத்தா என்றும் நினைக்குமளவுக்கு இந்தியாவின் வடபிரிவின் பெருமையே உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இந்நாடுகளில் யான் ஆற்றிய விரிவுரைகளில் பெரும்பாலும் தமிழைப்பற்றிய சில பொதுக் குறிப்புகளே அமைந்துள்ளன. தமிழைப்பற்றி யாதேனும் அறியார்க்கு ஆராய்ச்சியுரை நிகழ்த்துதற்கு இடமின்று. பல்வேறு கழகங்களிலும் ஊர்களிலும் வெவ்வேறு குழுவினர்க்கு உரை நிகழ்த்தியதால் ஏறக்குறைய நான்கு ஐந்து விரிவுரைகளையும் அதே கருத்துக்களையும் மீண்டும் மீண்டும் கூறவேண்டியதாயிற்று. அமெரிக்கா இற்றைஞான்று தோன்றிய நாடு. இன்னும் இளமை நிலையில் இருக்கின்றது. நூறாண்டுகள் இருநூறாண்டுகள் படைத்த இடங்கள் அல்லது பொருட்களென்றால் அமெரிக்கருக்கு மிகப் பழைய பொருட்களாகவும், இடங்களாகவும் தோன்றுவன. ஆதலால் அவர்கட்குத் தமிழர் பழைமையையும், தமிழரின் பண்டை வணிகத்தையும் யவன உரோமருடன் தமிழ்நாட்டு நட்பையும் கூறிய போது பெரிதும் வியப்பு உண்டாயிற்று. அவர்களுட் பெரும்பாலார் இந்திய—இலங்கையின் வறுமையைப்பற்றியும், உடல் நலம் குன்றிய மக்களைப்பற்றியும், நோயுற்ற ஊர்களைப்பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். ஆயினும் தமிழ்நாட்டின் கலைகளை, தமிழ் இலக்கியத்தின் நிதிப் பெருக்கை, தமிழ்மொழியின் சிறப்பு இயல்பை, பழந் தமிழ்க் காதற் பாக்களை, பக்திமாலைகளைப் பற்றிக் கேள்விப்பட்டவரல்லர்.

அவர்கட்குத் தமிழ் இலக்கியத்திலிருந்து யான் மொழிபெயர்ப்புடன் கூறிய சில பகுதிகள் இவை:

திருக்குறளில், "அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு."

என்ற குறட்பாவை விவிலிய நூலில் வரும் "நானே அகரமாயிருக்கின்றேன்" என்பதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படி கேட்டேன். மேலும் "யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல."

"தீயினுட் டெறனீ பூவினு ணாற்றநீ
கல்லினுண் மணியுநீ சொல்லினுள் வாய்மையுநீ"

என்ற பரிபாடற் பகுதிகளை இசையுடன் உரைத்து விளக்கினேன். இனி, தமிழ் மொழியின் வியத்தகும் இயல்புகளையும், தமிழரின் இயற்கை ஈடுபாட்டினையும், ஐந்திணை இலக்கணத்தையும், மலர்மாலைகளை நம்முன்னோர் கையாண்ட முறைகளையும் எடுத்துக் கூறினேன். தமிழன்னையின் எழில் வடிவத்தைப்பற்றி இன்னும் எனக்கு அமெரிக்கர் ஓலைகள் விடுத்துத் தெளிந்துகொள்கின்றனர்.

தமிழைப்பற்றி மேடை உரைகளை ஆங்கிலத்தில் நடாத்திய எனக்குத் தமிழில் உரையாடுவதற்கோ வாய்ப்புக் கிடைத்ததே இல்லை. வானொலிப் பேட்டிகளில் யாதேனும் தமிழிற் சொல்லும்படி கேட்டால், பாரதியாரின் "செந்தமிழ்நாடு", "யாமறிந்த மொழிகளிலே" என்ற தலைப்புப் பெற்ற செய்யுட்களில் ஒன்றைக் கூறுவேன். பன்முறை பேட்டியின் பதிவை (Recording) நானே தமிழொலி கேட்பதற்காக மீண்டும் ஓர்ந்துகேட் டின்புறுவேன்.

தேநீர் விருந்துகளிலும் பிற நண்பர் கூட்டங்களிலும் என்னைத் தமிழிற் பாடக் கேட்கும்பொழுது தமிழ் இசைப்பயிற்சி மிக்கற்ற யான் "தமிழ்மணம் கமழவேண்டும்", "வெண்ணிலாவும் வானும் போலே" என்ற பாட்டுகளைப் பாடுவேன். செந்தமிழ் நாட்டைக் கும்மியாய்ப் பாட மீண்டும் மீண்டும் கேட்பர். நான் பாடக் கை தட்டித் தாளம் போடுவர். தமிழிசை அறியார்மாட்டுத் திடமுடன் பாடுவது எளிதெனை அனுபவத்தால் அறிந்துளேன். அமெரிக்காவில் யான் கண்ட தமிழர் ஒரு சிலரே. ஆயினும் யான் அமெரிக்காவில் கண்ட தமிழ்ப் பற்றுடைய தமிழர்களுள் நூற்கூட இயக்கத்தின் தலைவராகிய திருவாளர் அரங்கநாதனும், தமிழிற் பல புத்தகங்கள் இயற்றிய ருக்மணி அம்மையாரும் குறிப்பிடத்தக்கவராவர். இவர் இருவரும் என்னைப்போல் உலகில் தமிழ்த்தூது நிகழ்த்தும் இன்றியமையாத்

தன்மையை நன்குணர்ந்தோர். ருக்மணி அம்மையார் இந்தியக்கலைகளைப் பற்றிப் பல அறிவுரைகள் அமெரிக்காவெங்கும் நடாத்திவருகின்றனர்.

பிற நாட்டில் வைகுங்கால் சிறிதேனும் தமிழ்மணங் கமழ்ந்தால், யாம் மட்டற்ற மகிழ்ச்சி எய்துவது இயல்பன்றோ. ஒருகால் லாகுவாடியா (Laguardia) வானூர்தி நிலையத்தில் ஒருவர் என் முகவெட்டைக் கண்டதும், என்னை அணுகி "நீவிர் தமிழ் நாட்டவரா?" என்று வினவினர். அவர் கேள்வி என் செவிக்குத் தேனாயிருந்தது. கிற்றோ எனும் எக்குவடோரின் தலைநகரின்கண்ணுள்ள அரசியற் கலைச்சாலையில் எனது சொற்பொழிவு முடிந்ததும் ஒருவர் ஓடிவந்து, தமிழில் விவிலியநூலைக் காட்டி "உங்கள் நாகரிகத்தைப்பற்றிக் கேள்வியுற்றே இந்நூலை வருவித்தேன். இனிமேற் தமிழ் பயின்று பைபிளைத் தமிழிற் படிக்கப்போகின்றேன்" என்றார். வேறோர் இடத்தில், திருத்தொண்டாற்றும் ஆங்கிலக் கன்னியரொருவர் "வணக்கம் அடிகாள், நீங்கள் எந்த ஊர்?" என மழலைத் தமிழிற் கேட்டார். இவர் முன்னொருகாலம் நாகர்கோவில் மடத்திலிருந்ததாகவும், இப்பொழுது மனிலாவில் இயேசுபணி செய்வதாகவும், அங்குகூடத் தமிழை இன்னும் பயின்று வருவதாகவும் அறிந்தேன். வேறொரு நாள் ஐக்கிய நாட்டுப் பேரவையிலிருக்கும் தூதரின் கூடத்திற்கு (delegates-lounge) சென்றபொழுது தமிழ்நாட்டுத் தமிழ்ச் செய்தித் தாள்கள் சில அங்கிருக்கக் கண்டு அவற்றை விரைவாகத் திறந்து படித்தேன். என் கண்கள் முதன்முதல் பார்த்த கட்டுரை இக்காலப் பதிப்பாசிரியராம் சாமிநாத ஐயரின் நினைவுநாளைப் பற்றியதாயிருந்தது. நியூ யார்க்கில், ஐக்கிய நாட்டுப் பேரவைத் தூதர் கூட்டத்தில் 'சுதேசமித்திரன்' செய்தித்தாளிலிருந்து, சாமிநாத ஐயரின் சங்கநூற் பதிப்புகளைப் பற்றிப் படிக்கிறதென்றால் தமிழனின் உள்ளம் இறும்பூதினை எய்தாது நிற்பது எங்ஙனம்?

நியு யார்க்கிலும், லொஸ்அஞ்சலுஸிலும், சன்பிரான்சிஸ்கோவிலும் இந்திய உணவுச்சாலைகள் உள. நியு யார்க்கில் இருப்பவை நான்கு. அவற்றின் பெயர்: Rajah, Prince, East India Curry Shop, Indo-Ceylon Inn. இங்கு இவர்கள் பரிமாறும் கறிகள் பல. இவற்றின் உணவு நிரலில் ( menu ) கண்டி சம்பல், சிங்கள மிளகு தண்ணீர், சென்னை கறியும் சோறும், தமிழ் இனிப்பு என்றெல்லாம் விளம்பரம் செய்திருக்கின்றனர். இந்தியா உலகிற் கீந்த நலங்களில் கறியே சிறந்ததென்று ஓர் ஆசிரியர் இடக்காகச் செப்பினாராயினும் ஒரு நாட்டவரின் நாகரிகத்தை அறிவதற்கு அவரின் உணவும் ஒரு

வாயிலாவது உண்மை. என் அமெரிக்க நண்பரோடு உரையாட விரும்பும் போதெல்லாம் அவரை இவ் இந்திய உணவுச்சாலைகளுக்கு என் விருந்தாக அழைப்பேன். அமெரிக்கரைச் செவிக்குணவு தருத லால் மட்டுமன்றி வயிற்றுக்குணவு தருதலாலும் வெல்லமுடியும். நான் முதன்முதல் Rajah எனும் உணவுச்சாலைக்குச் சென்றபொழுது என்னைத் தென்னாட்டவரென்று உணர்ந்த ஊழியன் இந்தி இசைத் தட்டுகளை நிறுத்தி 'தெருவில் வாராண்டி' என்ற தமிழ் இசைத் தட்டைப் போட்டான். நியுயார்க்கில் 'தெருவில் வாராண்டி' கேட்டதை நினைக்கையில் இன்னும் நகையாகின்றது.

அமெரிக்காவில் மூன்று திங்களாகத் தமிழர் எவரையும் காணும் வாய்ப்புப் பெறாத யான் தமிழின் ஒலியின்பத்தை நுகரக் கருதி ஒரு நாள் திருக்குறளை எடுத்து வாய்விட்டுப் படிக்கத் தொடங்கினேன். நூலைத் திறந்ததும் முதன் முதல் யான் கண்ட குறட்பா :

" இருவே றுலகத் தியற்கை ; திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு" என்பதாகும்.

அந்நேரத்தில் இச் செய்யுளின் ஆழ்ந்த கருத்து எனக்கு ஒருவாறு தோன்றிற்று. அப்பொழுது இத்துணைச் சிறப்புப் பெற்ற இலக்கியத்தையும், அதனைத் தோற்றுவித்த மொழியையும் பரப்புதல் வேண்டுமெனும் துணிவும் மிகுதியாய் ஏற்பட்டது.

தமிழ்க் கலைகளை விரிவுரைகளோடு வெள்ளித்திரை வாயிலாகவும் காட்டுவதற்குத் துணையாக என்பால் இரு படச் சுருள்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று தமிழ்நாட்டின் கட்டிடங்களையும், மாளிகைகளையும், கோயில்களையும் காட்டுவது. பிறிதொன்று தமிழ் நாட்டியக் கலையை உணர்த்துவது. இவ்விரு படங்களையும் மேல் நாட்டினர் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

வட அமெரிக்காவில் மக்கள் தமிழ்க் கலைகளைப்பற்றி அறியப் பெரிதும் அவா உடையவராயிருக்கின்றனர். தென் அமெரிக்காவிலோ பண்டை நாகரிகம் படைத்தவரும், பழங்குடிகளுமான இலத்தீன் வழித்தோன்றல்கள் இந்தியாவின் பெருமையை நன்கறிந்திருப்பதாகத் தெரிந்தது. இலத்தீன்–அமெரிக்க நாடுகளில் பழைய நாகரிகங்கள் அரும்பி மலர்ந்து வாடின. மெக்ஸிகோவில் அஸ்தெக்கரும், தோல்தெக்கரும், பெருவில் இன்காகரும் வரலாற்றிற் பெயரும் புகழும் பெற்ற மக்கள். அவர்களுடைய கோட்டைகளையும் மாளிகைகளையும் யான் கண்டபோது திராவிட மக்களின் கட்டடத் திறன் என் நினைவிலே தோன்றியது. இவர்கள் இத் திறனில் கட்டடக் கலைஞ

ருடைய வியப்பையும் புகழையும் பெற்றவராயினும், இலக்கிய நூல்களை யாத்தவரல்லர். இப் பண்டை நாகரிகங்களுடன் தமிழ்ப் பண்பாட்டைப் பிணைததுப் படித்து ஆராய்ச்சி செய்வதும் தமிழாராயச்சியின் புதியதொரு துறையாகும்.

தென் அமெரிக்காவில் ஒரு திங்களாகப் பல நாடுகளுக்குச் சென்று விரிவுரைகள் நிகழ்த்தி வந்தேன். ஆங்குள்ள செய்தித்தாள்கள் தமிழையும், என் கருத்துக்களையும் பற்றிய என் உரைகளை விரிவாக எடுத்துக் கூறின. அவர்கள் ஊர்களில் பல திங்கள்கள் தங்க வேண்டுமென்று என்னைக் கேட்டனர். அங்குச் செல்லும் தமிழர் மிகச் சிலராதலின் என்னிற் பழைமையையும் புதுமையையும் ஒருங்கே கண்டனர். தம் மொழியாகிய இஸ்பானிய மொழியில் யான் தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக்கூறியது அவர்கட்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. தென் அமெரிக்க நாடுகளில் ஆர்கென்டைனா எனும் குடியரசு முன்னேற்றத்திற் சிறப்புற்று வளர்கின்றது. ஆங்குள்ள பல் கலைக் கழகங்கள் இந்தியக் கலைகளை அறிய விரும்புகின்றன. ஆங்கெல்லாம் நம்மவர் தமிழ்த்தூதாகச் சென்று விரிவுரைகள் நிகழ்த்தவேண்டும். நிலப் பிரிவையும் மக்கள் தொகையையும் ஒருங்கே ஆராயும் பொழுது இஸ்பானியமொழி ஆங்கிலத்தைப்போல் உலகில் முதன்மை பெற்றிருப்பதால், ஆங்கிலத்தில் நம் நூல்களை மொழிபெயர்ப்பது போல் இஸ்பானிய மொழியிலும் அவற்றை மொழிபெயர்த்தால் உலகிற் பலர் நம்மைப்பற்றி அறிய வழி காண்போம்.

வடஅமெரிக்காவிலும், தென்அமெரிக்காவிலும் பதினன்கு திங்கள் யான் தங்கினேனுதலின் நேரமின்மையால் விரைந்து வீட்டிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. எனவே இரு திங்களுக்குள் வட அபிரிக்காவின் பழைமைபடைத்த ஊர்களையும், எகிப்தையும், பாலஸ்தீன், சிரியா போன்ற இடங்களில் பண்டை நாகரிகங்களின் நிலைக்களங்களையும் பார்த்துத் திரும்பினேன்.

இடையில், கலைக்குத் தலைநகரமாய் விளங்கும் உரோமபுரிக்குப் புனித ஆண்டின் வரங்களைப் பெறுமாறு மீண்டும் சென்றேன். நீலக் கடலாகிய நடு நிலக் கடலை உடுத்திய நாடுகள் என்றும் நாகரிகத்திற் சிறந்தவை. அவற்றை இன்னும் கூர்ந்து ஆராய்ந்து ஆங்குள்ள மக்களுக்கு எதிர்காலத்தில் தமிழ்த்தூது நிகழ்த்துமாறு எனக்குப் பல அழைப்புகள் வந்து சேர்ந்தன. அத்தொண்டை ஆற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைப்பது எதிர்கால மறைபொருள்.

# தமிழ்ப் பெண்கள் பண்புள்ளம்

பண்டிதை க. இராஜேஸ்வரி அம்மாள்,
யாழ்ப்பாணம்

சரித்திர காலந்தொட்டு அணுக்குண்டு காலம்வரை அளவிறந்த மாறுதல்களை மக்கள் கண்டுள்ளார்கள். ஒவ்வோர் அசைவிற்கும் ஒவ்வொரு மாறுதலுக்கும் ஆற்றலே (energy) காரணம் என்று விஞ்ஞானிகள் விளம்புகின்றார்கள். விஞ்ஞான வுலகில் மாத்திரமன்றி அன்றாட வாழ்க்கையிலும் ஆற்றலே உதவுகின்றது. சிறப்பாக அகவாழ்விலுள்ள ஆற்றலை 'சக்தி' என்று அழைப்பார்கள். சக்தியே பெண்ணாகும். அகவாழ்விலும் புறவாழ்விலும் மக்களுக்கு ஆற்றலும் வலிமையும் அளிப்பது தாய்மையாகும். 'வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா' என வீறுகொண்டு கூறுகின்றார் பாரதியார். இவ்வாற்றலெல்லாம் பெண்களின் பண்பாடே. பண்பாட்டின் கண்ணாடியே பெண்ணுள்ளம்.

தமிழ்ப் பெண்களின் விழுமிய பண்பாட்டிற்கு அடிப்படையாய் அமைந்தது அன்பு. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்பது வள்ளுவன் கண்ட இல்லறத்தின் நல்லறமாகும். அறத்திற்கு அடிப்படையாவதும் அன்பே. அன்பிற்குக் கருவியாகவுள்ளது, இயற்கையாகவே மக்களிடம் அமைந்த ஆண், பெண் கூட்டுறவு. ஆகவே, பெண்ணிடம் முதல் முதல் தோன்றுகின்ற தலையாய அன்பு 'காதல்' என்ற பெயர் பெறும். பண்டைத் தமிழ் நூல்களிலே காதலுக்கும் காமத்துக்கும் வேற்றுமை கிடையாது. இல்லறத்தின் பயனை ஒல்காப் புகழ்பெறு தொல்காப்பியனார் "காமஞ் சான்ற கடைக்கோட் காலை" என்று தொடங்கி, காமம் அல்லது இல்லறவன்பே வாழ்க்கைக்கு அடிப்படை யெனக் குறிப்பிடுகிறார்.

தமிழ்ப்பெண் கண்ட காதற் சிறப்பு உடலுக்கும் உயிருக்குமுள்ள தொடர்புடன் ஒப்பிடப்பட்டது. திருக்குறளில் காதற் சிறப்புரைக்க வந்த தலைவன்,

"உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு" என வியக்கின்றான்.

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்த வாழ்வில் பெண்ணின் காதல் தன்னலமற்றது. பெற்றோர் உற்றோர் உறவினரை அவள் மறக்கின்றாள்; செல்வத்தைத் தள்ளுகின்றாள்; செயலை மறக்கின்றாள்; தன்னையே மறக்கின்றாள். "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற உன்னத நிலையை எய்துகின்றாள். இத்தகைய பெண்களின் மனோநிலையைப் பழந்தமிழ் நூல்கள் படம்பிடித்துக் காட்டுவன. செல்வப் பெருக்கிற் றிளைத்த தலைவி ஊழ்வினை கூட்ட, பாழ்படுத்தும் வறுமையால் நலிந்த பதியை அடைந்தாள். பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யானாள். வறுமை நிறைந்த கணவனின் இல்லம் இந்திர லோகமாக மாறியது. தன்னைக் காணவந்த தோழியை நோக்கி எவ்வளவுதான் தன் பிறந்தகம் செல்வத்திற் றிளைத்த போதினும், தன் கணவன் வறுமையால் நலிந்தபோதும்,

"வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே
..........................................
நன்றே தோழிநம் கணவன் வாழ்வே."

என இறுமாப்புடன் மொழிகின்றாள்.

"கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தாதை கொழுஞ்சோ றுள்ளாள்."

எனும் நற்றிணை அடிகளும் பெண்களின் மனப் பண்பின் திறனைத் தெற்றென விளக்குவன.

மேலும் பழந்தமிழ் மகளிர் கணவனுக்கு உற்ற மனைவியாய் அமைந்து அவர் பணியே தம் நலனாய்க் கொண்டதோடமையாது தம் கணவர் நெறிபிறழ்ந்த காலத்திலே அவரை நன்னெறிக் குய்த்தலையும் தமது உரிமையும் கடமையுமாகக் கொண்டனர். "தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்" என ஆணையிட்டு, இன்பத்துறையில் ஈடுபட்டுத் தம்பால் வந்த கணவனைத் தடுத்து நிறுத்தி அன்றுதொட்டுத் திருநீலகண்டர் மனதாலும் பெண்களைத் தீண்டாதொழிக்கச் செய்த வரலாறும், சமண்வலைப்பட்ட பாண்டிய மன்னனை மங்கையர்க் கரசியார் சம்பந்தர் துணைக்கொண்டு சிவநெறிக்குய்த்த வரலாறும், பழந்தமிழ் மகளிரின் திறனை விளக்குவனவன்றோ!

தமிழ்ப் பெண்களின் காதலுள்ளம் கற்பு வெள்ளத்திலே மிதந்தது. பெண்ணுக்கு ஒப்பாரும் மிக்காரும் யாருமிலர் எனத் துணிந்து கூறும் வள்ளுவரும் பெரிய நிபந்தனை ஒன்றை எச்சரிக்கை

யாக நிறுத்துகின்றார். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று பெருமை பாராட்ட வந்தவர் "கற்பென்னுந் திண்மை யுண்டாகப் பெறின்" என்றல்லவோ இயம்புகின்றார். இத்தகைய கற்பினாலேயே பெண்குலம் உயர்ந்தது. தமிழ்நாடு வாழ்ந்தது. கற்பென்பது தற்காத்தல். 'நிறைகாக்கும் காப்பையே' காப்பாகப் பெண்கள் அணிந்தனர். இதையே கருவியாகக்கொண்டு தற்கொண்டாற் பேணலைத் தலைக்கொண்டனர். எவ்விடர் எவர்க்கு நேரினும் தம் கொழுநர்க்கு இழிவு நேர்ந்தால் இம்மியும் பொறார். கற்பினுக் கருங்கலமாம் கண்ணகி கணவன் கொலையுண்ட செய்தி கேட்டுக் கலங்கினாள்.

"பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுநருறு குறைதாங் குறாஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்"

எனக் கதறுகின்றாள். கொண்ட கொழுநனுக்குற்ற குற்றங் குறைகளைப் பொறுத்தலே பெண்ணின் கற்புக்குரிய இலக்கணங்களுள் சிறந்தது. இங்ஙனம் கணவனின் குறைதாங்கும் பெரும் பண்பினாலன்றோ கண்ணகி தன்னைப் பிரிந்து மாதவியபட்டிருந்த கணவன் தன்பால் மீண்டு வாணிபம் செய்து மீண்டும் பொருளீட்டக் கருதித் தன்னுடன் எழுக எனக் கூறுதலும் உடனே தன் காதற் கணவனுடன் புறப்பட்டாள். தன் கணவன் அடாத பழி சாட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டான் எனக் கேள்வியுற்றதும் அவனது குற்றமற்ற தன்மையை நிலை நிறுத்துதல் தன் கடனெனப் பொங்கி எழுந்தாள். கணவன் உயிருடனிருந்த காலத்து அவன் வழி நிற்றலே தன் கடமையாகக் கொண்ட பெண்ணரசி அவன் உயிரிழந்து பழி ஏற்றப்பட்டு நின்ற காலத்திலே கணவனின் பழியைத் துடைத்தல் தன் கடனாகக் கொண்டாள். இதனாலன்றோ பாண்டியன் அவைக்களத்து வழக்குரைத்துக் கணவன் பழியைத் துடைத்தாள்; மதுரையையும் தீக்கிரை யாக்கினாள். இவளன்றோ தற்காத்துத் தற்கொண்டாற் பேணினாள். தகைசான்ற சொற்காத்தாள். சோர்விலாளுமாயினாள். இத்தகைய பண்புடைமையே தமிழ்ப் பெண்களின் உள்ளநிலையாகும்.

கற்புநெறி தவறாத பொற்புடைய மாதர் இல்வாழ்க்கையில் கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். இதனாலேயே 'இல்லாள்' என்ற சிறப்புப் பெயரை மெல்லியர் பெற்றனர். இல்லறத்தில் விருந்தோம்பலே முதற்கடமையாகக் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் உற்றார் உறவினர் விலாப்புடைக்க உண்பதற்கு அறுசுவையுண்டி அகங்களிக்கப் படைத்து, அதை விருந்தென்று கொண்டு, புதிதாக வந்தோரை முகந்

திரிந்து அனுப்புவது போலன்றி, முற்காலத்தில் 'விருந்தினர்' என்பதைப் 'புதியவர்' என்றே பொருள் கொண்டனர். இன்று நடைபெறும் விருந்தெல்லாம் 'சாப்பாடு போடுதல்' என்ற பெயரையே பெறத் தகுந்தது. "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்பதே இல்லறத்திற் கண்ட நல்லறமாகும். காதலுக்காகக் கணவனை விழைந்த பெண்ணுள்ளம் முதிர்ந்து விருந்துக்காகக் கணவனை விழைந்தது. கணவனைப் பிரிய நேர்ந்த கண்ணகியின் உள்ளம் அவன் காதலுக்காக மாத்திரம் வருந்தாது கணவனின்றி விருந்தோம்பலையும் இழக்க நேர்ந்ததெனை வருந்துகின்றது.

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதி ரோம்பலும் இழந்த வென்னை."

எனக் கூறினவள் கற்பினுக்கணியாம் கண்ணகி என்னும் தமிழ்த் தெய்வப்பெண். அசோகவனத்தில் அளவிறந்த அல்லலுற்ற சீதை இயம்பொண்ணு இடுக்கணுழந்த காலத்தும் இல்லறத்தைப் பற்றியே சிந்திக்கின்றாள். தன்னில்லத்துக்கு விருந்து சென்றால் தானின்றித் தனித்து வாழுங் கணவன் நிலை என்னுமோ என அவள் வருந்தும் மனப் பான்மையைக் கல்விக்கடலாம் கம்பனின் கவின்பெறு தமிழுள்ளம் நயம்பட நவில்கின்றது. தலைவனும் தலைவியும் கொண்ட ஊடலைத் தடுத்து, உவகை பொங்க அவர்களை விருந்தூட்டவைக்கும் ஆற்றல் விருந்தினர்க்கு உண்டு என்று அகப்பொருள் நூல்கள் அறைகின்றன. விருந்தோம்பல் எனும் பெரும் பண்பினாலேயே தமிழ் நாட்டில் வசியும் வளனும் சுரந்தன என்றால் அது மிகையாகாது.

அன்பும் அறமும் நிறைந்த அகவாழ்வே புறவாழ்விற்கு அடிப்படையாய் அமைந்தது. அகவாழ்வு புறவாழ்வாக மாறியது. வீட்டு வாழ்வு நாட்டு வாழ்வாக விளங்கியது. எந்த நாட்டிலோ எவ்வகைச் சமூகத்திலோ அன்றி எவ் வீட்டிலோ பெண்குலம் தாழ்வுற்றிருக்கின்றதோ, அந் நாட்டிலோ, சமூகத்திலோ வீட்டிலோ, அன்பு முதிர்ச்சியும் அறிவுப் பெருக்கமும் இன்பக் கலைகளும் இணையில் ஆக்கமும் காணமுடியா. தமிழர் சமூகம் முன்னேற்ற மடைந்திருந்ததற்கு முதற்காரணம் இச் சமூகத்தில் பெண்களின் உயர்ச்சியும் முயற்சியுமே யாகும். என்று சமூகத்திலே பெண் தாழ்ந்தவள் எனும் கருத்துத் தோன்றியதோ அன்றுதான் தமிழ்ச் சமூகத்தினதும் தமிழினதும்

வீழ்ச்சிக்காலம் ஆரம்பமாயிற்று. பழந்தமிழ் நாட்டிலே தமிழர் சமூகமும் தமிழ்க்கலையும் உயர்வுற்றிருந்தமை, அக்காலத் தமிழ்ப் பெண்களின் உயர்ந்தவுண்மை, பண்பாடு, சேவை என்பவற்றினாலேயாம்.

புறநானூறு முதலாகிய பழந்தமிழ் நூல்களிலே எத்தனையோ பெண்புலவர்களின் சுவை கனிந்த பாடல்களைக் காண்கிறோம். கவிஞர்களின் உளப்பண்பாட்டைக் காட்டுவது அன்னார் பாடிய தீஞ்சுவைப் பாடல்களேயாகும். இப் பெண்புலவர்களின் பாடல்கள் இவர்களின் சொற்பொருளாற்றல்களைக் காட்டுவதோடு அமையாது அவர்களின் வீரம், தாய்மை, அன்பு முதலாகிய விழுமிய குணங்களையும் தெற்றென விளக்குகின்றன. சங்ககாலப் பெண்கள் கல்வியறிவும் பல்கலை ஞானமும் படைத்திருந்தார்கள். "பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே" எனும் வீண்கொள்கை இடைக்காலத்தில்தான் தமிழ் நாட்டில் ஏற்படலாயிற்று.

"தொட்டிலாட்டும் கையே செங்கோலோச்சும் கை" (The hand that rocks the cradle rules the world) எனும் ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. அன்பும் அறிவும் ஆற்றலும் படைத்த தாய்மாரே விழுமிய வீரரை ஆக்கித் தர முடியும். ஒக்கூர் மாசாத்தியார் எனும் பெண் புலவர் தமையனையும் கணவனையும் போரில் இழந்த ஒரு பெண் மீண்டும் போர்ப்பறை கேட்டதும் சிறு பாலகனாகிய தன் ஒரே மகனை அழைத்து வேல் கைக்கொடுத்து, வெளிது விரித்துடீஇப், பாறுமயிர்க்குடுமி எண்ணெய் நீவிப் போர்க்களம் செல்லென விடுத்த சிறப்பைப் பாடினர். மற்றொரு வீரத்தாய் தன் மகன் போர்க்களத்தில் மார்பிலே புண்பட்டு இறந்து கிடத்தலைக் கண்டதும் அவனைப் பெற்றஞான்று உற்ற மகிழ்ச்சியினும் பெரிதும் உவந்தனள். பொன்முடியார் எனும் புலவர் ஒரு தாயின் கூற்றாகக் கூறிய :

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
நல்நடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே."

எனும் புறப்பாட்டு அக்காலத் தாயரின் விழுமிய வீரவுள்ளத்தை விளக்குவது ஆகாதோ ? இன்னும் ஒரு அன்னை தன் மகனைப் பற்றிக் கூறுமிடத்து "புலி சேர்ந்து போகிய கல்லளைபோல, ஈன்ற

வயிறே இதுவே தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே" எனப் புகன்றாள். இத்தகைய மனோவலிமை படைத்த வீரப் பெண்களினாலன்றோ பழந்தமிழ் நாட்டில் வீரப் புதல்வர்கள் வாழ்ந்தனர். இத்தகைத் தாயரன்றோ தண்டமிழ் நாட்டின் தனிப் பண்புக்குக் காரணர். இவர்களாலன்றோ தமிழுலகம் கலைஞானம், படைத்தொழில், வாணிபம் முதலானவற்றை நன்கு வளர்த்துப் பீடுபெற்றது.

ஔவையெனும் தமிழ் மூதாட்டியின் கவிவன்மையையும், அதிகமான் போன்ற அரசரோடு அவர் கொண்டிருந்த பெரும் நட்புரிமையையும், அதிகமானுக்காகத் தொண்டைமானுழைத் தூது சென்று உரைத்த அவர் சொல்லாற்றற் திறனையும் இன்றைய தமிழுலகம் மறக்கமுடியுமா? நைடதம் என்னும் பைந்தமிழ் நூலின் திறனை ஆராய்ந்து முடிபுரைத்த அதிவீரராமபாண்டியன் மனைவியின் தமிழறிவின் திறனைத் தமிழுலகம் மறக்கமுடியாது. பழந்தமிழ் நாட்டிலே இசைவல்ல பாடினிகள் வாழ்ந்து பாடிப் பரிசு பெற்றார்கள். சீவக சிந்தாமணி, பெருங்கதை முதலான நூல்களிற் காணும் தலைவியர் யாழ் முதலாம் பல்வகைக் கலைகளில் வல்லுநராய் வாழ்ந்தார்கள்.

அன்பும் காதலும் பூண்டு அறநெறி வழுவாது இல்லறம் காத்த மெல்லியர், வீரப் புதல்வர்களை ஈன்று வளர்த்துத் தமிழ் நாட்டுக் களித்த வீர மங்கையர், இடைக்காலத்தே தமிழ் நாட்டிலே புகுந்த அந்நியர் தொடர்பால் தமிழருள்ளத்தில் ஏற்பட்ட மாறுதலினால், தம் முன்னத நிலையை யிழந்து அடிமை வாழ்வு வாழ்வாராயினர். வீட்டு வாழ்விலும் நாட்டு வாழ்விலும் விழுமிய தொண்டாற்றி உயர்ந்தநிலை வகித்த பெண் சமையலறையில் மாத்திரமே இடம் பெற்றாள். மதிமந்திரி மதிபடைத்தவளாய் கணவனுக்கு இன்பத்திலும் துன்பத்திலும் உறுதுணையாய் அமைந்த பெண்ணின் மாண்பை மறந்து அவளுக்குக் கல்வியறிவு அவசியமற்றதெனக் கருதினர் தமிழர். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்தனர். இதனால் தான் இக்காலத்தே தமிழர் சமூகம் வீழ்ச்சி அடைந்தது. தமிழரின் கலைகள் மறைந்தன. அடிமை வாழ்வுக்கு அஞ்சி அவமானம் கருதாத புதல்வர்களும் தமிழ்நாட்டில் தோன்றினர். மடைமையும் அடிமைத் தனமும் பூண்ட பெண்களின் புதல்வர்களும் அடிமை வாழ்வுக் கஞ்சாதாராய் இருந்ததில் வியப்பெதுவுமில்லை.

தமிழ்நாடு செய்த தவப்பயனாகப் பாரதிபோன்ற கவிஞர் தோன்றினர். இவரின் செந்தமிழ்ப் பாடல்களால் தமிழ்நாடு அடிமை

மோகம் நீங்கிப் புத்துயிர் பெற்றது. தமிழ்ப் பெண்கள் தம் பெருமையை உணர்ந்து விழிப்புற்றனர். 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றார் பாரதி. 'பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்' என வீறுகொண்டனர் புத்துயிர் பெற்ற தமிழ்ப் பெண்கள். பெண்களின் அடிமைத் தளை அறுந்தது. பெண் கல்வி மிகுந்தது. எந்தத் துறையிலும் பெண்கள் ஆண்களோடு சமமாகப் பங்குபற்ற முன் வந்தனர்.

ஆயின் கீழைத்தேச ஆண்களைப் பீடித்த ஆங்கில மோகம் பெண்களையும் பற்றியது. ஆங்கிலமொழிக்கு மாத்திரமேயன்றித் தமக்கு ஒவ்வாத ஆங்கில நடை உடை பாவனைகளையும் பின்பற்றலாயினர். நம் நாட்டுக் கலைஞராகிய ஆனந்தக் குமாரசாமி என்பவர் 'இந்திய நாட்டு நாகரிகம் சிதைவுறாமலிருக்கிறதென்றால் இந்தியப் பெண்கள் தம் தொன்மையான நாகரிகத்தைப் பேணிக் காத்தமையே' எனச் சமூகத்தில் பெண்களின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டினர். எனினும் தமிழ் நாட்டுப் பெண்கள் சிலரின் ஆங்கில நாகரிக மோகம் இன்று தமிழ் வளர்ச்சிக்கும், தமிழர் நாகரிக உயர்ச்சிக்கும் இடையூறாகவுள்ளது. 'அப்பா அம்மா' என அமுதூறும் தமிழ் மொழியில் அழைக்காது தமிழ்க் குழந்தைகள், 'பப்பா மம்மா' என அழைப்பதுபோன்ற போலி நாகரிகத்தைப் பேணிவரும் பெண்கள் கூட்டமே தமிழரின் இழிவுக்குக் காரணர். இத்தகைய மனப்பான்மை ஒழிந்து தமிழ்ப் பெண்களின் உள்ளத்திலே தமிழர் நாகரிகத்தையும் கலையையும் மொழியையும் பேணும் வேட்கை ஏற்படின் தமிழர் சமூகம் முன்னேறும்; பெண்குலம் ஈடேறும். சமவுரிமைக்காக ஆண்களோடு போரிடும் பெண்கள் ஆண்களைப் போன்றே தங்களுக்குமுள்ள சம கடமையை உணர்ந்துகொள்ள வேண்டும். புற வாழ்க்கையில் எவ்வளவு தான் ஈடுபட்டபோதினும் மனைவிளக்காய் இல்லறம் காத்தலும், புதல்வரைப் பேணலுமாகிய சிறந்த பணிகளை என்றும் பெண்கள் மறந்து விடுதல் கூடாது. ஆணினமும் பெண்ணினமும் ஒன்றோடொன்று போரிட்டு வாழ முடியாது. ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து ஒன்றுபட்டுக் கடமையாற்றலே மனித சமூகத்துக்கு நன்மை யளிக்கும். தமிழ் மொழியையும், தமிழ்க் கலையையும், தமிழ்ப் பண்பையும் தமிழ்ப் பெண்கள் விரும்பிப் பேணுவாராயின் தமிழினம் முழுவதும் உய்ந்துவிடும் என்பதிற் சந்தேகம் கிடையாது.

# யாழ்ப்பாணப் பூர்வீக அரசின் வரலாற்றுச் சுருக்கம்

பண்டிதர் அ. சிற்றம்பலம், பி. ஏ.

யாழ்ப்பாணச் சரித்திரத்தை ஆராய்வதற்கு இப்பொழுது ஆதாரமாகக் கிடைக்கும் முக்கிய நூல்கள் வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை என்பனவாம். இவை போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த நூல்கள். ஆதலால் நம் நாட்டின் மிகப் பழையகால சரித்திரத்தைத் தெளிவாக அறிவதற்கு அதிகம் பயன்படுகின்றில. சிங்கள சரித்திர நூலாகிய மகாவம்சம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தென் இந்திய சிலாசாசனங்கள் ஆகியவற்றிற் காணப்படும் குறிப்புகளும் பண்டைக்காலத்தில் இந் நாட்டுக்கு வந்து போன பிறநாட்டுப் பிரயாணிகள் எழுதிவைத்த குறிப்புகளும் இந் நாட்டின் பண்டைக்கால வரலாற்றினை அறிவதற்கு ஓரளவு உதவியாயுள்ளன. பரராசசேகரன் உலா, இராசமுறை என வேறும் இரு நூல்கள் எம் நாட்டின் பழைய வரலாற்றுக் குறிப்புக்களை உடையனவாய் இருந்தன எனக் கூறுவர். ஆனால் அவை இதுவரையும் எமக்கு அகப்பட்டில.

மிகப் பழைய காலத்தில் இங்கு வசித்தோர் நாகர் எனப் பெயரிய ஒரு சாதியாரென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந் நாகர் இந்தியாவின் வட கீழ்த் திசையிலுள்ள மலைப் பிரதேசங்களி லிருந்து கீழிறங்கி அந் நாட்டின் தெற்கிலும் கிழக்கிலும் பரவி வசித்தனர். சூடிய நாகபுரம், நாகபட்டினம், நாகர்கோயில் முதலிய இடப்பெயர்கள் இவர்களால் உற்பத்தியானவை. இவர்கள் நாக வழிபாடுடையவர்களாய் இருந்தமைபற்றி நாகர் எனப்பட்டனர் என்பது சில அறிஞர் கருத்து.

இலங்கையின் வடபாகம் பண்டைக் காலத்தில் நாகர்களுக்கு உறைவிடமாய் இருந்தமைக்குப் பல சான்றுகள் உண்டு. இலங்கையின் மேற்குப்பக்கத்தில் உள்ள கல்யாணி அல்லது களனியாவிலும் அவர்கள் மிக்கு உறைந்தமை மகாவம்சம் கூறுவதிலிருந்து புலனாகும்.[1] எனினும் யாழ்ப்பாணமே அவர்களது முக்கிய இருப்பிடமாயிற்றென்பதை அதற்குள்ள நாகதீவம் என்னும் பழம் பெயர் விளக்குகின்றது.

1. மகாவம்சம் 1; 63.

நாக வழிபாடு யாழ்ப்பாணத்தில் ஒருகாலம் மிக்கு விளங்கியது. இன்னும் அவ் வழிபாடு முற்றாக ஒழிந்து விடவில்லை. நயினாதீவில் இன்னமும் அவ் வழிபாட்டைக் காணலாம். இந் நயினாதீவு கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்கள நம்பொத்த என்னும் நூலில் நாக திவயின என அழைக்கப்பட்டுள்ளது. நம் குடாநாட்டிலுள்ள நாகர் கோயில் என்னும் இடப்பெயரும் முன்னாளில் இங்கே நாகர் வசித்தமைக்குச் சான்றாகும். சிங்கள மகாவம்ச நூல் நாகதிவ என்னும் பெயரை இக் குடாநாடு முழுவதையும் குறிக்க உபயோகித்திருக்கின்றது. இப் பெயர் முதன்முதலாக அந் நூலின் முதலதிகாரத்தில் கௌதம புத்தரின் இரண்டாவது இலங்கை விஜயத்தைச் சார்ந்து வருவது. இரு நாக அரசர்கள் ஒரு மணியாசனத்திற்கு உரித்துக் கொண்டாடிச் சண்டையிட்டபோது கௌதம புத்தர் வானவழியாக வந்து அவர்களுக்குப் பஞ்சசீலத்தை உபதேசிக்க, அவர்களும் எண்பது கோடி நாகப் பிரசைகளும் புத்தபகவானைச் சரணடைந்தார்கள் என்னும் கதை மகாவம்சத்திற் கூறப்படுகின்றது.[1] புத்த வழிபாட்டிற் குரித்தான இம் மணியாசனத்தையும் நாக அரசர்களையும் பற்றிய செய்தி மணிமேகலை யென்னும் புத்த தமிழ்க் காவியத்திலும் காணப்படுகின்றது. இந் நூல் அச் செய்தி மணிபல்லவம் என்னும் தீவில் நிகழ்ந்ததாகக் கூறும்.[2] ஆயினும் மணிபல்லவத்தின் இடத் தொடர்புகளை நுணுகி நோக்குமிடத்து நாகதீபமே இக் காவியத்தில் அப் பெயராற் கூறப்பட்டுள்ளதென்பது புலனாகும். மணிபல்லவத்தை நாகநாடு என மணிமேகலை நூலே கூறுதலும், நாகதீபம் சில சிங்கள நூல்களில் மணி நாகதீபம் எனக் கூறப்பட்டிருத்தலும் உற்று நோக்கற்பாலன. மணிபல்லவம் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து ஆறைந்து யோசனை தூரம் தெற்கேயுள்ள தெனவும்,[3] புத்தரின் பாதச் சுவடு பதிந்த சமந்தம் என்னும் சமனொளிமலை இதற்கு அயலிலேயுள்ள இரத்தினத் தீவத்தே யுள்ள தெனவும்,[4] அம் மலையுச்சியை அடைந்து புத்தரை வழிபட்டோர் பரதகண்டத்துக்கு மீண்டு செல்லும் வழியில் மணிபல்லவத்தையும் கடந்து செல்வரெனவும்[5] மணிமேகலையிற் கூறப்படுதலால் மணிபல்லவம் நாகதீபமாகிய யாழ்ப்பாணமே யென்பது தெளிவாகும். நாகதீபப் பூர்வகுடிகளாகிய நாகரின் பண்டைப் பெயரீடு நாகன், நாகி, நாகம்மாள், நாகரத்தினம், நாகமணி, நாகமுத்து,

1. மகாவம்சம், அதி. 1; 2. மணிமேகலை viii 1—2, 54—61; 3. மணிமேகலை vi 211—12; 4. ஷை xi 21—26; 5. ஷை xxviii 107—109.



பராக்கிரமவாகு [பக்கம் – 38]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்



இலங்காதிலக விகாரை [பக்கம் – 38]

உபயம்: அரசாங்கப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி



சிவ தேவாலயம் – இல. 1 [பக்கம் – 38]

உபயம்: இலங்கைப் புதைபொருள்
ஆராய்ச்சிப் பகுதி

நாகலிங்கம், நாகநாதன் முதலிய பெயர்களில் இன்றைக்கும் நிலவுவதை நாம் காணலாம்.

யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதி சிங்களத்தில் வலிகம என்றும், தமிழில் அப்பொருளையே யுடைய மணற்புரம், மணற்றி, மணலூர், மணவை என்றும் சில காலங்களில் வழங்கப்பட்டது. பதினுன்காம் நூற்றுண்டில் ஆக்கப்பட்ட செகராசசேகரம் என்னும் நூலில் பின்னுளில் வாழ்ந்த யாழ்ப்பாண மன்னனொருவன் "மன்னர் மன்னு செகராச சேகரன் மணவை யாரிய வரோதயன்"[1] எனவும், "தெண்டிரைசூழ் மணவையர்கோன் செகராசசேகரமன்"[2] எனவும் அழைக்கப்பட்டிருத்தலும் உற்று நோக்கற்பாலது.

யாழ்ப்பாணத்தில் நாக அரசு விளங்கிய காலத்தில் இப்பொழுது கந்தரோடை என வழங்கப்படும் கதிரமலையே இராசதானியாக விளங்கியதென முதலியார் இராசநாயகமவர்கள் பல சான்றுகளைக்கொண்டு நிரூபிக்கின்றுர்.[3] கதிரமலை யரசர் புத்த சமயிகளாய் அநேக புத்த பள்ளிகளையும், பௌத்த சந்நியாசிகள் வசிக்கும் மடங்களையும், தாது கர்ப்பங்களையும் கட்டுவித்தார்கள். அழிந்துகிடக்கும் கட்டிடங்களின் அடையாளங்களாலும், இதுவரை கண்டெடுக்கப்பட்ட கற்சிலைகள் கற்றூண்க ளாகியவற்றினுலும், பரவிக்கிடக்கும் ஓடுகளின் துண்டுகளினுலும் கதிரமலை யென்னுமிப் பழைய நகர் மிகவும் விசாலமாயும் அழகிய வீதிகள், மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் ஆகியவற்றைக் கொண்டதாயு மிருந்திருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம். பழைய இந்திய ரோம நாணயங்கள் அங்கிருந்து எடுக்கப்பட்டமையும் அது ஓர் இராசதானியாகவும் சிறந்த வியாபாரத் தலமாகவும் இருந்ததென்பதற்குச் சான்றுகும். இராமாயணத்தில் அநுமானைச் சீதையைத் தேடும்பொருட்டு அனுப்பியபொழுது வழியிலுள்ள நாகர் தலைநகரியை இராமர் அநுமானுக்கு விரித்துக் கூறுவதிலிருந்தும்[4] இதன் பழைமை புலனுகும்.

நாகர்கள் தமிழருக்கு இனமாய ஒரு திராவிட வகுப்பைச் சேர்ந்தவரென்றே சில அறிஞர் கருதுகின்றனர். சங்கப் புலவர்களுள் ஒருவராகக் கூறப்படும் முரிஞ்சியூர் முடிநாகராயர் என்பவரும் நாகர் வகுப்

1. செகராசசேகரமாலை பழவினைப் படலம் 10; 2. ஷை யாத்திரைப் படலம் 31; 3. Ancient Jaffna, pp 58, 59; 4. Dutt's Ramayana Kishkindakandam p. 815.

பைச் சேர்ந்தவராய் இருக்கலாம். மகாவம்சத்திலும் சங்க இலக்கியங்களிலும் உள்ள சான்றுகளைக்கொண்டு முற்கூறிய நாக அரசு கி. மு. ஆறும் நூற்றுண்டிலிருந்து கி. பி. மூன்றும் நூற்றுண்டுவரை சிறந்து விளங்கியதெனக் கருத இடமுண்டு.

யாழ்ப்பாணத்தோடு சம்பந்தப்பட்ட மிகப் பழைய சரித்திரகாலச் செய்தி கி. மு. மூன்றும் நூற்றுண்டில் அசோகன் என்னும் இந்திய சக்கரவர்த்தியின் காலத்தில் நிகழ்ந்ததாகும். இலங்கையில் புத்த சமயத்தைப் பரப்புவதற்கு அசோகன் வெள்ளரசின் கிளையொன்றைப் பொற்கலத்தில் அமைத்துப் புத்த பிக்குணியாய் இருந்த தன் மகள் சங்கமித்தை என்பவளைப் பரிவாரங்களுடன் அனுப்பியதாகவும் அவர்கள் யாழ்ப்பாணத்து வடகரையிலே மாதகலுக்குச் சமீபமாக இப்பொழுது சம்புத்துறை எனப்படும் சம்புகோவளத்தில் இறங்கித் தரை மார்க்கமாக அனுராதபுரத்துக்குச் சென்றதாகவும் மகாவம்சத்திலிருந்து அறியக்கிடக்கின்றது.[1]

சங்கமித்தையையும் அவள் பரிவாரங்களையும் வரவேற்ற தேவநம்பியதிஸ்ஸன் அனுராதபுரத்தில் நாட்டப்பெற்ற வெள்ளரசின் கன்றுகளுள் ஒன்றைச் சம்புகோவளத்தில் நாட்டினன்.[2] அதுவுமன்றிக் கடற்கரையில் ஒரு தாதுகர்ப்பத்தையும் அதற்கு அண்மையில் இப்போது திசைமளுவை என வழங்கப்படுமிடத்தில் திசமகா விகாரையென்னும் புத்த பள்ளியையுங் கட்டுவித்தான்.[2] சுளிபுரத்துப் பருளாயென்னு மிடத்தில் மிகவும் முதிர்ந்த ஒரு வெள்ளரசும் ஒரு பழைய கேணியும் இப்பொழுதும் இருக்கின்றன. கடற்கரையிலே கோதுமளுவை எனப்படும் போதிமளுவையிலும் அழிந்துபோன கட்டிடங்களின் கற்களும் ஓடுகளும் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கக் காணலாம். கடற்கரையிலிருந்து திசைமளுவைக்கு வந்த அகன்ற வீதி இப்போது உபயோகமின்றி யிருப்பதையும் அவ்விடத்திலிருந்து மாதகல், சில்லாலை, பண்டத்தெருப்பு வழியாகக் கந்தரோடைக்கு வழிபோன அடையாளங்களையும் இன்றுங் காணலாம். தேவநம்பியதிஸ்ஸன் கதிரமலையாகிய கந்தரோடையில் "பாசின விகாரை" என்னுங் கோயிலையுங் கட்டினன்.

கி. மு. இரண்டாம் நூற்றுண்டு தொடக்கமாகத் தென்னிந்தியத் தமிழர்களும் வட இலங்கைத் தமிழர்களும் சேர்ந்து காலத்துக்குக் காலம் தென்னிலங்கை அரசியல் விஷயங்களிலும் தலையிட்டு வந்தனர்.

1. மகாவம்சம் 19: 35; 22: 23; 40: 35. 2. ஷை 20: 25.

கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றாண்டில் நாகர்குல அரசர் பலர் அனுராதபுர சிம்மாசனத்தில் இருந்து ஆட்சிபுரிந்தன ரென்பது மகாவம்சம் கூறும் மகல்லகநாகன், களுநாகன், குட்டநாகன், ஸ்ரீநாகன், அபயநாகன் முதலிய அரசர் பெயர்களிலிருந்தே தெரிகின்றது. இரண்டாம் நூற்றாண்டினிறுதியில் ஆட்சி புரிந்த கனிட்டதிஸ்ஸன் என்பவன் கதிரமலையிலிருந்த பெரிய பள்ளியின் கட்டிடத்தைத் திருத்தியமைத்ததாகவும் மூன்றும் நூற்றாண்டில் அரசு செய்த வொஹரிக்க திஸ்ஸன் மந்திரி முகநாகன் சுளிபுரத்தில் திஸ்ஸ விகாரையைச் சுற்றி ஒரு மதில் கட்டுவித்ததாகவும் கூறப்படுகிறது.[1] வொஹரிக்க திஸ்ஸன் கண்ணகி கோயிலுக்குத் தினசரிச் செலவுக்கு வேண்டிய மானியம் விடுத்தான்; அத்துடன் நாகதீவதுணே, திசமவிகாரை யென்னும் பள்ளிகளைச் சுற்றி மதில்களுங் கட்டுவித்தான்.[2]

ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கதிரமலை நாகரின் தலைவனுகிய ஸ்ரீநாகன் என்பவன் இந்தியாவில் பல்லவ அரசனுகிய சிங்கவிஷ்ணுவின் உதவி பெற்று அவன் சேனைகளுடன் வந்து சிங்கள அரசனை எதிர்த்துப் போராடினுன். இச் செய்தி சிங்கவிஷ்ணுவின் காசாக்குடித் தாமிரசாசனத்திலும் கூறப்படுகின்றது.[3] அந்நூற்றாண்டின் பிற்பாதியில் மானவன்மன் என்னும் சிங்கள அரசகுமாரன் தனது இராச்சியத்திலிருந்து துரத்தப்பட்டுச் சிலகாலம் யாழ்ப்பாணத்தில் மறைந்திருந்து பின் இந்தியா சென்று காஞ்சியில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னனுகிய நரசிம்மவர்மனிடம் சரண்புகுந்திருந்தான். அங்கு இருக்கும் பொழுது பல்லவர் நடத்திய யுத்தங்களிற் பங்குபற்றிப் போர்த் தொழிலில் மிகுந்த திறமை அடைந்தான். பின் நரசிம்மவர்மனிடத்திற் பெருஞ் சேனையொன்றைப் பெற்றுவந்து இலங்கை அரசுரிமையை எளிதிற் கைப்பற்றினுன்.[4]

யாழ்ப்பாணத்திலும் பல்லவராயன்கட்டு என்னும் ஊர்ப் பெயரும், நன்னி முதலிய மக்கட் பெயரும், போத்தராயர் என்னும் தெய்வப் பெயரும் பல்லவர் தொடர்புக்குச் சான்றுகளாக இன்னும் நின்று நிலவுகின்றன.

அடுத்த நூற்றாண்டில் தமிழ்த் தலைவர்கள் வட இலங்கையில் வலிமிகுத்துத் தனியரசு நடத்தி வந்ததையும் அவ்வப்போது சிங்கள

1. மகாவம்சம் அதி. 36; 2. Rajaratnakari Eng. Trans. p. 60; 3. The Pallavas by Prof. Dubreuil p. 73; 4. மகாவம்சம் அதி. 46.

அரசர்களால் அடக்கப்பட்டமையையும் மகாவம்ச நூல் கூறுகின்றது. இரண்டாம் மகிந்தன் சிங்கள அரசனுனபோதிருந்த நிலைமை (கி. பி. 764) "வடபாகங்களின் தலைவர்களும் நாட்டாண்மைகளும் அப் பிரதேசங்களைப் பலாத்காரமாகக் கட்டியாண்டுகொண்டும் இறைவரி களை அபகரித்துக்கொண்டும் இருந்தனர்"[1] எனக் கூறப்பட்டிருக் கின்றது.

எட்டாம் நூற்றுண்டில் கலிங்க அரசன் உக்கிரசிங்கன் கதிரமலை அரசைக் கவர்ந்து இலங்கையின் வடபாகத்தை ஆண்டான்.[2] அவன் மாருதப்பிரவல்லி யென்னும் சோழராசகுமாரியை மணஞ்செய்து[2] அவள் வேண்டுகோட்படி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கட்டுவித் தான். சிறிது காலத்தின் பின் அவன் கதிரமலையை விட்டு வடகீழ்ப் பாகத்திலிருந்த சிங்கைநகரைத் தன் இராசதானியாகக் கொண்டான்.

இச் சிங்கைநகர் பருத்தித்துறைக் கணித்தாய் மணல் மேடுகள் பொருந்தியிருக்கின்ற வல்லிபுரமாகும். அங்குள்ள மணற் கும்பிகளுள் காற்றுக்காலங்களில் அகப்படும் பழம்பொருட்கள், அங்கு பலவிடங் களிற் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள், கீச்சுக்கிட்டம் ஆதியனவும், அங்கிருந்து கரைமார்க்கமாய்ப் போன பெரும் வீதியின் அடையாளங்களும் அவ்விடம் ஓர்காலத்தில் பெரிய நகராய் விளங் கிய தென்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

உக்கிரசிங்கனுக்குப் பின் அவன் மகன் செயதுங்கவரராசசிங்கன் சிங்கைநகரில் ஆட்சி புரிந்தான்.[3] அவன் அரசியற்றும் காலத் தில் யாழ்ப்பாடி என்னும் பாணகுலத்தானெருவன் அவன் அவைக் களத்திற்குச் சென்று யாழ் வாசித்து இப்போது கரையூர் பாசையூர் என்றழைக்கப்படும் மணல் மேட்டைப் பரிசிலாகப் பெற்றுன்.[3] பின் அவனும் அவன் குலத்துப் பாணர் சிலரும் அங்கு குடியேறினர். அதனுல் அவ்விடம் யாழ்ப்பாணம் என்று அழைக்கப்பட்டது. அப் பெயர் பின் பறங்கிக்காரர் கட்டிய நகருக்காகி ஈற்றிற் குடாநாடு முழுவதற்கும் உரித்தாய்விட்டது.

ஒன்பதாம் நூற்றுண்டில் இலங்கையில் அரசாண்ட முதலாம் சேனன் காலத்தில் சின்னமனூர்த் தாமிர சாசனத்திற் கூறப்பட்டவ னுகிய வரகுணன் என்னும் பாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்து

1. மகாவம்சம் 48 : 83; 2. யாழ்ப்பாண வைபவமாலை பக். 8—11 ; 3. யாழ்ப்பாண வைபவமாலை பக். 12—13.

ஏர்ந்து சிங்கைநகரில் ஆட்சிபுரிந்த சயதுங்கனைத் தன்னுணைக்குள்ளாக்கிப் பின் பொலனறுவைக்குப் போய்ச் சேனனிடமும் திறை பெற்றுச் சென்றான்.[1] இறையனார் அகப்பொருளில் உதாரணமாக எடுத்தாளப்பட்டிருக்கும் கோவைநூற் செய்யுளொன்றில் "மன்னே ரொழிய மணற்றி வென்றான்"[2] என இவனைப் பாராட்டி இருப்பது யாழ்ப்பாண அரசனாகிய சயதுங்கனை இவன் வெற்றிகொண்டதைக் குறிப்பது போலும்.

பதினோராம் நூற்றாண்டில் இலங்கை முழுவதுமே சோழராட்சிக் குட்பட்ட ஒரு மாகாணமாகி மும்முடிச் சோழ மண்டலம் என்னும் பெயருடன் சோழரின் பிரதிராசாவால் ஆளப்பட்டது. இலங்கை முழுதும் சோழ அரசாட்சிக்குள் அமைந்தும் சமாதானம் எப்பொழுதும் இருக்கவில்லை. சிங்கைநகர் அரசரும் சிங்கள அரசரும் கூடிச் சோழரை எதிர்த்த காலங்களில் சோழ அரசர் படையுடன் வந்து கலகம் விளைத்தாரை வென்று தண்டித்துச் சென்றனர். "மானுபரணன் பொன்முடி ஆறுப் பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந் தான்"[3] எனவும், "உரைகொள் ஈழத் தரசனாகிய சீர்வல்லவ மதன ராஜன் மெல்லொளித் தடமணி முடியுங் கொண்டான்"[3] எனவும், முதலாம் இராஜாதிராஜ சோழனின் மணிமங்கல சாசனத்திலும் "தென்றிசைவயிற் போர்ப்படை நடாத்திக் கார்க்கடல் இலங்கையில் விறற்படைக் கலிங்கர் மன் வீரசலாமேகனைக் கடக்களிற்றொடும் அகப்படக் கதிர்முடி.கவித் திலங்கையிற் கிறைவன் மானுபரணன் காதலிருவரைக் களத்திடைப் பிடித்"[4]தான் என இராஜேந்திர தேவ சோழனின் மணிமங்கல சாசனத்திலும் வரையப்பட்டிருக்கின்றது. ஆனால் மானுபரணன், வீரசலாமேகன், ஸ்ரீவல்லப மதனராஜன் என் போர் பெயர்கள் தென்னிலங்கையை ஆண்ட அரசர்களின் நாமாவலிகள் ஒன்றிலும் காணப்படவில்லை. ஆதலின், அவர்கள் சிங்கை நகரிலிருந்து வட இலங்கையை ஆண்ட அரசர்களாயிருத்தல் வேண்டுமெனக் கருதக்கிடக்கின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழநாட்டை ஆண்ட முதலாம் குலோத்துங்கன் தன் தளகர்த்தனாகிய கருணாகரத் தொண்டைமானை அனுப்பி இலங்கையை வென்றதாக அவன் சாசனங்களிலிருந்தும் கலிங்கத்துப்பரணியிலிருந்தும்[5]

---

1. மகாவம்சம் அதி. 50; 2. இறையனாரகப்பொருள் பக். 52; 3. South Indian Inscriptions Vol III Pt. Ip. . 54; 4. Ibid P. 61; 5. கலிங்கத்துப்பரணி பேய்முறைப்பாடு 20.

அறியக்கிடக்கின்றது. கருணாகரன் யாழ்ப்பாணத்திற் கரணவாய், வெள்ளைப்பரவை என்னும் இடங்களில் விளையும் உப்பைச் சோழ தேசத்திற்கு அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்தான். உப்பேற்றும் மரக்கலங்கள் காற்றின் வேகத்தால் அலைப்புண்ணாது ஒதுங்கி நிற்கும் துறையாகத் தொண்டைமானாற்றை வெட்டுவித்து இப்போது உரும்பராயிலிருக்கும் கருணாகரப்பிள்ளையார் கோயிலையும் கட்டுவித்தான்.[1] பன்னிரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் தென்னிலங்கையில் மகா பராக்கிரமவாகு என்னும் பெயர்பூண்ட பலம் பொருந்திய சிங்கள மன்னன் ஒருவன் தோன்றி யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதையும் தன் ஒரு குடைக்கீழ் அடக்கி ஆண்டான். இந்திய நாட்டுக்கும் இவன் படையெடுத்துச் சென்று வென்றதாக மகாவம்சம் கூறும். ஆயினும் தமிழரின் வலி வடஇலங்கையில் அழிந்துபோக வில்லை. தமிழே அங்கு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த தென்பதற்கு நயினாதீவில் அவ்வரசன் தமிழில்மட்டும் வரைந்து வைத்திட்ட சிலாசாசனமும் சான்றாகும்.

இதுவரையும் அரசாண்ட யாழ்ப்பாண மன்னர்கள் சிலகாலம் தனி அரசராயும் சிலகாலம் சோழ அரசுக்கும் பொலனறுவை அரசுக்கும் கீழ்ப்பட்டும் சிங்கைநகரில் அரசு புரிந்து வந்தார்கள். இவர்கள் இராமேஸ்வரத்துப் பிராமண அரச குடியிற் சம்பந்தஞ் செய்த பின் ஆரியச் சக்கரவர்த்திகள் என்னும் நாமம் புனைந்து இராமேஸ்வரத்தையும் தம் ஆளுகைக்குட்படுத்தி, அதனால் சேதுகாவலர் என்னும் புதுப்பெயரையும் புனைந்து இடபக்கொடியும் சேது லாஞ்சனையும் உடையவராய், பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர்களை மாறி மாறிப் பூண்டவர்களாய் அரசு செலுத்தி வந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கலிங்க விஜயவாகு அல்லது கலிங்கமாகன் என்பவன் பொலனறுவையின் மீது படையெடுத்துச் சென்று அந்நகரைக் கைப்பற்றி அரசாண்டதாக மகாவம்சம் கூறும்.[2] இவனே சிங்கைநகர் ஆரிய அரசர்களுக்குள் முதலாவதாகச் சக்கரவர்த்திப் பட்டமும் கீர்த்திப் பிரதாபமும் பெற்றவனாபடியால் விஜய காலிங்கச் சர்க்கரவர்த்தியெனப் பெயர் பூண்டான். இவன் இலங்கையின் பல பாகங்களிலும் கோட்டைகள் கட்டினதாக நிகாய சங்கிரகம் என்னும் சிங்கள இதிகாசம் கூறும்.[3]

---

1. Ancient Jaffna pp. 266, 267; 2. மகாவம்சம் 80: 56—79; 3. Nikaya Sangraha Eng. Trans. p. 23.

கலிங்க விஜயவாகுவின் காலந் தொடக்கம் சிங்கைநகர அரசர் ஆரியச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் பூண்டனர். விஜயவாகு, தான் பொலனறுவைக்குச் சென்ற பின், பராக்கிரமவாகு என்னும் ஒருவனைச் சிங்கைநகரில் சிற்றரசனுய் அமர்த்தினுன். திருவாண்டிபுரச் சாசனத்தால் ஹொய்சள அரசன் இரண்டாம் நரசிங்கனேடும் மூன்ரும் இராஜராஜ சோழனேடும் இவன் போர் புரிந்தான் எனத் தெரியவருகிறது[1]. "சென்றுகரு நாடகரை யந்தரவல் லியிற்பொருது செயித்த வேந்தும், கன்றிவரு மதவேழக் கரந்துணித்துப் போசலனைக் கடிந்த வேந்தும்"[2] எனச் செகராசசேகரமாலைச் சிறப்புப் பாயிரம் இவனைப் புகழ்ந்து கூறும்.

விஜய காலிங்கனுக்குப் பின் அவன் மகன் குலசேகர சிங்கை ஆரியன் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனுனுன். கி. பி. 1256 - ல் சடாவர்மன் சுந்தர பாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்து வந்து தென்னிலங்கை அரசனை வென்று தன் மீனக்கொடியைத் திரிகோணமலையில் நாட்டி மீன முத்திரையையும் அவ்விடத்தே பொறித்து, யாழ்ப்பாணத்து அரசனுகிய குலசேகரனையும் வென்று அவன் திறை கொடுக்க மறுத்தபோது அவனைக் 'கருமுகில் வேழங்' காலிற் சேர்த்து[3]க் கட்டிக்கொண்டு திரும்பியதாகக் கூறப்படுகின்றது. குலசேகரன் அரசியல் முறைகளில் அநேக திருத்தங்களையும் மாறுதல்களையும் செய்தான். அத்துடன் தனக்கும் தன் குடிகளுக்கும் வருவாய் பெருகும்படி வேளாண் தொழிலையும் நன்னிலைக்குக் கொண்டுவந்தான்.

குலசேகரனுக்குப் பின் அவன் மகன் குலோத்துங்க சிங்கையாரியன் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனுனுன். இவன் காலத்தில் புவனேகவாகு என்பவன் தென்னிலங்கை அரசனுய் யாப்பாகு என்னும் இடத்தை இராசதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்தான். இதுவரை மன்னூர்க் கடலில் முத்துக் குளிக்கும் உரிமை சிங்கைநகர் அரசருக்கே உரியதாய் இருந்தது. ஆனுல் குலோத்துங்கனுக்கும் புவனேகவாகுவுக்கும் அவ்வுரிமை பற்றி விவாதம் உண்டாகிப் போர் மூண்டது. குலோத்துங்கன் பெரும் கடற்படையுடன் வந்து புவனேகவாகுவை வென்று யாப்பாகுவை அழித்துப் புத்த சமயிகளாற் போற்றப்பட்டு வந்த புத்த தந்தத்தையும் கவர்ந்து

1. Epigra. Indic Vol. VII p. 163; 2. செகராசசேகரமாலை சிறப்புப் பாயிரம் 6; 3. செந்தமிழ்த் தொகுதி IV பக். 515.

சென்றான். இங்ஙனம் வெற்றிபெற்ற ஆரியச் சக்கரவர்த்தி பாண்டிய மந்திரியென மகாவம்சம் கூறுகின்றது.[1] எங்ஙனமாயினும் அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளிலும் இலங்கை முழுவதிலும் சிங்கைநகர் அரசன் விடைக்கொடியே விளங்கியது.

கி. பி. 1284-ல் சீனாவில் இருந்து மேலைத் தேசத்திற்குப் போகும் மார்க்கத்தில் யாழ்ப்பாணத் துறைமுகம் ஒன்றில் இறங்கிய மார்க்கோ போலோ (Marco Polo) என்னும் வெனிஸ் நகரப் பிரயாணி யாழ்ப்பாணத்தைப் பற்றித் தம் பிரயாண நூலில் விவரமாகக் கூறியிருக்கின்றார். அக்காலத்தில் இலங்கை முழுவதும் சந்தேமன் என்னும் வட இலங்கை அரசனுடைய ஆட்சியில் இருந்ததென்றும், குடிகள் அரிசியும் எள்ளும் பாலும் மாமிசமும் ஆகியவற்றை உணவாக உண்டார்கள் என்றும், கள்ளும் அகிலும் மலிந்து விளங்கின வென்றும், அகில் வேறிடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு கோளம் என்னும் துறையிலிருந்து பிறதேசங்களுக்கு ஏற்றப்பட்டது என்றும், இத் துறைமுகத்துக்கே சீனாவிலிருந்தும் அரபியா முதலிய மேலைத் தேசங்களிலிருந்தும் கப்பல்கள் வியாபார காரணமாக வருவது வழக்கமென்றும் அவர் கூறியிருக்கின்றார்[2].

பதினான்காம் நூற்றாண்டில் தென்னிலங்கை அரசர்கள் யாழ்ப்பாண அரசர் தாக்குதலிலிருந்து தப்புவதற்காகத் தங்கள் இராசதானியைக் குருநாக்கலுக்கும் தம்பதேனியாவுக்கும் மலை அரண் உடையதும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிக தூரத்திலுள்ளதுமான கம்பளைக்கும் மாற்றி மாற்றி வந்தனர். சோழபாண்டிய சேனைகளுடன் வந்த வன்னியர் பிரதானிகள் பலர் இலங்கையின் செழிப்பையும் நீர்ப்பாசனத்துக்கு அமைந்த குளங்களையும் கண்டு தங்கள் பரிவாரங்களுடன் நீர்வளம் நிலவளம் செறிந்த இடங்களில் தங்கி வேளாண்மை செய்து வந்தார்கள். காலகதியில் யாழ்ப்பாண அரசரின் வலியும் சிங்கள அரசரின் வலியும் குன்றியபோது தாம் தாம் குடியிருந்த இடங்களைத் தாம் தாமே ஆளவேண்டுமென நோக்கங்கொண்டு பனங்காமம், குமாரபுரம், ஓமந்தை, தம்பலகாமம், அடங்காப்பற்று என்னும் இடங்களில் அதிகாரம் செலுத்தத் தொடங்கினர்.

கி. பி. 1310-ல் பாண்டிநாட்டு அரசுரிமை காரணமாகப் பாண்டிய இராச குமாரர் இருவர்க்கிடையே கலகம் நிகழ்ந்தபோது சிங்கை

1. மகாவம்சம் 90: 43—47; 2. Travels of Marco Polo Eng. Trans. Vol. II p. 296.

நகர அரசனை வரோதய சிங்கை ஆரியன் சுந்தர பாண்டியனுக்கு அரசுரிமை பெறுதற்கு உதவிபுரிந்தான். இச் செய்தி "கோமாறன் கரகமல மோடைபட்டங் குளமீது குவியக் கண்டு, மாமாரி மதகளுழிக் கிளையானைச் செம்பொனுடன் வழங்கு வேந்தன்"[1] எனச் செகராசசேகர மாலைச் சிறப்புப்பாயிரத்திற் புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றது இவ் வரசன் காலத்தில் யாழ்ப்பாணத்துறை யொன்றில் வந்திறங்கிய பிரயர் ஓடறிக் (Friar Odoric) என்னும் கத்தோலிக்க குரு அந் நாளில் இந்நாட்டிலிருந்த செல்வத்தைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

அவர் யாழ்ப்பாணத் தரசனுக்கு ஏராளமான பொன்னும் வெள்ளியும் உலகில் மற்றெங்கு மில்லா நன்முத்துகளும் உண்டென்றும், அவ்வரசன் கழுத்திலே மூன்னூறு பெரு முத்துக்களால் ஆக்கப்பட்ட மாலையொன் றணிந்திருந்தான் என்றும், கையில் ஒருசாண் நீளமும் அகலமும் உள்ள இரத்தினக்கல்லாலாய மோதிர மொன்று இருந்த தென்றும், அது பெரும் சோதியுடையதென்றும் தம் நூலில் எழுதியிருக்கின்றார்.[2]

வரோதயன் தமிழை வளர்த்தலில் பெருவிருப்புடையவனாய்த் தன் தேசத்திலும் தென்னிந்தியாவிலும் இருந்து தமிழ்ப் புலவர்களையும் பண்டிதர்களையும் வரவழைத்துச் சங்கமொன்று கூட்டி அவர்களைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குவித்து வந்தான்.[3] அவனமைத்த சங்கம் பின்வந்த அரசர்களாலும் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

கி. பி. 1344-ல் மாலைதிவிற் குடியேறியிருந்த இபின் பட்டூட்டா (Ibn Batuta) என்னும் மகமதியப் பிரயாணி புயற்காற்றின் வேகத்துக்குத் தப்பும்பொருட்டு யாழ்ப்பாணப் பட்டினத் துறையைச் சேர்ந்து சில நாள் ஆரியச் சக்கரவர்த்தியின் நாட்டில் தங்கியிருந்தான். அவன் கூறியிருக்கும் விபரங்களைக் கொண்டு சிங்கைநகர ஆரியச் சக்கரவர்த்திகள் அற்றைநாளிற் படைத்திருந்த வலி, அரண், படை முதலியவற்றின் பெருக்கங்களை அறியலாம்.

கி. பி. 1347-ல் குணபூஷண சிங்கையாரியன் பட்டத்துக்கு வந்தபோது அவன் தக்க பராயமற்றவனாய் இருந்தமையால் அவன் தாயே இராச்சியபாரத்தை யேற்று அரசியலை நடாத்தி வந்தாள். அடுத்த

1. செகராசசேகரமாலை சிறப்புப்பாயிரம் 9; 2. Col. Yules Cathay and the Way Thither p. 84, etc; 3. கைலாயமாலை 209, 210.

ஆண்டில் ரோமாபுரிக் கத்தோலிக்க சபைத் தலைவராகிய போப் பாண்டவராற் சீனவுக்கு அனுப்பப்பட்ட தானபத்தியத் தலைவராகிய யோவான் தே மாரிஞொல்லீ (John de Marignolli) என்பவர் தாம் போகும் வழியிற் கோவளத்தில் இறங்கித் தம்மாற் சபாவென்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாணநாட் டரசியைக் காணச் சென்றார். அவர் தம் குறிப்பில் கீரிமலை நீரூற்றையும் யாழ்ப்பாணநாட் டரசியையும் பலவாறு புகழ்ந்து கூறியிருக்கின்றார்.[1] கி. பி. 1375-ல் வரையப்பட்ட கற்றலன் மாப் (Catalan Map) என்னும் இலங்கைப்படத்தில் வட இலங்கையிற் பெண்ணரசு நடந்ததாக வரையப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

குணபூஷணனுக்குப் பின் அவன் மகனுகிய வீரோதயசிங்கையாரியன் அரசனுனன். அவன் ஆட்சியிற் குழப்பங்களும் சண்டைகளும் அதிகமாயின. வன்னிப்பிரதானிகள் சிங்களப் பிரசைகளைத் தூண்டி அவர்கள் உதவியுடன் கலகம் விளைத்தனர். அரசன் தன் படையுடன் சென்று கலகத்தை அடக்கி வன்னிநாட்டைக் கொள்ளைகொண்டு வன்னியர் செருக்கறுத்து அவர்களுக்குத் துணைபுரிந்த சிங்களரையும் தண்டித்தான். பின் இக்காலத்தில் தனக்குத் துணையாய் நின்ற ஓமந்தைச் சிறு பிரதானிக்குச் சிற்றரச பட்டமும் வரிசைகள் பலவும் நல்கி அவனை ஏனைய வன்னிய பிரதானிகளுக்குத் தலைவனுகவும் நியமித்தான். இச்செய்தியை, "பாய்மாவு நிதிக்குலமும் பட்டமுநீ டரசுரிமைப் பதியு மிக்க, தேமாலை புனைபுயத்தோ மந்தையர்கோன் றனக்களித்த செங்கை வேந்தன்"[2] எனச் செகராசசேகரமாலை புகழுகின்றது.

வீரோதயனுக்குப் பின் அவன் மகன் செயவீரசிங்கையாரியன் செகராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனுனன். இதுவரை சிங்கைநகர் அரசருக்குத் திறை கொடுத்து வந்த தென்னிலங்கை அரசர் இவன் காலத்திற் சிறிது வலிபெற்றனர். கி. பி. 1386-ல் கோட்டை அரசனுய் இருந்த அளகைக்கோனுர் என்பவன் தன்னிடம் திறை வாங்கும்படி சிங்கைநகர் அரசன் அனுப்பிய தூதர்களைத் தூக்கிலிட்டுக் கொன்று திறையிறுக்கவும் மறுத்தான். இதனைக் கேள்வியுற்று மிகுந்த சீற்றம் கொண்ட செயவீரன் ஒருலட்சம் போர் வீரர்களைக் கொண்ட தன் சேனையை இரு கூருக்கி ஒரு கூற்றைக் கடல் மார்க்கமாகவும் மற்றதை வன்னி மாத்தளை வழியாற் கம்பளைக்

1. Col. Yule's Cathay and the Way Thither p. 354 etc;
2. செகராசசேகரமாலை சிறப்புப்பாயிரம் 9.

கும் அனுப்பிக் கோட்டையையும் கம்பளையையும் ஒரே சமயத்தில் தாக்கும்படி ஏவினன். தரைமார்க்கமாய்ச் சென்ற படை மாத்தளைக் குட் புகுந்ததை அறிந்த கம்பளை அரசனுகிய புவனேகவாகு அப் படைக்கு எதிர்நிற்க அஞ்சி றயிகமம் என்னும் ஊருக்குச் சென்று ஒளித்தனன். கடற்படை நீர்கொழும்பு, கொழும்பு, பாணந்துறை என்னும் இடங்களில் இறங்கி தெமற்றகொடை என்னும் இடத்திற் பாளயம் வகுத்து அங்கிருந்து பாணந்துறைவரையும் பெருகியது; அத்துடன் வத்தளை, நீர்கொழும்பு, சலாபம் என்னுமிடங்களையும் முற்றி நின்றது. சிங்கள இதிகாசங்கள் இப்படையைப் பற்றிக் கூறும் போது அது பெருக்கத்தாலும் ஆற்றலாலும் சமுத்திரத்தை ஒக்குமெனவும் விஷப் படல்களையும் நாடகசாலைகளையும் உடைத்தாய் இருந்ததெனவும் கூறுகின்றன. அளகைக்கோனுக்கே வெற்றி கிடைத்ததெனச் சிங்கள நூல்கள் கூறியபோதிலும் இக் கூற்று உண்மையன்றென எண்ண இடமுண்டு. சில காலத்துக்கு முன் கேகாலைப்பகுதி கோட்டகம என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்டு இப்பொழுது கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கும் சிலா சாசனம் ஒன்றில்,

> "கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினர் காமர்வளைப்
> பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார்—பொங்கொலிநீர்ச்
> சிங்கைநகக ராரியனைச் சேரா வனுரேசர்
> தங்கள்மட மாதர் தாம்."

என்னும் வெண்பா பொறிக்கப்பட்டிருக்கின்றது. இச்சாசனத்தின் துணைகொண்டே சிங்கைநகர் அரசன் வெற்றிபெற்றுன் என்பதும் இச்சிலை அவ்வெற்றியின் ஞாபக சின்னமென்பதும் தெளிவாகின்றன.

யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறப்பட்ட செகராசசேகரன் என்பவன் இச்செயவீரனே. இவனே செகராசசேகரம் என்னும் வைத்திய நூலையும் செகராசசேகரமாலை என்னும் சோதிட நூலையும், காரிவையாவின் கணக்கதிகாரம் என்னும் கணித நூலையும் இயற்றுவித்தவன். வைத்திய நூலிற் சர்ப்ப சாஸ்திரப் பிரிவின் 8-ம் பாட்டில் "இலங்கை வேந்தர் சிரியபொன் திறையளக்கச் செங்கோலோச்சுஞ் செகராசசேகரன் சிங்கைமேவு மாரியர்கோன்" என இவன் புகழப்பட்டிருக்கின்றான். தட்சண கைலாச புராணமும் இவன் காலத்திலேயே

1. Nikaya Sangraha Eng Trans p. 26.

ஆக்கப்பட்டது. யாழ்ப்பாணத்து அரசர் பலருள்ளும் இச் செயவீரனே நடுநிலை தவறாத செங்கோற் சிறப்பாலும் படை வலியாலும் செந்தமிழ் அறிவாலும் சிறந்தவன். செகராசசேகரன் என்னும் பட்டப் பெயர் புனைந்த மற்றைய அரசர்களின் பெயர்கள் வழக்கிழந்தொழிய இவன் பெயர் மாத்திரமே மிகச் சிறந்து புகழ்பெற்று நிலவி நின்றமையால் பிற் சரித்திரக்காரர் செகராசசேகரன் ஒருவனே என்று எழுதிவிட்டனர்.

செகராசசேகரமாலை முதலிய அக்கால நூல்களிலிருந்தும் பிற குறிப்புகளிலிருந்தும் அந்நாளைய அரசாட்சி நிலையைப்பற்றிப் பல விபரங்களை நாம் அறியக்கூடியதாயிருக்கின்றது.

யாழ்ப்பாணத்து அரச நாணயம் செப்புக் காசுமட்டுமே போலும். இவை இக் காலத்துச் சதமும் சிறிது காலத்துக்கு முன்னிருந்த அரைச் சதமும் போன்றவை. பொன் வெள்ளிக் காசுகள் பிறநாட்டரசருடையவை. பன்றி உருவந் தாங்கிய வராகன்களும் கப்பற் சித்திரமுடைய 'சாண்டான் காசு'ம் இங்கு வழங்கிஇருத்தல் கூடும். இவை மாத்திரமன்றி ரோமரின் பொன் வெள்ளிக் காசுகள் கூட யாழ்ப்பாணத்தின் வெவ்வேறிடங்களிற் புதையலாய்க் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகமதியர்கள் தமிழ்நாட்டிற்குப் படைஎடுத்து வந்தபோதும் அந் நூற்றாண்டின் இறுதியிற் கம்பண்ணநாய்க்கன் தமிழ்நாட்டைக் கைப்பற்றியபோதும் பல உயர்ந்த தமிழ்க் குடும்பத்தினர் தம் அடிமை குடிமைகளுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து குடியேறினர். அங்ஙனம் வந்த பெருமக்களைச் சிங்கை நகர் அரசரும் வரவேற்று வேண்டிய சன்மானம்செய்து ஆதரித்து வந்தார்கள்.

கி. பி. 1410-ல் செயவீரன் சகோதரன் குணவீரசிங்கைஆரியன் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனானான். இராமேச்சுரக் கர்ப்பக்கிரகத்தைக் கட்டுவித்தவன் இவனே. திருப்பணிக்கு வேண்டிய கருங்கற்களைத் திருக்கோணமலையில் வெட்டுவித்து அங்கு அனுப்பினான். இப் பிரதிட்டையைப் பற்றிய சாசனமும் சென்ற நூற்றாண்டுவரை கர்ப்பக்கிரகச் சுவர்களிற் பதிக்கப்பட்டிருந்தது.[1] இப் பரராசசேகரனும் தமிழை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தான்.

1. Archaeological Suruey of South India, Vol. IV. pp. 56, 57.

பரராசசேகரம் என்னும் சிறந்த வைத்திய நூல் இவன் காலத்தில் எழுதப்பட்டது.

குணவீரசிங்கனுக்குப் பின் அவன் மகனாகிய கனகசூரிய சிங்கையாரியன் ஆட்சிபுரியும்போது கோட்டை அரசனாகிய ஆறும் பராக்கிரமவாகு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு தன் சேனாபதியாகிய செண்பகப்பெருமாளை ஒரு சேனையுடன் அனுப்பினான். கனகசூரியன் போரில் தோற்றுத் தன் குடும்பத்துடன் இந்தியாவுக்கு ஓடிப்போய்த் திருக்கோவலூரிற் கரந்துறைந்தான். செண்பகப்பெருமாள் தலைநகராகிய சிங்கைநகரிற் புகுந்து கண்டவரையெல்லாம் கொன்று நகரில் விளங்கிய மாட மாளிகைகளையெல்லாம் இடிப்பித்துத் தரைமட்டமாக்கி நகரை அழித்துவிட்டான். பின் பராக்கிரமவாகு யாழ்ப்பாணத்தை அரசு புரியுமாறு செண்பகப்பெருமாளுக்குக் கட்டளையிட அவன் அங்கு சென்று பழைய தலைநகர் பாழாய்விட்டமையினால் நல்லூரிலே கி. பி. 1450–ல் ஒரு புது நகரை அமைத்து ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு என்னும் நாமத்தோடு 17 வருடங்களாக அரசுசெய்து வந்தான். இவன் யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்களநாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைத்தது. இவ் வெற்றியைப் புகழ்ந்து கோகில சந்தேச என்னும் குயிற்றூதுப் பிரபந்தம் தங்காலையிலிருந்த சிங்களப் புலவர் ஒருவராற் பாடப்பட்டது.

இவ் வரசனே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தவன். அக்கோயிற் கட்டியத்தில் இன்றும் இவன் ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு எனப் புகழப்படுகிறான். கி. பி. 1467–ல் கோட்டையை ஆண்ட ஆறும் பராக்கிரமவாகு இறக்க அதனைக் கேள்வியுற்ற செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தை விட்டுக் கோட்டை சென்று தென்னிலங்கை அரசைக் கைப்பற்றி ஆறும் புவனேகவாகு என அரசு புரிவானாயினான்.

புவனேகவாகு கோட்டை அரசனானபோது யாழ்ப்பாணத்தை ஆளுவதற்கு விசயவாகு என்னும் ஒருவனை நியமித்தான். விசயவாகு அரசுபுரியும்போது கனகசூரியன் ஒரு பெரும் சேனையோடு யாழ்ப்பாணம் திரும்பிவந்து அவனைப் போரில் வென்று தான் அரசனாகி நல்லூரில் இருந்து அரசாண்டான். தன் பழைய இராசதானியாகிய சிங்கைநகர் அழிந்து காடாய்ப்போனதால் நல்லூர் பல வளங்களும் பொருந்தியதாயிருத்தலைக் கண்டு அதனையே புதுக்கியும் பெருப்பித்தும் எல்லா வகையாலும் சிறந்த நகரமாக்கினான்.

கனகசூரியனுக்குப் பின் அவன் குமாரன் சிங்கைப் பரராசசேகரன் என்னும் நாமத்தோடு கி. பி. 1475-ல் அரசனானன். இவனே சிங்கை என்னும் பெயரை முதன்முதலாகத் தலைப்பெயரா யமைத்தவன். இவன் தன் தந்தையினும் சிறந்தவனாய்த் தன் நகரத்திற்கு நான்கு புறத்திலும் நான்கு கோயில்கள்[1] அமைத்து நகரை முன்னையிலும் அணிபெற விளங்கவைத்தான். கந்தசுவாமி கோவிலுக்குச் சமீபத்தில் ஓர் ஏரி அமைப்பித்து யமுனை நதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளிற் கொண்டுவரச்செய்து அவ் வேரிக்குள்ளே பெய்வித்து அதனை யமுனை ஏரி (யமுனாரி) எனப் பெயர்தந் தழைத்தான்.

முன் செண்பகப்பெருமாள் வெற்றி கொண்டபோது சிதைந்த தமிழ்ச் சங்கத்தை மீண்டுந் தாபிக்க விரும்பி இவன் புலவர்களை ஒருங்குசேர்த்து முன்போற் கழகம் நிறுவி வித்துவான்களுக்கு வேண்டிய சன்மானங்கள் செய்து தமிழ் மொழியைப் பொன்போற் போற்றி வளர்த்து வந்தான். இவனவையில் இவன் மைத்துனரும் வடமொழி தென்மொழியாகிய இருமொழிகளிலும் வல்ல புலவருமாகிய அரசகேசரி இரகுவம்சம் என்னும் நூலை வடமொழியிலிருந்து பெயர்த்துத் தமிழிலாக்கி அரங்கேற்றினர். பரராசசேகரன் உலா என்னும் நூலும் இவன் காலத்திலேதான் ஆக்கப்பட்டதெனச் சில அறிஞர் கருதுகின்றனர்.

பரராசசேகரனுக்குச் சிங்கவாகு, பண்டாரம், பரநிருபசிங்கம், சங்கிலி என நான்கு புதல்வர் இருந்தனர். அரசன் முதியவனானதும் தன் மூத்த மகனை சிங்கவாகுவுக்குப் பட்டங்கட்டினன். சங்கிலி சூழ்ச்சியால் சிங்கவாகுவையும் பண்டாரத்தையும் கொன்று சேனைகளைத் தன்வயப்படுத்திச் செகராசசேகரன் என்னும் பட்டப்பெயரோடு தானே ஆட்சிபுரியத் தொடங்கினன். தமையனை பரநிருபசிங்கம் மிகுந்த ஏமாற்றமடைந்தவனாய் அரசுரிமையைப் பெறுவதற்குப் போர்த்துக்கேயரின் உதவியை நாடினன். சங்கிலி போர்த்துக்கேயருக்கு வியாபாரத்தைப் பெருக்கவேனும் சமயப் பிரசங்கஞ் செய்யவேனும் இடங் கொடுக்கவில்லை. மேலும் அவன் போர்த்துக்கேயரால் மன்னாரிற் கிறிஸ்தவராக்கப்பட்டார் பலரைக் கொலை செய்தான். அத்துடன் தனது

1. அவ்வரசன் அமைத்த கோயில்கள் பின்வருவன: நல்லூர் சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில். கைலாயநாதர்கோயிலை ஒழிந்த மற்றைய மூன்றும் இன்றும் இருக்கின்றன.
— ப-ர்.

கடல்மார்க்கமாகப் போகும் போர்த்துக்கேயக் கப்பல்களையும் சங்கிலி சூறையாடி வந்தான். ஈற்றில் 1560-ம் வருடத்திற் போர்த்துக்கேயர் ஒரு பெரும் படையுடன் யாழ்ப்பாணத்தைத் தாக்கிச் சங்கிலியைத் தோற்கடித்தனர். அதன்பின் ஏற்படுத்திய சமாதான உடன்படிக்கையின்படி சங்கிலி போர்த்துக்கேயரின் கீழடங்கிய ஒரு சிற்றரசனாய் அவர்களுக்குத் திறைசெலுத்த உடன்பட்டான். ஆயினும் சிறிது காலத்துள்ளேயே அவன் போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தினின்றும் துரத்திவிட்டான். ஆனால் மன்னார் மாத்திரம் போர்த்துக்கேயரின் வசமாகவே இருந்தது.

கி. பி. 1565-ல் சங்கிலி இறந்தபின் யாழ்ப்பாண அரசியல் விஷயங்களிற் போர்த்துக்கேயர் மேலும் அதிகமாகத் தலையிடலாயினர். கி. பி. 1582-ல் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனான புவிராசபண்டாரம் என்பவன் பறங்கிகளை மன்னாரினின்றும் துரத்தப் பல முயற்சிகள் செய்து இரு முறையாகத் தாக்கியும் அவர்களை வெல்ல அவனால் முடியவில்லை. பின் கி. பி. 1591-ல் பறங்கியர் மீண்டும் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து அதனைத் தாக்கி வெற்றி கொண்டு புவிராசபண்டாரத்தையும் பிடித்துச் சிரச்சேதம் செய்தனர்.

அதன்பின் எதிர்மன்னசிங்ககுமாரன் என்பவன் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசனாக நியமிக்கப்பட்டான். இப் பரராசசேகரன் காலத்தில் அரசகுடும்பத்தைச் சேர்ந்தோர் எழுவர் யாழ்ப்பாணத்திற் பல இடங்களிலும் அதிகாரிகளாக்கப்பட்டனர். அவர்களுக்கு வேளாளர்களுக்குரிய முதலிப் பட்டத்துடன் அவர் முன்னோர் வசித்த இடமாகிய கலிங்க தேசத்து மடப்பளி என்னும் ஊரின் ஞாபகமாக மடப்பளியார் எனும் குலப் பட்டமும் இடப்பட்டது. இவ் வரசன் காலத்திலேதான், யாழ்ப்பாண வரலாற்றைப்பற்றிய பல குறிப்புகளை எமக்கு உதவும், கைலாயமாலை எழுதப்பட்டது. இம் மன்னன் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த பறங்கியர் பணவாஞ்சையாற் குடிகளைப் பலவாறு துன்புறுத்தி வந்தனர்.

கி. பி. 1616-ல் எதிர்மன்னன் இறக்க மூன்று வயதுச் சிறு குழந்தையான அவன் புத்திரன் அரசனாக்கப்பட்டான். அவனுக்குப் பரிபாலகனாய் இருந்த அரசகேசரி என்பவனைக் கொன்று சங்கிலி என்னும் வேறோர் அரசகுமாரன் தானே இராச்சிய பாரத்தை வகித்து நடத்த

லானான். அவன் பல அக்கிரமங்களைச் செய்து குடிகளின் வெறுப்புக்கு இலக்கானான். குடிகள் வெறுப்புற்றுக் கலகஞ் செய்தபோது அவன் தஞ்சாவூர் அரசனிடமிருந்து படைத்துணை பெற்று அக்கலகத்தை அடக்கினான். தருணம் பார்த்திருந்த பறங்கியர் அப்பொழுது சங்கிலிக் கெதிராகப் படையெடுத்துவந்து அவனை வென்று சிறைப்படுத்திக் கோவைக்குக் கொண்டுபோய்ச் சிரச்சேதம் செய்தனர்.

கி. பி. 1619-ல் யாழ்ப்பாணத்தை எண்ணூறு வருடங்களாக அரசாண்ட ஆரிய சேகர அரச சந்ததியின் இறுதி அரசன் கைதியாகவே இனிமேல் அக் குடும்பத்தில் ஒருவனை அரசனாக நியமிப்பதிற் பயனில்லை எனக்கண்டு போர்த்துக்கேயர் தம் சேனாபதியாகிய பிலிப்தே ஒலிவேரா என்பவனை யாழ்ப்பாணத்தில் தேசாதிபதியாக நியமித்தனர். அவ்வளவோடு யாழ்ப்பாணத் தனியரசும் முடிவடைந்துவிட்டது.

யாழ்ப்பாண அரசு சாதித்த விஷயங்களுள் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்ததாக எடுத்துப் பாராட்டத்தக்கது இலங்கையில் தமிழ்க் கலாசாரத்தை நிலைநாட்டியமையாகும். யாழ்ப்பாண அரசின்பின் தமிழர் மொழி, நாகரீகம், பண்பாடு, சமயம் ஆதியன இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வேரூன்றிவிட்டன. சிங்களருடைய பௌத்த கோவில்களிலும் இந்துமதத் தேவர்களாய கணேசர், சுப்பிரமணியர், விஷ்ணு முதலியோரின் உருவச் சிலைகள் அமைந்துவிட்டன. அக் கோவில்களில் இத் தெய்வங்கட்கு வழிபாடுகளும் நிகழ்ந்தன. தமிழ்ச் சொற்களும், சொற்றொடர்களும், மரபுகளும் அதிகமாகச் சிங்கள மொழிக்குட் புகுந்துவிட்டன. சிங்களநாட்டில் தமிழர் வாழ்ந்த ஊர்களும், பிரதேசங்களும் தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்படலாயின. வடமத்திய மாகாணத்தில் எத்தனையோ குளங்கள் இன்றும் தமிழ்ப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. தமிழரின் ஓவிய முறை, சிற்பமுறைகளும் தமிழ் நாகரீகமும் சிங்கள சமூகத்திற் செறிந்து வேரூன்றிவிட்டன.

யாழ்ப்பாணத் தனியரசு முடிவடைந்தபின் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள்வரை போர்த்துக்கேயரும், நூற்றைம்பது ஆண்டுகள்வரை ஒல்லாந்தரும் இந் நாட்டை ஆண்டுவந்தனர். இவர்கள் ஆட்சிக் காலத்தில் வன்னி நாட்டிலுள்ள குளங்கள் ஆண்டுதோறும் கட்டுகள் உடைந்துவர அவைகளைத் திருத்திக் கட்டுவோரின்மையால் வேளாண்மையும் குறைந்து வந்தது. காட்டுக் காய்ச்சலும் அக் காலத்தில்தான்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் [பக்கம் - 45]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்



வித்துவசிரோமணி
ந. ச. பொன்னம்பலபிள்ளை [பக்கம் - 48]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்



இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை [பக்கம் – 49]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னுகம்



அ. குமாரசுவாமிப் புலவர் [பக்கம் – 50]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னுகம்

வன்னிநாட்டிற் காலூன்றத் தொடங்கியது. யாழ்ப்பாண அரசின் காலத்தில் செழிப்பும் செல்வமும் பெற்று உன்னத நிலையிலிருந்த வன்னிநாடு, காட்டுக் காய்ச்சலின் உக்கிரத்தைத் தடைபண்ண வேண்டிய முயற்சியில் அரசினர் முயலாதபடியால் பின்னர் மனித சஞ்சார மற்ற காடாகிவிட்டது. வட இலங்கைத் தமிழ்க் குடிகள் தொகையிற் குறைந்தமைக்கு இதுவே முக்கிய காரணம்.

யாழ்ப்பாண அரசின் பெருமையும், அது பொதுவாகக் கலைவளர்ச்சியிலும் சிறப்பாகத் தமிழ் வளர்ச்சியிலும் எத்துணை ஆர்வங் கொண்டுள்ள தென்பதும், அவ்வார்வத்தை நிறைவேற்றுவதற்கு எத்தகைய உறுதியான முறையில் அடிகோலிய தென்பதும், அவ்வரசு முடிவடைந்த பின்பும் நம் நாட்டிற் கலைவளர்ச்சியும் தமிழ்வளர்ச்சியும் எங்ஙனம் தொடர்ந்து நடைபெற்றன வென்பதை நோக்குவார்க்கு இனிது விளங்கும்.

ஒல்லாந்தர் ஆளுகைக் காலத்தில் யாழ்ப்பாணத் தமிழரின் வழக்கங்கள் 'தேச வழமை' என ஒரு சட்ட நூலாகத் தொகுக்கப்பட்டன. அக் காலத்தே வாழ்ந்த அறிஞர் பலர் அநேக நூல்களை இயற்றித் தமிழ் வளர்ச்சிக்காக உழைத்துவந்தனர். சிவஞானசித்தியாருக்கு உரையியற்றிய ஞானப்பிரகாச தம்பிரானும், சிவராத்திரிபுராணம், பிள்ளையார்கதை முதலிய நூல்களியற்றிய வரதபண்டிதரும், மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, பருளை விநாயகர் பள்ளு முதலிய நூல்களியற்றிய சின்னத்தம்பிப் புலவரும், யாழ்ப்பாண வைபவமாலை, புலியூர் யமக வந்தாதி முதலிய நூல்களியற்றிய மயில்வாகனப் புலவரும் அக் காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களாவர்.

மிகுந்த பழமையும் பெருமையும் வாய்ந்த நம் தாய்நாட்டின் வரலாற்றை மேலும் விரிவான முறையிற் செவ்வனே ஆராய்ந்து வெளியிடுதல் நம் நாட்டு அறிஞரின் கடனாகும். சரித்திரத் துறையிலும் இலக்கியத் துறையிலும் புலமை வாய்ந்த பெரியோர்கள் இம் முயற்சியில் ஈடுபட்டு உழைப்பார்களாயின் சிறந்த பயனுண்டாகு மென்பது திண்ணம்.

# ஈழநாடும் தமிழும்

வித்துவான்–பண்டிதர், திரு. கா. பொ. இரத்தினம் பி. ஏ., பி. ஓ. எல்.

இக்காலத்திற் பல நாடுகளிலே தமிழ் வழங்குகிறது. தென்னிந்தியாவிலும், இலங்கை, பர்மா, மலாயா, பீஜித்தீவுகள், தென்னாபிரிக்கா முதலிய இடங்களிலும் தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்நாடுகளுள்ளே தென்னிந்தியா பண்டுதொட்டுத் தமிழகமாக விளங்குகிறது. ஏனைய நாடுகளில் இலங்கைமாத்திரமே மிகப் பழைய காலம் தொடக்கம் தமிழகத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. வடமொழியிலுள்ள இதிகாசங்களாகிய இராமாயணம், பாரதம் என்பனவும் புராணங்கள் பலவும் இரு நாட்டையும் பல துறைகளிலே இணைத்துள்ளன. பழந்தமிழ் நூல்களிலும் இலங்கையிணைப்பற்றிய செய்திகள் பலவுள. அவை இலங்கையை ஈழம் எனவுங் கூறுகின்றன. கடல்கொண்ட பழந்தமிழ்க் கண்டமாகிய குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாகப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் ஈழம் இலங்கியது. சேர சோழ பாண்டிய நாடுகளுடன் ஈழநாடும் சேர்ந்து மிகப் பெரிய தமிழகமாக விளங்கியது. கடல் கோளினால் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்ட பின்னரும் ஈழநாடு தென்னிந்தியத் தமிழ்நாடுகள் போலத் தமிழினை வளம்படுத்தி வந்துளது; தமிழ்ச் சங்கங்களை நிறுவியுளது; தமிழரசும் பெற்றிருந்தது. தமிழர்களே அன்றிச் சிங்களமன்னரும் தமிழினை அரசியல் மொழியாகக் கொண்டுளர். தென்றமிழ்ப் பாவையாக விளங்கிய கண்ணகிக்குத் தமிழ்நாட்டிலே கோயில் எடுத்த காலத்துக் கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும் ஈழத்திலே கோயில் எடுத்துப் பத்தினித் தெய்வத்தை வழிபட்டான் என்று சிலப்பதிகாரம் உரைக்கிறது. இன்னும் ஈழநாடு தேவாரம் பெற்ற திருகோணமலை, மாதோட்டம் எனும் தலங்களினாலும், திருப்புகழ்பெற்ற கதிர்காமத்தினாலும் சிறந்து விளங்குகிறது.

**தொல்குடிகள்**

இத்தகைய ஈழநாட்டின் தொல்குடிகள் நாகர் எனப்படுவர். நாகர்கள் தமிழ்ப்புலமையிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய பழந்தமிழர்களேயாவார்கள். தென்னிந்தியநாட்டிலும் நாகர்கள் வாழ்ந்தனர். நாகர் வம்சத்தைச் சேர்ந்த பல புலவர்களையும் வீரர்களையும்

பற்றிப் பழந்தமிழ் நூல்களும் குறிப்பிடுகின்றன. முரிஞ்சியூர் முடி நாகராயர் எனும் புலவர் முதற்சங்க காலத்தில் வாழ்ந்தார். நன்னாகனார், மதுரை மருதனிளநாகனார் முதலிய புலவர்கள் கடைச்சங்க காலத்தவர்கள். நாகபட்டினம், நாகர்கோவில் முதலிய இடங்கள் இன்னும் நாகர்களை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன.

ஈழநாட்டின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணம் முன்னர் நாகதீபம் எனப் பெயர்பெற்று விளங்கியதென்பது மகாவம்சம் முதலிய நூல்களால் தெளிவாகப் புலப்படுகிறது. நாகர்கள் நாகரிகமாக வாழ்ந்த இந்த நாகதீபத்தினையே மணிமேகலையும் மணிபல்லவமெனக் குறிப்பிடுகிறது. நாகதீபத்திலும் ஈழத்தின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த நாகர்களிற் பெரும்பாலானோர் சிங்களராகினர். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு வந்த விசயன் எனும் அரச குமாரனையே தமது முதல் அரசன் எனச் சிங்கள மக்கள் கொண்டாடுகின்றனர். அவனுடன் வந்த வீரர்களும் நாகர்களும் தமிழர்களும் கலந்து ஏற்பட்ட சாதியினரே சிங்களராவர்.

**தமிழர் ஆட்சி**

சிங்களர் தோன்றுவதற்கு முன்னரும் ஈழத்திலே தமிழர் வாழ்ந்தனர். விசயன் காலத்தின் பின்னரும் தென்னிந்தியாவிலிருந்து பல தமிழர்கள் வந்து ஈழத்திற் குடியேறியுளர். இக் குடியேற்றம் இன்று வரையும் இடையிடையே நடந்துகொண்டே இருக்கிறது. தமிழ் வீரர்களும் சோழ பாண்டிய மன்னர்களும் படையெடுத்துவந்து இலங்கையை வென்று ஆண்ட காலங்களிலும் தமிழர் பலர் இங்கு வந்துளர். இவ்வாறு ஈழம் புக்குப் பெருகிய தமிழர்கள் இப்பொழுது ஈழத்தின் பல பகுதிகளிலும் வாழுகின்றனர். மத்திய பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தேயிலை ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்வதற்காகச் சென்ற நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் வந்து குடியேறியவர்கள். ஆனால், வடமாகாணத்திலும் கீழ்மாகாணத்திலுமுள்ளோர் மிகப் பழைய காலந் தொடக்கம் வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் முன்னோர் யாழ்ப்பாணத்திலே கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தனித்தமிழ் அரசு செய்யத் தொடங்கினார்கள். இதற்கு முன்னரும் தமிழர்கள் இலங்கை முழுவதையும் இடையிடையே ஆண்டு வந்திருக்கிறார்கள். யாழ்ப்பாண அரசர்கள், ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் பதினேழாம் நூற்றாண்டுவரையும்—போர்த்துக்கீசர் இலங்கையில் தம்

ஆட்சியை நிறுவின காலம்வரையும் — யாழ்ப்பாணத்தையும் வட இலங்கையையும் ஆண்டு வந்திருக்கிறார்கள்.

**புலவர்களும், புரவலர்களும்**

யாழ்ப்பாண அரசர்களுடைய காலத்திலும், அதற்கு முன்னரும், போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இலங்கையில் ஆட்சி செய்த காலங்களிலும் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்கள் தமிழ்மொழியினை நன்கு வளர்த்து வந்திருக்கின்றனர். தமிழ் அரசர்களும் வள்ளல்களும் தமிழ்ப்புலவர்களை ஆதரித்தனர். இடையிடையே சிங்கள அரசர்களுடைய ஆதரவும் தமிழ்ப்புலவர்களுக்குக் கிடைத்தது. தென்னிந்தியாவிலிருந்து புகழேந்திப் புலவர், அந்தகக்கவிவீரராகவர் முதலிய புலவர்கள் ஈழநாட்டுக்கு வந்து பரிசில்கள் பெற்றுச் சென்றனர். புலவர்களுக்கு அரசர்களும் குடிமக்களும் அளவின்றிப் பரிசில் ஈந்தனர். யாழ்ப்பாணம் எனும் நாடு தொண்டைநாட்டிலிருந்து வந்த யாழ்ப்பாணனுக்குப் பரிசிலாக அளிக்கப்பட்டதாலேயே இப் பெயர் பெற்றதென்பர். ஈழத்தவர் புலவர்களுக்கு வரையாதீந்த இப் பெருஞ் சிறப்பினைச் சின்னத்தம்பிப்புலவர்,

> பண்ணிற் றோயப் பொருள்முடிப் புக்கட்டிப்
> பாடும் பாவலர்க் கீந்திட வென்றே
> யெண்ணிப் பொன்முடிப் புக்கட்டி வைத்திடு
> மீழமண்டல நாடெங்க ளூடே.

எனும் பாட்டினாற் புலப்படுத்தினார். இவ்வாறு புலவர் போற்றும் புகழ்படைத்த ஈழநாட்டிலே வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் செய்த தமிழ்ப்பணிகளும் அவர்களியற்றிய நூல்களும் பலவாகும்.

**ஆதிகாலம்**

கடைச்சங்க காலத்திலே தோன்றிய நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை முதலியவற்றிலே ஈழத்துப் பூதன்றேவனார் பாடிய ஏழு பாடல்கள் காணப்படுகின்றன. பூதன்றேவனார் ஈழநாட்டிலிருந்து தமிழ்நாடு சென்று அங்கே மதுரையிற் றங்கித் தமிழ்ப் பாடல்களைப் பாடினார். கடைச்சங்க காலத்தில் ஈழத்திலே தமிழ்ப் புலமையுடையார் பலர் இருந்தனர் என்பதை இவருடைய வரலாறு புலப்படுத்துகிறது. இவருக்குப்பின் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டுவரை ஈழத்திலே தோன்றிய தமிழ்ப்புலவர்களைப்பற்றி யாதும் அறியமுடியவில்லை. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரும்

ஒன்பதாம் நூற்றாண்டினராகிய சுந்தரரும் திருகோணமலை திருக்கேதீஸ்வரம் என்னும் தலங்கள்மேற் றேவாரம் பாடியுளர். இதனால் அவர்களுடைய காலத்திலே இத்தலங்கள் மிகச் சிறந்தனவாயிருந்தன என்பதும் சைவசமயம் இலங்கையிற் பொலிந்ததென்பதும் வெளிப்படை. ஆகவே அக்காலத்திலே இருந்த தமிழ்மக்கள் சமயத்திலும் தமிழிலும் ஆர்வமுடையவர்களாகவே இருந்திருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டிலே புகழேந்திப்புலவர் ஈழநாட்டுக்கு வந்து பரிசில் பெற்றுச் சென்றார். இஃது அக்காலத்திலும் தமிழ்ப் புலவர்களுக்கு ஈழத்திலே இருந்த மதிப்பையும் ஆதரவையும் நன்கு காட்டுகிறது.

**யாழ்ப்பாண அரசர் காலம்**

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத் தனியரசு தொடங்கியதால் இந் நூற்றாண்டிலும் அடுத்த நூற்றாண்டிலும் தமிழ் வளர்ச்சி சிறப்பெய்திற்று. தமிழ்ச் சங்கம் ஒன்றும் சரசுவதி மகாலயமெனும் நூல் நிலையமொன்றும் யாழ்ப்பாணத்துக்குப் பெருமை யளித்தன. பிறநாடுகளிலிருந்தும் புலவர்கள் வந்து தமிழை ஓம்பினர். பராக்கிரமவாகு என்னும் சிங்கள மன்னனுடைய அவையில் போசராச பண்டிதர் என்னும் புலவர் சரசோதிமாலை என்னும் தமது சோதிட நூலை அரங்கேற்றினார். பதினான்காம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட குணபூஷணசிங்கையாரியன் எனும் அரசனுக்கு அடியார்க்குநல்லார் என்னும் புலவர் பெருமான் ஒருவர் மந்திரியாக இருந்தனர். இவரைச் சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதினவர் என்பாருமுளர். இன்னும் இந்நூற்றாண்டிலே, செயவீரசிங்கையாரியன் எனும் செகராசசேகர மன்னன் காலத்திலே செகராசசேகரம் எனும் வைத்திய நூலும், செகராசசேகரமாலையென்னும் சோதிட நூலும், கணக்கதிகாரம் எனும் கணித நூலும் தோன்றின. பண்டிதராசர் எனும் புலவர் இம் மன்னன் காலத்திலேயே தக்ஷிண கைலாச புராணத்தை யியற்றினார் என்பர் சிலர். கோணேசர் கல்வெட்டினையும் இக்காலத்திலேயே கவிராசர் பாடினர் என்பாருமுளர்.

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (குணவீரசிங்கையாரியன் காலத்தில்) பரராசசேகரம் எனும் வைத்திய நூல் தோன்றிற்று. பரராசசேகர மன்னன் காலத்தில் இரகுவமிசத்தை அம் மன்னன் மைத்துனனாகிய அரசகேசரி பாடினார். பரராசசேகரன் உலாவும் இக்காலத்திலேயே இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

பதினாறாம் நூற்றாண்டிற் போர்த்துக்கீசர் இலங்கையை ஆளத் தொடங்கினர். இந் நூற்றாண்டிற் கதிரைமலைப் பள்ளுத் தோன்றிய தென்பர். இந்நூற்றாண்டி னிறுதியி லாண்ட எதிர்மன்ன பரராச சேகரன் காலத்தில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் யாழ்ப்பாணம் வந்து அரசனிடம் பரிசில் பெற்றுச் சென்றனர். இவர் இம் மன்னன் மேற் பல பாடல்களும் பாடியுளர்.

**ஐரோப்பிய ராட்சிக் காலம்**

பதினேழாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே, சங்கிலி என்னும் அரசன் காலத்தில், போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைத் தமது ஆட்சிக் குட்படுத்தினர். இதனால் நாலு நூற்றாண்டுகளாகச் சிறந்து விளங்கிய யாழ்ப்பாண அரசும் முடிவடைந்தது. இந் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் இலங்கையிலே போர்த்துக்கீசரின் ஆட்சி ஒழிய ஒல்லாந்தர் தம் ஆட்சி ஏற்பட்டது. போர்த்துக்கீசர் கத்தோலிக்க மதத்தைப் பரப்பப் பல முயற்சிகள் செய்தனர். இவற்றின் பயனாகத் தமிழ்மக்கள் பலர் கத்தோலிக்கராயினர். இந் நூற்றாண்டிலே திருநெல்வேலியி லிருந்த ஞானப்பிரகாசர் என்பார் அந்நியர்தம் கொடுங்கோலுக்கஞ்சி இந்தியா வுக்குச் சென்று பல கலைகளையும் கற்று அங்கே புகழ்பெற்ற அறிஞ ராக விளங்கினர். இவர் வடமொழியிற் பல நூல்களை இயற்றியுளர். சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கும் ஒருரை எழுதினர். சிதம்பரத்தி லுள்ள ஞானப்பிரகாசம் எனுங் குளத்தையும் இவர் வெட்டுவித்தார். இந் நூற்றாண்டிலே கத்தோலிக்க சமய நூல்கள் சில தமிழில் எழுதப் பட்டன. சந்தியோகுமையோர் அம்மானை, ஞானப்பள்ளு முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தெல்லிப்பழைப் பேதுருப் புலவர் பாடினர்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே தமிழ்மொழி கண்டி ராச்சியத்தின் அரசாங்க மொழியாக விளங்கிற்று. 1815-ஆம் ஆண்டிற் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் தமிழிலேயே கையெழுத்திட்டனர். இந்த நூற்றாண்டின் முற்குதி யிலே சின்னத்தம்பிப் புலவர், வரதபண்டிதர், மயில்வாகனப் புலவர், சிற்றம்பலப் புலவர், புலவன் விநாயகர் முதலியோர் விளங்கினர். கூழங்கைத்தம்பிரான் எனும் புலவர் பெருந்தகையும் இந்தியாவி லிருந்து யாழ்ப்பாணம் வந்து தமிழ்ப்பணி பல செய்தார். பிலிப்பு தே மெல்லோ என்பவரும் தமிழறிவு மிக்கவராக விளங்கினர். புதிய ஏற்பாட்டினைத் தமிழில் மொழிபெயர்த்துப் பதிப்பித்தார்.

**பல்வகைத் தமிழ்ப் பணிகள்**

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் இந்த இருபதாம் நூற்றுண்டிலும் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்த காலத்தில் ஈழத்திலே தோன்றித் தமிழ் வளர்த்து இறந்தும் இறவாப் புகழ் பெற்றோர் பலராவர். தமிழ்மொழியின் வளர்ச்சி கருதிப் பல்வேறு புதுப்புதுத் துறைகளிலும் இந்தக் காலத்தில் இருந்த புலவர் பெருமக்கள் உழைத்துளர். தமிழ்நாட்டுக்குப் பலதுறைகளிலே வழிகாட்டிகளாகவும் அமைந்தனர். இவர்கள் செய்த தமிழ்ப் பணிகள் பலவாகும். சிறந்த காப்பியங்களை இயற்றினார்கள்; பல தனிப் பாடல்களைப் பாடினார்கள்; இலக்கண நூல்களை எழுதினார்கள். பழந்தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அச்சிட்டுப் பரப்பினார்கள். நூல்களை அச்சிடுதற்கும் பத்திரிகைகளை வெளியிடுதற்கும் இந்த ஈழநாட்டிலன்றித் தென்னிந்திய நாட்டிலும் அச்சகங்களை நிறுவினார்கள். செய்யுணூல்களுக்கு உரை எழுதினார்கள். நவீனங்கள், கதைகள் முதலிய புதுவகையான இலக்கியங்களையும் இயற்றினார்கள்; மறுப்புரைகள், கட்டுரைகள், கடிதம் முதலியவற்றை எழுதினார்கள்; நாடகங்களையும் இசைப்பாடல்களையும் நல்கினார்கள். தமிழ் நாடெங்கும் சைவப் பிரசங்கங்கள் செய்தார்கள்; தமிழ்நாட்டில் ஆசிரியர்களாகவுஞ் சேவை புரிந்தார்கள். அகராதிகள் பலவற்றைத் தொகுத்து வெளியிட்டார்கள்; கலைக்களஞ்சியமும் ஆக்கினார்கள். பிறமொழி நூல்களைத் தமிழிலே தந்தார்கள். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியிற் பெயர்த்தார்கள். சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டார்கள்; சரித்திர நூல்கள் பல எழுதினார்கள்; சொற்பிறப்பாராய்ச்சியிலும் சிறந்து விளங்கினார்கள். வடமொழி, சிங்களம், ஆங்கிலம், டச்சுப் பாஷை, போர்த்துக்கீசர் பாஷை முதலியவற்றிலும் புலமைபெற் றுயர்ந்தார்கள். தாம்பெற்ற புலமையினாலே தமிழை வளம்படுத்தினார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. பட்டத்தையும் முதன்முதலாகப் பெற்றார்கள்; பட்டப் படிப்பைத் தமிழ் வளர்ச்சிக்கே பயன்படுத்தினார்கள். தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்தார்கள். ஏக சந்தக் கிராகிகளாகவும், அஷ்டாவதானிகளாகவும், தசாவதானிகளாகவும் பொலிந்தார்கள். நாவலர்களாகவும், மகா வித்துவான்களாகவும், இலக்கணக்கொத்தர்களாகவும், தர்க்ககுடாரதாலுதாரிகளாகவும் இலங்கினார்கள்.

**நாவலரும் பிறரும்**

"யாழ்ப்பாணத் தமிழ், செந்தமிழ், தீந்தமிழ், இலக்கணத்தமிழ் யாழிசைத் தமிழ்" எனப் பலவாறு தென்னிந்தியத் தமிழறிஞர்கள்

புகழும் பெருமையினை யாழ்ப்பாணத்துக் களித்தற்குக் காரணமாயிருந் தவர்களுள்ளே மிகச் சிறந்தவர் ஆறுமுகநாவலராவார். அவருடைய காலத்திலும் இக்காலத்திலும் அவரைப்போலத் தமிழையுஞ் சைவத்தையும் தழைத்தோங்கச் செய்தவர் ஒருவருமில்லை என்பது அறிஞர் கருத்தாகும். சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள், அறிஞராலே 'தமிழ் வளர்த்த தாமோதரனார்' எனப் போற்றப்பட்டார். சேனாதிராய முதலியார், கனகசபைப்பிள்ளை, கனகசுந்தரம்பிள்ளை, கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர், அம்பலவாண நாவலர், சுவாமிநாத பண்டிதர், விசுவநாதபிள்ளை, பொன்னம்பலபிள்ளை, வேற்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், விபுலாநந்த அடிகள் முதலிய புலவர்களின் புகழ், ஈழநாட்டில் மாத்திரமன்றிப் பிறநாடுகளிலும் பரவியுளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அமெரிக்க மிஷனரிமாரும் தமிழினை வளர்த்தற்குப் பேருதவி செய்துளர். வட்டுக்கோட்டையிலே அவர்கள் நிறுவிய 'செமினரி' எனும் கலாசாலை பல சிறந்த அறிஞர்களைத் தமிழ்நாட்டுக்குத் தந்தது. இவ்வறிஞர்களிற் பலர் சாஸ்திர நூல்கள் பலவற்றைத் தமிழிலே இயற்றினார்கள். அமெரிக்க பாதிரிமார்களும் தமிழை விரும்பிக் கற்றனர். டக்டர் கிறீன் வைத்தியசாத்திரத்தைத் தமிழிலே கற்பித்தார். இக்காலத்திலே வைத்தியம், கணிதம் முதலிய சாஸ்திரக் கலைகளைத் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்க முடியுமா என்று சிலர் கேட்கிறார்கள். இவர்களுக்கு நூறு வருடங்களுக்கு முன்னரே டக்டர் கிறீன் விடைகூறியுளர்.

இனி, ஈழநாட்டிலே இப்பொழுது வாழ்ந்துவரும் தமிழறிஞர்கள் செய்துவரும் தமிழ்ப்பணிகளைத் தமிழ்மக்கள் நன்கு அறிவார்களாதலின் அவற்றை விடுத்து ஈழத்துப் பூதன்றேவனார் காலந்தொடக்கம் ஈழத்திலே தோன்றிப் புகழ்நாட்டி மறைந்த புலவர் பெருமக்கள் செய்த தமிழ்ப்பணிகளை வகுத்துக் காண்போம்.

**பெருங்காப்பியம்**

ஈழநாட்டிற் றோன்றிய பிரபந்தங்களுள் அரசகேசரி ஆக்கிய இரகுவமிசமே சிறந்த பெருங் காப்பியமாக விளங்குகிறது. அரசகேசரியின் காலத்தைச் சிலர் பதினைந்தாம் நூற்றாண்டென்றுஞ் சிலர் பதினாறாம் நூற்றாண்டென்றுங் கூறுவர். இவர் வடமொழியிலே காளிதாசர் இயற்றிய இரகுவமிசத்தை மொழிபெயர்த்துப் பன்னயங்களும் மிளிரத்

தமிழிலே பாடினர். இவர் பாடிய காப்பியத்தில் இருபத்தாறு படலங்களும் ஈராயிரத்து நானூற்றுக்கு மேற்பட்ட செய்யுள்களுமுள. இச்செய்யுள்கள் யாவும் அரசகேசரியாருடைய இருமொழிப் புலமையையும், பழந்தமிழ் நூல்களின் பயிற்சியையும் கற்பனைத் திறனையும் நன்கு காட்டுந் தகையன; வடமொழி தென்மொழிகளில் வல்லார்க்கே இலகுவில் விளங்கத்தக்கன; முதனூலிலுள்ள சுலோகங்களின் போக்கை முற்றுந் தழுவிப் பாடப்பட்டன; கம்பராமாயணத்துக் கூறப்படாத சில நுட்பங்களைச் செம்மையாகப் புலப்படுத்துவன. "கற்றார் கவியின் பெரிதாந் தமிழ்க் கம்பநாடன் உற்றுங் குறைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்" என ஆசிரியரே கூறியுளர். இத்தகைய அரும்பெருங் காப்பியத்தை யாழ்ப்பாணப் புலவர்கள் பலர், 'ஆசிரிய மாணக்க பரம்பரையாகக்' கற்று வந்துளர். சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் இக் காப்பியத்தின் அருஞ் செய்யுள்கள் சிலவற்றுக்குப் பொருள் எழுதி, "இரகுவமிசக் கருப்பொருள்" எனும் பெயருடன் வெளியிட்டுளர். வித்துவான் சி. கணேசையர் இந்நூலுக்குச் சிறந்ததோருரை எழுதியிருக்கிறர்.

இக்காப்பியத்தில் ஒரு செய்யுளைப் படித்து மேற் செல்வோம்.

"இட்ட மெத்திய வெய்யவர் இடுக்கண்வந் திறுத்தான்
முட்ட வத்தலைப் பகைவரா குவரென முன்னோர்
பட்டு ரைத்தன காட்டுமா பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக் களையே."

**புராணங்கள்**

பதினைந்தாம் பதினாரும் நூற்றாண்டுகளிலும் பின்னரும் தமிழ் நாட்டிலே விசேடமாகத் தலபுராணங்களும் பொதுவாகப் பிற புராணங்களும் தோன்றின. ஈழநாட்டுப் புலவர்களும் சில புராணங்களைப் பாடினர்கள். இப் புராணங்களுள் மிகப் பழையதாகக் கருதப்படுவது பண்டிதராசர் இயற்றிய தக்கிணகைலாச புராணமாகும். இது கோணேசல புராணம் எனவும்படும். ஈழநாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருகோணமலையே தக்கிணகைலாசம் எனப்படும். சிவராத்திரி ஏகாதசி விரதங்களின் பெருமையை முறையே கூறும் சிவராத்திரிபுராணத்தையும் ஏகாதசிப்புராணத்தையும் வரத பண்டிதர் பாடினர். புலியூர்ப்புராணம், சிதம்பரசபாநாதபுராணம் என்பன முறையே வித்துவான் சிவானந்தையர், சபாபதிநாவலர் என்போரால் இயற்றப்பட்டன. தொம்பிலிப்பு என்பார் பாடிய ஞானனந்த

புராணமும், கூழங்கைத்தம்பிரான் யாத்த யோசேப்பு புராணமும், கனகசபைப் புலவர் இயற்றிய திருவாக்குப் புராணமும் கிறீஸ்து மதச் சார்பானவையாகும். சில புலவர்கள் பல்வேறு வகையான நூல்களைப் பாடி அவற்றுக்கும் புராணமெனப் பெயர் கொடுத்தனர். மிக விநோதமான பெயர்களையுடைய புராணங்களும் சில உள. சூதுபுராணம் அப்புக்குட்டி ஐயராலும், வலைவீசுபுராணம் முத்துக்குமாரராலும், சாதிநிர்ணயபுராணம் வல்வை வைத்தியலிங்கத்தாலும் பாடப்பட்டன. கனகிபுராணம் கனகி எனுந் தாசிமேற் சுப்பையா என்பவராற் பாடப்பட்டது. பெயரளவிலே புராணமாகப் பாடப்பட்ட இந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லையெனினும் இதிலுள்ள செய்யுள்களைத் தமிழார்வமுடையார் பலர் அறிவர். இதிலுள்ள விநோதமான செய்யுள்களில் ஒன்றைக் காண்க :

"நடந்தா ளொருகன்னி மாராச கேசரி நாட்டிற்கொங்கைக்
குடந்தா னசைய வொயிலா யதுகண்டு கொற்றவரும
தொடர்ந்தார் சந்நியாசிகள் யோகம்விட் டார்சுத்த சைவரெல்லாம்
மடந்தான் அடைத்துச் சிவபூசை யுங்கட்டி வைத்தனரே." *

மட்டக்களப்பு அறிஞர் பூபாலபிள்ளை என்பார் சீமந்தனி புராணத்தைப் பாடினார். தமிழ் வளர்ச்சி கருதிப் பல்வேறு துறைகளில் உழைத்த நாவலர் பெருமானும் தேவகோட்டைப்புராணம் என்றொரு புராணத்தைப் பாடத் தொடங்கி அதனை முடித்தற்குமுன் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்பர்.

**பிற பிரபந்தங்கள்**

இடைக்காலந் தொடக்கம் சென்ற நூற்றாண்டு வரையும் கோவை, பள்ளு, அந்தாதி, உலா, குறவஞ்சி, தூது, கலம்பகம், சதகம் முதலிய பல பிரபந்தங்கள் தமிழகத்திலே பன்னூற்றுக் கணக்காகத் தோன்றித் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தியுள்ளன. இப் பிரபந்தங்கள் யாவும் சிறுபான்மையாக வள்ளல்கள் அரசர்கள் முதலியோர் மீதும் பெரும்பான்மையாகக் கடவுளர் மேலும் பாடப்பட்டனவாகும்.

ஈழநாட்டிலே கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், வண்ணார் பண்ணை முதலிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளர்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் பலவாகும். இத்தலங்களை முறையே கதிரை, நல்லை, மாவை, வண்ணை எனப் புலவர்கள் வழங்கினர். ஈழநாட்டுத்

* இப் பாடலினைப் பாடியவர் பிறர் என்பாருமுளர்.

தலங்களிலன்றித் தென்னிந்தியாவிலுள்ள சிதம்பரம், வேதாரணியம், கும்பகோணம் முதலிய தலங்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மேலும் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள் பல பிரபந்தங்களைப் பாடியுளர். கிறீஸ்து சமயச் சார்பான பிரபந்தங்களும் சிலவுள. பன்னூற்றுக் கணக்காகவுள்ள இப் பிரபந்தங்களிற் சிலவற்றையாகுதல் ஈண்டுக் காண்பாம்.

சின்னத்தம்பிப் புலவர் ஈழநாட்டுப் புலவர்கள் பலராலே போற்றப்பட்டவர். அவர் இயற்றிய நூல்கள் மறைசையந்தாதி, கல்வளை அந்தாதி, கரவை வேலன் கோவை, பருளைப் பள்ளு முதலியன. மயில்வாகனப் புலவர் புலியூர் யமக அந்தாதியும், சிற்றம்பலப் புலவர் கிள்ளை விடுதூதும் செய்தனர். வரத பண்டிதர் செய்த கிள்ளைவிடுதூதும் ஒன்றுண்டு. சிவானந்தையரும் ஒரு புலியூரந்தாதி தந்துளர். கதிரைமலைக் குறவஞ்சி, குருக்கள் கோடரி முதலியனவற்றைப் புலவன் விநாயகர் இயற்றினார். சேனாதிராயர் செய்த நூல்கள் நல்லைவெண்பா, நல்லையந்தாதி முதலியனவாகும்.

இவர் பாடிய நல்லைக் குறவஞ்சியிற் சில பாடல்களே கிடைக்கின்றன. இக் குறவஞ்சிப் பாடல்கள் மிகச் சிறந்தன என்பதைப் பின்வரும் பாடல் நன்கு காட்டுகின்றது:

திருவாரு நல்லைநகர்ச் செவ்வேற் பெருமானார்
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ரம்மானை
இருவாலைக் குயத்தியரோ டின்பமுற்று ராமாயின்
தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை
தருவார்காண் சட்டிகுடஞ் சாறுவைக்க வம்மானை.

நெல்லை வேலவருலாவினைச் சரவணமுத்துப் புலவரும் திருத்தில்லைப் பல்சந்தமாலையினைக் கார்த்திகேயப் புலவரும், மறைசைக்கலம்பகம், நீர்வைவெண்பா, வல்லிபுரநாதர்பதிகம் முதலியவற்றைப் பீதாம்பரப்புலவரும் பாடினர். அருளம்பலக்கோவை, நல்லைக்கலித்துறை, கந்தவனநாதருஞ்சல் முதலியனவற்றைக் குமாரசுவாமி முதலியார் இயற்றினார். மயிலணிச் சிலேடைவெண்பா, குடந்தைவெண்பா, நீதிநூறு, பதார்த்ததீபிகை முதலியனவற்றின் ஆசிரியர் முருகேசபண்டிதராவார். வண்ணைக்குறவஞ்சி, நகுலமலைக்குறவஞ்சி முதலியவற்றை விசுவநாதசாத்திரிகளும் ஈழமண்டலசதகத்தை வேற்பிள்ளையும் செய்தனர். சபாபதிநாவலர், திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி,

மாவையந்தாதி, திருச்சிற்றம்பலயமகவந்தாதி முதலியன தந்தார். சிவசம்புப்புலவர் கல்லாடக்கலித்துறை, பாண்டித்துரைத்தேவர் நான்மணிமாலை முதலிய அறுபது பிரபந்தங்களைத் தமிழ்த் தாய்க்கு அளித்துளார். காலிக் கதிரேசர் ஊஞ்சல் முதலிய பல ஊஞ்சல்களை ஏரம்பையர் இயற்றினர். குமாரசுவாமிப்புலவர் பாடிய ஊஞ்சல்களும் பதிகங்களும் பலவாகும். வேலணை இலந்தைக்காட்டுச் சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை வண்ணைச் சிலேடைவெண்பா, கடம்பரந்தாதி முதலியவற்றைப் பேரம்பலப்புலவர் இயற்றினர். மாவை மும்மணி மாலையினையும் நல்லைக்கோவையினையும் செவ்வந்திநாததேசிகர் செய்தார். அப்புக்குட்டி ஐயர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழினையும், கணபதி ஐயர் வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சியினையும், சின்னத்தம்பி என்பார் வீரபத்திரர் சதகத்தையும், சின்னக்குட்டிப்புலவர் தண்டிகைக் கனகராயன் பள்ளினையும் பாடினார்கள். ஒருதுறைக்கோவையாகிய அடைக்கலங்கோவையினை ஆக்கிய புலவர் நாகேச ஐயராவார். திருச் செல்வராசர் காப்பியத்தைப் பூலோகசிங்க முதலியாரும், கஞ்சன் காவியத்தை முத்துக்குமாரரும், திருச்சதகம், நன்னெறிக்கொத்து முதலியவற்றைச் சதாசிவம்பிள்ளையும், யேசு பிள்ளைக்கவியினைப் பிரான்சிஸ் பிள்ளையும், மருதப்பக் குறவஞ்சியைப் பிலிப்பு தே மெல்லோவும் இயற்றினர். நயினாதீவிலுள்ள நாகம்மாள் மேலும் பல பிரபந்தங்கள் பாடப்பட்டுள. நயினை நிரோட்ட யமக அந்தாதியினை நாகமணிப்புலவரும், நாகம்மாள் பதிகத்தை முத்துக்குமாரப் புலவரும் பாடினர். வருத்தலைவிளான் மயில்வாகனப்புலவர் நகுலேசர் விநோதவிசித்திர கவிப் பூங்கொத்து, இணுவைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலியனவற்றை இயற்றினர்.

**தனிப்பாடல்கள்**

தமிழ்ப்புலவர்கள் பிரபந்தங்களை மாத்திரமன்றித் தனிப்பாடல்களையும் பாடுவது வழக்கம். தமிழ்நாட்டுப் புலவர்கள் பாடிய தனிப் பாடல்களைச் சேர்த்துத தனிப்பாடற்றிரட்டுகள் சிலவற்றை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். ஈழநாட்டுப் புலவர்கள் பாடிய தனிப்பாடல்கள் பன்னூற்றுக் கணக்காக உள. இவற்றுள்ளே பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் அரசர்களைப் பற்றிய பாடல்களும் பலவாகும். இவற்றை இதுவரையும் திரட்டி வெளியிடுதற்கு ஒருவரும் முயற்சிக்கவில்லை. இக்குறையை நீக்குதற்கு யான் சிறிது முயற்சிக்கிறேன். தமிழ்ச் சங்கங்கள் உதவி செய்தால் இவற்றை விரைவில் வெளியிடலாம்.

இந்த நூற்றாண்டிலே நாம் அதிகமாக உரைநடையிலேயே நமது கருத்துக்களை வெளியிடுகிறோம். சென்ற நூற்றாண்டிலும் விசேடமாக அதற்கு முன்னரும் இருந்த புலவர்கள் கடிதங்களையும் செய்திகளையும் கூடப் பாட்டிலேயே தீட்டினார்கள். அன்பர்கள் விரும்பியவுடன் ஆசுகவிகளைப் பாடினார்கள்; சித்திரகவிகளையுஞ் செய்தார்கள். சில புலவர்கள் பிரபந்தம் ஒன்றேனும் ஆக்காவிடினும் அருமையான தனிப்பாடல்களைப் பாடித் தந்துளர். இப்பாடல்களிற் பல கர்ணபரம்பரையாகவும் வழங்கி வருகின்றன. ஈண்டுச் சில பாடல்களைப் பார்ப்போம்.

பரராசசிங்கனிடம் வந்து பரிசில் பெற்ற அந்தகக் கவி வீரராகவ முதலியார் அவன்மீது ஒரு வண்ணக்கவி பாடினார். அதைக்கேட்ட அரசன் பின்வரும் பாடலைப் பாடினான் என்பர்:

"விரகன் முத்தமிழ்க் கவிவீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும வாணனும் ஒப்பத் தோன்றினுற்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே."

நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் தம் இளம் பருவத்திலே ஒரு நாள் தோழருடன் விளையாடிக்கொண்டு நின்றார். அங்குச் சென்ற புலவர் ஒருவர் அவரை நோக்கி அவர்தம் தந்தையாராகிய வில்லவ ராயமுதலியார் வீடு யாதென்று வினவினார்.

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்."

என்று விடை கூறினார் சின்னத்தம்பிப் புலவர்.

வேலணையூர்ப் பேரம்பலப் புலவர் பாடசாலையிற் படிக்குங் காலத்திலே தமது நண்பராகிய சாந்தலிங்கம்பிள்ளையிடமிருந்து ஓர் அகராதியினைப் பெற விரும்பினார். உடனே,

"சாந்தலிங்க மென்றிச் சகம்புழிச்ச வாழ்வுகூர்
சாந்தலிங்க சோதிடநற் சாகரமே—ஓர்ந்தும்
அகராதி தன்னை யனுப்புஞ் சிலசொற்
றகவாக நானுணரத் தான்."

எனும் வெண்பாவைப் பாடியனுப்பினார்.

சித்திரகவிகள் பாடுவதிற் சுன்னாகத்து முத்துக்குமார கவிராசர் புகழ்படைத்தவர். யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்ப்பெயர்களை அமைத்துப் பிரகேளிகைச் செய்யுள்கள் சில பாடியுளர். அவற்றுள் ஒன்றினைப் பாருங்கள் :

"முடிவிலா துறை சுன்னாகத் தான்வழி
முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவக்
தடைய வோர்பெண் கொடிகாமத் தாளசைத்
தானைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
சார வந்தன ளோரிள வாலையே."

விரோதச் சிலேடையாக முருகேசபண்டிதர் பாடியதொரு பாடலையும் படித்து மேற்செல்வோம் :

"நெட்டையிலை வைத்திருக்குஞ் செவ்வே ளல்ல
நெடிதோங்கித் தண்டேந்து மாலு மல்ல
கட்டுவா ரளிக்கும் பிரம னல்ல
கனிவெட்டி யெடுத்தலாற் சுரங்க மல்ல
நாட்டவரைத் தனபதியா யிருக்கச் செய்யும்
நன்மையினு னும்வணங்கு மீச னல்ல
கிட்டரெலாங் கொள்ளுமொரு பொருளே யாருஞ்
செகமறிய விப்பொருளைச் செப்பு வீரே."

நாவலர் பெருமானுந் தனிப்பாடல்கள் சில பாடியுளர். இந்த நூற்றாண்டில் நம்மைவிட்டுப் பிரிந்த புலவர் பெருமக்களாகிய தாமோதரம்பிள்ளையும், விபுலாநந்த அடிகளாரும், சுன்னைக் குமார சுவாமிப் புலவரும், சிற்கைலாசபிள்ளையும் பாடிய தனிப் பாடல்களும் பலவுள.

**நாடகங்கள்**

இந்நூற்றாண்டிலே தென்னிந்தியத் தமிழறிஞர்கள் பலர் நாடக நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டுளர். எனினும் சென்ற நூற்றாண்டிலும் அதற்கு முந்திய நூற்றாண்டிலும் ஈழநாட்டுப் புலவர்களே நாடக நூல்கள் இயற்றுவதிலே முன்னணியில் நின்றுளர். நாவலர் பெருமானுடைய தந்தையாராகிய கந்தப்பிள்ளை இருபது நாடகங்களுக்கு மேல் எழுதியுளர். அவர் இறக்கும்பொழுதும்

இரத்தினவல்லி விலாசம் எனும் நாடகத்தை எழுதிக்கொண்டிருந்தார். அவர் இறந்தபின்னர், இந்த நாடகத்தை நாவலர் பெருமான் எழுதி முடித்தார். கந்தப்பிள்ளை எழுதிய நாடகங்களுள் சந்திரகாச நாடகம், இராமவிலாசம், கண்டி நாடகம், ஏரோது நாடகம் முதலியன குறிப்பிடத் தக்கன. பின்வரும் விருத்தம் இரத்தினவல்லி விலாசத்திலுள்ளது; 1842-ம் ஆண்டில் அவரால் பாடப்பட்டது:

"தருவளர் வனஞ்சூ ழயோத்தியம் பதியிற்
றசரத னருள்பெறு ராமன்
றருகவு சிகற்காய்த் தம்பிலட் சுமணன்
றன்னொடுந் தனிவனம் புகுந்து
செருவளர் படைகள் செலுத்துதா டகையைச்
சிதைத்துயா கமுநிறை வேற்றித்
திகழக லிகைதன் சிலையுரு வகற்றிச்
சீதையைக் கண்டுவின் முரித்து
மருவளர் மிதிலை மணம்புரிந் தேதம்
வளர்நகர்க் கேகுமவ் வழியில்
வரும்பர சிராமன் வலியொடும் வில்லு
வாங்கியே சென்றுவாழ்ந் திருந்த
திருவளர் கதையை விலாசம தாகச்
செப்பினேன் பிழையிருந் தாலும்
செந்தமிழ்ப் புலவீ ரவைபொறுத் தருள்வீர்
தேவசா ரித்திர மெனவே."

இராம நாடகம், தருமபுத்திர நாடகம் என்பனவற்றைச் சுவாமிநாதரும், இந்திரகுமார நாடகத்தைப் புலோலிக் கணபதிப்பிள்ளையும் எழுதினர். இராமலிங்கபிள்ளை மாணிக்கவாசகர் விலாசம், நளச் சக்கரவர்த்தி விலாசம் என்பனவற்றை ஆக்கினர். அபிமன் நாடகம், அலங்கார ரூபன் நாடகம், அதிரூபவதி நாடகம், மலையகந்தினி நாடகம் என்பவற்றின் ஆசிரியர் கணபதி ஐயராவார். முத்துக்குமாரப் புலவர் பதுமாபதி நாடகம், தேவசகாய நாடகம், சீமந்தனி நாடகம் எனும் மூன்றினைத் தந்தார். அருச்சுன நாடகம், சுபத்திரை நாடகம் என்பன நாகேசையராலும், குருக்ஷேத்திர நாடகம் முருகேசையராலும், சோமகேசரி நாடகம், பரிமளகாச நாடகம் என்பன மாப்பாண முதலியாராலும் எழுதப்பட்டன. இணுவிற் சின்னத்தம்பி, கொண்டி நாடகம், அனிருத்த நாடகம், கோவலன் நாடகம் என்பனவற்றையும், உடுப்பிட்டிச்

சின்னத்தம்பி, மதனவல்லி விலாசம், இராமவிலாசம் என்பனவற்றையும் இயற்றினர். பதிவிரதை விலாச ஆசிரியர் குமாரகுலசிங்கமுதலியாராவார்.

**இசைப்பாடல்கள்**

" தமிழோ டிசை பாடல் மறந்தறியேன் " என்று பாடினார் திருநாவுக்கரசர். இவர் வழிவந்த தமிழ்நாட்டு மக்கள் சென்ற சில நூற்றாண்டுகளிலே தெலுங்கோ டிசை பாடினார்கள். இந்நூற்றாண்டிலும் அவ்வழக்கம் இன்னும் அற்றுப்போகவில்லை. தமிழிசைப் பாடல்களையே தமிழ்க் கலைஞர்கள் பாடவேண்டு மெனுங் கொள்கை சென்ற சில ஆண்டுகளாகத்தான் நிலைபெறத் தொடங்கியுளது. இப்பொழுது பல அறிஞர்கள் தமிழிசைப் பாடல்களைப் பாடித் தமிழிசையினை வளர்க்கிறார்கள். இந்தத்துறையில் ஈழநாட்டுப் புலவர்களும் தொண்டாற்றியுளர். பதினேழாம் நூற்றாண்டிறுதியினும் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலுமிருந்த புலவர்கள் பலர் பதங்களுங் கீர்த்தனங்களும் பாடியுளர். முன்னர்க் குறிப்பிட்ட நாடக நூல்களிலும் இசைப் பாடல்கள் பல உள. நாவலர் பெருமானுஞ் சில கீர்த்தனங்களைப் பாடித் தமிழிசை இயக்கத்திற்கு விதை இட்டார். இக்கீர்த்தனங்கள் கதிரை யாத்திரை விளக்கத்திற் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றினையாகுதல் படித்துப்பார்ப்போம்:

இராகம் : சுருட்டி தாளம்: ஆதி

பல்லவி

திருமல பரசிவ சண்முகா — சுத்த
நித்திய — சத்திய — வித்தக ஞங்குக (திரு)

அனுபல்லவி

திருவு லாவு மிலங்கையின் மேவிய
சீர்திக ழுங்கதிர் காமத் துறைதரு
சிற்பரா — அருள் தற்பரா — அன்பர்
சிந்தை யுகந்தம ருந்தனி வேலவனே (திரு)

சரணம்

அறிவுக் கறிவாய் நின்றவா — கிரௌஞ்சகிரியுடன்
அவுணர் கிளையைக் கொன்றவா
குறிகுண மிறந்திலகு முருகா
கூரந் துளாயணி மருமன் மருகா
கோலனே — புரிநூலனே — ஒற்றைக்
கொம்பினன் பின்வரு தம்பியே யின்பருள் (திரு)



சேர் முத்துக்குமாரசுவாமி

[பக்கம் – 62]



திரு. பொ. குமாரசுவாமி [பக்கம் – 63]



சேர் அம்பலவாணர் கனகசபை

[பக்கம் – 65]



நியாயவாதி திரு. எஸ். நாகலிங்கம்
[பக்கம் - 64]



சேர் வை. துரைசுவாமி
[பக்கம் - 71]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்



திரு. ஏ. சபாபதி அவர்கள்
ஆங்கில 'இந்துசாதன' ஆசிரியர்
[பக்கம் - 67]

இக் கதிரையாத்திரை விளக்கத்தில் நாவலருடைய தமையனார் பரமானந்தர் பாடிய இருபதுக்கு மேற்பட்ட கீர்த்தனங்களுமுள. கதிரையாத்திரை விளக்கமும் நொண்டிச்சிந்தாகவே பாடப்பட்டுளது. ஆவரங்கால் நமச்சிவாயப் புலவரும் பல கீர்த்தனங்களை இயற்றிப் புகழ்பெற்றார். இராமசாமி ஐயருடைய கீர்த்தனங்களும் போற்றப் படத்தக்கன. அநந்த சுப்பையரும் சில பதங்களும் கீர்த்தனங்களும் பாடியுளர். குமாரசிங்க முதலியார், குமாரகுலசிங்க முதலியார் என் பவர்கள் கிறீத்தவக் கீதங்கள் பாடி யிசையிட்டினர். பிரான்சிஸ்குப் பிள்ளை கீர்த்தனத் திரட்டு என்பதொரு நூலும் இயற்றியுளர்.

**உரைகள்**

சிறந்த இலக்கிய நூல்களுக்கும், பழைய இலக்கண நூல்களுக்கும் உரை எழுதுவதும் சிறந்த தமிழ்த்தொண்டாகும். இடைக்காலத்திலே உரையாசிரியர்கள் பலர் தமிழ் நாட்டிலே இத்தொண்டினைச் செய்து புகழ் பெற்றனர். இத்துறையிலே ஈழநாட்டுப் புலவர்கள் சிலரும் உழைத்துயர்ந்துளர். செய்யுணூல்களைத் தமிழ்மக்கள் இலகுவிற் கற்றுப் பயனடைய வேண்டுமெனும் நோக்கத்துடனும் நாவலர் பெருமான் நற்றொண்டாற்றியவராதலின் அவர் பல நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். கோயிற் புராணம், சைவசமய நெறி, நன்னூற் காண்டிகை, திருமுருகாற்றுப்படை, திருச்செந்தினிரோட்ட யமக அந்தாதி, சிவதருமோத்தரம் முதலிய நூல்கள் அவர்தம் உரை பெற்றுச் சிறப்படைந்தனவற்றுட் சிலவாகும். நாவலர்தம் மருகரா கிய பொன்னம்பலபிள்ளை மிகச் சிறந்த உரையாசிரியர். சொற்களுக்கு நுட்பமாகப் பொருள் கூறுவதில் இவருக்கு இணையானவர்களை இக்காலத் திலே காணமுடியாது. இவர் பாரதத்திற் சில பருவங்களுக்கும் மயூரகிரிப் புராணத்துக்கும் எழுதிய உரைகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள் ளன. சொற்களின் தோற்றங்களையும் சொற்பொருள்களையும் நுட்ப மாக உணர்த்துவதிற் றமிழகம் முழுதும் புகழ்பெற்று விளங்கிய சுன் னைக் குமாரசுவாமிப் புலவர் அரிதினுணர்தற்பாலனவாகிய தனிப்பாடல் கள் பலவற்றுக்கு உரை கண்டுளர். கலைசைச் சிலேடை வெண்பா வுக்கு இவர் எழுதிய உரையே முதலுரையாகும். சூடாமணி நிகண்டின் முதலிரண்டு தொகுதிகளுக்குச் சொற்பொருளும் நீதிநெறி விளக்கத் துக்கு ஒரு புத்துரையும் எழுதினார். சிவஞானசித்தியாருக்கு ஞானப் பிரகாசர் எழுதிய உரையினை யாவரும் அறிவர். சிவப்பிரகாசத்துக்குத் திருவிளங்கம் எழுதிய உரை அறிஞர்களாற் போற்றப்பட்டுளது.

தமிழகத்தில் இளம்பூரணர் உரையாசிரியர் என்று போற்றப்பட்டது போல் ஈழநாட்டிலே உரையாசிரியர் என்று போற்றப்பட்டவர் ம. க. வேற்பிள்ளை ஆவர். இவர் திருவாதவூரடிகள் புராணம், அபிராமி அந்தாதி, புலியூரந்தாதி முதலியவற்றுக்கு உரை எழுதினார். நா. கதிரைவேற்பிள்ளை கூர்ம புராணத்துக்கு ஒரு விரிவுரையும், பழனித்தல புராணத்துக்கு ஒருரையும் வரைந்துளர். கந்தபுராணத்து அண்டகோசப் படலம், தெய்வயானை திருமணப் படலம், வள்ளியம்மை திருமணப்படலம் முதலியவற்றுக்கும் கல்வளை அந்தாதி, கந்தரலங்காரம் முதலியவற்றுக்கும் வல்லை வைத்தியலிங்கம் உரை எழுதியுளர். இந்தியாவிலிருந்து ஈழத்துக்கு வந்து தமிழ் வளர்த்த கூழங்கைத் தம்பிரான் நன்னூலுக்கு ஒருரை இயற்றியுளர்.

## இலக்கண நூல்கள்

ஈழநாட்டுப் புலவர்கள் பல இலக்கண நூல்களைத் திருத்திப் பதித்தும் உரை இயற்றியும் பணிபுரிந்தது மாத்திரமன்றிச் சில இலக்கண நூல்களையும் புதுமுறையில் ஆக்கித் தந்துளர். நாவலருடைய இலக்கண வினாவிடையினையும் இலக்கணச் சுருக்கத்தையும் யாவரும் அறிவர். தமிழ் வியாகரணம் எனும் நூலை செவின்ஸ் சிதம்பரப்பிள்ளை எழுதினார். சவுந்தரநாயகம்பிள்ளை மாணவர் கற்பதற்கு இலகுவாக நன்னூற் சுருக்கந் தந்தார். மெல்லோப் பாதிரியார் உவமான விளக்கம் இயற்றினார். நன்னூற் கருப்பையினை ஆக்கியவர் சரவணமுத்துப் புலவர். இலக்கண சந்திரிகை, வினைப் பகுபத விளக்கம் என்பன சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் தமிழ்நாட்டுக்களித்த அரிய நூல்கள். முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் செய்த நன்னூல் உதாரண விளக்கமும் குறிப்பிடத்தக்கது.

## உரைநடை நூல்கள்

தமிழ் " உரை நடையின் தந்தை " எனவும், "வசனநடை கைவந்த வல்லாளர் " எனவும் தமிழறிஞர்களாற் போற்றப்பட்டவர் நாவலர் பெருமானவார். இவரைத் தந்த பெருமை ஈழநாட்டுக்குரியது. நாவலர் எழுதிய உரைநடை நூல்கள் பலவாகும். பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம், சிதம்பர மான்மியம் முதலியன குறிப்பிடத்தக்கன. பாலர்கள் பயிலுவதற்கும் சிறந்த பாடநூல்களை முதன்முதல் இயற்றியவரும் நாவலரே ஆவார். அவருடைய பால பாடங்கள் 1872-ஆம் ஆண்டு வெளிவந்தன. யாவரும் இலகுவில்

படித்துணரத்தக்க வினவிடை வடிவத்திலும் நாவலர் சில நூல்களை இயற்றியுள்ளார். இலக்கண வினவிடை, சைவ வினவிடைகள் முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவை. சைவசமயச் சார்பாக நாவலர் எழுதிய உரைநடை நூல்களும் பலவாகும். கிறீஸ்தவர்களுடைய விவிலிய நூலையும் நாவலர் மொழிபெயர்த்து உரைநடையிற் றந்தார்.

நாவலருக்கு முன்னர், பதினெட்டாம் நூற்றாண்டிலே வீரமாமுனிவர் எழுதிய உரைநடை நூல்களுக்குப் பின் ஈழநாட்டிலே ஒரு சிறந்த உரைநடை நூல் தோன்றிற்று. மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலையே அந்நூலாகும். அக்காலத்திலே பிலிப்பு தே மெல்லோ என்பவரும் புதிய ஏற்பாட்டைத் தமிழிலாக்கிப் பதிப்பித்தார். நாகநாத பண்டிதர் எழுதிய இதோபதேசமும், தாமோதரம்பிள்ளை எழுதிய சூளாமணி வசனமும், முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய பாரதச் சுருக்கமும் குறிப்பிடத்தக்கன. கனகசுந்தரம்பிள்ளை இல்லாண்மை எனும் ஒரு நூலை எழுதியுள்ளார். சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் சிசுபாலசரிதம் முதலிய பல உரைநடை நூல்களை எழுதியுள்ளார். கிறீஸ்த சமய நூல்களாகவும் மொழிபெயர்ப்புக்களாகவும் பல உரைநடை நூல்கள் தோன்றியுள்ளன. நன்னெறிக் கதா சங்கிரகம் எனும் நூல் சதாசிவம்பிள்ளையால் எழுதப்பட்டது. ஐரோப்பிய மொழிகளின் தொடர்பால் தமிழிலும் நவீனம் எனும் புது இலக்கிய வகை தோன்றிற்று. இக் காலத்திலே நவீனங்களைப் பலர் எழுதுகிறார்கள். இவற்றுள்ளே பிழை மலிந்தன பலவாகும் தொடக்கத்திலே பிழைகளின்றிச் சிறந்த நவீனங்களை எழுதிய அறிஞர்களை விரல்விட்டெண்ணலாம். இவர்களுள்ளே யாழ்ப்பாணத்தறிஞர் சரவணபிள்ளையும் ஒருவராவார். இவர் எழுதிய நூல் மோகனாங்கி என்பது.

**கட்டுரைகள்**

ஈழநாட்டிலே தோன்றிய பல பத்திரிகைகள் ஈழநாட்டுப் புலவர்களின் கட்டுரை எழுதும் ஆற்றலை நன்கு விளக்கும். தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கும் அவர்கள் பல கட்டுரைகளை வழங்கியுளர். மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' தொடங்கிய காலத்தில், குமாரசுவாமிப் புலவர், முத்துத்தம்பிப்பிள்ளை, செந்திநாதையர் முதலியோர் எழுதி உதவிய கட்டுரைகள் அதனை அணி பெறச் செய்தன. விபுலாநந்த அடிகளாரின் கட்டுரைகளைப் பெறாதிலங்காத பத்திரிகைகள் இல்லை என்பதை இக்காலத்தவர் யாவருமறிவர்.

**கண்டனங்கள்**

நச்சினார்க்கினியர்போன்ற உரையாசிரியர்கள் தமது உரைகளிலே பிறருடைய கருத்துக்களை மறுத்தெழுதுவது மரபு. பதினெட்டாம் நூற்றாண்டிலே சிவஞானமுனிவர் மறுப்புரைகள் பல எழுதினார். அவர் தம் இலக்கணவிளக்கச் சூறாவளியினை யாரும் அறிவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிற் கண்டனங்கள் எழுதுவதில் ஈழநாட்டுப் புலவர்களே சிறந்து விளங்கினர். நாவலருடைய கண்டனங்கள் தனிச்சிறப்புடையன; எதிரிகளாலே இலகுவில் அசைக்கமுடியாதன. 'சைவதூஷண பரிகாரம்,' இதனை மறுத்து விசுவநாதபிள்ளை எழுதிய 'சுப்பிரதீபத்'துக்கு மறுப்பாக எழுந்த 'சுப்பிரபோதம்,' 'மித்தியாவாதநிரசனம்,' 'போலி அருட்பா மறுப்பு' முதலியன நாவலர் எழுதிய கண்டனங்களுட் சிறந்தன. நாவலரைப் பின்பற்றிப் பலர் கண்டனங்களை எழுதியுளர். கிறீஸ்தவர்களும், சைவர்களும் முரண்பட்டு எழுதிய நூல்கள் பல யாழ்ப்பாணத்திலே தோன்றின. முத்துக்குமாரகவிராயர் பாடிய 'ஞானக்கும்மி'க்கு மறுப்பாக 'அஞ்ஞானக்கும்மி' தோன்றிற்று. இதனை மறுத்துச் சிலம்புநாதபிள்ளை என்பார் 'அஞ்ஞானக்கும்மி மறுப்பை' எழுதினார். அருளப்ப முதலியார் எழுதிய 'அலங்கார பஞ்சக'த்துக்கு மறுப்பாயெழுந்த நூல் முருகேசபண்டிதர் பாடிய 'அலங்கார பஞ்சக சண்ட மாருத'மாகும். இதிலுள்ள ஒரு செய்யுளைப் பாருங்கள் :

அரும்பிரா மணத்தினிய கனியுதவு
　　மருங்கொடி பருதியம் பரத்தி
இருந்தரா சாத்தி கழுமொருநீதி
　　யிறைமகள் இணையறு மறத்தி
பொருந்தவெஞ் ஞான்று ஞானசக்கிலிச்சி
　　புல்லனை யருள்கநன் குறத்தி
மருந்தெனப் புகழு மருத மடுவினில்
　　வதிசெப மாலைமா மரியே.

தாமோதரம்பிள்ளை எழுதிய 'சைவமகத்துவம்' எனும் நூலுக்கு அருளப்ப முதலியார் 'சைவமகத்துவதிக்காரம்' என்றொரு கண்டனம் விடுத்தார். இதனைக் கண்டித்து, வல்வை வயித்தியலிங்கம் 'சைவமகத்துவ திக்கார நிக்கிரகம்' என்பதை வெளியிட்டார். 'கிறீஸ்துமதக் கண்டனம்' 'சிவதூஷண கண்டனம்' என்பன சங்கரபண்டிதரால் எழுதப்பட்டவை. 'அருட்பா அன்று, மருட்பா' என்பதன் ஆசிரியர் நா. கதிரை

வேற்பிள்ளையாவார். 'வைதிக காவிய தூஷண மறுப்'பினையும் 'யேசு மத சங்கற்ப நிராகரண'த்தையும் ஆக்கியவர் சபாபதி நாவலர். காசிவாசி செந்திநாதையரும் பல கண்டன நூல்கள் எழுதினார். தேவகோட்டையூர்ச் சந்நியாசியார் ஒருவர் 'ஆதிசைவநாமகருலீன: முகபங்கமுத்திர:, தாந்திரிகதுண்ட கண்டனம்' எனுமிரு நூல்களை வெளியிட்டார். இவற்றுக்கு மறுப்பாகச் செந்திநாதையர் முறையே "வச்சிர தண்டம்," 'தாந்திரிகதுண்ட கண்டன கண்டனம்' என்பவற்றை எழுதினார். சாமுவேல் சற்குணர் எழுதிய 'சாணுரெல்லாஞ் க்ஷத்திரியர்' என்பதன் மறுப்பாக ஐயர் அவர்கள் எழுதிய நூல் 'சாண்க்ஷத்திரியப் பிரசண்ட மாருத'மாகும். 'சிவனுந் தேவனு,' என்பதனை மறுத்தெழுதியது 'சிவனுந் தேவனு எனுந் தீயநாவுக்கு ஆப்பு' என்பது. 'விவிலிய குற்சிதம்' என்பது நாவலர்தம் கண்டனநூல். இதனை மறுத்துக் கிறீஸ்தவர்கள் ஒரு கண்டனம் வெளியிட்டனர். இக் கண்டனத்துக்குத் தலையடி கொடுக்க 'விவிலிய குற்சித கண்டன திக்காரம்' எழுந்தது. 'வீரபத்திராஸ்திரம்', 'ஞானபோத விளக்கச் சூறுவளி' முதலியனவும் செந்திநாதையர் எழுதிய கண்டன நூல்களாம்.

**சொற்பொழிவுகள்**

மேடைப்பேச்சு இப்பொழுது ஒரு கலையாக விளங்குகிறது. தமிழ் நாட்டிலே சிறந்த பேச்சாளர்கள் பலர் இக்காலத்தில் இருக்கின்றனர். சென்ற நூற்றுண்டின் தொடக்கத்திலே சொற்பொழிவாற்றத் தக்கவர்கள் மிகச் சிலரே. அக்காலப் புலவர்கள் பலர் உரைநடை எழுதுதலிலும், சொற்பொழிவாற்றுதலிலும் நன்கு பயிலாதிருந்தனர். பாதிரிமார்கள் தம் சமயத்தைப் பரப்புதற்கு மேடைப்பேச்சைப் பயன்படுத்தினர். அந்த முறையிலே சைவசமய உண்மைகளை எடுத்து விளக்குவாரின்றி ஈழநாட்டார் இடர்ப்பட்டனர். இந்தச் சமயத்திலே நாவலர் பெருமான் தோன்றினார். 1847-ம் ஆண்டிலே தமது முதற் பிரசங்கத்தைச் செய்தார். பின்னர்த் தமிழ் நாட்டிலே தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றிச் 'சபாப் பிரசங்க சிங்கமாக' விளங்கினார். அவருடைய நாவன்மையைப் புகழாதவர் இல்லை. அவர் பல சபைகளை நிறுவிப் பலரை அச்சமின்றிப் பேசப் பழக்கினார். அவரைப் பின்பற்றியும் பலர் சிறந்த பேச்சாளர்களாகினர். ஈழநாட்டுப் புலவர்கள் சிலர், தென்னிந்தியாவிலும் பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளர். இவர்களுள் நா. கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர், சுவாமிநாத பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை, செந்திநாதையர், அம்பலவாண நாவலர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சொற்பொழிவுகளை

மாத்திரமன்றி, சேர் பொன். இராமநாதன், சபாரத்தின முதலியார், சேர் கனகசபை, தா. பொன்னம்பலபிள்ளை முதலியோர் பல சபைகளிலே தலைமை தாங்கி, பேருரைகளையும் நிகழ்த்தியுள்ளர். விபுலாநந்த அடிகள் தலைமை தாங்கிச் சிறப்பிக்காத தமிழ்ச் சங்கங்கள் தமிழ் நாட்டில் இல்லை எனலாம்.

**புராணபடனம் முதலியன**

சென்ற சில நூற்றுண்டுகளிலே புராணங்கள் இராமாயணம் பாரதம் முதலியவற்றைப் படித்தலும் இவற்றிலுள்ள பாடல்களுக்கு உரை சொல்லுதலும் தமிழ்மக்கள் வாழ்ந்த இடங்களிலெல்லாஞ் சிறப்பாக நடந்தன. கோவில்களிலும் மடங்களிலும் செல்வர் மனைகளிலும் இப் பெரும்பணி நிகழ்ந்தது. மக்கள் திரள்திரளாகக் கூடி இவற்றைக் கேட்டனுபவித்தனர். இவ்வழக்கம் இடைக்காலச் சோழ அரசர்கள் காலத்திலும் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக நடந்தது. ஈழநாட்டிலும் பல நூற்றுண்டுகளாக நடந்து வருகிறது. யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலே முதன்முதற் கந்தபுராணத்தைப் படிக்கத் தொடங்கிய பேரறிஞர் நாவலர்தம் ஆசிரியர் சேனாதிராயரே யாவார். நாவலர் பெருமான் தமது காலத்திலே பல கோவில்களிலும் வீடுகளிலும் புராணப் படிப்பு மிகச் சிறப்பாக நடத்தற்கு வேண்டியவற்றைச் செய்தார். இவருடைய ஆசிரியர்களுள் ஒருவராகிய சரவணமுத்துப்புலவரும் உரை சொல்வதிற் சிறந்து விளங்கினார். நாவலருடைய மருகர் பொன்னம்பலபிள்ளை இராமாயணம், பெரிய புராணம், கந்தபுராணம் முதலியவற்றுக்கு மிக நுட்பமாகப் பொருள் சொல்லி நாவலருடைய மதிப்பையும் பெற்றவர். வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் அக்காலத்திலே பல அறிஞர்கள் தமது உரை சொல்லுந் திறனைக் காட்டியுள்ளர். கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரர்புராணம், திருவிளையாடற்புராணம் முதலிய புராணங்களும், இராமாயணம், பாரதம் முதலியனவும் விசேடமாகப் படிக்கப்பட்டன.

**நூற்பதிப்பு**

இக்காலத்திலே நூல்களைப் பதித்து வெளியிடுவது மிகவும் இலகுவான காரியம். முற்காலத்திலோ வெளிற் பதிப்பாளர்களுக்குப் பல கஷ்டங்களுள. ஏட்டுருவிலிருந்தே பழந்தமிழ் நூல்களைப் பதித்தோர் பட்ட கஷ்டங்கள் அளவிலாதன. இந்தக் கஷ்டங்களைப் பொருட்படுத்தாது தமிழ்த் தாய்க்குப் பெரும்பணி செய்தவர்களைத் தமிழுலகம் என்றும் போற்றக் கடைமைப்பட்டுளது. 'நாவலர் பதிப்பு'க்குத்

தமிழ் நாட்டிலே ஒரு தனிமதிப்பு உண்டு. பிழை திருத்தம் எனுஞ் சேர்க்கையின்றி நூல்களைப் பதித்த பெருமை நாவலருக்கே உரியது. எழுபதுக்கு மேற்பட்ட நூல்களை நாவலர் பதித்து வெளியிட்டுளார். தொல்காப்பியச் சொல்லதிகாரம், சேனாவரையருரை, திருக்குறள், திருக்கோவையார், பிரயோக விவேகவுரை, சூடாமணி நிகண்டுரை, நன்னூல் விருத்தியுரை, பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம், சிவஞானபோதச் சிற்றுரை முதலியன அந்நூல்களுட் சில. பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித் துதவியவர்களுள் தாமோதரம்பிள்ளையினையும் அறிஞர்கள் போற்றுவர். இறையனாரகப்பொருளுரை, வீரசோழிய வுரை, கலித்தொகை, தணிகைப்புராணம், சூளாமணி முதலியவற்றை அவர் பதிப்பித்தார். தொல்காப்பியம் முழுவதையும் உரைகளுடன் முதலிற் பதிப்பித்த பெருமை பிள்ளை அவர்களுக்கே உரியது. சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நம்பி அகப்பொருள் முதலியவற்றைச் சிறந்த குறிப்புரைகளுடன் சிறப்பாகப் பதிப்பித்தார். இவரும் கனகசுந்தரம்பிள்ளையும் இராமாயணம் பாலகாண்டத்தைப் பதிப்பித்துதவினர். கனகசுந்தரம்பிள்ளையும் சில நூல்களைப் பதிப்பித்தும், பதிப்பித்தவர்களுக்கு உதவி செய்தும் பணியாற்றியுளர். தமிழ் நாவலர் சரிதையை முதலிற் பதிப்பித்தவரும் இவரேயாவர். சிவஞானபாடியத்தினைச் சுவாமிநாத பண்டிதர் சிறந்த முறையில் அச்சிட்டார். மூவர் தேவாரங்களையும் இவர் அச்சிட்டுளார்.

நிற்க, நூல்கள் உரைகளேயன்றிச் சில நூல்களிலிருந்து சிறந்த செய்யுள்களையும் சிலர் திரட்டிப் பதிப்பித்துளர். முருகேச பண்டிதர் பாரதம், இராமாயணம் முதலியவற்றிலிருந்து சில செய்யுள்களை எடுத்துச் சேர்த்து இலக்கிய சங்கிரகம் என்றொரு நூலை வெளியிட்டார். குமாரசுவாமிப் புலவருஞ் சில கவிகளைத் திரட்டி வெளியிட்டுளார்.

இக்காலத்திலே பொருள் வருவாய் கருதிப் பலர் தமிழ் அச்சகங்களை நடத்துகின்றனர். ஆனால், நூல்களையும் பத்திரிகைகளையும் அச்சிட்டுத் தமிழ்த்தொண்டு செய்வதற்காகவே ஈழநாட்டுப் புலவர்கள் சிலர் அச்சகங்களையும் நாட்டினர். இத்துறையிலும் நாவலரே பலருக்கு வழி காட்டினர். யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் அவர் அச்சகங்களை நாட்டினார். சபாபதி நாவலர், செந்திநாதையர், வல்வை வைத்தியலிங்கம், வேலணையூர் கந்தப்பிள்ளை, சுவாமிநாதபண்டிதர், மூத்ததம்பிச் செட்டியார், முத்துத்தம்பிப்பிள்ளை முதலியோரும் அச்சகங்களை நிறுவியுளர்.

**அகராதிகள்**

தமிழ் அகராதிகள் வெளியிடுவதிலும் ஈழநாட்டுப் புலவர் அயரா துழைத்துப் புகழீட்டியுள்ளர். தமிழ்மொழியிலே முதலிற் ேறான்றிய அகராதி சதுரகராதியாகும். இதனை இத்தாலிய நாட்டிலிருந்து தமிழ்நாடு புகுந்து தமிழினை நன்கு கற்றுத் தமிழ்ப்பணி புரிந்த வீரமாமுனிவர் ஆக்கினர். இதன் முதற்பகுதி கி. பி. 1819-இல் அச்சிடப்பட்டது. இதன்பின்னர் தமிழ்ப் புலவர்களால் வெளியிடப்பட்ட அகராதிகளுள் முதலாவது யாழ்ப்பாணத்துச் சந்திரசேகர பண்டிதர் முதலியோரால் ஆக்கப்பட்டு மானிப்பாயிலிருந்த அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டு கி.பி. 1842–இல் வெளிவந்த தமிழ் அகராதியாகும். இது மானிப்பாய் அகராதி எனவும் யாழ்ப்பாண அகராதி எனவும் வழங்குகிறது. இஃது ஏறக்குறைய 58500 சொற்களைக் கொண்டது; சதுரகராதியினைப்போல நாலுமடங்கு பெரியது. இந்த அகராதியினைப் பெருப்பித்துப் பின்னர் பல விரிவகராதிகளை வெளியிட்டனர். இவையெல்லாம் கி. பி. 1905–ம் ஆண்டிலே யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை வெளியிட்ட தமிழ்ப்பேரகராதியின் முன்னர்த் தம் பெருமை யிழந்தன. யாழ்ப்பாண அறிஞர்களுடைய அகராதி ஆக்கும் முயற்சி இவ்வளவில் நின்றுவிடவில்லை. புதுமுறையிற் சொற்களின் தோற்றம், இலக்கிய ஆட்சி முதலியனவுங் காட்டிச் சிறந்த அகராதி ஆக்குவதற்கு கு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் புலவர் பலருடைய உதவியுடன் முயன்றார். 1910–ம் ஆண்டில் அகரம் முதலாய சொற்களை வெளியிட்டார். இவர் தொகுத்த இந்த அகராதியின் ஏனைய பகுதிகளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் சங்கத் தமிழ் அகராதி எனும் பெயருடன் வெளியிட்டுளர். இந்த அகராதியில் 63900 சொற்கள் உள. இலக்கியங் கற்பவர்களுக்குப் பயன்படும் பொருட்டுச் சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் 1914–ம் ஆண்டிலே இலக்கியச்சொல் அகராதி ஒன்று வெளியிட்டார். அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியினைச் சிறப்புற ஆக்குவதற்கு ஈழநாட்டுப் புலவர்களும் பலர் உதவி செய்துளர்.

தமிழ் – தமிழ் அகராதிகளை அன்றித் தமிழ் – ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதிகளும் ஈழநாட்டுப் புலவர்களால் வெளியிடப்பட்டுள. உவின்ஸ்லோ என்பார் கி. பி. 1862–இல் வெளியிட்ட தமிழ் – ஆங்கில அகராதி, யாழ்ப்பாணத்தில் கறோல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை முதலியோரின் உதவியால் உருவாகியது. யாழ்ப்பாணத்திலிருந்த பாதிரிமாருள் சிறந்தவராகிய பார்சிவல் ஒரு

ஆங்கில – தமிழ் அகராதியை வெளியிட்டார். நெவின்ஸ் சிதம்பரப் பிள்ளையும் ஒரு ஆங்கில – தமிழ் அகராதி தொகுத்துள்ளர். முத்துத் தம்பிப்பிள்ளை 1908–இல் ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதியினைப் பதித்து வெளியிட்டார். நாவலர் பெருமானும் தமிழ் – ஆங்கிலம் அகராதி ஒன்றும், ஆங்கிலம் – தமிழ் அகராதி ஒன்றும் வெளியிட முயற்சி செய்துளர்.

**கலைக்களஞ்சியம்**

யாழ்ப்பாணத்திலே இவ்வருடந் தமிழ் விழாவினை நடத்தும் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் தமிழிலே கலைக்களஞ்சியம் ஒன்றினைச் சிறந்த முறையில் அமைத்து வெளியிட முயற்சி செய்கின்றனர். முதன்முதலாகத் தமிழ்நாட்டிலே கலைக்களஞ்சியம் ஒன்றை அமைத்து வெளியிட்ட பெருமை யாழ்ப்பாணம் நாவலர் கோட்டம் முத்துத் தம்பிப்பிள்ளைக்கு உரியதாகும். அவர் வெளியிட்ட அருமையான நூல் அபிதானகோசம் என்பது. இது 1902–இல் வெளியானது. இதன் பின்னரே அபிதானசிந்தாமணி வெளிவந்தது.

**பத்திரிகைகள்**

இப்பொழுது தமிழிலே நடக்கும் பத்திரிகைகளுள் மிகப் பழையது யாழ்ப்பாணத்திலே தோன்றிய உதயதாரகையேயாகும். இது 1841–இலே தொடங்கியது. இதன் பின்னரும் பல பத்திரிகைகள் ஈழநாட்டிலே நடத்தப்பட்டன. இப்பொழுதும் நடைபெறும் சத்திய வேதபாதுகாவலனும் இந்துசாதனமும் சென்ற நூற்றுண்டின் பிற்பகுதியிலே தோன்றியன. சைவாபிமானி, இலங்காபிமானி, சைவ சூக்குமார்த்தபோதினி, ஞானமிர்தம், ஞானப்பிரகாசம், சன்மார்க்க போதினி, ஞானசித்தி, பாலியர்நேசன், விஞ்ஞானவர்த்தினி, இலங்கை நேசன் முதலியன ஈழநாட்டுப் புலவர்கள் நடத்திய பத்திரிகைகளிற் சிலவாகும். உதயபானு எனும் பத்திரிகை தோன்றுவதற்கு நாவலரும் உதவி செய்தார். வைத்திய விசாரிணி, சோதிடபரிபாலினி என்பன முறையே வைத்தியம், சோதிடம் என்பனவற்றை வளர்க்கத் தோன்றியனவாகும். தாமோதரம்பிள்ளை, செந்திநாதையர், முத்துத் தம்பிப்பிள்ளை முதலியோர் தென்னிந்தியாவில் நடந்த பத்திரிகைகளுக்கு ஆசிரியர்களாயிருந்துந் தொண்டாற்றியுளர். ஈழநாட்டுப் புலவர்கள் சிலர் தென்னிந்தியாவிலுஞ் சில பத்திரிகைகளை நடத்தியுளர்.

**வரலாற்று நூல்களும், ஆராய்ச்சி நூல்களும்**

தமிழ்ப்புலவர்கள் வரலாற்றினை முதன்முதலாக எழுதியவர் சைமன் காசிச்செட்டி என்பவராவார். இவர் ஆங்கிலத்தில் எழுதிய தமிழ்ப் புலவர் வரலாறு 1859–இல் வெளியிடப்பட்டது. இதனைத் தழுவிச் சதாசிவம்பிள்ளை என்பார் 1889–ல் பாவலர் சரித்திர தீபகத்தை வெளியிட்டார். குமாரசுவாமிப்புலவருடைய தமிழ்ப்புலவர் வரலாறு 1916–ல் வெளிவந்தது. தமிழ்மொழி வரலாறு, இலக்கிய வரலாறு முதலியவற்றை விளக்கும் திராவிடப் பிரகாசிகையினைச் சபாபதி நாவலர் செவ்விய உரைநடையிலே தீட்டித் தந்தார். பூபாலபிள்ளை என்பார் தென்மொழி வரலாறு எனும் நூலினையும், முத்துத்தம்பிப்பிள்ளை தென்மொழி வரலாறு எனும் நூலினையும் எழுதினார்கள். பண்டைத் தமிழ் மக்களின் வரலாற்றை மிகச் செப்பமாகத் தெரிவிக்கும் ஆராய்ச்சி நூல்கள் யாவற்றுக்கும் முந்தியது கனகசபைப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய '1800 வருடங்களுக்கு முந்திய தமிழர்' எனும் சிறந்த நூலாகும். சங்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்வார்க்கு இன்றும் இஃது உதவி செய்கின்றது. வஞ்சிமாநகர் ஆராய்ச்சி எனும் நூலினைப் பொன்னம்பலபிள்ளை எழுதினர்.

யாழ்ப்பாணநாட்டின் வரலாற்றினை விளக்குதற்கு எழுந்த நூலே யாழ்ப்பாண வைபவமாலையாகும். யாழ்ப்பாண வரலாற்றைப் பற்றிப் பல நூல்களை வேறு அறிஞர்களும் எழுதியுளர். க. வேற்பிள்ளை யாழ்ப்பாண வைபவ கௌமுதியினையும், சுவாமி ஞானப்பிரகாசர் யாழ்ப்பாண வைபவ விமர்சனத்தையும், முதலியார் இராசநாயகம் யாழ்ப்பாணச் சரித்திரத்தையும் தந்தனர். முத்துத்தம்பிப்பிள்ளையும் யாழ்ப்பாணச் சரித்திரம் ஒன்றும், இலங்கைச் சரித்திரம் ஒன்றும் ஆக்கியுளர்.

முத்தமிழ் வித்தகராக விளங்கிய விபுலாநந்த அடிகளாரின் அரும்பெரும் ஆராய்ச்சி நூலாகிய யாழ்நூல் தமிழ்மக்கள் யாவருக்குமே பெருமை அளிக்கத்தக்கது. இசைக்கலை வரலாற்றை விளக்கும் இந்நூலை மாத்திரமின்றி நாடக இயல்புகளை விளக்கும் மதங்க சூளாமணியினையும் அடிகளார் தமிழகத்துக்கு அளித்துளர்.

இப்பொழுது தமிழகத்திலே மொழிநூல் ஆராய்ச்சி சிறப்படைந்து வருகின்றது. மொழிநூல் ஆராய்ச்சியே உருவெடுத்தாற் போன்று ஈழநாட்டில் விளங்கியவர் சுவாமி ஞானப்பிரகாசராவர். இவருடைய ஆராய்ச்சிப்புலமையினைத் தமிழ்"அமைப்புற்ற வரலாறும்", "சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி" முதலாறுபாகங்களும் நன்குகாட்டும்.

**பல்கலை நூல்கள்**

வைத்தியம், சோதிடம், வானநூல், கணிதம், பூமிசாத்திரம் முதலியன பற்றிய நூல்களும் ஈழநாட்டிலே தோன்றின. இவற்றிலே சிலவற்றைப்பற்றி முன்னரும் குறிப்பிட்டுளேன். செகராசசேகரம் பரராசசேகரம் முதலியனவும் வரதபண்டிதர் இயற்றிய அமுதாகரமும் சிறந்த வைத்திய நூல்களாகும். சோதிட நூல்களுள்ளே போகராச பண்டிதர் இயற்றிய சரசோதிமாலையும், சோமஐயர் இயற்றிய செகராசசேகரமாலையும் குறிப்பிடத்தக்கன. சின்னத்தம்பி சோதிடச் சுருக்கம், நில அளவைச் சூத்திரம் எனும் நூல்களை எழுதினார். அ. சதாசிவம்பிள்ளை வானசாஸ்திர நூல் ஒன்றை எழுதினார்.

விசுவநாத சாஸ்திரிகள், சோதிட சாஸ்திர விற்பன்னராக விளங்கி இராச கணிதன்* என்னும் பட்டமும் பெற்றார். கி. பி. 1788–இல் வாக்கிய கிரகணம் என்னும் நூலையும் எழுதினார். பஞ்சாங்கம் கணிப்பதிலும் புகழ் பெற்றார். இவருடைய மூதாதையர் இராமலிங்கையர் 1667–ஆம் ஆண்டில் முதன்முதல் வாக்கிய முறையில் பஞ்சாங்கத்தைக் கணித்து வெளிப்படுத்தினார். ஏரம்பையர் கணநூல் ஒன்றினை வெளியிட்டார். சந்தான தீபிகை எனும் நூலை இராமலிங்கையர் இயற்றினார். இலங்கைப் பூமிசாஸ்திரமொன்று நாவலரால் எழுதப்பட்டுளது. விசுவநாதபிள்ளை ஆக்கிய வீசகணிதம் பல விநோதமான கணக்குகளைக் கொண்டது.

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளிலிருந்து ஈழநாட்டுப் புலவர்கள் பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாட்டிலும் உரையிலும் இயற்றியுளர். வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட இரகுவம்சம், சிசுபாலசரிதம் முதலிய சில நூல்களை முன்னர்க் குறிப்பிட்டேன். இவற்றைவிட, இலக்கியம், சமயம், நியாயம், தருக்கம், நீதி முதலியன பற்றிய நூல்கள் பலவாகும். அவற்றுட் சிலவற்றை ஈண்டுக் காண்க. சாந்தோக்கியம், சாங்கியம் என்பனவற்றை நாகநாத பண்டிதரும், வில்கணீயத்தைக் கணபதிப்பிள்ளையும், பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம், சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என்பவற்றைச் சபாபதி நாவலரும், நாவலர் தருக்க சங்கிரகத்தின் உரைகளாகிய நியாயபோதினி பதகிருத்தியம், அன்னம்பட்டீயம் என்பவைகளையும், அன்னம்பட்டீயத்தின் உரையாகிய

* Almanac Maker to His Majesty George IV.

நீலகண்டியத்தையும் மொழிபெயர்த்தார். நீலகண்ட பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பினைச் செய்தவர் செந்திநாதையர். தர்க்காமிர்த மொழிபெயர்ப்பினைச் செய்தவர் திருஞானசம்பந்தப்பிள்ளையாவார். குமாரசுவாமிப் புலவர் இயற்றிய மேகதூதக்காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா முதலியனவும், சதாசிவஐயர் செய்த தேவி தோத்திர மஞ்சரியும் மொழிபெயர்ப்பு நூல்களே. நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை இயற்றிய நியாய இலக்கணம் ஆங்கிலத்திலுள்ள தர்க்க விதிகளின் மொழிபெயர்ப்பாகும். அமெரிக்க அகத்தியர் எனப் போற்றப்படும் டக்டர் கிறீன்[1] யாழ்ப்பாணத்திற்கு வந்து மானிப்பாயில் வைத்தியராயிருக்கும்பொழுது பல மாணவர்களுக்குத் தமிழிலே வைத்திய சாஸ்திரத்தைக் கற்பிக்க முயன்றார். தம் முயற்சி நற்பயனளிப்பதற்குத் தமிழிலே பல நூல்கள் வேண்டும் என்றுணர்ந்தார். ஆங்கில மொழியிலேயுள்ள பல வைத்திய நூல்களையும் பிற சாஸ்திர நூல்களையும் தமது மாணவர்களுடைய உதவியுடன் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்து செயற்கருஞ் செயல் செய்த பெருமையினைக் கொண்டார்; என்றுமழியாப் புகழ் பெற்றார். அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல்[2], இரணவைத்தியம்[3], வைத்தியாகரம்[4], கெமிஸ்தம்[5], மனுஷ சுகரணம்[6], இந்து பதார்த்தசாரம்[7] முதலியன இவர் பதிப்பித்த நூல்களாகும். வைத்தியக்கலைச் சொற்கோவைகளையும் இவர் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

**ஆங்கிலத்திலே தமிழ்முழக்கம்**

ஆங்கில மொழி, உலகமொழிகளுள் ஒன்றாகவும், நம்நாட்டு அரசியல் மொழியாகவும் இப்பொழுது விளங்குகிறது. தமிழ்மொழி, தமிழ் மக்கள், அவர்தம் பண்பாடு, கலைச்செல்வம் முதலியன பற்றிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிடுதலும் தமிழ் நூல்களை அம்மொழியிற் பெயர்த்தலும் தமிழின் பெருமையையும் தமிழ் மக்களின் சிறப்பையும் உலகறியச் செய்யும் பெரும்பணியாகும். இத்துறைகளிலும் ஈழநாட்டுப் புலவர்கள் உழைத்துளர். கலைச்செல்வர் டக்டர் ஆனந்தக் குமாரசுவாமி இந்திய நாட்டுக்கே பெருமையளித்தார். கனகசபைப்பிள்ளை எழுதிய 1800 வருடங்களுக்கு முந்திய தமிழர்[8] எனும் நூலின் சிறப்பினைப்பற்றி முன்னர்க் கூறியுள்ளேன். சைமன்

1. Dr. Samuel Fish Green. 2. Cutter's Anatomy, Physiology and Hygiene. 3. Druitt's Surgery. 4. Hooper's Physician's Vade Macum. 5. Well's chemistry. 6. Dalton's Physiology. 7. Waring's Pharmacopoeia of India. 8. Tamils 1800 years ago.

காசிச்செட்டி என்பார் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றையும்[1], யாழ்ப்பாண வரலாற்றையும்[2], எழுதினார். சேர் பி. அருணாசலம் பல கட்டுரைகள் வரைந்தார். ஸ்ரீகந்தா ஔவையாரைப்பற்றி எழுதி அவருடைய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை முதலியவற்றையும் மொழிபெயர்த்தார். யாழ்ப்பாண வைபவமாலையினைச் சி. பிறிற்றோவும், கைலாசமாலையினை முத்துத்தம்பிப்பிள்ளையும், தாயுமானவர் பாடல்களை டக்டர் ஐசக் தம்பையாவும் மொழிபெயர்த்தனர். ஜே. வி. செல்லையா செய்த பத்துப்பாட்டு மொழிபெயர்ப்பு மிக அருமையாக அமைந்துளது. டக்டர் கொயிசிங்ரன்[3] சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவக்கட்டளை என்பவற்றை மொழிபெயர்த்தார். பழைய யாழ்ப்பாணம்[4] எனும் நூலை முதலியார் இராசநாயகமும் யாழ்ப்பாணத்தரசர்[5] எனும் நூலை சுவாமி ஞானப்பிரகாசரும் எழுதினார்கள்.

**தமிழ்க் கல்வெட்டுகள்**

ஈழத்திலே தமிழ்க் கல்வெட்டுகளும் பல உள. தமிழர்களேயன்றிச் சிங்கள மன்னரும் தமிழிலே கல்வெட்டுக்களை ஆக்குவித்துளர். கல்வெட்டுக்கள் சிலவற்றிலே சிறந்த செய்யுள்களுங் காணப்படுகின்றன. பொலநறுவையிற் பதினொரு கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. சிவன்கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில் இராசேந்திரன் அதிராசேந்திரன் முதலிய சோழ அரசர்களுடைய கல்வெட்டுக்களும் உள. விசயபாகு மன்னனின் கல்வெட்டு ஒன்றினால் பொலநறுவைக்கு விசயராசபுரம் என்ற பெயருமுண்டு என்றறியப்படுகிறது. திருகோணமலைக் கோட்டை வாசலில் சிதைந்த உருவத்தில் ஒருவெண்பா காணப்படுகிறது. அதனைப் பின்வரும் செய்யுளாகச் சிலர் நிரப்பியுளர்:

> "முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
> பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னவன்பின்
> பொண்ணாத தனை இயற்றஅழித் தேவைத்து
> எண்ணாரே பின்னரசர் கள்."

அநுராதபுரியில் ஏழு கல்வெட்டுக்கள் கிடைத்துள. இவற்றுள் இரண்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட ஸ்ரீ சங்கபோதி மன்னனுடைய கல்வெட்டுக்களாகும். பல பகுதிகள் அழிந்துபோன ஒரு கல்வெட்டில் பின்வரும் அழகான வெண்பா காணப்படுகிறது.

1. Tamil Plutarch. 2. The History of Jaffna. 3. Dr. H. R. Hoisington. 4. Ancient Jaffna. 5. The Kings of Jaffna.

"போதி நிழலமர்ந்த புண்ணியன்போல் எவ்வுயிர்க்கும்
தீதில் அருள்சுரக்கும் சிந்தையான் — ஆதி
வருதன்மம் குன்றாத மாதவன்மாக் கோதை
ஒருதன்மை பால னாளன்."

கொழும்பிலுள்ள பல்பொருட்காட்சிச் சாலையிலும் சில கல்வெட்டுக்கள் சேர்த்து வைக்கப்பட்டுள. இவற்றிற் சிலவற்றிலே மாதோட்டத்தினைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கொத்தகமக் கல்வெட்டு ஒன்றிலே காணப்படும் வெண்பா அறிஞர்க்கு நல்விருந்தளிக்குந் தன்மையது.

"கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்
பங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் — பொங்கொலிநீர்
சிங்கைநக ராரியனைச் சேரா வனாரேசர்
தங்கண் மடமாதர் தாம்."

இந்தப் பாட்டுக்குப் பலவகையான கருத்துக்களைக் கூறுவர். இது பதினாலாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்தை ஆண்ட ஜெயவீர சிங்கையாரியன் சிங்களரை வென்ற செய்தியைக் குறிக்கிறது.

**நாட்டுப் பாடல்கள் முதலியன**

மக்கள் இலக்கியம், தொழிலாளிகளின் பாடல்கள், கட்டில்லாக் கவிதைகள் என்று பலவாறு போற்றப்படும் நாட்டுப் பாடல்களும் பல ஈழநாட்டிலே உள. மட்டக்களப்புப் பகுதியே இப்பாடல்களுக்குப் பேர்போனது. அங்குள்ள தமிழ்மக்களே அன்றி முஸ்லிம் பெண்மணிகளும் பல பாடல்களைப் பாடியின்புறுகின்றனர். மட்டக்களப்புப் பகுதியிலுள்ள நாட்டுப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வசந்தன் கவித்திரட்டு எனும் பெயருடன் ஒரு நூலினை சதாசிவ ஐயர் வெளியிட்டுளர். ஒருமொழிக்கு உறுதியையும் சிறப்பையும் கொடுப்பன அம்மொழியிலுள்ள பழமொழிகளாகும். ஈழநாட்டிலுள்ள பழமொழிகள் பலவற்றைப் பார்சிவல் பாதிரியார் சென்ற நூற்றாண்டிலே தொகுத்து வெளியிட்டுளர். இந் நூற்றாண்டிலுஞ் சிலர் இப்பணியில் ஈடுபட்டுளர்.

# கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழுக்காற்றிய பணி

திரு. கே. ஈ. மதியாபரணம், எம். ஏ.

"நாண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபி னென்னப்ப னென்னெப்பி லென்னையுமாட் கொண்டருளி" என்றெல்லாம் தன்னைத் தரைமட்டுந் தாழ்த்தும் நிலைக்கு 'மணிவாசகர்' பெருந்தகையாரைக் கொண்டுவந்தவரும், கல்லெறிபட்டு இரத்தம் ஆறுய்ப் பாயும்போது தன் உடல் வருத்தத்தையும் நோக்காது தன் பகைவர்கள்மேற் பெருகிய பேரன்பை 'ஆண்டவரே இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்' என்னும் மொழிகளாற் காட்டிய முதலாங் கிறிஸ்தவ இரத்தச் சாட்சியாகிய 'ஸ்தேவானு'க்கு அவ்வாறான களங்கமற்ற தெய்வீக அன்பு நிறைந்த உள்ளநிலையை அளித்தவருமாகிய இறைவனே இலங்கைக்கு ஐரோப்பா, அமெரிக்கா முதலிய பிற நாடுகளிலிருந்து மிஷனரிமாரை அனுப்பினுரென்பது எமது கொள்கை. அவர்களை இறைவன் இங்கு அனுப்பும்போது இங்குள்ளவரது ஆன்ம ஈடேற்றத்திற்குரிய நிலையையே பெரிதும் கருத்தில் வைத்திருந்தாரெனில், அவர்கள் இங்கு வந்ததின் விளைவாகத் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு யாவும் திருந்தவேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம்போலும். சென்ற நூற்றுண்டில் இலங்கைக்கு வந்த வேற்றுநாட்டு மிஷனரிமார் மூலம் இங்குத் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் முதலியவைகள் வளர்ந்தோங்கிய வரலாற்றைச் சீர்தூக்கிப் பார்க்குங்கால் இன்னோரன்ன வளர்ச்சி இறைவன் பேரருளின்றி யுண்டாகா தென்பதை அவன் வழிப்பட்டோர் யாரும் ஏற்றுக்கொள்வ ரென்பதற்கு ஐயமில்லை.

ஆகவே 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னுந் திருவாக்கின் உண்மையை உள்ளத்திருத்தி, எம்மெல்லாரையும் ஆண்டவனும் ஆளுபவனுமாகிய எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி, இக் கட்டுரையை அடியார்க்கும் அடியேன் எழுதத் தொடங்குகின்றேன். இறைவன் அருள்புரிவானுக.

சென்ற நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய அமெரிக்க மிஷனரிமார் இலங்கைக்கு வரும்போது ஈண்டு வாழ்ந்த தமிழரின்

நிலை யாது? அவர்கள் கல்வி எந்நிலையி லிருந்தது? அவர்கள் எத்துணைப் பண்பாடு பெற்றிருந்தனர்? என்று இன்னோரன்ன விஷயங்களை ஆராய்தல் இன்றியமையாதது.

பதினாறும் பதினேழாம் நூற்றாண்டுகளில் இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க மதத்தை ஈண்டுப் பரப்புவான் வேண்டிக் கல்விச்சாலைகளை முதலில் நிறுவினர். நான்கு தொகுதிகளாக இங்கு வந்த கத்தோலிக்க குருமார் தேசிய மொழிகளைக் கற்று, அம் மொழிகளைப் பெரும்பாலான மக்கள் கற்கக்கூடிய வசதிகளை உண் டாக்கினர். பின் வந்த ஒல்லாந்த அரசினரோ கல்வி விருத்திக்காகச் சிறந்த முயற்சிகள் செய்தனர். தம்மதக் கலாசாலைகளிலேயே பிரஜைகள் யாவரும் தம் பிள்ளைகளைப் படிக்கவிட வேண்டும் என்று கட்டாய விதியை விதித்தனர். இதனால் ஒல்லாந்தர் காலத்தில் அரசினர் பாட சாலைகளில் யாழ்ப்பாணத்தில் பதினெண்ணாயிரம் பிள்ளைகள் படித்தனர் என்று அரசினர் அறிக்கைகள் கூறுகின்றன. ஆசிரியரைப் பயிற்று தற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு செமினரியையும், கொழும்பில் ஓருயர்தரக் கலாசாலையையும் நிறுவினர்.

கொழும்பிலே வாழ்ந்துவந்த சிறந்ததொரு தமிழ்க் குடும்பத்தில் ஆயிரத்து எழுநூற்று இருபத்துமூன்றுமாண்டு பிறந்து அங்குள்ள உயர்தரக் கலாசாலையிற் கல்விகற்று விளங்கிய டி மெல்லோ என்பவரை யாழ்ப்பாணத்தில் குரு ஊழியம் நடாத்துமாறு ஒல்லாந்த அரசினர் நியமித்தனர். இவர், தமிழ்மொழியிற் புலமை வாய்ந்தவர். போர்த் துக்கேயம், ஒல்லாந்தம், எபிரேயம், கிரேக்கு, இலத்தீன் முதலிய மொழிகளிலும் நன்கு தேர்ந்தவர். இவரே வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டைத் தமிழில் முதன்முதலில் மொழிபெயர்த்தவர். கத்தோ லிக்க சமயத்துக்கு மாறாக இவர்செய்த 'சத்தியத்தின் ஜெயம்' என் னும் நூலை அரசினர் கொழும்பில் அச்சிடுவித்துப் பரப்பினர். இவர் செய்ததாதக் கூறப்படும் 'உவமைப் பாட்டுகள்' மிகச் சிறந்தவை. (அவைகளை அமெரிக்க மிஷனரிமார் மானிப்பாயில் தாம் வெளியிட்ட நிகண்டு நூலிற் சேர்த்து வெளியிட்டனர்.) இவர் யாழ்ப்பாணத்தில் குரு ஊழியஞ் செய்து ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூறும் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தனர். ஏறக்குறைய இதே காலத்திலேயே வீரமாமுனிவர் தென்னிந்தியாவில் தமிழ்த் தொண்டு புரிந்து வந்தனர்.




சேர் பொன். இராமநாதன் அவர்கள் [பக்கம் - 66]



சேர் பொன். அருணாசலம் அவர்கள் [பக்கம் - 68]



திரு. க. பாலசிங்கம் அவர்கள் [பக்கம் - 69]
உபயம்: 'ஈழகேசரி', சுன்னாகம்

அக்கால அரசினர் டீ மெல்லோ என்னும் போதகர்மூலம் யாழ்ப்பாணத்தில் ஐந்து தமிழ் வாலிபரைத் தெரிந்து ஒல்லாந்து தேசத்திற்கு உயர்தரக் கல்வி கற்றுவருமாறு அனுப்பினர். அவர்களுள், இறந்தவர்கள் ஒழிந்த மூவரும் மூன்றாண்டுகளாகப் பலதிறக் கலைகளையும் நன்கு கற்றுத் தேறிப் பெரும் பட்டங்களும் பெற்று யாழ்ப்பாணந் திரும்பி வந்தனர். அவர்களுள் 'தொன் பிலிப்பு இலங்கைக் கோன் முதலியார்', 'ஒந்தாச்சி' என்பவர் இருவர்.

ஒல்லாந்த அரசாட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திற் குடியேறிய கட்டுப்பற்று வாய்ந்த சில ஒல்லாந்த கிறிஸ்தவக் குடும்பத்தினர் ஆங்கில அரசினர்க்குக் கீழமைந்து யாழ்ப்பாணத்தில் வாழும் வாய்ப்புப் பெற்றனர். அவர்களுக்கும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்கும் போதிக்குங் குருவாகத் தஞ்சாவூரில் ஆயிரத்து எழுநூற்று எழுபத்தொராம் ஆண்டு பிறந்த கிறிஸ்தியன் தாவீது ஆயிரத்து எண்ணூற்றோராம் ஆண்டில் நியமிக்கப்பட்டனர். இவர்பற்றிச் சுருங்கக் கூறுதல் முறைமையாகும்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஆங்கிலக் கல்வி கற்பிப்பதற்குத் தொடங்கியவர் இவரே. சுண்டிக்குழியில் ஓராங்கில பாடசாலை இவரால் நிறுவி நடாத்தப்பெற்றது. அப் பாடசாலையிற் கல்வி கற்ற 'மத்தேயு பிலிப்பு' என்பவரே 1816-ம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து முதன் முதல் யாழ்ப்பாணம் வந்த மிஷனரிமார் ஐவருள் ஒருவராய 'மெயிக்ஸ்' பாதிரியாருக்குத் தமிழ்க் கல்வி கற்பிப்பதற்கு உதவினர். அடுத்த ஆண்டில் பண்டத்தரிப்பில் அமெரிக்க மிஷனரிமாரால் ஆண்களுக்கென ஸ்தாபிக்கப்பெற்ற விடுதிப் பாடசாலையில் இவராசிரியரானார். 1818-ம் ஆண்டில் 'சேட்ச்' மிஷனரிச் சங்கத்தாரால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட கனம் நைற் ஐயரவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்கும் அவரது ஊழியத்திலுதவி செய்வதற்குமாக அமெரிக்க மிஷனரியாகிய கனம் 'ஸ்போல்டிங்' பாதிரியாரவர்கள் மேற்குறித்த 'மத்தேயு பிலிப்'பவர்களை நல்லூருக்கனுப்பினர். இவரே தென் இந்தியாவில் புகழ்பெற்ற 'சீனிவாச சாஸ்திரியா'ரவர்களின் ஆசிரியரான 'ஜே. எம் ஹென்ஸ்மன்' அவர்களின் தாய்வழிப் பாட்டனார்.

குறித்த கிறிஸ்தியன் 'தாவீது' பதினெட்டாம் நூற்றாண்டிற் பிறந்தவராயினும் சனசமூகத்தில் பெண்கள் பெறவேண்டிய இடத்தைக் குறித்துத் தகுந்த கொள்கை உடையவரா யிருந்தனரென அறியக்

கிடக்கின்றது. "ஆறு ஆகண்கள் குணப்படுவதிலும் பார்க்க, ஒரு பெண் குணப்படுதல் சிறப்பு வாய்ந்தது" என்று அவர் மிஷனூழியஞ் செய்வோருக்குச் சொல்வதுண்டென அக் காலத்தவர் கூறியுள்ளனர். இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே எதிர்ப்புகள் எத்தனையோ இருந்தபோதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க மிஷனரிமார் விடாப்பிடியாகவிருந்து பெண்களுக்குக் கல்வியூட்டத் தொடங்கினர்.

"எழுத் தறிவித்தவன் இறைவ னுவன்" என்ற முது மொழிக் கேற்ப வேற்று நாட்டிலிருந்து பதினாறும் நூற்றாண்டு தொடங்கி இந் நூற்றாண்டுவரையும் வெவ்வேறு நோக்கத்தோடு இங்கு வந்துள்ளோர் இங்குள்ள எழுத்தறியாதோர்க்கு எழுத்தறிவித்து இறைவராயினர் எனக் கூறல் மிகையாகாது. போர்த்துக்கேயர் ஈண்டு வருதற்கு முன் இந் நாட்டிலிருந்த தமிழர் எழுத்தறியா திருந்தனரா என்றாராயும்போது மிகச் சிறுதொகையினரே கல்வி கற்றிருக்க வேண்டுமென அறியக் கிடக்கின்றது. அவருள்ளும் ஈழத்துப் பூதந்தேவனார், பரராசசேகரன், செகராசசேகரன், அரசகேசரி முதலியோரே கற்றுத்தேர்ந்த புலவர் களாயிருந்ததோ டமையாது பாவலர்களாயு மிருந்துள்ளனர்.

இலங்கையில் தமிழ்க் கல்விநிலை இவ்வாறிருக்கையில், ஆளுகை ஒல்லாந்தர் கைகடந்து ஆங்கிலேயர் கைப்பட்டதும், ஆங்கிலேயர் ஒல்லாந்தர் கையாண்ட முறையைப் பின்பற்றி முதலில் இடையிடையே கல்விச்சாலைகளை நிறுவித் தம்பொறுப்பில் நடாத்திவந்தனர். 1801-ம் ஆண்டு இலங்கை முழுவதிலும் 170 கல்விச்சாலைகள் (யாழ்ப்பாணத் தில் 47) அரசினர் பொறுப்பில் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விச்சாலைகள் மேற்குறித்த கனம் கிறிஸ்தியன் 'தாவீது'ப் போதகரின் கண்காணிப்பிலிருந்தன. 1805-ம் ஆண்டு 'சேர் தொமஸ் மேயிற்லண்ட்' தேசாதிபதி பணக்குறைவு காரண மாக எல்லாக் கலாசாலைகளையும் நிறுத்திவிட்டனர்.

அரசினர் கல்வி விஷயத்தைக் கைவிடவே, கிறிஸ்து மதத்தை இங்கு பரப்ப வந்த வெவ்வேறு தொகுதியான மிஷனரிமார் அத் தொண்டைத் தம் பொறுப்பாக ஏற்றுச் செய்துவந்தனர். ஆங்கிலேய அரசினர் சமய இட்டங் கொடுத்தமையின், ஒல்லாந்தர் காலத்தில் அடங்கியிருந்த உரோமன் கத்தோலிக்க சபையார் முற்பட்டு வந்து தமக்குரிய கல்விச்சாலைகளை நிறுவினர். 'பிரெஸ்பிரீறியன்' சபை

யாரும் அவ்வாறே செய்தனர். 1812-ம் ஆண்டில் இலங்கைவந்த 'பப்ரிஸ்ற்' மிஷனும், அடுத்த பதின்னாலில் வந்த 'உவெஸ்லியன்' மிஷனும், பதினாறில் வந்த 'அமெரிக்கன்' மிஷனும், பதினெட்டில் வந்த 'சேட்ச்' மிஷனும் தத்தமக்குரிய கல்விச்சாலைகளை நிறுவின. இவற்றுள் ஈற்றிலுள்ள மூன்றுமே தமிழ்க் கல்வியை விசேடமாகப் பரப்பின. அமெரிக்கன் மிஷனே மக்கள் என்றும் மறக்கமுடியாத தொண்டை ஆற்றிவந்தது.

1818-ம் ஆண்டில் உவெஸ்லியன் மிஷன் வண்ணார்பண்ணை, நாவற்குழி, புத்தூரென்னும் இடங்களில் மூன்று தமிழ்ப் பாடசாலைகளை நிறுவியது. அடுத்த ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் பதினொன்றும் வேறிரண்டுமாக மொத்தம் பதின்மூன்று பாடசாலைகள் 650 பிள்ளைகளுடன் தோன்றின. 1824-ம் ஆண்டில் எல்லாமாக இருபத்தொரு கல்விச்சாலைகள் நிறுவப்பெற்றன. இவைகளை நிறுவியது மன்றி, 1826-ம் ஆண்டு தொடங்கி 1851-ம் ஆண்டு வரையிலும் 'பீற்றர் பேர்சிவல்' என்னும் மிஷனரியைத் தந்து தமிழ்க் கல்வி முதலியன தழைத்தோங்கப் பேருதவியும் புரிந்தது.

உவெஸ்லியன் மிஷனரிமாருள் தமிழறிவில் 'பேர்சிவல்' பாதிரியார்க்கு ஒப்பாரும் மிக்காரும் இதுவரையிலிருந்ததில்லை. தமிழுரைநடைக்குத் தந்தையெனக் கூறத்தக்கவரும் தமிழ் வழங்குந் தாய்நாடாம் இந்தியாவிலும் பேர்படைத்தவருமாய 'ஆறுமுக நாவல'ரவர்களுதவியுடன் கிறிஸ்தவ வேதாகமத்தைச் சிறந்த தெளிவான தமிழ்நடையில் இப் பாதிரியார் மொழிபெயர்த்துள்ளார். அன்றியும், 'மெதடிஸ்த வினுவிடை', 'ஆராதனை ஒழுங்கு' முதலியவற்றையும் தமிழில் எழுதிக் கிறிஸ்தவர்களுக் குதவினர். பொதுவாகத் தமிழரெல்லாருக்கு முதவுவான்வேண்டி 'ஆங்கில—தமிழகராதி' யொன்றியற்றியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற் சைவ சமயந் தமிழாதியவற்றின் மேம்பாட்டிற்கு விடாமுயற்சியுடன் ஊணுறக்க மின்றி, அஞ்சா நெஞ்சுடையராயுழைத்தவர் அரும்பெறல் அமுதாம் ஆறுமுக நாவல ரொருவரே. அவரிப்பணியைச் செவ்வனே புரிவதற்கு, மத்திய கல்லூரியி லவர் கற்ற கல்வியும் 'பேர்சிவலை' ருடன் அவர் பெற்ற நெருங்கிய நட்புமே பெரிதுமவர்க்குப் பயன்பட்டன.

1836-ம் ஆண்டில் லண்டனிலிருந்த தாய்ச் சங்கத்துக்குக் குறித்த பாதிரியார் அவர்கள் எழுதிய கடிதம் கல்வியைச்—சிறப்பாகத் தமிழ்க்

கல்வியை எவ்வாறு மதித்தன ரென்பதை நன்கு விளக்குகிறது. இறைவன் தமக்களித்திருந்த ஊழியத்தை நிறைவேற்றற்கு அறியாமை யென்னு மிருளை யகற்றி அறிவென்னு மொளியை மக்களுள்ளத்திற் புகுத்துவது இன்றியமையாத தென்பதை அவர் தெட்டத் தெளிவா யறிந்திருந்தனர். அதனாலேயே அரசினரும் அமெரிக்க மிஷனரிமாருங் கல்விச்சாலைகள் பல நிறுவியபோது தமது மிஷன் பள்ளிக்கூடங்களில் மாணவர் தொகை குன்றுமென அறிந்திருந்தும் மகிழ்ச்சி யடைந்தனர்.

இனி, 1818-ம் ஆண்டில் இலங்கையை வந்தடைந்த சேட்ச் மிஷன் சங்கத்தார் தமிழுக்குச் செய்த தொண்டை யாராய்வாம்: மற்றைய மிஷனரிமாரைப்போற் கல்விச்சாலைகளைத் திறந்ததுமன்றி, யாழ்ப் பாணத்தில் முதன்முதல் அச்சியந்திரத்தைப் பயன்படுத்திய பெருமை இவர்கட்கே யுரியது. குறித்த இயந்திரம் அமெரிக்க மிஷனரிமாருடைய சொத்தேயாயினும் சேட்ச் மிஷன் சங்கத்தாரே முதன்முதல் அதனைப் பயன்படுத்திய வாய்ப்பைப் பெற்றனர். 1821-ம் ஆண்டில் 'கறெற்' என்னும் ஓரமெரிக்க பாதிரியாரை இயந்திரத்துடனும் அச்சுகளுடனும் அமெரிக்கசங்கம் இலங்கைக் கனுப்பியது. அக் காலத்தில் இலங்கையை ஆண்ட தேசாதிபதி அமெரிக்க மிஷனரிமார் அரசியல் விஷயத்தில் எதிர்ப் புகள் ஏற்படுத்தக்கூடுமெனக் காரணமின்றி எண்ணியமையினால், அச்சி யந்திரங் கொண்டுவந்த 'கறெற்' என்பவர் ஆறு வாரத்திற்குள் இலங்கையை விட்டு நீங்க வேண்டும் என்னும் கட்டளையைப் பிறப்பித் தனர். 'கறெற்' என்பவர் இந்தியா செல்ல, அச்சியந்திரம் நல்லூரி லிருந்த கனம் 'நைற்' ஐயரவர்களிடம் அளிக்கப்பட்டது. அவ் வச்சி யந்திரமே யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் நிறுவினதாகும். அதில் அச்சேற்றிய முதனூல் "முத்திவழி" என்பதே. 1834-ம் ஆண்டு வரையும் நல்லூரிலிருந்த அவ் வியந்திரம் 'சேர் றபேட் ஹோட்டன்' உத்தரவினாற் றிரும்பவும் அமெரிக்கன் மிஷனுக்குக் கொடுக்கப் பெற்றது.

அச்சுத் தொழிலைப் பார்ப்பதற்கென்று 'ஸ்ரேங் மைன'ரும் அவர் மனைவியும் அமெரிக்காவிலிருந்து வந்தனர். நான்கு அச்சுக் கோப்பவ ருடன் தொடங்கிய அச்சகம் ஆறு ஆண்டுகளுக்குள் எண்பத்தொரு வேலைகாரருடன் தொழில் செய்யத் தொடங்கியது. இவ் வச்சகம் சிறப்பாகக் கிறிஸ்தவ இலக்கியத்தை வெளியிடுவதற்காகப் பயன்பட்ட தேனும், பொதுவாக யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கல்வி வளர்ந்தோங்கு வதற்குப் பெரிதும் உதவியது என்பதற்கு ஐயமேயில்லை. 1855-ம்

ஆண்டுவரையும் யாழ்ப்பாணத்தில் வேறு அச்சகம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அதுவரையும் யாழ்ப்பாணத்தில் அச்சேற்றிய வெளியீடுகள் இவ் வியந்திரத்திலேயே அச்சிடுவித்தனவாகும். வட்டுக்கோட்டையில் 1823-ம் ஆண்டு தொடங்கிய 'செமினரி'க்கும், 1824-ல் உடுவிலில் தொடங்கிய பெண் பாடசாலைக்கு முரிய பாட புத்தகங்களும், சூடாமணி நிகண்டு போன்ற அகராதிகளும், ஆனெல்ட் சதாசிவம்பிள்ளை, கறல் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப் பிள்ளை, உவைமன் கதிரைவேற்பிள்ளை போன்ற செமினரியி லரங்கேறிய பாவலர்கள், புலவர்கள் முதலிய எழுத்தாளர்கள் எழுதிய நூல்களாகிய சாதாரண இதிகாசம், வீச கணிதம், நியாயவிலக்கணம் சுப்பிரதீபம் முதலிய நூல்களும், பிறவும், கிறீன் வைத்தியரும் அவர் மாணவரும் எழுதிய வைத்திய நூல்களும் எல்லாம் குறித்த அச்சகத்து வெளியீடுகளே. இவற்றைவிட, செமினரியிலும் உடுவிற் பாடசாலையிலும் இலக்கிய பாடமாக வைத்திருந்த நைடதம், பாரதம், இராமாயணம், கந்தபுராணம், கூர்மபுராணம், தத்துவக் கட்டளை முதலிய நூல்கள் பலவும், இன்றேற் சிலவாகிலும் இவ் வச்சகத்து அச்சேறியிருக்கக்கூடும். அமெரிக்க மிஷன் அச்சகத்தில் 1821-ம் ஆண்டு தொடங்கி இற்றையவரையும் வெளிவந்த நூல்களைக் கணக்கிட்டுச் சீர்தூக்கிப் பார்ப்போமாயின், அத் தொண்டொன்றே எம்மவர் உள்ளங்களைச் செய்ந்நன்றியால் நிரப்புவதற்குப் போதிய காரணமாகும்.

அமெரிக்க மிஷனரிமார் இலங்கைக்கு வந்ததனால் இங்குள்ள தமிழர், அவர்களா லமைக்கப்பட்ட அச்சகம் ஒன்றினால் மட்டும், நன்மையடைந்தனரா? வேறு துறைகளைக் குறித்து ஆராய்வதற்கு முன், குறித்த அச்சகத்தினால் இலங்கைத் தமிழர் மாத்திரமன்று, தென்னிந்தியாவிலுள்ள தமிழரும் அடைந்த பெரிய நன்மை யாதெனில் செய்தித் தாள்கள் வெளியீடாகும். 1841-ம் ஆண்டில் அமெரிக்க மிஷன் 'உதயதாரகை' யெனும் செய்தித் தாளை வட்டுக்கோட்டையிற் றொடங்கியபோது இலங்கை முழுவதிலும் 'சிலோன் ஒப்சேவர்' எனும் ஒரேயொரு செய்தித் தாளே நடந்துகொண்டு வந்தது. இது ஆங்கிலத்தில் நடக்க 'உதயதாரகை'யோ ஆங்கிலத்திலும் தமிழிலும் நடந்துவந்தது. இச் செய்தித் தாளைத் தொடங்கினவருள் ஒருவராகிய 'பூர் ஐயர்', "நாகரிகம் படைத்த மக்கள் அறிவைப் பெருக்குங் கருவிகளுள் மேம்பாடுள்ளது புதினப் பத்திரிகை" எனக் கூறியுள்ளார். அதன் நோக்கம் முதலாம் பிரதியிலேயே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: 'உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாத்திரம், பொதுவான

கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவையைப்பற்றி யும், பிரதான புதினச் சங்கதிகளைப்பற்றியும் அச்சடிக்கப்படும்' இப் பத்திரிகையைத் தொடங்குதற்குத் தூண்டுதலாயிருந்தது மிஷனரி மாராயினும், அன்று தொடங்கி இன்று வரையும் பெரும்பாலும் எம் மவரே பத்திரிகையை நடாத்திவந்திருக்கின்றனர். வெளியீடு தொடங்கிய போது இதழாசிரியரா யிருந்தோர் ஹென்றி மாட்டின் அவர்களும் செத் பேச னவர்களுமாம். இவ் விருவருஞ் செமினரியில் படித் தரங் கேறியவர்கள். இவர்களுள் முன்னையரின் ஞாபகமாகவே "மாட்டின் ரோட்' எனும் வீதி அவர் காலத்திலோ அவருக்குப் பின்போ திறக் கப்பட்டுள்ளது. பேசன் என்பவரே தன் வாழ்க்கையின் பிற் பகுதியில் பல்லாண்டாகச் சண்டிருப்பாய் உடையாராக விளங்கினர்.

பழைய 'உதய தாரகை'ப் பத்திரிகைப் பிரதிகளை ஆராயும்போது, அதுமூலமாக இலங்கைத் தமிழர் மட்டுமன்று தென்னிந்தியத் தமிழரும் பெரும் பயனடைந்தன ரென்பதற் கையமேயில்லை. அக் காலத்தில் தென்னிந்தியாவி லிருந்த புலவராய 'வேதகிரி முதலியார்' போன்ற வர்களும் கட்டுரைகள் அளித்தனர். தமிழ் வழங்கும் இந்தியாவிற் காலத்துக்குக் காலந் தோன்றிய சூரியநாராயண சாஸ்திரியார் முதலிய புலவர் பாவலருடைய செய்திகளெல்லாம் பத்திரிகைமூல மறிவிக்கப் பட்டன.

தமிழுரைநடை வளர்வதற்கு 'தாரகை' சிறந்ததொரு கருவியா யிருந்தது. ஆறுமுக நாவலர்போன்ற சைவர்கட்கும், கறல் விசுவநாத பிள்ளை போன்ற கிறிஸ்தவர்கட்கு மிடையில் சமய முதலிய விஷயங் களைக் குறித்து வாக்குவாதங்கள் நடந்ததன் விளைவாக உரைநடை தமிழில் தெளிவடைந்து சிறப்புற்றது. உதயதாரகையைவிட, ஆங் கிலத்திலுள்ள 'Children's Newspaper' போன்றதொரு பத்திரிகை யும், 'பாலியர் நேசன்' என்ற பெயருடன் 1859-ம் ஆண்டில் வெளி வரத் தொடங்கியது. ஆங்கிலத்திலுந் தமிழிலும் 'கத்தோலிக்க பாது காவலன்' என்ற செய்தித் தாள் 1879-ம் ஆண்டில் வெளிவந்தது.

வைத்தியத்துறையில் கிறீன் வைத்தியர் முயற்சியினால் தமிழில் வெளிவந்த நூல்களோ பல. அக் காலத்தில் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களில் வெளிவந்திருந்த வைத்திய நூல்களிற் சிறந்த வற்றைத் தெரிந்தெடுத்துத் தான் மொழிபெயர்த்ததுமன்றி, தனது மாணவராய 'உவில்லியம் போல்', 'யோசுவா டான்வோத்' முதலிய

வர்கள் மூலமாகவும் மொழிபெயர்ப்பித்தார் இம் மொழிபெயர்க்கும் முயற்சி தொடங்குதற்கு முன் 'வைத்தியச் சொற்களுஞ் சொற்றொடர் களும்' என்னுந் தலைப்பின் கீழ் ஆங்கில வைத்தியச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி எத்தனையோ புதுச் சொற்களை ஆக்கியமைத்தனர். கிறீன் வைத்தியரும் அவர் மாணவர்களும் மொழிபெயர்த்த நூல்கள் எல்லா மாக நாலாயிரம் பக்க மடங்கியுள்ளன.

நல்லூரிலிருந்த கனம் நைற் பாதிரியார் தமிழைப் படிக்கத்தொடங் கும்போதே தமிழிலே தகுந்ததோ ரகராதி யின்மையை உணர்ந்து, அவ்வாறனதோர் அகராதி செய்வதற்குத் தேவையான குறிப்புகளை யெடுக்கத் தொடங்கினர். எனினும், அவரவ் வகராதியை நிறைவாக்கு வதற்கு ஏதோ காரணத்தினல் வசதி வரவில்லை. அக் குறிப்புகளை யெடுத்தே 'உவின்சிலோ' பாதிரியார் மிகவும் பெரிய பேரகராதி இயற்றினர். அவ் வகராதியைக் கோத்து நிறைவாக்குவதில் செமி னரியிற் கல்வி கற்று அரங்கேறி அங்கேயே ஆசிரியராயிருந்த கறல் விசுவநாதபிள்ளை அவர்களும், நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை அவர்களும் அவருக்குப் பெரிது முதவியாயிருந்தனர்.

இவர்களுட் பின்னையவர் பேர்சிவல் பாதிரியார் கோத்த அகராதி வேலையிலும் பேருதவி புரிந்துள்ளார். அதுமட்டுமன்று, இவர் தாமாகவே ஆங்கில—தமிழ் அகராதி யொன்று எழுதினர். தமிழர் அதனை நெடுங் காலம் பயன்படுத்துவதற்கு இறைவன் திருவருள் இல்லாததனல், அது வழக்கழிந் தொழிந்துபோனது. அது அச்சிலிருக்கும்போது அதனைக் கற்றறிந்தோர், தற்காலத்தில் ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞான சாத்திரச் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் அவர் கொடுக்கும் யுத்தியும் சுதந்திர யூகமும் நிறைந்த வரைவிலக்கணங்கள் கருத்துக்கள் முதலிய வற்றிற்காகப் பெரிதும் மெச்சிக் கூறியுள்ளனர்.

இத் தொடர்பிலே மிஷனரிமாரமைத்த கல்விச்சாலைகளிற் கல்வி பயின்று அவர்கள் பலருடன் நெருங்கிப் பழகியதன் பயனகத் தமிழ்ப் பெருந்தகையினர் இருவர் வெளியிட்ட அகராதிகள் இன்னு மிரண்டுள. காலஞ்சென்ற கனம் 'உவெல்ச்' போதகரவர்களின் மனைவியாருக்குத் தந்தைவழிப் பாட்டனராகிய உடுவிற் 'சந்திரசேகர பண்டித'ரவர்கள் எழுதியதும், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் நீதவானயிருந்த வரும் 'உவைமன் றேட்' என்ற வீதிக்குப் பேரளிப்பதற்குக் காரணரா யிருந்தவருமாய உவைமன் கதிரைவேற்பிள்ளை யவர்கள் கோத்ததுமே

இவ் விரண்டுமாம். இவர் கனம் 'ஸ்போல்டிங்' பண்டிதருடனும், கனம் நைற் அவர்களுடனும் பல மொழிபெயர்ப்புகள் செய்வதிற் சம்பந்தப்பட்டிருந்தனர். நைற் பாதிரியார் செய்ய முயன்ற தமிழ்—ஆங்கில அகராதி ஆக்குவதற்கு உதவி செய்தவர்களுள் இவருமொருவரே.

வட்டுக்கோட்டை செமினரியிற் கல்விகற் றரங்கேறிய பலர் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழ்மொழி, தமிழ்க் கல்வி, தமிழிலக்கியம் முதலியன மேம்படுதற்குரிய நூல்கள் பல துறைகளிலும் எழுதினர். 'குமாரகுலசிங்க முதலியார்' எழுதிய 'பதிவிரதா விலாசம்', 'ஹென்றி மாட்டின்' எழுதிய 'எஸ்தர் விலாச'மும், 'ஆனல்ட் சதாசிவம்பிள்ளை'யவர்க ளாக்கிய 'இல்லறநொண்டி', 'பாவலர் சரித்திர தீபகம்', 'சாதாரண இதிகாசம்', 'பஞ்சரத்தின மாலை', 'சுகமரண பிரஷ்டம்' முதலியனவும்; நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை தொகுத்ததும் ஆக்கியதுமாகிய 'இலக்கிய சங்கிரகம்', 'நியாய விலக்கணம்', 'தமிழ் வியாகரணம்', பாடசாலைக் கணிதம், என்பவைகளும்; கறல் விசுவநாதபிள்ளை செய்த 'பஞ்சாங்கம்', 'சுப்பிர தீபம்', 'வீச கணிதம்' முதலியனவும் அந் நூல்களுட் சில. சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்கள் பதிப்பித்த தொல்காப்பியம் (சொல்லதிகாரமும் பொருளதிகாரமும்), கலித்தொகை, வீரசோழியம், இலக்கண விளக்கம் என்னும் நூல்களின் பதிப்புகளும் வட்டுக்கோட்டை செமினரியில் அவர் கற்ற கல்வியின் சிறப்புக்குச் சான்று பகரும். மேற்குறித்த நூல்கள், நூற்பதிப்புக ளொவ்வொன்றையு மாராய்ந்து பார்ப்பின், வட்டுக்கோட்டைச் சாஸ்திரக் கல்லூரிக்கும் அதனைத் தொடக்கி நடாத்திய மிஷனரிமாருக்கும் தமிழ்நாடு முழுவதும் எத்துணைக் கடப்பாடுள்ளது என்பதை உற்றுணரலாம். மேற்குறித்தவரும் பிறரும் தாங்கள் நூல்களெழுதியது மாத்திரமன்று, 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றுணர்ந்து பலருக்குத் தம்கல்வியைப் பரப்பி அவர்களையும் நூலாசிரியராக்கினர்.

இச் சாஸ்திரக் கல்லூரியில் அரங்கேறிப் பாண்டித்தியம் பெற்றவர்களுள் ஒருவராகிய 'நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை' அவர்கள் 1887-ம் ஆண்டில் 'Native Town High School' என்னும் பெயரளித்து வண்ணார்பண்ணையில் தொடங்கிய கலாசாலையே இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்னும் பெயருடன் நடைபெறுகின்றது.



டாக்டர் எஸ். எவ். கிறீன் [பக்கம் – 148]



டாக்டர் பேர்சிவல் [பக்கம் – 155]



கண்டி - புத்த தந்தக் கோயில் [பக்கம் - 181]




பேராதனைப் பூந்தோட்டம் [பக்கம் - 181]

சங்க காலத்திலும் அதற்குச் சிறிது பின்பும் பெண்கல்வி தமிழ் நாட்டில் விருத்தியடைந்தபோதிலும், பத்தாம் நூற்றாண்டின் பின் தேசத்தில் பெண்கள் கற்பது முறையன்று என்றதொரு கொள்கையுண்டானது. அதனாலே பத்தாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு மிடையில் பெண்கல்வி இந்தியாவிலு மிலங்கையிலும் மிகவுங் குன்றியது. பெண்கல்வியளவில் இலங்கைத் தமிழர் இருந்த நிலையை உணர்ந்த 'பூர் பண்டிதர்' முதலியவர்கள் முன்குறிப்பிட்டதுபோல், பல்வேறான எதிர்ப்புகளிருந்தபோதிலும், தேசத்துப் பெண்கள் கற்றாலன்றித் தேசஞ் சீர்திருந்தாது என்னுமுண்மையைத் தாங்களாகவும், கிறிஸ்தியன் தாவீது முதலியவர்கள் மூலமாகவும் அறிந் துணர்ந்து உடுவிற் பெண்பாடசாலையைத் தொடக்கினர். படிக்க விரும்பாத சிறு பிள்ளைகளுக்குப் பல்திறப்பட்ட கவர்ச்சி காட்டி அவர்களைப் படிக்கப்பண்ணுமாறுபோல, உடை, சீதனம், தமக்கேற்ற தலைவனைப் பெறுதல், ஆண் சகோதரர்களைச் சாஸ்திரக் கல்லூரியிற் சேர்த்தல் முதலிய கவர்ச்சிகளைக் காட்டிப், பெற்றோர் தம் பெண்மக்களை, உடுவிற் பெண்பாடசாலைக்கு அனுப்பப்பண்ணினர். இவ்வாறு தொடங்கிய பாடசாலையிற் கல்விகற் றரங்கேறிய பெண்கள் சிலர் இலங்கையிலும், வேறிடங்களிலும் கல்வியைப் பெண்களுக்குப் பரப்புவதற்குச் சிறந்த கருவிகளாயிருந்தனர். 'Carolise Chester' என்ற ஆங்கிலப் பெயரையுடைய யாழ்ப்பாண மகளிரொருவர் நல்லூரிற் பெண்கள் கல்வியைப் பரப்பத் தொடங்குதற்கு உதவியாயிருந்தனர். 'ஸ்போல்டிங் பண்டிதர்' ஏவுதலினால் இராமநாதபுரத்து வாழ்ந்த ஓர் இளவரசியைக் கற்பிப்பதற்கு உடுவிற் பாடசாலையிற் கற்ற 'Anne Mana' என்னுமொரு பெண் அனுப்பப்பட்டனர். 1828-ம் ஆண்டில் உடுவிற் பெண்பாடசாலையிற் கல்வி கற்ற 'Hamet Newell Ambrose' என்னும் பெண் யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஒரு பெண்பாடசாலையைத் தொடக்கினர். இவ்வாறு பெண்கல்வி பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையிற் பரவிக்கொண்டு வந்தது. இக் காலத்திலேதான் குளத்தூர் வேதநாயகம்பிள்ளை அவர்கள் பெண்கல்வியின் காத்திரத்தையுஞ் சிறப்பையும் 'பெண்கல்வி' யென்னும் நூலிலுணரக் கூறினர்.

வட்டுக்கோட்டைச் சாஸ்திரக்கல்லூரிக்குத் தலைவராகப் பத்தே பத்தாண்டுகள் உழைத்த 'Horsington' பண்டிதர் அத்தனை ஆண்டுகட்குள் இதற்குமுன் கூறியவர் செய்யாததொரு தொண்டைச் செய்தனர். அவர் தமிழை வரையறக் கற்றது மட்டுமன்று, யாழ்ப்பாணத்திலக்காலத்திற் சிறந்தோங்கிய சமயமாய சைவசமயத்தையும், சைவசித்

தாந்தக் கொள்கைகளையும் ஆராயத் தொடங்கினர். இதற்குதவியாகக் கல்லூரியிற் கந்தபுராணத்தை இலக்கிய பாடத்திற்காக வைத்தனர். அவ்வாறு முதன்முதல் வைத்தபோது சைவர் பலர் எதிர்த்தனர். அதனை அவர் கவனியாது கற்பித்ததனு லிரண்டு பயன்கள் விளைந் தன. முதலாவதாக, கல்லூரியிற் கல்விகற்று நீங்கிய சைவ மாணவர் தமது சமயத்தை யறிந்தனர். கிறிஸ்தவ மாணவர் தமது மதத்திற் குஞ் சைவமதத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை யறிந்தனர். இரண்டாவதாக, பண்டிதரவர்கள் கந்தபுராணத்தைக் கற்பதிற் கொண்ட சுவையினுற் சைவசித்தாந்த நூல்களை யாராய்ந்து 'தத்துவக் கட்டளை,' 'சிவஞானபோதம்,' 'சிவப்பிரகாசம்' ஆகிய நூல்களைப் போதிய குறிப்புடன் 1854-ம் ஆண்டு ஆங்கிலத்தில் முதன்முதல் மொழிபெயர்த்தனர். இம் மொழிபெயர்ப்பே நல்லசாமிப்பிள்ளையவர் கள் பலவாண்டுகளுக்குப்பின் சிவஞானபோதத்துக்குச் செய்த மொழி பெயர்ப்புக்கு உதவியாயிருந்தது.

இக் கட்டுரையை எழுதத் தொடங்கும்போது இத்துணையெல்லாங் கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டுபுரிந்துள்ளா ரென்று முணர்ச்சி அடியேனுக்குச் சிறிதளவேனு மிருக்கவில்லை. காற் றினுற் சூழப்பட்டுக் காற்றையே உண்டு வாழும் மக்களாகிய நாம் காற்றில்லாவிடின் வாழமாட்டோ மென்பதைப் பெரிது முணர்வதில்லை. அவ்வாறே கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழ்க் கல்வி விஷயத்திற் செய்த தொண்டை நாம் எப்போதும் நன்றியுணர்வுடன் நினைப்பதில்லை. காற் றன்று எமக்குயிரைத் தருவது. காற்றையு மெம்மையும் படைத்த எல்லாம் வல்ல இறைவனே உயிருக்கு ஊற்று. அதுபோலவே கிறிஸ் தவ மிஷனரிமாரல்லர். அவர்களையு மெம்மையுந் தம் பெருங்கருணை யாற் படைத்து எமக்கு அருமையாகத் தந்த தெய்வீக மொழியாகிய தமிழை வளர்ப்பதற்கு அவர்கள் கையிற் கொடுத்துச் சீர்திருத்தித் திரும்பவும் எங் கையி லதைத் தந்திருக்குங் கருணை வள்ளலாகிய இறை வனே எம் மொழியை வளர்த்து இம் மேம்பட்ட நிலைக்குக் கொணர்ந் தனன். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" எழுதிய இக் கட் டுரையை அவற்கே சமர்ப்பிக்கின்றேன். அவற்கே எல்லா மேன்மை யுந் துதியு முண்டாவதாக.

# ஈழத்தின் பிரசித்த இடங்கள்

முதலியார், குல. சபாநாதன்

இலங்கைக்கு முதன்முதல் வருபவர்கள் இந்நாட்டில் தாம் பார்க்கவேண்டிய இடங்கள் யாவை? விசேடங்கள் என்ன? என்றெல்லாம் கேட்பது சர்வசாதாரண வழக்கம்.

சென்ற வருடம் ஒருமுறை வடஇந்தியாவில் இருந்து வந்த அன்பர் ஒருவர் "சீதாபிராட்டியாருடன் தொடர்புபட்ட புனித இடங்களைப் பார்க்கவேண்டுமென்ற பேராசையுடன் இங்கே வந்தேன்" என்று எம்மிடம் கூறினார். இங்குள்ள புராதன நகரங்களோ அன்றித் தாது கோபங்களோ அவர் மனதை ஈர்க்கவில்லை. மற்றொருமுறை தென்னிந்தியாவிலிருந்து வந்த சைவப்பெரியார் ஒருவர், "நாவலர் பெருமானை உலகினுக்களித்து வான்புகழ்கொண்ட ஈழநாட்டினையும், அவர் வாழ்ந்தமையாற் புனிதமடைந்த வீட்டையும், அவர் ஸ்தாபித்த பாடசாலையையும் தரிசிக்கவேண்டுமென்ற ஆவலுடன் வந்தேன்" என்று கூறினார். இலங்கையிலுள்ள மலைநாடுகளைச் சுற்றிப்பார்த்த மற்றுமோர் இந்திய நண்பர் வதுளையிலுள்ள 'துங்ஹிந்த' நீர் வீழ்ச்சியின் இயற்கை எழிலில் தம் மனதைப் பறிகொடுத்து நின்றார். அவரை அங்கிருந்து கூட்டிச்செல்ல அதிக முயற்சி செய்யவேண்டியிருந்தது. "கந்தன் வதியும் கதிர்காமத்தைக் கண்ணாரக்காண விரைந்து ஓடிவந்தேன்" என்ற முருக பக்தரின் வார்த்தைகள் என் செவியில் இன்றும் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.

கிழக்குமாகாணத்திலுள்ள கன்னியாய் வெந்நீரூற்றிலும் வடக்கேயுள்ள கீரிமலை நன்னீரூற்றிலும் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் மாறி மாறி நீராடுவதற்கு ஒரு சிறு விமானம் வைத்திருக்கவேண்டுமென்று ஆசைப்பட்ட நண்பரும் உண்டு.

### இலங்கை வளம்

இலங்கையின் எழில்மிகு தோற்றத்திற்கு அதன்கண் விளங்கும் ஆறுகளையும் மலைகளையும் விசேஷ காரணங்களாகக் குறிப்பிடவேண்டும். இதன் நடுப்பாகம் உயர்ந்த மலைப்பிரதேசங்களைக் கொண்டதாய், நாலாபக்கமும் சாய்ந்து சென்று, சமுத்திரக் கரையோரத்தில் சமபூமியாய் முடிகின்றது. இங்குள்ள மலைகளில் பேதுருமலை (8296 அடி),

மிகவுயர்ந்து நிமிர்ந்து நிற்கின்றதெனினும், அதற்கடுத்ததாகவுள்ள ஸ்ரீபாதமலை (7353 அடி) புனிதமும் பெருமையும் வாய்ந்த தொன்றாக விளங்குகின்றது.

மத்திய பகுதியில் உள்ள மலைத்தொடர்களிலிருந்துதான் நதிகள் ஊற்றெடுத்து, நாற்றிசைகளிலும் ஓடிச் சென்று கடலுடன் கலக்கின்றன. மகாவலிகங்கை, களனிகங்கை, அருவியாறு முதலியன இலங்கையின் இயற்கைவளத்தினைப் பொலிவு செய்துகொண்டிருக்கின்றன.

ஈழமண்டலத்துக்கு அழகும் பெருமையும் தரும் ஆற்றுவளத்தைச் சின்னத்தம்பிப் புலவர்,

> "கருவ லம்புரிச் செங்கதிர் மாவலி
> கங்கை யாறு பெருகிக் கரையின்,
> இரும ருங்கினு முத்தங் கொழித்திடு
> மீழ மண்டல நாடெங்க ளூடே."

என எடுத்துக் காட்டியுள்ளார்.

**புராதன இலங்கை — கதிர்காம வழிபாடு**

இலங்கைச் சரித்திர வரலாற்றுடன் பல ஐதிகங்களும் கலந்து காணப்படுகின்றன. இந்த ஐதிகங்களே பொதுமக்களின் மனதை எளிதிற் கவர்ந்து கொள்கின்றன. அன்றியும் இவற்றுட் சில உண்மைகளும் இலைமறை காய்போலக் கிடக்கின்றன.

கந்தபுராணத்தில் இலங்கை அசுரர் வாழ்ந்த நாடாகக் கூறப்படுகின்றது. அரக்கர் தலைவனாகிய சூரபன்மனை வெல்லவே கார்த்திகேயக் கடவுள் இலங்கைக்கு வந்தார் எனக் கூறப்படுகிறது. இக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளிய ஆலயம் கதிர்காமம் என்னும் ஸ்தலத்தில் இன்றும் உண்டு. இது கொழும்பிலிருந்து 177 மைல் தூரத்திலுள்ளது. இலங்கைக்கு வருபவர்கள் பிரதானமாகத் தரிசிக்கவேண்டிய புனித ஸ்தலம் இது.

கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு மோட்டார்வண்டி மார்க்கமாக அல்லது புகைவண்டி மார்க்கமாக நீங்கள் யாத்திரை செய்யலாம். மோட்டார்வண்டியில் நீங்கள் செல்ல விரும்பினால், களுத்துறை, காலி, மாத்தறை, தெய்வந்துறை முதலிய இடங்களிலுள்ள பௌத்த விகாரைகள், இந்து ஆலயங்கள், டச்சுக் கோட்டைகள் முதலியவற்றைத் தரிசித்துக்கொண்டு செல்லலாம். கோயிலை அடைவதற்கு ஒருமைல் தூரத்தின்முன் மோட்டார்வண்டியை நிறுத்திவிட்டுப் பின்னர் நடந்து செல்லவேண்டும். புகையிரத மார்க்கமாக நீங்கள் யாத்திரை செய்ய

விரும்பினால் கொழும்பிலிருந்து மாத்தறை சென்று, அங்கிருந்து பஸ் வண்டி மார்க்கமாக திஸ்ஸமாராவுக்குச் சென்று அங்கிருந்து 10–11 மைல் வரை நடந்து செல்லவேண்டும். அல்லது மாட்டுவண்டி அமர்த்திக் கொண்டு செல்லவேண்டும்.

கதிர்காமநாதன் ஆலயத்திற் பெரிய கோபுரத்தையாவது விமானத்தையாவது நீங்கள் பார்க்கமுடியாது. கர்ப்பக்கிருகமும் சிறுமண்டபமும் கொண்டதே அவன் கோயில். கர்ப்பக்கிருகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. இது ஒருபோதும் நீக்கப்படுவதில்லை. வெளிமண்டபத்தில் நின்றே மக்கள் வழிபடவேண்டும். கதிர்காம வேலருக்குப் பூசை செய்பவர்களைக் கப்புராளைமார், கப்புகனார் என்று சொல்வது வழக்கம். இவர்கள் பூசை செய்யும் முறையும் இக்காலச் சைவமுறைக்கு வேறுபட்டது. வள்ளிமணாளனுக்குப் பூசை நிகழும் பொழுது அவனை வரவேற்பதற்கு வள்ளியின் வழித்தோன்றல்களாகக் கருதப்படும் வேடர் குலத்து ஆலாத்திப் பெண்கள் நாடோறும் வந்து ஆலாத்தியெடுப்பார்கள். கப்புராளைமார் தம் வாயை மஞ்சள் துணியினாற் கட்டி, அமுதினை உள்ளே காவிச்சென்று வைத்த பின்னர் வெளியே வந்து, திரைச்சீலை முன்பாக நின்று, கைகளிரண்டையும் தலைமேற் கூப்பி வழிபாடு இயற்றுகின்றனர்.

திருவிழாக் காலங்களிற் கப்புராளைமார் சந்நிதானத்துள் இருந்து ஏதோ ஒரு பொருளைப் பெரிய வஸ்திரத்தால் மூடி ஒருவருக்கும் அது இன்னதெனத் தெரியாவண்ணம் கொண்டுவந்து யானைமீதுள்ள பெட்டியுள் வைத்து இறுகக் கட்டிவிடுகின்றனர். இது ஒரு யந்திரப் பெட்டியெனச் சிலர் கருதுகின்றனர். இப்பொருளே சுவாமி சந்நிதானத்திலிருந்து வள்ளியம்மன் கோயிலுக்கு யானைமீதேற்றிக்கொண்டு செல்லப்படுவது.

குளிர்ச்சியைத் தரும் மாணிக்ககங்கை இக்கோயிலின் அருகில் 'மணிதரளம் வீசி' சலசலவென ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆற்றின் பெருமை என்ன என்றுதானே கேட்கிறீர்கள்?

"கண்டாலும் கேட்டாலும் கழுவினாலும்
கைதொட்டுத் தெளித்தாலும் காத லாக
உண்டாலு முரைத்தாலும் வினைகள் யாவும்
ஒருக்காலும் நெருங்காமல் ஓட்டித் தேவர்
கொண்டாடும் படிஓடும் புனல்சேர் சோதி
குலவுமணி மாணிக்க கங்கை."

என்று நாவலியூர் க. சோமசுந்தரப் புலவர் அவர்களே உங்கள் சந்தேகத்தை நீக்கி வைப்பார்கள்.

கதிர்காமநாதன் கோயிலுடன் வள்ளி தெய்வயானையம்மன் கோயில்களுமுண்டு. இங்கிருந்து சிறிது தூரத்திலுள்ள செல்லக் கதிர்காமத்தினையும் கதிரைமலையினையும் தரிசித்தல்வேண்டும்.

கதிர்காமத்தில் ஒரு பௌத்தாலயமும் வெள்ளரசமரமும் உண்டு. பௌத்தர்கள் ஏராளமாகச் சென்று கதிர்காமக் கடவுளை வழிபடுகின்றனர்; 'கதிரகம தெய்யோ' என்று பயபக்தியுடன் வழிபட்டுவருகின்றனர். இலங்கையிலுள்ள பௌத்தாலயங்களிற் கதிர்காம தெய்யோவுக்கும் ஒரு தனி இடம் அளிக்கப்படுகின்றது. கண்டியிற் பௌத்தர்கள் நடத்தும் 'பெரஹரா' எனப்படும் விழாவிலும் கதிர்காமநாதனுக்கு முதலிடம் அளிக்கப்படுகின்றது.

பௌத்த சமயம் இலங்கைக்கு வரமுன்னர் சிங்களர் கதிர்காமக் கடவுளை வழிபட்டனர் என்றே சொல்லலாம். பௌத்த சமயத்தைத் தழுவிய பின்னரும் சிங்கள அரசர்களும் குடிகளும் கதிர்காம வழிபாட்டைக் கைவிடவில்லை.

இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் யாவரும் சாதிமதபேதமின்றி வழிபடும் ஸ்தலமாகக் கதிர்காமம் விளங்குகின்றது.

**தெய்வந்துறை**

கதிர்காமக் கடவுள் முதன்முதல் வந்திறங்கிய இடம் தென்னிலங்கையிலுள்ள தெய்வந்துறையெனச் சிங்களர் கருதுகின்றனர். இது இப்பொழுது 'டொன்ட்ரு' என்றழைக்கப்படுகிறது. இது கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்குச் செல்லும் மார்க்கத்தில், மாத்தறையிலிருந்து 4 மைல் தூரத்திலுள்ளது. இந்து தெய்வங்கள் கோயில்கொண்ட துறையாதலின் இது தெய்வந்துறையெனப் பெயர் பெற்றதெனப்படுகின்றது. இங்கே பேர்பெற்ற புராதன திருமால் கோயில் ஒன்றிருந்தது. திருமாலைக் காவற் கடவுளாக 'விஷ்ணு தெய்யோ' எனச் சிங்களர் வழிபடுகின்றனர். இத்தலத்தைக் கி. பி. 1344–ல் தரிசித்த 'இபின்பட்டுடா' எனும் தேச யாத்திரிகன் இவ்வாலயத்தில் 5000 பிராமணர்களும் 500 ஆடல் மகளிரும் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளான். தென்னிலங்கையில் இந்து தெய்வ வழிபாடு தலைசிறந்து விளங்கிய இடம் இதுவெனலாம். இங்கே செஞ்

சந்தனக் கட்டையிற் செதுக்கப்பட்ட பாரிய விஷ்ணு விக்கிரகம் ஒன்று முன்னொருகாலத்தில் இருந்ததாம். கயவாகு மன்னன் இங்கே ஒரு கண்ணகி கோயிலைக் கட்டினான் என்ற ஐதிகமும் உண்டு.

கி. பி. 1245-ல் இரண்டாம் பராக்கிமபாகு 'எசால பெரஹரா' எனும் விழாவினை ஆரம்பித்துச் சிறப்பாக நடத்தினான். அவ்விழா இன்றும் அவ்வாறே நடைபெற்று வருகிறது.

**முன்னேஸ்வரம்**

இராமபிரான் இலங்கை வந்துசேரக் கட்டிய அணை இராமரணை அல்லது ஆதாம் பாலம் என்று வழங்கப்படுகின்றதல்லவா? இராமபிரான் இலங்கைக்கு வந்து சலாபப் பகுதியிலுள்ள முன்னேஸ்வரத்தில் வணங்கினார் என முன்னேஸ்வர மான்மியம் கூறுகின்றது. இத் தலம் மிகவும் புராதன சிவஸ்தலம். சிங்கள அரசர்களும் தமிழ் அரசர்களும் இவ் வாலயத்தை ஆதரித்துவந்தனர். இதுவும் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டது. பழைய கோயிலில் இருந்த லிங்கம் பின்னமுற்ற நிலைமையில் இப்போதுள்ள ஆலயத்துக்குப் பின்புறத்தில் உண்டு. சலாபம் கொழும்பிலிருந்து 49 மைல் தூரத்திலுள்ளது. இங்கே ஒரு புகையிரதஸ்தானமும் உண்டு. புகையிரதஸ்தானத்திலிருந்து 2 மைல் தூரத்தில் முன்னேஸ்வரம் உண்டு. கோயிற் கட்டடத்தில் அநேக தமிழ்க் கல்வெட்டுக்களைக் காண்பீர்கள். இவற்றை வாசித்தறிந்தாற் பல சரித்திர உண்மைகள் வெளிவரக்கூடும்.

**மலைப்பிரதேசம்**

இனி, சீதாபிராட்டியாரைக் கொஞ்சம் கவனிப்போம். சீதாவாக்கை, சீததலவா, சீதஎலிய, சீதாக்குன்றம், சீதாகங்கை முதலிய இடப்பெயர்கள் சீதையோடு சம்பந்தப்பட்டவை.

கொழும்பிலிருந்து இரத்தினபுரிக்குச் செல்லும் பாதையில் 'தல்டுவா' கிராமத்தில் ஒரு சிற்றாறு ஓடுகின்றது. இது சீதாவாக்கை கங்கை என அழைக்கப்படுகின்றது. இதிலேதான் சீதாபிராட்டியார் நீராடுவது வழக்கமாம். இக் கங்கைக் கருகிலுள்ள சிறு குன்றின்மேல் பெரண்டிகோயில் எனப்படும் புராதன சிவாலயம் சிலமுற்ற நிலையில் காட்சியளிக்கின்றது. இது முதலாம் இராஜசிங்கன் எனும் அரசன் சைவசமயத்தைத் தழுவியபொழுது, அவனாற் கட்டப்பெற்ற கோயிலாகும்.

இங்கிருந்து மலைநாட்டுக்குச் செல்வோம். அங்கே சீதாபிராட்டியார் சிறையிருந்த அசோகவனம் உள்ளது. இயற்கைவளம் மிக்க நுவரெலி

யாவுக்கு முதலிற் செல்வோம். இது கடல் மட்டத்திலிருந்து 6000 அடி உயரத்தில் இருக்கிறது. இதனையடைவதற்கு யாம் ஏறிச்செல்லும் பாதையே ஒரு தனிச்சோலையுடன் விளங்குகிறது. வளைந்து வளைந்து உயர்ந்து செல்லும் பாதை வழியாக நீங்கள் மோட்டார்வண்டியிற் செல்லும்பொழுது உயிருடன் போய்ச்சேர முடியுமோ என்றுகூடச் சந்தேகப்படுவீர்கள். பாதையிலிருந்து சிறிது தவறினால் 'கிடு கிடு' பாதாளத்துக்கு உருண்டு செல்லவேண்டியதுதான் எனபதைக் காண்பீர்கள். அங்கு நறுமணங் கமழும் பூஞ்சோலையில் குளிரிளந் தென்றல் வீச, நீங்கள் சிறிதுநேரம் உலாவினால் உங்கள் பிரயாணக் களைப்பெல்லாம் பறந்துவிடும். உலாவியபின் இப் பூஞ்சோலையிலுள்ள ஆசனமொன்றில் சிறிதுநேரம் ஆறுதலாக இருப்போம் வாருங்கள்.

'மாசில் வீணையும மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும
மூசு வண்டறை பொய்கையும' என்ற அப்பர் சுவாமிகள் அருள்வாக்கின் உண்மையினை இப் பூஞ்சோலையில் இருக்கும்போது உணர்வீர்கள்.

நுவரெலியாவிற் சிறிதுநேரம் களைப்பாறிவிட்டு, ஹக்கலை பூந்தோட்டததுக்குச் செல்வோம். நுவரெலியாவிலிருந்து 3 மைல் தூரம் சென்றதும் 'சீதஎலிய' என்ற இடத்தை அடைவோம். இதன்பெயரே உங்களைப் பரவசப்படுத்தும். இங்கே ஒரு சிறு கோயிலுண்டு. இதுதான் சீதையம்மன் கோயில். இதில் இராமர், இலக்குமணர் சீதை எனும் மூவரின் சிலா விக்கிரகங்களுண்டு. என்ன யோசிக்கின்றீர்கள்? இவ்விடத்தில் நிலம் சிறிது கறுப்பாயிருப்பதற்கா? சரி! அநுமான் இலங்கைக்கு நெருப்புவைத்தது உங்களுக்கு ஞாபகம் இருக்குமே. அப்பொழுது சீதை சிறையிருந்த இந்த அசோகவனமும் கரிந்துபோய்விட்டதாம். தீயில் அகப்பட்டுக் கரிந்துபோகாமற்றப்பிய அசோக மரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிற்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். சீதையை வருத்திய இராவணன் மீது வனததிலிருந்த மரங்கள்கூடக் கோபங்கொண்டவைபோல, இவ் வசோகமரங்கள் செந்நிறப் பூக்களுடன் காட்சியளிக்கின்றன அல்லவா? அநுமார் மூட்டிய தீயினால் ஏற்பட்ட வெப்பத்தைத் தணிக்கச் சீதை அங்கும் இங்கும் பார்த்தாளாம். உடனே அவள் ஒரு குன்றிலே காலினால் ஊன்றினாளாம். அவ்வளவுதான். கற்பாறையிலிருந்து குளிர்ந்த ஜலம் பீறிட்டு வெளி வந்தது. இது வற்றாத நீரூற்றாக இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது.



மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் [பக்கம் – 129]



ஸ்ரீமத் விபுலாநந்த
அடிகளார் [பக்கம் – 146]
உபயம் :
இராஜ அரியரத்தினம்



முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை
[உவில்லியம் நெவின்ஸ்] [பக்கம் – 128]



டாக்டர் ஆனந்தக் குமார சுவாமி
[பக்கம் – 148]

இங்கிருந்து 3 மைல் தூரத்தில் ஹக்கல பூந்தோட்டம் உண்டு. மலைநாட்டுப் பூந்தோட்டம் என்றால் சொல்லவும் வேண்டுமா? சீதை சிறையிருந்த இடத்தைப் பார்த்த நீங்கள் அவள் காலத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்மணி வாழ்ந்த நகரையும் பார்க்கத்தான் வேண்டும். இராவணன் மனைவி மண்டோதரி வாழ்ந்த ஊராகிய மாந்தைக்குச் செல்வோம்.

**மாதோட்டம் (மாந்தை நகர்)**

நீங்கள் விமான மார்க்கமாக வருவதாய் இருந்தால் நேரே யாழ்ப்பாணம் வந்துவிடலாம். புகையிரத மார்க்கமாக வருவதானால், தலைமன்னார் துறைமுகப் பாலத்தில் வந்துநிற்கும் இலங்கைப் புகையிரதத்தில் ஏறித்தான் வரவேண்டும். அங்ஙனம் புறப்பட்டுச் சிறிது தூரம் வந்ததும் மன்னார் என்றொரு புகையிரத நிலையமுண்டு. இங்கிருந்து 6½ மைல் தூரத்தில் திருக்கேதீச்சரம் எனும் பாடல் பெற்ற தலமுண்டு. இது மாதோட்ட நகரிலுள்ளது.

சிங்கள அரசர்கள் அநுராதபுரத்தைத் தலைநகராக அமைத்ததற்குப் பலவாண்டுகட்கு முன்னரே மாதோட்டம் சிறந்த துறைமுகமாக விளங்கியது. இது மாந்தை நகர் எனவும் அழைக்கப்படும். உரோமர், கிரேக்கர், அராபியர், சீனர் முதலிய அந்நிய நாட்டு வர்த்தகர்கள் வியாபாரத்தின்பொருட்டு வந்து தங்கிச்செல்லும் இடமாகவும் இருந்தது. மாதோட்டத்தில் ஒரு காந்தக் கோட்டை இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இலங்கைத்தீவின் தலைப்பட்டினமாகவும், ஏற்றுமதி இறக்குமதி செய்யும் கப்பல்கள் தங்க வசதியுள்ள துறைமுகமாகவும், சிறந்த வியாபார ஸ்தலமாகவும் விளங்கியது. நாகரிகம் மிகுந்த நாகர் என்னும் சாகியத்தார் புகழுடன் வாழ்ந்த இடமும் இதுவே.

ஈழத்து முத்து என்றால் அதற்கு உலக முழுவதிலும் ஒரு தனி மதிப்புண்டு. இந் நகரை அடுத்த கடற் பகுதிகளிலேதான் உயர்ந்த முத்துக்கள் அகப்படுகின்றன. விஜயராசன் தன் மாமனாகிய பாண்டிய வரசனுக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியுள்ள சங்கும் முத்தும் அனுப்பினான்என மகாவம்சம் எனும் சிங்களச்சரித்திர நூல் கூறுகின்றது.

**திருக்கேதீச்சரம்**

மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்தின் மீது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தேவாரம் பாடியருளினாரெனின், இத் தலத்தின் சிறப்பையும் பண்டைப் புகழையும் சொல்லவேண்டுமா?

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார். பாரத நாட்டின் தென் கோடியில் இராமேஸ்வரம் பல கோபுரங்களையும் மதில்களையும்கொண்டு காட்சியளிப்பதுபோல, இலங்கையின் வடபாகத்திலுள்ள திருக்கேதீச்சரமும் பண்டொரு ஞான்று பெரிய கோபுரங்களைக்கொண்ட புகழ்பெற்ற யாத்திரைத் தலமாக விளங்கியது. இதன் அருகில் பாலாவித் தீர்த்தமுண்டு.

இக் கோயில் போர்த்துக்கீசரால் தரைமட்டமாக்கப்பட்டது. 1910–ம் ஆண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார் உதவியால் மறுபடியும் ஒரு சிவாலயம் கட்டப்பெற்றது. பழைய கோயிலில் இருந்த லிங்கம் கிண்டியெடுக்கப்பட்ட சமயத்தில் பின்னமுற்றதால் அது கோயிலின் வலப்பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இதனை ஒரு கருங்கற் கோயிலாகக் கட்டத் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் முயல்கின்றனர். சுதந்திர இலங்கையில் இது மீண்டும் இலட்சக்கணக்கான பக்தர்கள் யாத்திரை செய்யும் தலமாக விளங்குதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. பாலாவியிற் தீர்த்த மாடித் திருக்கேதீச்சரத்தானை வலம்வந்து தொழுது, திருஞானசம் பந்தர் மடத்திற் றங்கி உணவு உட்கொண்ட பின்னர் புறப்படுவோம்.

**மருதமடு**

கத்தோலிக்க மதம் முதன் முதலாக இலங்கையிற் பரவிய இடம் மன்னார் ஆகும். தென் இந்தியாவில் அர்ச். பிரான்சிஸ் சவேரியார் சுவாமியார் சத்திய வேதத்தைப் போதித்துவருவதைக் கண்ட மன்னார் வாசிகள் அவரைத் தமது நாட்டுக்கும் வருமாறு அழைத்தனர். அவர் தமது பெயரைத் தாங்கிய சிஷ்யர் ஒருவரை மன்னாருக்கனுப்பினார். பெருந்தொகையான மக்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். இந்தச் சுவாமியாரின் தொண்டுதான் இலங்கையிலே கத்தோலிக்க சமூகம் பெருந்தொகையாகப் பெருகுவதற்கு ஏதுவாயிருந்தது.

இந்த மன்னூர்ப் பிரிவிலேதான் கத்தோலிக்க மக்களுக்குத் தலை சிறந்த ஆலயமாகிய மருதமடு திருச் செபமாலை நாயகி தேவாலயம் உண்டு. போர்த்துக்கீசர் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றிய காலத்தில், மாந்தையிற் செபமாலை மாதாவின் பெயரால் ஒரு பெரிய தேவாலயத்தைக் கட்டினர். பின்னர் டச்சுக்காரர் ஆட்சி செய்த பொழுது, கத்தோலிக்க சமயத்துக்கு நெருக்கடி யேற்பட்டது. இதனுற் கத்தோலிக்கர் தேவமாதா சொரூபத்தையும் தம்முடன் கொண்டுவந்து மருதமரங்களாற் சூழப்பெற்ற மருதமடு என்னும் இடத்தில் தேவாலயம் கட்டி வாழ்ந்தனர். இது பின்னர் 1823–ம் ஆண்டில் மன்னூரிலிருந்த மொரயிஸ் எனும் கத்தோலிக்கராற் புதுக்கிக் கட்டப் பெற்றது. இப்பொழுதுள்ள ஆலயம் மிகவும் அழகியது. இந்துக் களுக்குக் கதிர்காமம் எப்படியோ அப்படியே கத்தோலிக்கர்கட்கு மருதமடு விளங்குகின்றது. இக் கோயில் விழாக்காலத்திற் கத்தோலிக்க ரல்லாத ஏனைச் சமயத்தவர்களும் யாத்திரை செய்வதுண்டு.

தேவாலயத்தினுள்ளே சென்றுல், அருள்ததும்பும் முகப்பொலி வுடன் விளங்கும் தேவமாதாவின் சொரூபத்தையும், இருமருங்கினும் மெழுகுவர்த்திகள் சுடர்விட்டெரிந்து அன்பர்கள் உளம்போல உருகு வதையும் (பெற்ற தாயிடம் பிள்ளை முறையிடுவதுபோல) பக்தர்கள் அன்னையின் அருள் வேண்டிச் செபமாலையுடன் செபித்துக்கொண்டிருப் பதையும் நீங்கள் காணலாம். யாத்திரைக் காலத்தில் மருதமடு ஒரு பெரிய நகரமெனக் காட்சியளிக்கும்.

**தலைவில்லு சந்தனமாதா கோயில்**

முன்னெரு காலத்தில் மன்னூரிலிருந்து கொழும்புக்கு வேலைதேடி வந்த ஒரு போர்த்துக்கீசன் வேலை கிடையாமையாற் றிரும்பிச் செல் லும்பொழுது கரைமார்க்கமாகச் சென்றுன். அதிக தூரம் நடந்த களைப்பினுல் தலைவில்லு என்னுமிடத்திலுள்ள ஓர் ஆலமர நிழலிற் படுத்திருந்தான். அவன் ஒரு கனுக்கண்டு விழித்தெழுந்து பார்த்த பொழுது, ஆலமரப் பொந்தில் ஒரு அற்புத சுரூபம் இருப்பதைக் கண்டான். பக்திமேலீட்டினுல் ஆனந்தம் கொண்டான். வணங்கினுன். சந்தனமாதா அவனுக்குக் காட்சியளித்து அன்புடன் பேசினுர். அவன் உடனே சிறு ஆலயம் அமைத்தான். பின்னர் இது பெரிதாகக் கட்டப் பட்டுள்ளது. 17–ம் நூற்றுண்டின் கடைக்கூற்றில் காலியிலிருந்து கற்பிட்டிக் குடாக்கடல் மார்க்கமாகச்சென்ற ஒரு பிரஞ்சு வர்த்தகனின் கப்பல் பாறையில் மோதி உடைந்தபொழுது, அவன் அக் கப்பலில்

வைத்து வணங்கப்பட்ட சுரூபத்துடன் தலைவில்லு என்னுமிடத்திற் கரையேறி, அதனை ஒரு ஆலமரப் பொந்தில் வைத்துச் சென்றான். அதுவே இப் போர்த்துக்கீசன் கண்டெடுத்த சுரூபமாகும். புத்தளத்திலிருந்து கற்பிட்டிக்குச் செல்லும் மார்க்கத்தில், 19 மைல் தூரம் சென்றதும் பாலைக்குடா என்ற ஓரிடமுண்டு. இங்கிருந்து 2 மைல் தூரத்திற் கடலையடுத்து தலைவில்லு இருக்கிறது. இங்குள்ள அர்ச். அன்னம்மாள் (சந்தனமாதா) கோயில் மிகவும் சிறந்த யாத்திரை ஸ்தலமாகவிளங்குகிறது. ஆடி மாதத்தில் நடைபெறும் திருநாட் கொண்டாட்டத்துக்குப் பல்லாயிரக்கணக்கானோர் செல்வர்.

**அநுராதபுரம்**

புராதன நகரங்களுள் நீங்கள் முதலிற் பார்க்கவேண்டியது அநுராதபுரம். இது கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவிற் சிங்கள மன்னர்களால் தலைநகராக்கப்பெற்றது. ஏறக்குறைய பதினைந்து நூற்றாண்டு வரை இங்கே பல முடிமன்னர்கள் வாழ்ந்தனர்.

கௌதம புத்தர் வரவால் இந்நகரம் புனிதமானதெனப் பௌத்தர்கள் நம்புகின்றனர். அநுராதன் என்பவனால் நிறுவப்பட்டமையினாலோ அன்றி அநுராத (அநுஷம்) நட்சத்திரத்தில் அமைக்கப்பட்டமையாலோ இது அநுராதபுரம் எனும் பெயர் பெற்றதென்று கூறுவர். பாண்டுகபாயன் என்பவன் இதனை இராசதானியாக்கினான். இவனுக்குப் பின் வந்த மன்னர்கள் இதனைப் பௌத்த பண்பாட்டின் நிலைக்களமாக ஆக்கினார்கள். பல தேயத்து யாத்திரிகர்களும் இத் தலத்தைத் தரிசிக்க வந்தனர்.

**எல்லாளன்**

கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற் சோழநாட்டிலிருந்து படையெடுத்து வந்த எல்லாளன் என்பவன் இலங்கை மன்னனை வென்று 44 வருஷம் வரை நீதிநெறி வழுவாது அரசு புரிந்தான். இவன் சைவ சமயத்தவன் எனினும், பௌத்த சமயத்தையும் கௌரவித்து வந்தான். தமிழரசர்களின் விரிந்த மனப்பான்மைக்கு இவன் ஒரு எடுத்துக்காட்டாவான். 70 வயது சென்ற எல்லாளனுக்கும் இளங்காளையாகிய துட்டகைமுனுவுக்குமிடையே நிகழ்ந்தபோரில் எல்லாளன் உயிர்நீத்தான். எல்லாளனுடைய வீரவுடலை அடக்கஞ் செய்து, ஞாபகச் சின்னமாக் அதன்மேற் பிரமாண்டமான கோபுரமொன்றை யமைக்குமாறு துட்டகைமுனு கட்டளையிட்டான். அந்தச் சமாதியைக் கடந்து செல்லும்பொழுது முடிமன்னர்களும் மக்களும் மரியாதை செய்ய

வேண்டுமெனக் கட்டளையும் பிறப்பித்தான். தனது பகைவனுக்கு இத்தகைய மரியாதை செய்த துட்டகைமுனுவை யாம் பாராட்டாமல் இருக்கமுடியுமா. எல்லாளன் சமாதி எது என்பது இன்னும் சந்தேகமின்றிக் கண்டுபிடிக்கப்படவில்லை. நெற்போர் போன்ற ஒரு மேட்டினையே பொதுமக்கள் எல்லாளனின் ஞாபகசின்னமென நம்புகின்றனர்.

**பழைய நிலைமை**

2000 ஆண்டுகட்கு முன்னர் வானளாவிய தூபிகளையும், செப்பு மாடங்களையும், அத்தாணி மண்டபங்களையும், நீராடும் மண்டபங்களையும், நந்தனவனங்களையும் கொண்டு விளங்கியதும், பல்லாயிரக் கணக்கான பௌத்தபிக்குகள் வாழும் இடமாகவும் வித்தியாபீடமாகவும் விளங்கியதுமாய அநுராதபுரம் காலகதியிற் காடடர்ந்த பிரதேசமாக மாறிவிட்டது. துட்டகைமுனு அரசன் கட்டிய 'ருவான்வலிசாய' எனப்படும் பொன்முடி கவிந்த விகாரை அடிமுதல் முடிவரை மல்லிகை, முல்லை, தாமரை மலர்களால் மூடப்பெற்று பௌர்ணிமை நாட்களில் ஒரு பெரிய பூக்குவியல்போலக் காட்சியளித்தது. இதுவும் காலகதியில் அழிவுற்றது.

கி. மு. மூன்றும் நூற்றாண்டில் நாட்டப்பெற்ற வெள்ளரசமரம் பல் கிளைகள்விட்டு இன்றும் உயிருடன் இருக்கின்றது. அசோகச் சக்கரவர்த்தி புத்த தருமத்தை உலக முழுவதும் பரப்ப முயன்றான் அல்லவா? அப்பொழுது அவன் கௌதம புத்தர் ஞானோதயம் பெற்று பரி நிர்வாண மடைந்த புனித இடத்திலுள்ள போதி விருட்சத்தின் (வெள்ளரசு) கிளையொன்றினைத் தன் மகள் சங்கமித்தையிடம் கொடுத்தனுப்பினான். இது அக்காலத்திற் பல விசேஷ கிரியைகளுடன் அநுராதபுரத்தில் நாட்டப்பெற்றது.

இதிலிருந்து சிறிது தூரத்தில் ஒன்பது மாடிகளைக்கொண்டு வானோங்கி நின்ற 'லோகபாசத' எனப்படும் செப்புமாளிகையின் அழிபாடுகள் காணப்படுகின்றன. இம்மாடத்தில் 1000 அறைகள் இருந்தனவாம். இதன் மேல்முகடு செப்பினால் வேயப்பெற்றிருந்ததாம். இதிற் பௌத்த துறவிகள் தங்கியிருந்து அறநெறி போதித்தனர்.

கீழ்த்திசையிலிருந்த ஜேதவன தாதுகோபமும் வடபாலிருந்த அபயகிரி தாதுகோபமும் சிலமுற்றுக்கிடக்கின்றன. கற்கேணிகள் சந்திரவட்டக் கற்படிகள், துவாரபாலகர்கள், புத்தர் சிலைகள் முதலிய

வற்றை அடிக்கடி பலவிடங்களிற் காண்பீர்கள். தாது கோபங்களுள் மிகப் பழையதும் அழகியதுமாக விளங்குவது தேவநம்பிய தீசன் கட்டிய தூபாராமம் ஆகும். இது ஆதியில் நெற்போர் வடிவமாகக் கட்டப்பெற்றிருந்து, பின்னர் இப்போதைய வடிவத்தில் திருத்தியமைக்கப்பெற்றுள்ளது. இதைச் சுற்றிப் பெரிய கற்றூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

சிறிது தூரம் தெற்கு நோக்கிச் சென்றால் இஸ்ருமுனி விகாரையைக் காண்பீர்கள். இயற்கையாகவுள்ள கற்பாறையினைப் பயன்படுத்திக் கட்டப்பெற்ற அழகிய கோயிலைப் பார்க்கத் தவறாதீர்கள். இக் கற்பாறையிற் செதுக்கப்பெற்ற காதலர் இருவர் உருவங்களையும், ராஜலீலையில் வீற்றிருக்கும் கபிலமுனிவர் உருவத்தையும், அவருக்குப் பக்கத்தே அஸ்வமேத யாகத்துக்கென விடப்பட்ட குதிரையின் தலை மட்டும் தெரியக் கூடியதாகச் செதுக்கப்பெற்ற உருவத்தையும் பார்க்க மறந்துவிடாதீர்கள்.

அநுராதபுரத்தை மீண்டும் புனித நகராயமைக்கப் பௌத்தர்கள் முயன்றுவருகின்றனர். 'றூவான்வலிசாய' திருத்தியமைக்கப்பெற்று அதன் உச்சியில் பொன்முடி திகழ்கின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்ததும் அநுராதபுரத்தை மீண்டும் புனித நகரமாக நிர்மாணிக்கும் வேலை மிகத் துரிதமாக நடைபெறுகின்றது. இந்த நகரம் தன் பண்டைப்பெருமையை மீளவும் ஈட்டிக்கொள்ளும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

**மிகுந்தலை**

அநுராதபுரத்திலிருந்து 6 மைல் தூரத்தில் மிகுந்தலை உளது. அசோகச் சக்கரவர்த்தியின் மகன் மகிந்தன் கி. மு. 307-ல் முதன் முதலாகப் பௌத்த மதத்தைப் போதிக்க வந்திறங்கிய பரிசுத்த இடம் இதுவேயெனப் பௌத்தர்கள் நம்புகின்றனர். 500 அடி உயரமுள்ள இச்சிறு குன்றிலேதான் வேட்டையாட வந்த இலங்கை அரசனாகிய தேவநம்பிய தீசனை மகிந்தர் சந்தித்தார். இவருடைய ஞானோபதேசத்தைக் கேட்ட இலங்கையரசனும் பல்லாயிரக் கணக்கான குடிகளும் பௌத்த மதத்தைத் தழுவினர்.

மலையடிவாரத்திலிருந்து உச்சிக்கு ஏறிச் செல்ல வெட்டப்பெற்ற 2000 படிக்கட்டுகளும் அங்கிருக்கும் விகாரைகளும் மகிந்தரின் தரிசனத்தை நினைவூட்டும் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன. படம் விரித்த ஐந்தலைநாகம் செதுக்கப்பட்ட கற்சுவரைக்கொண்ட நாக-

பொக்கணை எனும் குளமும், அம்பஸ்தல, மகாசேய தாதுகோபங்களும், பிரசங்க மண்டபங்களும், தியான அறைகளும், வைத்தியசாலைகளும், பௌத்தபிக்குகள் வசித்துப் பஞ்சசீலம் ஓதுதற்கான வசதிகளைக்கொண்ட ஆராமங்களும் அமைந்த அழகிய குன்றமாக முன்னொருகாலத்தில் மிகிந்தலை விளங்கியது.

மலையின் ஒருபாகத்தில் மகிந்தனின் படுக்கையெனப்படும் கல்லிற் செதுக்கிய படுக்கையுளது. கற்படிகள் வழியே ஏறிச் சென்றதும் வலது பக்கத்திற் கந்தக சேதியம் காட்சியளிக்கின்றது. இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த சித்திர, சிற்பக்கலையின் சிறப்பினை விளக்கும் சின்னமாக அமைந்துள்ளது.

**தம்புல்ல — குகைக்கோயில்**

மிஹிந்தலைக்குன்றம் ஏறிப் பார்த்த பின்னர், நம்நாட்டிலுள்ள ஒரு குகைக்கோயிலையும் நீங்கள் பார்க்கத்தானே வேண்டும். கொழும்பிலிருந்து 93 மைல் தூரத்திலும், கண்டியிலிருந்து 44 மைல் தூரத்திலும் உள்ள தம்புல்ல என்னும் ஊரில் ஒரு சிறந்த குகைக்கோயில் உண்டு. கி. மு. முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தையாண்ட வலகம்பாகு மன்னன் தென்னிந்தியத் தமிழர் படையெடுப்புக்கு அஞ்சியோடித் தம்புல்லமலையில் ஒளித்திருந்தான். தனக்குப் புகலிடம் அளித்த குகைகளைப் புனித கோயில்களாக மாற்றியமைத்தவன் இவ்வரசனே என நம்பப்படுகிறது. இங்கே ஐந்து குகைகள் மிக நுட்பமாகக் குடையப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் அழகிய அநேக புத்த விக்கிரகங்களும் இந்து விக்கிரகங்களும் உண்டு. குகையின் மேற்புறத்தில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. எந்தப் பக்கம் திரும்பினாலும் சிலைகளும் சித்திரங்களும் கண்ணைக் கவர்கின்றன. ஒரு குகையில் 47 அடி நீளமுள்ள பள்ளிகொள்ளும் புத்தர் சிலையொன்றுண்டு. தம்புல்ல குகைகள் உங்களுக்கு இந்தியாவிலுள்ள அஜந்தா, எல்லோராக் குகைகளை நினைவூட்டக்கூடும். இலங்கையிற் குகைக்கோயில்கள் மட்டுமன்றி அழிவிலாத புகழை ஈட்டிக்கொண்டிருக்கும் உயிரோவியங்கள் நிரம்பிய இடங்களும் உண்டு. மிகப் பிரசித்தி வாய்ந்த இவ்வழகிய சித்திரங்களை நீங்கள் சிகிரியாவிற் பார்க்கலாம்.

**சிகிரியா — சித்திரம்**

தம்புல்லவிலிருந்து 10 மைல் தூரத்திற் சிகிரியாக் குன்றமுண்டு. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற் பகைவர் சென்று தாக்கமுடியாத கற்

பாறையிற் காசியப்பன் தனது அரண்மனையைக் கட்டினான். தந்தை தாதுசேனனின் உயிருக்கு உலை வைத்துவிட்டு அரசனாகச் சிம்மாசனம் ஏறிய காசியப்பன், தற்பாதுகாப்பின் நிமித்தம் இயற்கையாக வமைந்த இப்பாரிய கற்பாறையினைச் சிறந்த அரணாகமாற்றி யமைத்தான். இவன், திறமையை என்னென்று சொல்வது. இந்தியாவுக்கு ஒளித்தோடிய இவன் சகோதரன் முகலாயன் திரும்பிவந்து இவனைத் தோற்கடிக்கும் வரை, இக்குன்றினை அரண் செய்து ஆண்டு வந்தான்.

இந்த மலைக்கோட்டைக்கு ஏறிச் செல்லும் வாயில் பாரியதொரு சிங்கத்தின் வாயினூடாகச் செல்லும் முறைமையில் அமைந்துள்ளது. மலைக்கோட்டை முகப்பு சிங்க உருவமாக விருப்பதால் இது சீயகிரி எனப் பெயர் பெற்றது. மேலே ஏறிச் சென்றால் பெரிய தடாகத்தையும் அழிவுற்ற அரண்மனையினையும் காண்பீர்கள். இவ்வளவு உயரத்தில் மிகவும் விசாலமான தடாகம் இருப்பது பெரிய விந்தைதான்.

காசியப்பனுடைய அரண்மனையில் ஓவிய வல்லுநரும் சிற்ப வல்லுநரும் இருந்தனர் என்றுதான் சொல்லவேண்டும். கற்பாறையின் ஒரு பக்கத்தில் 40 அடி உயரத்தில், உட்கவிந்த ஒரு பகுதியில் அழகொழுகு சித்திரங்கள் உயிரோவியங்களாகக் காட்சியளிக்கின்றன. கரடு முரடான கற்பாறையைச் செப்பனிட்டுச் சுண்ணக்கலவை பூசி அதன்மேல் இச் சித்திரங்கள் தீட்டப்பெற்றுள்ளன. ஆயிரத்தைந் நூறு ஆண்டுகளாகக் காற்றும் மழையும் அடித்தபோதிலும், இவ்வழகிய சித்திரங்கள் இன்றும் அழியாதிருக்கின்றன. பட்டமஹிஷிகளும் அவர்களின் தோழிமாரும் புஷ்பங்களை யேந்திச் செல்லும் பாவனையில் இச் சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. உருவங்கள் யாவும் இடுப்பு வரை மாத்திரமே வரையப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

**பொலன்னருவை**

புராதன நகரங்களுட் பொலன்னருவையும் ஒன்று. இது கொழும்பிலிருந்து 134 மைல் தூரத்திலும், அநுராதபுரத்திலிருந்து 64 மைல் தூரத்திலுமுள்ளது.

பதினொராம் நூற்றாண்டு தொடக்கம் இருநூற்றாண்டுவரை பொலன்னருவை இலங்கையின் தலை நகராக விளங்கியது. இலங்கையின் புகழ் பெற்ற அரசனாகிய பராக்கிரமபாகு மன்னன் ஆட்சிக்காலத்தில் இந் நகரம் மகோன்னத நிலையை யடைந்திருந்தது. பராக்கிரமபாகுவின் சிலையே அவன் அமைத்த குளக்கரையிற் காணப்படுகிறதெனப் பொது

மக்கள் நம்புகின்றனர். இது புலஸ்தியர் சிலையெனவும் சிலர் கருது கின்றனர். புலஸ்திநகரம் என்பது பொலன்னறுவை என்றாயிற்றும். தமிழ்க் கல்வெட்டுக்களில் இது புலைநரியென்றே குறிக்கப்படுகின்றது. மேற்கூறிய அழகிய சிலை உலகத்திலுள்ள சிற்பக்கலை வல்லுனரின் இதயத்தைக் கவர்ந்துள்ளது. பராக்கிரமபாகு சிறந்த போர்வீரனாகவும், தத்துவ ஞானியாகவும், அரசியல் ஞானியாகவும், பண்டிதனாகவும், வீரபராக்கிரமனாகவும் விளங்கினான். இவன் கட்டிய மாளிகையின் அழிபாடுகளை நீங்கள் இன்றுங் காணலாம். அரசகுடும்பம் நீராடுதற்கான நீராடும் மண்டபங்களும், அத்தாணி மண்டபமும் சிலமுற்ற நிலைமையிற் காணப்படுகின்றன. இன்னுஞ் சிறிது தூரத்தில் தாமரைப்பூ வடிவத்தில் கருங்கல்லினால் அமைக்கப்பெற்ற அழகிய ஜலக்கிரீடைத் தொட்டியிருப்பதையும் காண்பீர்கள்.

புத்தரின் புனித தந்தக் கோயிலை நடுநாயகமாகக்கொண்டே பொலன்னறுவை சிறந்த தலைநகராக விளங்கியது. பல சுற்றுக்கோயில் களின் மத்தியில் வட்டவடிவமான தந்தக் கோயில் தாரகைகள் சூழப் பெற்ற திங்கள்போல அமைந்துள்ளது. ஆலயத்தின் மேற்பாகமும் அழகிய வர்ணம் தீட்டப்பெற்றுள்ளது. ஆலயத்திற்கு நான்கு வாயில் கள். ஒவ்வொரு வாயிலிலும் ஒரு புத்தர் சிலை. கோயிலின் நடுவில் அழகியதோர் பீடம். பீடத்தின்மேல் பூவினால் மூடப்பெற்ற இரத் தினக்கற்கள் பதித்த பேழை. இதனுள்ளே புனித தந்தம்.

இந்த ஆலயத்துக்குப் பக்கத்தே பூங்கொடிகள்போன்ற கற் றூண்களால் அலங்கரிக்கப்பெற்ற மண்டபம் ஒன்றிருந்தது. இது நிசங்கமல்லன் என்னும் அரசனின் பூமண்டபம் எனச் சொல்லப் படுகின்றது.

**இந்து ஆலயங்கள்**

கி. பி. 1017-ல் இலங்கை சோழராட்சிக் குட்பட்டதென்பதை நீங்கள் சரித்திரத்திற் படித்திருத்தல் கூடும். இவர்கள் ஏறக்குறைய 53 ஆண்டுகள்வரை அரசுபுரிந்தனர் என அறிஞர் கருதுகின்றனர். இவர்கள் காலத்தில் இது ஜனனநாதபுரம் என வழங்கப்பட்டது. இவர் கள் காலத்திற் சைவசமயம் உச்சநிலை யெய்தியதென்றே சொல்ல வேண்டும். திருக்கேதீச்சரத்திலும் ஒரு கற்கோயில் கட்டினார்கள். பொலன்னறுவையில் மட்டும் ஏழு இந்துக்கோயில்கள் இருந்தன என்று நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? புதைபொருளாராய்ச்சி அதிபரைக் கேட்டே உங்கள் ஐயத்தை நீக்கிக்கொள்ளுங்கள். சோழர்

கருங்கல்லினற் கட்டிய அழகிய சிவாலயம் ஒன்று இருப்பதை நீங்கள் இன்றும் பார்க்கலாம். பாண்டிய மன்னர்களால் 13–ம் நூற்றண்டிற் கட்டப்பெற்றதெனக் கருதப்படும் சிவாலயமொன்று முண்டு.

**கல் விகாரை**

இவற்றிற்குச் சிறிது தூரத்தில் கல் விகாரை எனப்படும் கோயில் ஒன்றுண்டு. இதனை ஓர் அழகிய சிலாமண்டபம் என்றுதான் நீங்கள் கருதுவீர்கள். கொல்லா அறத்தினைக் குவலயமெல்லாம் போதித்த தருமராசன் புத்தர்பெருமான் வலக்கையைத் தலையணையாகக்கொண்டு வலப்புறமாக ஒருக்கணித்து கால்மேற் காலைக்கிடத்திப் பரிநிர்வாண மடைந்த பாவனையில் பாரிய புத்தர் சிலையொன்று கற் பாறையிற் செதுக்கப்பட்டுள்ளது. புத்தருக்குப் பக்கத்தில் அவருடைய பிரதம சிஷ்யர் ஆனந்தர் தமது குருவின் பிரிவாற் கவலைகொண்ட முகத்துடன் காணப்படுகிறார்.

பராக்கிரம சமுத்திரம் எனப்படும் பாரிய குளம் இங்கேதான் உண்டு. இக் குளக் கட்டு 12 மைல் சுற்றளவுள்ளது. இலங்கை மக்கள் தங்களுக்கு வேண்டிய உணவைப் பெறுவதற்கு இத்தகைய பாரிய குளங்களே உதவியாயிருந்தன.

**மின்னேரி**

இங்கிருந்து 12 மைல் தூரத்திலுள்ள மின்னேரியாக் குடியேற்றத் திட்டத்தையும் நீங்கள் கட்டாயம் பார்க்கவேண்டும். புராதன இலங்கையைப் பார்த்த நீங்கள் நவ இலங்கையினையும் பார்க்காமல் விடலாமா? இப்பொழுது இலங்கைப் பிரதமராக விளங்கும் கௌரவ டி. எஸ். சேனநாயக்க அவர்கள் விவசாய மந்திரியாக இருந்த காலத்தில் இக் குளத்தை மீண்டும் திருத்தி விவசாயிகளைக் குடியேற்றினர். மலேரியாக் காய்ச்சலைப் பெருக்கும் நுளம்புகள் வாழ்ந்த சதுப்பு நிலமெல்லாம் செந்நெற் கழனிகளாகக் காட்சியளிப்பதைக் காண்பீர்கள். இங்குள்ள விவசாயிகள் புன்முறுவல் பூத்த முகத்துடன் உங்களை வரவேற்று விருந்துண்டு ஏகுமாறு கேட்பார்கள். அவர்களின் மனப்பூரிப்பு முகத்தில் பிரதிபலிப்பதை நீங்கள் காணுமல் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனம் (யூனெஸ்கோ) அடிப்படைக் கல்விப் பயிற்சி நிலையத்தை அங்குரார்ப்பணஞ் செய்தற் கேற்ற இடம் மின்னேரியாவெனக் கண்டு இங்கே ஒரு பயிற்சி நிலையத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இதனை நீங்கள் அண்மை

யில் அறிந்திருப்பீர்கள். இலங்கையிலுள்ள செந்நெற் கழனிகளைப் பார்த்த நீங்கள் மலைவளத்தையும் ஒருமுறை பார்க்க வேண்டாமா? ஸ்ரீபாதமலையை ஏறிப் பார்ப்போம் வாருங்கள்.

**ஸ்ரீபாதமலை**

இலங்கையிலே ஒருமுறையாவது ஸ்ரீபாதமலையைத் தரிசிக்காத பௌத்தர்களைக் காண்பது மிகவரிது. இது பௌத்தர்கள் மட்டுமன்றி இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் யாத்திரைசெய்யும் புனித மலையாக நிமிர்ந்து நிற்கின்றது. இது 7353 அடி உயரமுள்ளது. மலை உச்சியில் கௌதம புத்தரின் திருவடிச் சுவடு பதிந்த விலையுயர்ந்த நீலரத்னக்கல் ஒன்று பதிக்கப்பெற் றிருப்பதாகப் பௌத்தர்கள் நம்பு கின்றனர். உச்சியிற் காணப்படும் மிகப் பெரிய திருவடி உருவம், அதன் கீழுள்ள இரத்தினக்கல்லை நினைவூட்டுதற்குச் சுண்ணக் கல்லினாற் செதுக் கப்பட்டு சீமெந்து பூசப்பட்டதாகும். இது சமந்தகூடம், பாதபங்கய மலை, ஸ்ரீபாதம் எனக் கூறப்படும். மலையுச்சியிலுள்ள திருவடியைப் பாதுகாக்கும் தெய்வம் சமன் தெய்யோ எனப்படுவதால் இம் மலை சமனல, சமனலகந்த எனவும்படும். இலட்சுமணனையே சமன் எனும் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். மலையுச்சியில் சமன் தெய்வத்துக் கும் ஓர் ஆலயம் உண்டு. இதனையும் பௌத்தர்கள் வழிபடுகின்றனர். இம் மலையின் சிறப்பு மணிமேகலையிற் கூறப்பட்டுள்ளது.

இம் மலையுச்சியிலுள்ள திருவடியைச் சிவபெருமானது திருவடி யெனச் சைவர்கள் நம்புகின்றனர். எனவே, இதனைச் சிவனொளிபாதமலை, சிவனடிமலை யெனக் கருதி யாத்திரை செய்கின்றனர். முஸ்லிம்கள் இதனை பாபா ஆதம்மலை யெனக்கொண்டு வழிபடுகின்றனர். கிறிஸ்த வர்களும் ஏதன் தோட்டத்தினின்றும் துரத்தப்பட்ட ஆதாம் பாப மன்னிப்புப் பெறும்பொருட்டு இம் மலையுச்சியில் ஒற்றைக் காலில் நின்று தவஞ்செய்தாரென நம்பி யாத்திரை செய்கின்றனர்.

இம் மலையை ஏறிப்பார்ப்பதற்கு இரு பாதைகளுண்டு. ஹற்றன் வழியாகவும் இரத்தினபுரி வழியாகவும் செல்லலாம். ஹற்றன் பாதை இலகுவானது. ஹற்றனிலிருந்து மலையடிவாரம்வரை மோட்டார் வண்டியிற் செல்லலாம். வண்டிநிற்கும் இடத்திலிருந்து 3 மைல்வரை ஒரு தேயிலைத் தோட்டத்தின் வழியாகச் சென்று மலையேறவேண்டும். மலையேறுவதற்குப் பங்குனி சித்திரை மாதங்களே சிறந்தகாலமாகும்.

மலையுச்சிக்கு ஏறிச் செல்லச் செல்லப் பாதை மிகவும் செங்குத்தாய் இருப்பதால் யாத்திரீகர்கள் பிடித்துக்கொண்டு ஏறிச்செல்ல இரும்புக்

கம்பிகள் இருபக்கமும் போடப்பட்டிருக்கின்றன. கற்படிகளும் வெட்டப்பட்டிருக்கின்றன. இராப் போசனத்தின் பின்னர் இரவு 2 மணியளவில் மலையேறத் தொடங்கினால், சூரியோதயத்துக்கு முன்னர் உச்சியை யடையலாம்.

இங்கே நிற்கும்பொழுது பலர்புகழ் ஞாயிறு உதயமாகுந் தருணத்திற் பல்வகைச் சமயத்தினரும் தம் சமய வேறுபாடுகளை மறந்து ஒரு தாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்போலத் தங்கள் யாவர்க்கும் மேலான ஓர் ஆண்டவனை வழிபடுகின்றதை நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா? இம் மலையினை எல்லாச் சமயத்தவரும் தத்தம் புனித தலமாகக் கருதுகின்றனர். இது சிறிதளவேனும் நிலைகுலையாது ஒரே தன்மைத்தாய் வானளாவி நின்று, எல்லாச் சமயத்தவர்களையும் தன்னகத்தே யிழுக்கும் ஆற்றலுடன் விளங்குகின்றது. எல்லாச் சமயத்துக்கும் அதிதாயக் கடவுள் ஒருவர் இருக்கின்றார் எனும் சமரச நன்னிலையை எங்கட்கு அறிவுறுத்தி நிற்பது ஸ்ரீபாதமலை ஒன்றே யல்லவா? தினகரன் எங்களைத் தாக்கமுன்னர் மலையடிவாரத்துக்கு இறங்கிவிடுவோம்.

**இரத்தினபுரி**

வேறொரு பாதையாலும் உச்சிக்கு ஏறிச் செல்லலாம் என்று சொன்னேன் அல்லவா? அதுதான் இரத்தினபுரிப் பாதை. இம் மார்க்கம் மிகவும் கஷ்டமானது. கொழும்பிலிருந்து 56 மைல் தூரத்தில் இரத்தினபுரி நகரமுண்டு. இரத்தினக் கற்களுக்குப் பேர்போன இடம் இதுதான். இந் நகரின் பெயரே இலங்கை முழுவதற்கும் முன்னாளில் வழங்கியது.

ஈங்கித னயலகத் திரத்தினத் தீவத்
தோங்குயர் சமந்தத் துச்சி மீமிசை
யறவியங் கிழவோ னடியிணை யாகிய
பிறவி யென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலின் ...........

என்று சீத்தலைச்சாத்தனாரே இரத்தினத் தீவத்தையும் சமந்த மலையினையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி நகரத்திலிருந்து 2 மைல் தூரத்தில் சமன் தேவாலயமொன்றுண்டு. பொன்னாற்செய்த அம்பும் வில்லும் வெள்ளிக் குடையும் இக் கோயிலில் உண்டு.

இரத்தினக் கற்கள் உள்ள நகரமார்க்கமாக நீங்கள் மலையேற விரும்பினால், இரத்தினம் எடுக்கும் சுரங்கத்தையும் பார்த்துக்கொண்டு,

சமன் தேவாலயத்தை வழிபட்ட பின்னர் மலையேறிப் பார்க்கலாம். முடிவேந்தர் மகுடமின்ன ஆண்ட இடங்களைப் பார்த்தீர்கள். மன்னுதி மன்னர்கள் யாத்திரைசெய்த ஸ்ரீபாதமலையையும் ஏறிப் பார்த்தீர்கள். இனி, இலங்கையின் முடியை இயன்றவரை காத்து, பிரதானிகளின் சூழ்ச்சிகளினால் அதனை இழந்த இறுதி அரசன் வாழ்ந்த நகரையும் பார்ப்போம்.

**கண்டி**

சிங்கள மன்னரின் கடைசித் தலைநகராக விளங்கியது மலைநாட்டிலுள்ள கண்டி நகரமாகும். இது 15-ம் நூற்றாண்டில் விக்கிரமபாகு மன்னனாற் செங்கடகலநுவர எனும் நாமத்துடன் தலைநகராக நிர்மாணிக்கப்பட்டது. இலங்கையின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் 1815-ல் முடியிழந்த இடமும் இதுவே. சிங்கள மன்னர் வம்சாவளி நரேந்திர சிங்கன் ஆட்சியுடன் 1739-ல் முற்றுப்பெற, அவனுக்குப்பின் மதுரை நாயக்கவம்ச அரசர்கள் கண்டியில் அரசுபுரிந்தனர்.

கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் வழியில் 68 மைல் தூரத்தில் பேராதனைப் பூந்தோட்டம் உண்டு. இவ்வழகிய பூங்காவிற் சிறிதுநேரம் நீங்கள் அவசியம் செலவிடவேண்டும். மகாவலிகங்கைக் கருகில் உருவாகிவரும் இலங்கைச் சர்வகலாசாலைக் கட்டடத்தையும் நீங்கள் பார்க்கலாம்.

**தாலதமாளிகை**

கண்டி நகரம் கொழும்பிலிருந்து 72 மைல் தூரத்திலுள்ளது. இங்கே நீங்கள் முதலாவதாகப் பார்க்கவேண்டியது தாலதமாளிகையெனப்படும் புனித தந்தக் கோயிலாகும். இக்கோயிலும் பட்டிருப்பு எனும் கட்டடமும் மதிலாற் சூழப்பட்டிருக்கின்றன. பட்டிருப்பு பண்டைக்காலத்திற் பல அரிய ஏட்டுச் சுவடிகளைக்கொண்ட நூல்நிலையமாகவும், அரசன் பொதுமக்களுக்குக் காட்சியளிக்கும் அத்தாணிமண்டபமுமாக விளங்கியது. கோயிலில் அநேக புத்தர் சிலைகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. புனித தந்தம் இருக்கும் மூலஸ்தானத்து வாயிலில் வெள்ளியும் யானைத் தந்தமும் பதித்த சித்திரவேலைப்பாடமைந்த கதவுண்டு. இதன் இருமருங்கிலும் வைக்கப்பெற்ற இரு யானைத்தந்தங்கள் உள. உள்ளே ஒரு வெள்ளிமேசையுண்டு. அதன்மேல் மணிவடிவமான ஒரு பாத்திரம் உண்டு. அதனுள் ஒன்றனுள் ஒன்று அடங்கியிருக்கும் ஏழு பெட்டிகள் உண்டு. இவற்றுள் ஆகக் கடைசி

யில் உள்ளே இருக்கும் பெட்டிக்குள் புனித தந்தம் பத்திரமாக வைத்துப் பேணப்படுகிறது.

இப்புனித தந்தம் சில விசேஷ தினங்களில் பௌத்தர்கள் வழி படும் பொருட்டு வெளியே ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும். ஆவணி மாதத்தில் 'பெரஹரா' எனப்படும் விழா இங்கே நடை பெறும். இவ்விழா கயவாகு மன்னனால் ஆரம்பிக்கப்பெற்ற கண்ணகி விழாவுடன் சம்பந்தப்பட்டதெனவும் கூறப்படுகிறது. கண்டியிலுள்ள விஷ்ணு தேவாலயம், பத்தினி தேவாலயம் முதலியவற்றையும் நீங்கள் பார்க்கலாம். கண்டியிலிருந்த கடைசி அரசனாகிய ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் கட்டிய குளம் கண்டி நகரத்துக்கு ஒரு தனியழகைக் கொடுக்கின்றது.

நகரின் சுற்றுடலிலுள்ள மல்வத்தை தேவாலயம், அஸ்கிரி, தேவாலயம், கங்காராம தேவாலயம், கடலதேனிய தேவாலயம், இலங்காதிலக்க தேவாலயம், எமபெக்க தேவாலயம் முதலியவற்றை மோட்டார்வண்டியிற் சென்று சிறிதுநேரத்துட் பார்த்துவிடலாம். பௌத்த ஆலயங்களில் இந்து விக்கிரகங்களைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படவேண்டியதில்லை. கதிர்காமநாதன், விஷ்ணு, கணேசர், கண்ணகி ஆதியோர் பௌத்த தேவாலயங்களில் இடம்பெற்றிருத்தலைக் காண்பீர்கள்.

எம்பெக்க தேவாலயம் கதிர்காமக் கடவுளுக்கென அமைக்கப் பெற்றது. இதிலுள்ள மரச்சித்திர வேலைப்பாடுகளை வேறெங்கும் காணமுடியாது. மரத்தில் இவ்வளவு நுட்பமான அழகிய வேலைகளைச் செய்து முடிக்கலாமோ என நீங்கள் வியப்படையாமல் இருக்க வியலாது. இக்கோயிலின் சித்திர நுட்பத்தைப் புகழாத சிற்பியே கிடையாது.

இதுவரை சிங்கள நாடுகளைச் சுற்றிப் பார்த்தோம். இங்கிருந்து தமிழர் பெருந்தொகையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தை நோக்கிச் செல்வோம்.

**மட்டக்களப்பு**

பண்டைக்காலத்தில் கண்டிக்குச் செல்வதற்குச் சுலபமானவழி கிழக்குக் கரையிலுள்ள மட்டக்களப்பிலிருந்து செல்லும் மார்க்கமாகும். இதனாற்றான் புராதன சரித்திரத்தில் மட்டக்களப்பு உன்னத ஸ்தானம் வகிக்கலாயிற்று. டச்சுக்காரர் முதன்முதல் இலங்கையிற் கால் வைத்த இடமாகிய காரைதீவு மட்டக்களப்பிலிருந்து 30 மைல் தூரத்தி

ஆுள்ளது. டச்சுக்காரர் மட்டக்களப்பைத்தான் முதன் முதலிற் போர்த்துக்கீஸரிடமிருந்து கைப்பற்றினர். 1638-ம் ஆண்டளவில் டச்சுக்காரரும் இராஜசிங்கனும் இவ்விடத்திலேதான் உடன்படிக்கை எழுதிக்கொண்டனர்.

இந்நகரம் கொழும்பிலிருந்து 237 மைல் தூரத்திலுள்ளது. தமிழ்ப்பேரறிஞர் விபுலாநந்த அடிகளாரைத் தமிழகத்திற் களித்த பெருமையும் மட்டக்களப்புக்கேயுரியது. அடிகளாரின் சமாதி மட்டக்களப்பிலேதான் உண்டு.

மட்டக்களப்புக்குச் சென்ற நீங்கள் பாடும் மீனினத்தின் இன்னிசையைக் கேட்டின்புறுமல் திரும்பிவிடக்கூடாது. இந்த மீனினத்தின் இன்னிசையை விபுலாநந்த அடிகள் நீரரமகளிர் இன்னிசைப் பாடல் என்ற பாடலில் மிக வழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து 2 மைல் தூரத்தில் அமிர்தகழி யென்ற புராதன ஸ்தலமுண்டு. இங்கேயுள்ள மாமாங்கப்பிள்ளையாரை முதலிற் சென்று வழிபடுவோம் வாருங்கள். இக்கோயிலுக்கருகில் ஒரு தாமரைத் தடாகம் தெரிகிறதல்லவா? இதிலேதான் அநுமார் தீர்த்தமாடித் தமது வாலில் மூட்டப்பெற்ற தீயை அவித்தாராம். இதில் தீர்த்தமாடினுல் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுண்டு.

மட்டக்களப்பிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ள கொக்கட்டுச் சோலையில் தான்தோன்றி ஈஸ்வரன் கோயில் எனும் புராதன க்ஷேத்திரமுண்டு. இதனையும் தரிசித்துக்கொண்டு, 18 மைல் தூரத்திலுள்ள மண்டூர்க் கிராமத்துக்குச் செல்வோம். இங்கே ஒரு கந்தசுவாமி கோயிலுண்டு. இதிற் கதிர்காமத்திற் போலவே பூசை நடைபெறுகின்றது. இது முதலில் வேடர்களாற் பூசிக்கப்பெற்ற புராதன ஸ்தலம்.

மட்டக்களப்பிலிருந்து 43 மைல் தூரத்தில் திருக்கோயில் என்ற ஊர் உண்டு. இங்கே சமுத்திர ஓரத்திற் சிறப்பு வாய்ந்த சுப்பிரமணிய சுவாமி ஆலயமுண்டு. இது ஏறக்குறைய 1000 ஆண்டுகட்கு முற்பட்டது. இக்கோயிலையும் நீங்கள் பார்க்கவேண்டும்.

**கல் ஓயா**

திருக்கோயிலில் இருந்து திரும்பி வரும் மார்க்கத்தில் கல்முனை என்றொரு ஊர் உண்டு. இங்கிருந்து கொஞ்சம் தூரத்தில் பல நோக்கங்களைக் கொண்ட கல் ஓயாத் திட்டப்பிரகாரம் 30 சதுரமைல் விசால

முள்ள பாரிய நீர்த்தேக்கம் உருவாதலைக் காண்பீர்கள். இதிலிருந்து 120000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாய்ச்ச முடியுமாம். இத்திட்டம் முடிவடைந்தால் நாட்டரிசி கொஞ்சம் மலிவாகக் கிடைக்குமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

மட்டக்களப்புக்கு மறுபடியும் திரும்பி வந்து சிற்றுண்டி, வெருகல் முதலிய இடங்களிலுள்ள புராதன ஆலயங்களைத் தரிசித்துக்கொண்டு திருகோணமலைக்குச் செல்வோம்.

**கண்ணகி வழிபாடு**

மட்டக்களப்பில் இன்னும் கூடியகாலம் தங்கிநிற்க விரும்பினால் வீரமுனை பாண்டிருப்பு, தம்புலுவில் முதலிய பல இடங்களிற் காணப்படும் கண்ணகி கோயில்களைத் தரிசிக்கலாம். கண்ணகி வழிபாடு இப்பகுதியில் அதிகம் பரவியுள்ளது. இக் கோயில்களில் கண்ணகி காவியம், வழக்குரை காதை என்னும் கண்ணகி மான்மியத்தைக் கூறும் நூல்கள் ஆண்டுகள்தோறும் வைகாசிப்பூரணை, விழாக்காலங்களிற் படிக்கப்படும். கிழக்குமாகாணத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட கண்ணகியின் அழகிய சிலை ஒன்று இப்பொழுது பிரிட்டிஷ் நூதனசாலையில் இருக்கின்றது. யாழ்ப்பாணப் பகுதியிலும் கண்ணகி வழிபாடு உண்டு. மாகியப்பிட்டியைச் சார்ந்த அங்கொணைக் கடவையிலுள்ள கண்ணகி ஆலயம் மிகப் புராதனமானது என்று சொல்லப்படுகிறது.

கிழக்குமாகாணத்திற் பண்டைக்காலந்தொட்டு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுட் பலர் விவசாயிகளாக இருக்கின்றனர். இவர்கள் அதிக செல்வாக்குள்ள சமூகமாகக் காணப்படுகின்றனர். தமிழ்மொழியில் அதிக பாண்டித்தியமுள்ள முஸ்லிம்களையும் இப்பகுதியிற் காணலாம்.

**திருகோணமலை**

மட்டக்களப்பிலிருந்து கரையோரப்பாதையால் திருகோணமலைக்குச் செல்வோம். பல ஆறுகளைக் கடந்து செல்லவேண்டியிருப்பதால சிறிது தாமதம் ஏற்படக்கூடும்.

திருகோணமலை என்றதும் பாரிய மலையினைக் காண நீங்கள் எதிர்பார்த்துவிடாதீர்கள். அப்படியான உயர்ந்தமலை யெதுவும் இங்கில்லை. உயர்வான மேட்டு நிலத்தையே மலையெனச் சொல்லுகின்றனர்.

தமிழர் வாழும் வடமாகாணத்திற் பாடல்பெற்ற ஸ்தலமாகிய திருக்கேதீச்சரம் உண்டு. அதுபோலவே தமிழர் வாழும் கிழக்கு மாகாணத்திலும் பாடல்பெற்ற ஸ்தலமாகிய திருகோணமலையுண்டு.



கதிர்காம க்ஷேத்திரம் [பக்கம் – 164]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னாகம்



கோணேஸ்வரம் [பக்கம் – 185]



திருக்கேதீச்சரம் [பக்கம் – 169]
உபயம் : 'ஈழகேசரி', சுன்னுகம்



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் [பக்கம் – 187]

திருகோணமலை தலைசிறந்த இயற்கைத் துறைமுகமுள்ள பட்டினம். தமிழர்கள் சிறந்த கோயில்களைத் துறைமுகப்பட்டினங்களில் அமைப்பதை ஒருபோதும் மறந்துவிடவில்லை.

பண்டைக்காலத்தில் துறைமுகத்துக்கருகில் வானளாவிய கோபுரத்தையும் ஆயிரங்கால் மண்டபத்தையும் கொண்ட கோணேஸ்வரம் எனும் சிவாலயம் சிறப்பொடு விளங்கியது. இதற்குச் சுவாமிமலை, கோணமலை, திரிகோணாசலம், திருக்கோணமலை, தென் கைலாசம் ஆதியாம் பல பெயர்களுண்டு. சோழதேசத்து இளவரசனாகிய குளக்கோட்டன் என்பவன் கோணேசர் ஆலயத்தைக் கட்டி, ஈழநாட்டு அரசகுமாரியாகிய ஆடகசவுந்தரியை மணமுடித்தான் எனத் தக்ஷிணகைலாச புராணம் கூறுகின்றது. கோணேசர் மலையிலுள்ள ஓர் இயற்கைப் பிளவினை இராவணன் வெட்டு எனப் பொதுமக்கள் நம்புகின்றனர். இலங்கையின் தென்பாகத்திலுள்ள சின்னவாஸ், பெரியவாஸ் கற்பாறைகளே இராவணன் கோட்டைகளாக விருந்தனவென்ற ஐதிகமும் உண்டு.

சிங்கள அரசர்களும் தமிழ் அரசர்களும் கோணேசர் ஆலயத்தை ஆதரித்துவந்தனர். வன்னியர் இக்கோயிலை மேற்பார்வை செய்து வந்தனர்.

சம்பந்த சுவாமிகள் காலத்தில் இது புகழ்பெற்ற யாத்திரைத் தலமாக விளங்கியது.

> கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
> அளப்பருங் கனமணி வரன்றிக்
> குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
> கோணமா மலை. எனவும்,

> கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
> கோணமா மலை. எனவும்,

சம்பந்த சுவாமிகள் பாடியிருப்பதால், இந்நகரின் செழிப்பையும் கோயிலின் பெருமையையும், தீர்த்தத்தின் சிறப்பையும் நீங்கள் ஒருவாறு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

இவ்வழகிய ஆலயம் கி. பி. 1622-ல் போர்த்துக்கீசரால் தரைமட்டமாக்கப்பட்டது. இவர்கள் இதனை அழிப்பதற்குமுன் இதன் அமைப்பை ஒரு படமாக வரைந்து வைத்தனர்.

கோணேசர் கோயிற் கற்களைக் கொண்டே போர்த்துக்கீசர் ஒரு கோட்டை கட்டினர். தற்போதுள்ள பிறெடெறிக்கோட்டை கி. பி.

1676—ல் கட்டப் பெற்றது. கோயிற் கட்டடத்திலிருந்த சிலாசாஸனங்களை நீங்கள் இப்பொழுதும் இக்கோட்டையிற் காணலாம்.

கோட்டைவாயிலைக் கடந்து உள்ளே செல்வோம். செல்லும் வழியில் மேய்ந்துகொண்டு நிற்கும் மான்கூட்டம் 'கோணேசர் ஆலயத்தை அழித்த போர்த்துக்கீசர் மறுபடியும் வந்துவிட்டனரோ' என மருண்டு பார்ப்பதைக் காண்பீர்கள். பூசகரும் நீங்களும் சிறிதுதூரம் சென்றதும், அலைகடல் மோதியடிப்பதை எதிர்த்து நிற்கும் ஒரு கற்பாறையின்மீது பூசகர் ஏறி நின்றுகொண்டு, கோயில் இருந்ததாகக் கருதப்படும் இடத்திற்குப் பூசை செய்வார்.

போர்த்துக்கீசர் கோயிலை யழித்தபொழுது, இங்குள்ள சைவமக்கள் விக்கிரகங்களைக் கிணற்றிலும் கேணியிலும் இட்டு மறைத்து வைத்தனர். இன்னுஞ் சிலவற்றை இங்கிருந்து 14 மைல் தூரத்திலுள்ள தம்பலகாமத்துக்குக் கொண்டுசென்று ஓர் ஆலயம் நிறுவி வழிபட்டு வந்தனர். இப் புராதன ஆலயத்தையும் நீங்கள் சென்று பார்க்கலாம். சில மாதங்கட்குமுன் திருகோணமலையில் ஒரு கிணறு கிண்டியபொழுது எதிர்பாராதவிதமாக அழகிய இந்து விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை கோட்டைக்குள் இருந்த கோணேசர் ஆலயத்து விக்கிரகங்கள் என நம்பப்படுகின்றன. கோணேசர் ஆலயத்தை மீளவும் கட்டுதற்குச் சைவ அன்பர்கள் ஊக்கத்துடன் உழைத்து வருகின்றனர்.

**கன்னியாய்**

திருகோணமலையிலிருந்து ஐந்து மைல் தூரத்திற் கன்னியாய் வெந்நீரூற்றுக் கிணறுகள் உண்டு. ஏறக்குறைய 40 அடி நீளமுள்ள இடத்தில் ஆறு ஊற்றுக்கள் உண்டு. இவை ஒன்றுக்கொன்று உஷ்ணம் அதிகரித்திருப்பது பெரிய ஆச்சரியத்தைத் தரும். இராவணன் தன் தாயாரின் ஈமக்கிரியைகள் செய்வதற்கென அமைத்த நீரூற்றுக்களே இவையெனப் பொதுமக்கள் கூறுவர்.

வெந்நீரூற்றிற் குளித்து இன்புற்ற நீங்கள் கடற்கரையோரத்திலுள்ள நன்னீரூற்றிலும் குளிக்கவேண்டாமா? ஆகையால் இங்கிருந்து நேரே யாழ்ப்பாணத்துக்குப் புறப்படுவோம்.

**யாழ்ப்பாணம்**

தென்னிந்தியாவிலுள்ள சில நகரங்களுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் அதிகம் வேற்றுமையில்லை. தமிழர்கள் பண்டைக்காலத்தில்

இலங்கை மன்னர்களாக இருந்ததுமன்றி, யாழ்ப்பாணத்தில் ஒரு தனி இராச்சியத்தையும் வைத்து நடாத்தினர். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்பட்டனர். தமிழரசு எப்பொழுது ஆரம்பமானது என்று சொல்லமுடியாது. ஆனால் 13–ம் நூற்றாண்டு தொடக்கம் 17–ம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாணத்தில் தமிழரசு நிலவியது என்று சரித்திரம் கூறுகின்றது.

**சிங்கை நகர்**

இவ்வரசர்கள் முதலிற் சிங்கை நகரை இராசதானியாக்கி ஆண்டு வந்தனர். இப்போது வல்லிபுரம் எனப்படும் ஊரே பண்டைக்காலத்திற் சிங்கை நகராக விளங்கியதெனச் சரித்திர நிபுணர்கள் கருதுகின்றனர். இது பெரிய துறைமுகப்பட்டினமாக விளங்கியது. இவ்விடத்தில் வல்லிபுர ஆழ்வார் கோயில் எனப்படும் விஷ்ணு ஆலயம் இப்பொழுதும் உண்டு. இங்கே 'பியங்குதிஸ்' விகாரை யொன்றிருந்ததென்பது, சமீபத்தில் அங்கிருந்து கிண்டியெடுக்கப்பட்ட ஒரு பொற்சாஸனத்தாற் தெரிய வந்தது. இது கி. பி. 127 க்கும் 171 க்கும் இடையில் எழுதப்பட்டதாகக் கருதப்படுதலின், வல்லிபுர நாகரிகம் எவ்வளவு புராதனப் பெருமை வாய்ந்தது என்பது புலப்படும்.

**நல்லூர்**

சிலகாலத்தின் பின்னர் யாழ்ப்பாண அரசர்கள் நல்லூரை இராசதானியாக்கினர். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை நடுநாயகமாகக் கொண்டே நல்லூர் நகரம் அமைக்கப்பெற்றது.

வடக்கே சட்டநாதர் கோயிலும், கிழக்கே வெயிலுகந்தபிள்ளையார் கோயிலும், தெற்கே கைலாயநாதர் கோயிலும், மேற்கே வீரமாகாளியம்மன் கோயிலும் அமைக்கப்பெற்றன. யாழ்ப்பாணத்தரசர்களுள் ஒருவன் யமுனைநதித் தீர்த்தத்தை எடுப்பித்துப், பகரவடிவிற் கட்டப்பெற்ற கேணியில் ஊற்றி, அதனை யமுனரித் தீர்த்தம் எனப் பெயரிட்டான். இது நல்லூரிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்துக்கருகில் இன்றும் காணக்கூடியதாய் இருக்கின்றது.

**கந்தசுவாமிகோயில்**

சிங்களநாட்டைச் சேர்ந்த கோட்டையை ஆண்ட ஆறும் பராக்கிரமபாகுவின் மகன் சப்புமால் குமரையன் (செண்பகப் பெருமாள்) யாழ்ப்பாண நாட்டைக் கைப்பற்றிச் சிறிசங்கபோதி புவனேகவாகு எனும் பெயருடன் சிறிதுகாலம் ஆண்டுவந்தான். இவன் தனது

குடிகளைப் பிரியப்படுத்த விரும்பி, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் திருத்தியமைத்தான். போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில், அதாவது 16–ம் நூற்றுண்டின் நடுக்கூற்றில், இக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டது. 18–ம் நூற்றுண்டின் நடுக்கூற்றில் இவ்வாலயம் தொன்ஜுவான் மாப்பாண முதலியாரால் மீண்டும் கட்டப்பெற்றது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களுள் தலை சிறந்து விளங்குவது இவ்வாலயமெனலாம். திருவிழாக்களும் பூசைகளும் காலக்கிரமம் தவறுமல் நடைபெறுகின்றன. தேர்த்திருவிழாவன்று நாற்றிசையிலுமிருந்து இந்துமக்கள் இங்கே திரண்டு வருவதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள முக்கியமான இடங்களைப் பார்ப்பதற்கு ஒரு மோட்டார்வண்டியை அமர்த்திக்கொண்டு புறப்பட்டால் மிக விரைவிற் பிரயாணத்தை நிறைவேற்றிவிடலாம்.

18–ம் நூற்றுண்டில் வாழ்ந்த செல்வப் பிரபுவாகிய வைத்திய லிங்கச் செட்டியார் கட்டிய சிவன்கோயில் வண்ணூர்பண்ணையில் உள்ளது. இதற்கெதிரேயுள்ள தெருவழியாகச் சென்றால் சேணியதெருவிலுள்ள வேங்கடேசப்பெருமாளைத் தரிசிக்கலாம். பின்னர் நல்லூர்க் கந்தனை வந்தனை செய்துவிட்டு, மானிப்பாய் மருதடி விநாயகர் சந்நிதியை நோக்கிச் செல்லலாம். இங்கு சித்திரை வருஷப்பிறப்பன்று நடைபெறும் இரதோற்சவம் மிகச் சிறப்பானது. மானிப்பாயிலிருந்து உடுவில் வழியாக மருதனைமடத்துச் சந்திக்கு வந்து, அதற்கருகிலுள்ள இராமநாதன் கல்லூரி வளவிலுள்ள இராமநாதர் சமாதியின்மீது கட்டப்பெற்றுள்ள சிவாலயத்தைத் தரிசித்துக்கொண்டு, புத்தூருக்குச் செல்லுங்கள். புத்தூரில் நிலாவரை யென்னும் வற்றுத அதிசயக் கிணறு உளது. இந்தக் கிணறு இராமர் அம்பு எய்ததினுல் உண்டானதென்பது ஐதிகம். பன்னிரண்டு மணித்தியாலத்துக்கொரு முறை இக்கிணற்று நீர் சில அங்குலம் மேலே உயரும். எவ்வளவு நீர் உட்சென்றாலும் அல்லது எவ்வளவு நீர் வெளியே இறைத்தாலும் நீர் மட்டம் குறிப்பிட்ட ஓர் அளவுக்கு மேற்படவேனும் குறையவேனும் மாட்டாது.

புத்தூரிலிருந்து நேரே வல்லிபுரத்துக்குச் சென்று ஆழ்வார் கோயிலைத் தரிசித்துக்கொண்டு பருத்தித்துறைக்குச் சென்று சிவாலய தரிசனம் செய்யலாம். பருத்தித்துறைச் சந்தையடியில் ஒரு பெரிய புளியமரம் நிற்கின்றது. இது சரித்திரப் பிரசித்திபெற்ற மரமாதலால் அதனை நீங்கள் பார்க்கத்தான் வேண்டும். இம் மரத்தின் கீழ்

நின்று 'பால்டியஸ்' பாதிரியார் முதன் முதலாகக் கிறிஸ்தவ மதத்தை யாழ்ப்பாணத்திற் போதித்தாராம். இங்கிருந்து புறப்பட்டுக் கந்த வனத்தில் உள்ள புராதன சுப்பிரமணியர் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு, வல்லுவெட்டித்துறைக்குச் சென்று பிள்ளையார் கோயிலையும் அழகிய கோபுரங்களையுடைய அம்மன் கோயிலையும், சிவன் கோயிலையும் தரிசித்துக்கொண்டு சென்றால், தொண்டைமானாற்றங்கரையிலுள்ள செல்வச் சந்நிதியை அடைவீர்கள். இங்கே கதிர்காமத்தைப் போலவே பூசை நடைபெறுகின்றது. அன்னதானம் நாடோறும் நடைபெறு கின்றது. பூசை நடைபெறும் சமயத்திற் போகும் அதிர்ஷ்டம் கிடைத் தால், சிறிது நேரம் ஆறுதலாக நின்று வழிபாட்டிற் கலந்துகொள்ள லாம்.

**மாவிட்டபுரம்**

பின்னர் நேரே காங்கேசன்துறைக்குச் செல்வோம். இது பண் டைக்காலத்திற் சிறந்த துறைமுகமாக விளங்கியது. இங்குள்ள சீமெந்துத் தொழிற்சாலையையும் நீங்கள் பார்வையிடவேண்டும். பின்னர் மிகவும் புராதன ஸ்தலமாகிய மாவிட்டபுரத்துக்குச் செல்வோம். மாருதப்பிரவிகவல்லியெனும் சோழநாட்டு அரசகுமாரி கீரிமலைக்கு வந்து, தனக்கிருந்த குன்மவியாதி நீங்கப்பெற்று, மாவிட்டபுரத்திற் கந்தசுவாமி கோயிலைக்கட்டி வழிபட்டாள். இக்கோயில் பின்னர் போர்த்துக்கீஸரால் அழிக்கப்பட்டது. இவ்விடத்தில் இப்பொழுது அழகிய கோபுரத்தைக்கொண்ட ஆலயம் ஒன்று மீளவும் கட்டப் பெற்றுள்ளது. இங்கு நடைபெறும் திருவிழாவுக்குப் பல்லாயிரக் கணக்கானோர் செல்வர். தீர்த்தோற்சவத்திலன்று இங்குள்ள கந்த சுவாமியார் கீரிமலைக்குச் சென்று தீர்த்தமாடுவது வழக்கம்.

**நகுலேஸ்வரம்**

முன்னொருகாலத்திற் கீரிமுகத்தையொத்த முகத்தையுடைய முனி வர் ஒருவர் இங்குள்ள நன்னீரூற்றில் தீர்த்தமாடி இங்கிருந்த சிவா லயத்திலுள்ள ஈஸ்வரனைப் பூசித்து வந்தாராம். இவருடைய கீரிமுகம் மாறிய காரணத்தால் இந்த ஸ்தலம் கீரிமலையெனவும், அவர் வழி பட்ட கோயில் நகுலேஸ்வரம் எனவும் சொல்லப்படுகின்றதாம். பெயர்க் காரணம் எப்படியிருந்தபோதிலும், கீரிமலையிலுள்ள நன்னீரூற்று அனைவரையும் வசீகரிக்கும் காந்த சக்தி வாய்ந்தது. இதனை ஈழத் துக் குற்றாலம் எனலாம். ஆடியமாவாசைத் தினத்தன்று இதில் தீர்த்த மாட இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து கூடுவர். இங்கே தீர்த்த

மாடிச் சிவன்கோயிலைத் தரிசித்துக்கொண்டு திருவடிநிலைக்குச் செல்வோம். இதுவும் பண்டைக்காலத்தில் ஒரு புனித ஸ்தலமாகவிருந்தது. பொன்னாலையிலுள்ள வரதராஜப் பெருமாளையும் தரிசித்துக்கொண்டு வட்டுக்கோட்டைக்கு வந்து சேர்வோம். இந்த இடத்திற்றான் 1823-ம் ஆண்டில் 'செமினரி' என்னும் பெயருடன் ஒரு பெரிய சாத்திரசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இது அக்காலத்தில் ஆசியநாடுகளிலுள்ள கலாநிலையங்கள் யாவற்றிலும் சிறந்து விளங்கியது. இந்த செமினரியிற் படித்தவர்களே சிறந்த தமிழறிஞர்களாக விளங்கினர். இந்தச் சாத்திரசாலையிருந்த இடத்தில் இப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரி இருக்கின்றது. இக்கல்லூரியிலுள்ள நூல் நிலையத்தையும் பார்க்கத்தான்வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த பழைய நூல்கள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றை இங்கே பார்க்கலாம். இவற்றைப் பார்த்துக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேரலாம்.

இலங்கையில் ஆட்சிபுரிந்த போர்த்துக்கீசர் துறைமுகப் பட்டினங்களில் கோட்டைகளைக் கட்டிக் கத்தோலிக்க தேவாலயங்களையும் நிறுவினர். இவர்களுக்குப் பின் வந்த டச்சுக்காரர் இந்தக் கோட்டையரண்களை விஸ்தரித்துக் கட்டி, கிறிஸ்தவ தேவாலயங்களையும் கட்டியெழுப்பினர். யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 1706-ம் ஆண்டிற் கட்டப்பெற்ற அழகிய புராதன தேவாலயம் இன்றும் அழியாமல் இருக்கிறது. இது டச்சுக்காரர் கட்டியது. இங்கே போர்த்துக்கீசர் கட்டிய புதுமை மாதாகோயிலின் மணி இருக்கின்றது. இதில் 1648 என்ற இலக்கம் வார்க்கப்பட்டிருக்கிறது.

**புதுமை மாதா கோயில்**

17-ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புதுமை மாதா ஆலயத்தைக் கட்டினர். பின்னர் டச்சுக்காரர் இவ்விடத்தில் தங்கள் தேவாலயத்தை நிறுவினர். இவ்விடத்திலுள்ள மணியொன்றுதான் புதுமை மாதா கோயிலை நினைவூட்டிக்கொண்டிருந்தது. எனவே பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் கரையூரிற் கத்தோலிக்கர், தமது பழைய கோயிலை ஞாபகமூட்டும் முறையில், புதுமை மாதா கோயிலைக் கட்டியெழுப்பினர்.

**கிழாலி சந்தியோகுமையோர் கோயில்**

யாழ்ப்பாணத்திலிருந்து 17 மைல் தூரத்திலும், பளை புகையிரத ஸ்தானத்திலிருந்து 7 மைல் தூரத்திலும் கிழாலியென்

ெறுரு சிற்றூர் உண்டு. போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இங்கிருந்த சந்தியோகுமையோர் கோயில் சிறந்த யாத்திரை ஸ்தலமாகவிளங்கியது. பின்னர் அழிந்துவிட்டதுபோலும். டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் பூதநாத ஆராச்சி (தொன் ஜுவான்சமரசேகர முதலியார்) என்பவர் வன்னியிலுள்ள பனங்காமத்தில் அதிகாரம் செலுத்திய (மரியை செம்பாத்தை நல்லநாச்சியார்) என்னும் வன்னிச்சியைப் பிடித்துவரப் படையுடன் சென்றபொழுது கிழாலியில் இக் கோயில் இருந்த மடத்தில் ஓரிரவு தங்கினர். அன்றிரவு இவருக்குச் சீவமோசம் ஏற்பட விருந்ததைத் தெய்வாதீனமாய் அறிந்து விலகிக்கொண்டார். இவர் நினைத்தபடி யாவும் நடந்தேறியதால், கிழாலியில் சந்தியோகுமையோர் கோயிலைக் கட்டித் தன் நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

**நயினதீவு**

முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்திலும் பௌத்த மதம் பரவியிருந்த தெனலாம். கந்தரோடை நகரம் சான்ருக விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டை யடுத்துள்ள தீவுகளிலும் பௌத்த மதச் சின்னங்களைக் காணலாம். புத்தர் பிரான் தரிசித்த புனித ஸ்தலமாகிய நாகதீபம் என்பது நயினதீவுதான் எனப் பௌத்தர்கள் நம்புகின்றனர். இங்கே தற்போது ஒரு விகாரை கட்டியிருக்கின்றனர். இது அவர்களின் யாத்திரை ஸ்தலமாக இருக்கின்றது. இங்குள்ள நாகம்மாள் கோயிலும் புராதனப் பெருமை வாய்ந்தது.

**கொழும்பு**

கொழும்பு மாநகரத்தை யடைந்ததும், மேனுட்டு நாகரிகத்தின் பிரதிவிம்பத்தைக் காண்பீர்கள். இலங்கை அரசியல் முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றிய சேர் பொன். அருணுசலம், சேர் பொன். இராமநாதன் எனும் இரு பெரும் சகோதரர்களின் உருவச் சிலைகள் ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தின் இரு மருங்கினையும் அலங்கரிக்கின்றன.

கொழும்பிலுள்ள நூதனசாலையிற் கண்டி மன்னனின் சிம்மாசனம், முடி, செங்கோல் முதலியவற்றையும், நீங்கள் பார்க்கவேண்டுமென முன்பு ஆவல்கொண்ட, அழகிய இந்து விக்கிரகங்களையும் கண்ணகி விக்கிரகத்தையும் காணலாம்.

**விபீஷணன் ஆலயம்**

கொழும்பிற் சிறந்த பௌத்தாலயத்தைத் தரிசிக்க விரும்பினல் இங்கிருந்து வடக்குப் பக்கமாக 5 மைல் தூரம் சென்ருல் களனி

களனிக் கருகிற் சிறந்த ஒரு பௌத்த ஆலயத்தைக் காண்பீர்கள். நெற்போர் போன்ற வடிவமுள்ள இவ்வாலயம் 2000 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கருதப்படுகின்றது.

இராவணனின் தம்பி விபீஷணனை ஒரு தெய்வமாகச் சிங்களப் பௌத்தர்கள் கருதுகின்றனர். இங்கே விபீஷணனுக்கு ஒரு கோயிலுண்டு. விபீஷண வழிபாடும் பௌத்த மதம் இலங்கைக்கு வர முன்னரேயிருந்த புராதன வழிபாடு என்றுகொள்ள இடமுண்டு.

கொழும்பு, கொச்சிக்கடையில் பொன்னம்பலவாணேசுரம் எனப்படும் சிவன் கோயில் இருக்கின்றது. இது கருங்கற்றிருப்பணியாகச் சேர் பொன். இராமநாதன் அவர்களால் அமைக்கப்பெற்றது.

**அர்ச். அந்தோனியார் கோயில்**

இதற்கருகில் கத்தோலிக்கரின் புராதன தேவாலயமாகிய அர்ச். அந்தோனியார் கோயிலுண்டு. இக்கோயிலுக்குக் கத்தோலிக்கர் மட்டுமன்றி இந்துக்கள், பௌத்தர்கள் முதலிய பிற சமயத்தவர்களும் சென்று வழிபடுவது வழக்கம். இக்கோயில் இருக்குமிடம் கொச்சிக்கடையெனப்படும். இப்பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட கடல் அரிப்பினால் மாலுமிகள் கஷ்டப்பட்டு வந்தனர். 18-ம் நூற்றாண்டின் நடுக்கூற்றில், கோவையிலிருந்து வந்த அந்தோனிச் சுவாமியார் இந்த மாலுமிகளின் கஷ்டத்தையுணர்ந்து, இவ்வாலயம் இருக்கின்ற இடத்தில் ஒரு சிலுவையை நாட்டிப் பிரார்த்தனை செய்தார். சில நாட்களுள் அக்கடலரிப்பு நின்றுவிட்டதாம். இந்தச் சுவாமியாரே அர்ச். அந்தோனியார் கோயிலை முதலில் மண்ணினாற் கட்டிமுடித்தார்.

# ஈழநாடும் சைவமும்

திரு. மு. ஞானப்பிரகாசம், பி. ஏ., பி. எஸ்ஸி.

பழந் தமிழகத்தில் ஒரு தனிப்பெரும் பகுதியாய் விளங்கிய நாடு நமது ஈழவளநாடு. மிகவும் பழைய காலத்தில் இதனை அரசாண்டுவந்த அரசன் இராவணேஸ்வரன். அந்த அரசன் ஒருவனே எங்கள் நாட்டுச் சரித்திரத்தில் 'இலங்கையர் கோன்' என்னும் தனிப் பெரும் பெயர்க்கு உரித்தாய் வாழ்ந்தவன். 'இராவணன் மேலது நீறு' என்று தேவாரம் கூறுவதிலிருந்து அவன் சமயம் சைவம் என்பது வெளிப்படை. ஈழ நாட்டிலிருக்கும் சைவசமயத்தின் தொன்மையை இராவண வேந்தனில் வைத்தே நாங்கள் உணருதல் வேண்டும். இவன் இணையற்ற சிவபத்த னாய்ச் சைவச்செந்நெறி தழுவிய சீலனாய் சிவபெருமானையே வேண்டித் தபங்கிடந்து, பேரோடு வாளும் நாளும் பெருமையிற் பெற்று மூவுல கும் தன் புகழ் விளங்கத் தனியாட்சிபுரிந்த அரசன். இவன் வேதவித்; சாமவேதம் பாடுவதில் வல்லவன். இவன் கைலைபால் கொண்டிருந்த அபிமானமோ அளவற்றது. தன் இராச்சியத்திலுள்ள சிவஸ்தலங்களை யெல்லாம் 'கைலை' 'கைலை' எனப் பாவித்தும் கருதியும் வாழ்ந்துவந்த ஒரு சைவ வேந்தன் என இவனை நாங்கள் கருதவேண்டி யிருக்கிறது. ஒருதடவை தன் னிருபது கரங்களாலும் திருக் கயிலையைக் கட்டித் தூக்க முயன்றானென்றும், முயன்றவனாகிய அவன் முயன்ற அப் பொழுதே திடீரென்று நல்லுணர்வு வந்து தன் பிழையை உணர்ந்து, மனம் உருகிச் சாமவேதம் பாடிச் சிவபெருமானை வணங்கி நின்றா னென்றும் சைவ வரலாற்று நூல்கள் கூறுகின்றனவல்லவா? எங்கள் வேந்த னிவன்பால் நிகழ்ந்த இந் நிகழ்ச்சியை எங்கள் கோயில் விழாக் களில் திருக் கயிலாயக் காட்சி என ஒன்று வைத்து இற்றைவரையும் நாங்கள் நினைவுகூர்ந்து வருகின்றோம். இந்த இராவண வேந்தனுக்குப் பட்டத்துப் பெருந்தேவியாய் அமைந்தவள் மண்டோதரியாவள். இவள் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாய்ச் சிவநலம்பேணிய செல்வியாவள். 'ஆரா பெருமை அழகமர் மண்டோதரிக்குப் பேரருளின்பமளித்த பெருந்துறை மேயபிரான்' என்ற மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கு அவள் பெருமையை நன்கு வலியுறுத்தும். இராவணேஸ்வரனிடத்தும், அவன் பட்டத்துப் பெருந்தேவியிடத்தும் விளங்கிய சிவநெறியும் பண்பாடும் அவர்கள் குடிமக்களாகிய நம் நாட்டு ஆதிமக்களிடத்தும்

அமைந்திருக்க வேண்டும் என்பது ஒருதலை. எனவே எம் நாட்டுப் பூர்வகுடிகள் சமயத்தாற் சைவர்கள்.

**ஞானப்பிரகாசர்**

தென்னாட்டையும் ஈழநாட்டையும் இணைத்து நிற்பது இரண்டு நாட்டிற்கும் பொதுவென வளர்ந்துவருகின்ற தமிழர் நாகரீகமேயாகும். அதுவே பாக்கு நீரிணைமீது நிரந்தரமாக மிதந்து நிற்கும் பெரும் பொற் பாலமாகும். அதுவே பரஸ்பரம் நாங்கள் எங்கள் இரு பெரும் நாடுகளுக்குமிடையிற் போக்குவரவு புரிவதற்கென அமைத்திருக்கும் பெரும் பொற் சேதுவாகும். தென்னாடு, ஈழநாடு ஆகிய இரு நாட்டு மக்களும் ஒருவர் ஒருவரிற் கலந்த மனப்பான்மையினராய் நட்புரிமையுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள் என்பது சரித்திர உண்மை. தென்னாடு சீரும் சிறப்பும் பொருந்திச் செழிப்புறுங் காலத்தில் ஈழநாடாகிய எம் நாடும் சீரும் சிறப்பும் பொருந்திச் செழிப்புற்றிருக்கும். தென்னாட்டில் புத்த சமய எழுச்சி நிகழ்ந்த ஞான்று ஈழ நாட்டிலும் புத்த சமய எழுச்சி நிகழ்ந்தது. தென்னாட்டிற் சோழ வேந்தர் செல்வாக்கின் வழிவந்த பக்திநெறியும் அன் பொழுக்கமும் தழைத்த காலத்தில், எம் நாட்டிலும் அவைகள் அவ்வாறே தழைத்துநின்று மக்கள் வாழ்வை வழிநடத்தி வந்தன. தென்னாட்டிற் கருங்கற் றிருப்பணி ஆலயங்கள் எழுந்த காலத்தில் எம் நாட்டிலும் அவ்வாறே கருங்கற் றிருப்பணி ஆலயங்கள் எழுந்தன. கி. பி. 15-ம் நூற்றாண்டின் பின்னரே எங்கள் சரித்திரம் தனிப்போக்கிற் செல்லவேண்டிய தொன்றாயிற்று. பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்றிசைப் போர்த்துக்கேயர் நம் நாட்டிற் கால்வைத்துத் தம் வாழ்க்கை யொழுங்கையும் சமய நெறியையும் நம் மக்கள்மீது திணித்தனர். நம்மவர் வாழ்வின் இலட்சியங்களாய்த் திகழ்ந்த எங்கள் கோயில்களனைத்தும் அவர்தம் குரூரச் செயல்களுக் கிலக்காயின. அதனால் ஒருபோதும் கலங்காத எம் நாடு கலங்கத் தொடங்கியது. பாரம்பரியமான வாழ்க்கை முறைகளில் வாழ இயலாதவர்களாய், நினைப்பு முறைகளில் நினைப்பைச் செலுத்த முடியாதவர்களாய், எம் நாட்டிலிருந்து தென்னாட்டை நோக்கிப் பல பெரியோர் சென்றனர். அவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஞானப்பிரகாசர் என்னும் பெரியார். தாய் நாட்டில் வடமொழிப் புலமையும் தென்மொழிப் புலமையும் பெற்றுத் திருவண்ணாமலையிலே, ஆதீனமடத்திலிருந்து காஷாயம் பூண்டு, சைவசித்தாந்த ஞான நூல்களையும், சைவாகமங்களையும் ஆராய்ச்சிசெய்து சிவஞானச் செல்வராய் விளங்கியவர். சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, சிவயோக

சாரம் முதலிய வடமொழி நூல்களுக்கும், சிவஞானசித்தி முதலிய தென்மொழி நூல்களுக்கும், இவர் இயற்றிய உரைகள் இற்றைவரையும் அபிமானிக ளின்மையால் தேடுவாரற்று ஆங்காங்கு ஒதுங்கிக் கிடக்கின்றன. ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னர், ஈழத்து நடராசையர் என்னும் சைவப்பெரியார் ஒருவர் சிதம்பரம், மதுரை முதலிய சிவஸ்தலங்களில் சைவசித்தாந்தப் போதகாசிரியராய்த் திகழ்ந்தகாலை, ஞானப்பிரகாச சுவாமிகளின் சிவஞானசித்தி யுரையை ஆராய்ந்து அச்சிற் பதிப்பித் திருக்கிறதாகத் தெரிகிறது. அவ்வுரை தகுந்த முறையில் வெளிவருவதற்கு நாங்கள் ஆவன செய்தல் வேண்டும், மேற்படி சுவாமிகள் காலத்திலும் அதன் பின்னரும் போர்த்துக்கேய, ஒல்லாந்த அரசரின் ஆணைக்குப் பயந்தோ அல்லது வேறுகாரணமோ யாமறியேம். ஈழத்திற் பிறந்த சைவப் பெரியார்கள் அனைவரும் ஈழத்திற் சைவத் தொண்டு செய்ய மனம் ஒருப்படாராய், தென்னாடுசென்று, சைவாதீனங்களைச் சார்ந்து, தம்பிரான்களாய்த் திகழ்ந்து, வடமொழி தென்மொழி நூல்களில் பெரும் புலமைபெற்று வாழையடிவாழையாகத் தென்னாட்டிலேயே ஆங்காங்கு சென்று சைவப்பிரசாரத் தொண்டு செய்துவந்திருக்கின்றனர். முதன் முதலாக அவ்வாறு ஆதீன தம்பிரானெனத் திகழ்ந்து சைவப்பிரசாரத் தொண்டுசெய்தவர் யாழ்ப்பாணம் அளவெட்டியூர் வைத்தியநாதத் தம்பிரானாகும். அவர் ஏறக்குறைய 300 வருஷங்களுக்கு முன்னர் இருந்தவ ரென்றும் ஞானப்பிரகாசர் காலத்தவரென்றும் கூறுவர். அவர் சிதம்பர தலத்தில் மிகுந்த அபிமானியாய் வாழ்ந்து, சிவகாமசுந்தரி சமேத நடேசப்பெருமானை உபாசனைசெய்து, வியாக்கிரபாத முனிவர் புராணம்பாடி, திருக்குளத் தொண்டி வீடுபட்டுச் சிதம்பரத்திலேயே சிவகதி அடைந்தவர்.

**வரணி ஆதீனம்**

ஒல்லாந்தர் காலத்திலும் சமய சுதந்தரம் இன்றி எம் நாடு தத்தளித்தது. சமயச் சடங்குகளையும், சமயக் கிரிகைகளையும் பகிஷ்கரித்து எம் நாட்டிலிருந்து ஒல்லாந்தர் அவற்றை நாடு கடத்திவிட்டனர். அது காரணமாகச் சமயவாழ்வு சாம்பர்பூத்த தழல்போல் மக்கள் உள்ளத்தளவிலேயே மினுமினுத்துக்கொண்டிருந்தது. அது புறத்தே வீசாவண்ணம் தமக்கேற்பட்ட ஆட்சியை எண்ணி எண்ணிப் பல உண்மை உள்ளங்கள் வெதும்பின. அவ்வாறு வெதும்பினோருள் சிலர் கட்டுமரங்களிலேறிக் கோடிக்கரைசென்று 'சிவாலயங்களைப் பார்த்துக் கண்ணீர்விட்டு மீள்வர். வேறு சிலர் கோடிக்கரையிலேயே தங்கிவிடுவர்.

அவ்வாறு ஒல்லாந்தர் காலத்தில் கோடிக்கரையில் சென்று தங்கிய பெரியாருள் ஒருவரே வரணியூர்த் தில்லைநாதர் என்பவர். அவர் கோடிக்கரையிலிருந்து திருவண்ணாமலை சென்று 'ஞானப்பிரகாசர்' மடத்திற் சைவ சாஸ்திரம் பயின்று காவியுடைபெற்று, சிவானுபூதி மானாய்த் திகழ்ந்தவர். தஞ்சாவூர் அரசரின் நன்மதிப்புக்காளாகி, அவ ரிடத்தில் பெருந்திரவியம் பெற்று வேதாரணியச் சிவாலயத் திருப்பணி செய்தவர். வேதாரணியச் சிவாலயம், யாழ்ப்பாணம் வரணி ஆதீனத் தோடு தொடர்புற்றது அவர்மூலமாகவேயாம்.

**நாவலர் பெருமான்**

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியில் எங்கள் நாடு எப்படியோ ஏறக்குறைய 200 ஆண்டுகளைக் கடத்திவிட்டது. எல்லாம்வல்ல இறை வன் ஒரு தனிப்பட்ட மனிதனையென்றாலென்ன, ஒரு சமூகத்தை என்று லென்ன, நீண்டகாலமாகப் பெருஞ் சோதனைக் குட்படுத்துவதில்லை. அக் காலத்தில் ஆங்கிலேய ராட்சி எங்களுக்குப் பெரிய வரப்பிரசாத மாகவே வந்து அமைந்தது. எங்களுக்குப் பூரணமான சமய சுதந்தரத் தைத் தந்த ஆட்சியல்லவா அது? சமய சுதந்தரத்திற்குரிய சூழலைத் தந்த இறைவன், எங்களுக்கு ஓர் அரும்பெரும் தலைவனையும் தந்தனன். எங்களை எங்களுக்குணர்த்தித் தூக்கிவிடுவான் வேண்டி கி. பி. 1822-ம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் திருவவதாரம் எங்கள் யாழ்ப்பாணப் பூமியில் நிகழ்வதாயிற்று. நாவலர் பெருமான் திருவவதாரம் ஈழத்துச் சைவ வரலாற்றில் — இல்லைத் தமிழகத்தின் சைவ வரலாற்றிலேயே — மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி யாகும். ஆங்கிலேய ராட்சியின் முற்பகுதியில் ஈழத்துச் சைவமக்கள் உணர்ச்சியின்றி, உண்மையின்றி, உறுதியின்றி, செத்தாரைப்போல் திரிந்துகொண் டிருந்தகாலை அவர்களுக்கு ஊக்கமும் உணர்ச்சியுமூட்டி அவர்களை விழித்தெழச் செய்தவர் நாவலரே யாவர். பார்சிவல் துரைக்கு உதவியாளராயிருந்து பிபிலிய வேத நூல் முழுவதும் மொழிபெயர்த் துதவியவர் நாவலரேயாகும். அதனாற் கிறிஸ்து சமய உண்மையையும், பாதிரிமாரின் போலி ஒழுக்கத்தையும் நன்குணர்ந்தவர். சைவராயினும் சரி, கிறிஸ்தவர்களாயினும் சரி, பௌத்தராயினும் சரி, முகமதியராயி னுஞ்சரி போலி ஒழுக்கமே எங்கள் நாவலர் பெருமானுக்குப் பிறவிப் பகையாய் அமைந்தது. போலி ஒழுக்கம் நாட்டிலிருந்து நாடு கடத்தப் பட்டாலன்றிச் சமூக அமைப்புச் சீர்பெறமாட்டாது; வாழ்க்கையின் இலட்சியம் கைகூடமாட்டாது என்பது அவர் கண்ட உண்மை. அவர்

தம்மவர் என்றும் பிறரென்றும் வேற்றுமை காணாத மகான். போலி வாழ்வையும், போலி ஒழுக்கத்தையும், போலி மார்க்கத்தையும் கொதித்துச் சினந்து திரிந்த உருத்திர வடிவம். 'துப்புர வில்லார் கொள்கை துகளாகச் சூழ்ந்தெழுந்த' ஞானபானு. சரியையும் பிழையையும் நூல் உலக அநுபவங்களுக் கிணங்க ஆராய்ந்தறியும் புத்திக் கூர்மையும், சரியென ஆராய்ந்து கண்டதை ஆர்வமொடு தழுவும் மனத்திட்பமும், பிழையென உணர்ந்ததை எத்துணையுங் கூசாது எடுத்துக் கூறும் வீர வசனமும் சேர்ந்த பெருவடிவமே எங்கள் நாவலர் வடிவம். அந்த வீரம் நிறைந்த நேர்மை வடிவத்திலிருந்து கங்குகரையின்றி நிரம்பி வழிந்த உணர்ச்சியும் வேகமும் எங்களுடைய இந்த ஈழவளநாட்டிலே மீண்டுஞ் சைவப் பயிர் தழைத் தோங்குவதற்குப் பருவ மழையாயின.

நாவலர் பெருமான் தன்னந் தனியனாய் நின்று உழைத்துத் தமிழகம் முழுவதையும் வியாபித்து வந்த தீரர். அங்கே தாய்நாட்டில் ஓர் அச்சியந்திரசாலை; இங்கே சேய்நாட்டிலும் ஓர் அச்சியந்திரசாலை. அங்கே தாய்நாட்டில் சைவப்பாடசாலைகள்; இங்கே சேய்நாட்டிலும் சைவப் பாடசாலைகள். அங்கே தாய்நாட்டிலே கிராமங்கள்தோறும், ஆலயங்கள் தோறும் கண்டனப் பிரசங்கங்களும், ஆக்க வேலைகளும்; இங்கே சேய்நாட்டிலும் அவ்வாறே. அங்கும் இங்கும் சிறுவர்களுக்கான செந்தமிழ் நூல்கள். அங்கும் இங்கும் வீடுகளில் வாசித்து உணர்தற்கான புராண வசன நூல்கள். அங்கும் இங்கும் கோயில்களில் படனத்திற்குரிய கந்தபுராணம் பெரியபுராணம் முதலிய பதிப்பு நூல்கள். இவ்வாறு ஒரு வீரர் தனிமையில் நின்று ஆங்கென்றும் ஈங்கென்றும் இன்றி தமிழகம் முழுவதையும் உய்யக் கொண்டாராதலின் 'தமிழர் நாம்' என்றைக்கும் திருவருளுடையோ மாயினோம்.

**நாவலர் பரம்பரை**

நாவலர் பெருமானுக்கு நாங்கள் செய்யக்கூடிய கைம்மாறு யாது? அவர் இயற்றியருளிய நூல்களை எங்கள் சைவப்பள்ளிக்கூடங்களிலும் எங்கள் சைவமக்களிடத்தும் பரப்பிவருதல் வேண்டும். அந்த நூல்களின் உட்பொருளாகிய 'நாவலரின் உயிர்ப்பாங்கு' எங்கள் மக்களிடத்தில் சுவறும்படி செய்தல் வேண்டும். நாவலர் பெருமான் வழிவந்த ஞானத் தவப் புதல்வர்கள் அனேகர் அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தாய் நாட்டிலும் எம் நாட்டிலும் சமயத் தொண்டு செய்துவந்திருக்கின்றனர். அவர்களுள் சபாபதி நாவலர், அம்பலவாணர் ஆகிய இருவரும் ஈழநாட்டிலும் தென்னாட்டிலும் சைவப் பாடசாலைகள் ஸ்தாபித்தும்

சைவப் பிரசங்கங்கள் செய்தும், சைவசமய நூல்களைப் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பித்தும் சைவத் தொண்டு செய்துவந்தவர்கள். சபாபதி நாவலர் மாதவச் சிவஞான சுவாமிகளின் வாரிசென மதிக்கும் படியானமுறையில் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாய் வீற்றிருந்து திராவிடப்பிரகாசிகை என்னும் நூலியற்றித் தமிழுலகுக்கு உபகரித்தவர். சதுர்வேத தாத்பர்யம் முதலிய நூல்கள் இவரியற்றியருளிய மொழி பெயர்ப்பு நூல்களாம். இந் நூல்களையெல்லாம் சைவஉலகம் படித்து உணர்ந்து உய்யும்பொருட்டு, நாங்கள் இவைகளைப் பிழையறப் பதிப் பித்துத் தகுந்தமுறையிற் பரப்பிவருதல் வேண்டும். புத்தகங்களைப் பிழையின்றிப் பரிசோதித்துப் பதிப்பிப்பதற்கு ஆறுமுக நாவலர் என்ருலென்ன, அவர் வழிவந்த அவர்தம் ஞானபரம்பரையினர் என்ருலென்ன, தமக்கு நிகராவார் ஒருவருமின்றித் திகழ்ந்திருக்கின்றனர். ஆறுமுக நாவலரின் பாதசேகரர் என்ற சிறப்புப் பெயர்பூண்ட அம்பலவாண நாவலர் 'ஆரிய திராவிடப் பிரகாசிகை', 'பெரியபுராண பாடியம்' முதலிய நூல்களை இயற்றி இருக்கின்ருரென்றும், அவை இன்னும் கையெழுத்துப் பிரதிகளாகவே இருக்கின்றனவென்றும் அறிகின்ருேம். சைவத் தமிழுலகம் இந் நூல்களையும் பதிப்பித்தல் வேண்டும்.

**உரையாசிரியர்கள்**

தமிழ் மக்களின் பழம்பெரும் பண்பாட்டிலேயே தமிழ் மக்கள் வளர்ந்துவருதல் வேண்டும் என்ற அதி தீவிரமான கொள்கையை யுடையவர் நாவலர் பெருமான். அந்தப் பண்பாட்டில் வளர்வதற்குப் புராண படனம்போன்ற சாதனம் பிறிதொன்றில்லை என்ற துணிபுடையவர். அதனுற்ருன் பெரிய புராணம் கந்த புராணம் ஆகிய இரண்டனையும் எங்களின் இரு பெரும் புண்ணியக் கண்களென மதித்து, அவற்றை நியமந்தவருது படனஞ் செய்ய வேண்டும் என எம்மவர்க்கு உபதேசித்தும், செயலிற் செய்துகாட்டியும் சென்றனர். நாவலர் பெருமான் உணர்த்தி யருளிய 'புராண படனத் தொண்டின்' பெருமையை உண்மையில் உணர்ந்தருளிய பெரியார் அக்காலத்தில் மூவராகும். அவருள் ஒருவர் இங்கிருந்து திருவண்ணுமலை சென்று தம்பிரான் எனத் திகழ்ந்து, பெரிய புராணத்திற்கு முதன் முதலாக உரை இயற்றிய ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள். மற்றைய இருவரும் நாவலர் காட்டிய நன்னெறியில் ஒழுகிவந்த அவர்தம் ஞானப் புதல்வர்களே. வித்துவ சிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையையும், அவரிடத்தில் நேரே கற்ற அவர்தம் நன்மாணுக்கராகிய, உரையாசிரியர் என்னும் சிறப்புப்-

பெயர் தாங்கிய மட்டுவிற் சைவப் பெரியார் க. வேற்பிள்ளை அவர்களையுமே இங்கு கருதுகின்றோம். எங்கள் நாட்டிலுள்ள கோயில்களிலும், மடங்களிலும், வீடுகளிலும் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலியவற்றைப் படித்துப் பொருள் சொல்லி, பொருள் சொல்லுங்கால் கேட்டவர்கள் 'யாழிசையோ பாரதிதன் இன்னிசையோ' என்று அயிர்க்குமாறு தமக்கு இயற்கையாயமைந்த இனிய மிடற்றோசையோடும் விரிவுரையோடும் சொல்லின்பமும் பொருளின்பமும் தோன்றச் சொல்லும் சைவச் செல்வர்கள் இவர்கள். உரையாசிரியர் எழுதிய திருவாதவூரர் புராண உரை, அபிராமி அந்தாதி உரை, புலியூர் அந்தாதி உரை முதலியன அவர்களின் இலக்கிய வன்மையையும் சைவசித்தாந்த சாஸ்திரப் பேருணர்ச்சியையும் கண்கூடாகக் காட்டுவன. இக் காலத்தில் 'வளர்ந்தோர்க்குக் கல்வி' என்று ஒரு கூச்சல் எங்கும் கேட்கப்படுகின்றதல்லவா? வளர்ந்தோரின் உள்ளப்பாங்கு எப்படிப்பட்டது? அவர்கள் அபிலாஷை யாது? என இவற்றை நன்கு ஆராய்ந்தபின்னரே ஆதாரக் கல்வியோ, தொழிற் கல்வியோ, அவர்கட்குப் புகட்டப்படுதல்வேண்டும். அவைகளை ஆராயாது புகட்டப்படுங் கல்வி — இல்லை அந்த வளர்ந்தோர்மீது திணிக்கப்படுங் கல்வி — வெறும் பயனற்றதாகவே கழியும். இக் காலத்தில் எங்கள் மக்களிடத்தில் — முக்கியமாக எங்கள் வளர்ந்தோரிடத்தில் — மனக் கொந்தளிப்பு இருப்பதற்கு நியாயம், பணம் பதவி நிலம் புலம் மனைவி மக்கள் இல்லாமையன்று. இலட்சியம் பொருந்திய வாழ்வென ஒரு வாழ்வு இல்லாமையே இக் காலத்தில் எல்லாரிடத்து மிருக்கின்ற எல்லாவகையான மனக் கொந்தளிப்புகளுக்கும் காரணமாம். எனவே வளர்ந்தோர் கல்வியில் ஊக்கமெடுக்கின்ற எங்கள் அரசினர் வளர்ந்தோர்க்கு இன்று வேண்டியிருப்பது வாழ்க்கையின் இலட்சியமே (Ideal) என்பதை முதலில் உணருதல் வேண்டும். உணர்ந்து — எங்கள் பாரம்பரியமான — ஒரு இலட்சியத்தை உணர்த்த வல்ல — புராண படனம்போன்ற உயர்ந்த முறைகளை எம் நாட்டிற் பரப்புவதற்கு ஆவன செய்தல் வேண்டும். அது நிற்க.

**பதிப்பாசிரியர்கள்**

மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதியருளிய சிவஞானமாபாடியமே திருவாவடுதுறை ஆதீனத்தின் மாபெரும் பொக்கிஷமாகும். அது ஏட்டுச் சுவடிகளில் எழுதப்பெற்றபடியே ஆதீனத்தின் மறை பொருளென நீண்டகாலமாக இருந்திருக்கிறது. அதனை முதலிற் பார்த்து

உணரும் பாக்கியப்பேறு எங்கள் சபாபதி நாவலர் அவர்களுக்கே கிடைத்தது. அவர்கள் ஆதீன வித்துவானா யிருந்தகாலத்தில், சிதம்பரத்தில் வசித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணம் சுவாமிநாதபண்டிதர் எப்படியோ ஒருவாறு மாபாடியத்தின் சிலபாகங்களைப் பெறக்கூடியதா யிருந்தது. அந்த 'மாபாடியத்தின் சில பாகங்களை'ப் பெற்றுப் பிழையறப் பரிசோதித்துத் தாம் தாபித்திருந்த அச்சியந்திரசாலையில் அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்தினார். ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர் ஒப்ப இவர் பகைவருக்கஞ்சா இயற்கையினர். தென்னாட்டி லுள்ள பல ஊர்களிலும் சென்று பகைவர் மத்தியிலும் நின்று சைவப் பிரசங்கங்கள் செய்துவந்தவர். திருச்செந்திலம்பதியில் ஒரு சைவப் பாடசாலை தாபித்து தாமே நடாத்திவந்தவர். மூவர் தேவாரத்தையும் பல ஏட்டுப் பிரதிகளோடும் ஒப்ப நோக்கிப் பரிசோதித்துச் சுத்த பாடமாக அச்சிட்டு வெளிப்படுத்தியவர். தென்னாட்டி லிருந்துகொண்டு சைவ சாஸ்திரங்களையும் சைவத் திருமுறைகளையும் தேடி எடுத்து, அவற்றைப் பிழையறப் பரிசோதிப்பதையும், சுத்த பாடமாக அச்சிட்டு வெளிப்படுத்துவதையும் யாழ்ப்பாணத்துச் சைவப் பெரியார் அனைவரும் உயர்ந்த திருப்பணியெனக் கருதிவந்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை. சமீபத்தில் சூரியனார் கோயில் ஆதீனத்தில் தம்பிரானா யிருந்த ஒருவர் யாழ்ப்பாணத்தவர்; இலக்கண சுவாமிகள் எனப்படும் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் – அவர்கூடத் தம் முன்னோர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நூல்களைப் பிழையறப் பரிசோதிப்பதும் பதிப்பதுமாகவே இருந்தவர். சூரியனார் கோயில் ஆதீனத்தில் எழுந்தருளி யிருக்கும் முத்துக்குமாரசுவாமி தேசிகமூர்த்திகளின் பேருதவியுடன், மாதவச் சிவஞான யோகிகளின் மாபாடியம் முழுவதையும் அதன் பூரண வடிவத்தில் அச்சிட்டு வெளியிட்டவர் அவரேயாகும்.

### இருமொழிப் புலவர்

தாய் நாட்டில் சிலகாலமாக வடமொழி தென்மொழி வேற்றுமை உணர்ச்சி வலுத்துவருகின்றது. அதனால் எத்தனையோ நவீன இயக்கங்கள் தலைகாட்டி வருகின்றன. இந்த வேற்றுமை உணர்ச்சியைப் போக்கி மக்களை உண்மை நெறியில் வளர்க்க வேண்டுமென எத்தனையோபேர் பாடுபடுகின்றனர். எங்கள் நாட்டிலிருந்து தாய் நாட்டிற்குச் சைவத்தொண்டு செய்வதற்கெனச் சென்ற இன்னொரு பெரியார் காசிவாசி செந்திநாதையர் அவர்கள். இவரும் நாவலர் பெருமானின் ஞான பரம்பரையைச் சேர்ந்தவரேயாகும். வடமொழியில்

வேதாகமங்களையும், ஞான சாஸ்திர நூல்களையும் நன்கு ஆராய்ந்தவர். தென்மொழியிலும் அவ்வாறே பக்தி நூல்களிலும் ஞான சாஸ்திரங் களிலும் வல்லுநர். காசி முதல் திருப்பரங்குன்றம் ஈறாக உள்ள இடங் களிற் பற்பல க்ஷேத்திரங்களில் வசித்தவர். சைவ சித்தாந்தப் பேரறி ஞராயிருந்து சைவப்பிரசங்கங்கள் செய்தவர். தம்மை வந்து அடைந் தவர்களுக்கு ஞானாசிரியனாய்த் திகழ்ந்தவர். தம் மாணவரின் வேண்டு கோளுக்கிசைந்து 'சைவ வேதாந்தம்' 'தேவாரம் வேதசாரம்' முதலிய நூல்கள் இயற்றியவர். இந்நூல்கள் வடமொழி தென்மொழிகளுக் கிடையிலுள்ள வேற்றுமை யின்மையை உணர்வதற்கும், வைதிக சைவம் யாதென நுட்ப விளக்கம் கொள்ளுவதற்கும் மிகவும் வாய்ப் புடைத்தான அரும்பெரும் நூல்களாகும். இந்நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுத் தாய்நாட்டிலும் எம் நாட்டிலும் பரப்பப் பெறின் இக்காலத் தில் ஏற்பட்டுள்ள எத்தனையோ விபரீத எண்ணங்கள் எம்மை விட் டகலும். வடநாடு தென்னாடு ஆகிய இரு நாடுகளையும், வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளையும் சமமாக நோக்கி நிற்கும் வைதீக சைவ உணர்வு எங்கும் தழைக்கும்.

# இலங்கை நாட்டுப் பாடல்கள்

திரு. மு. இராமலிங்கம்

நாட்டு மக்கள் பாடிவரும் பாட்டுக்களை நாட்டுப் பாடல் என்பது இக்கால வழக்கு. இப் பாடல்களை யார் இயற்றினார்? அறியோம். இயற்றியவர் இன்னவர் என்று சொல்ல இயலாமையே இந்த இலக்கியத்தின் இலக்கணங்களுள் ஒன்றாம். யாப்பு இலக்கண வரம்பு இகந்து நிற்றல் அதற்கு இன்னுமோர் இலக்கணமாம். இசை இலங்க நிற்றல் இன்றியமையா இலக்கணமாம். பன்னெடுங்காலம் பாமர மக்கள்பால் பயின்று வருதல் பிறிதோர் இலக்கணமாம். இவை மேனாட்டு ஆராய்ச்சியாளர்க்கும் ஒப்ப முடிந்தவை.

இக் கட்டுரையில் இந்த இலக்கணங்கள் எல்லாம் ஒருங்கமைந்த நாட்டுப் பாடல்கள் சிலவற்றை அவற்றின் சந்தர்ப்பங்களோடு தருகின்றோம்.

*　　*　　*　　*

தேசவழமைச் சட்டப்படி யாழ்ப்பாணத் தமிழர் திருமணங்களில் வண்ணானும் அம்பட்டனும் இன்றியமையாத இருவர் ஆவர். விவாக காலங்களில் மாப்பிள்ளை பெண்பிள்ளை இருவருமுடைய குடும்ப விறல் கூறுவதும், மணமகனையும் மணமகளையும் ஆசீர்வதித்தலும், அவர்கள் கடமைகளுட் பிரதான கடமைகளாம். குடும்ப விறல் கூறும்போது, மாப்பிள்ளை வீட்டுக் குடிமக்களுக்கும் பெண்பிள்ளை வீட்டுக் குடிமக்களுக்குமிடையே போட்டி உண்டாகி, கலகங்கள் மூண்டதுமுண்டு இவ் வழமைகள் யாவும் இப்போது அருகியன.

வரிசை வாத்தியங்களுடன் மணமகன் பெண்வீட்டுப் படலையில் வந்து நிற்கின்றான்:

**முத்தாலே ஆலாத்தி முகத்திலே தானெடுத்து**
**பவளத்தால் ஆலாத்தி பக்கத்தில் நின்றெடுத்து**
**ஆலாத்திப் பெண்களெல்லாம் அணியணியாய் நிற்பினையாம்**
**மாமிமார் எல்லோரும் மறைந்துநின்று பார்ப்பினையாம்**
**மச்சாள்மார் எல்லோரும் மதிலேறிப் பார்ப்பினையாம்;**

என்று சொல்லி மணமகனின் குடிமக்கள் வாழ்த்துகிறார்கள்.

இவ்வளவு பெருமையையும் பெண்வீட்டு வாயிலில் வந்து நின்று பேச விடுவார்களா அவளின் குடிமக்கள்! அவர்களும்:

பள்ள வயலுடைய பாண்டியனூர் தன்மகளை
கொள்ளவல்லோ வந்துநின்று கோடிதவங் கொள்ளுகிறார்
பெண்பிறந்தார் வாசலிலே பெட்டிவரும் பேழைவரும்
சீகாழி மேளம்வரும் வெள்ளைக் குதிரைவரும்
அரும்புகுத்திக் காலிகளும் விளிம்புகுத்திச் சேலைகளும்
வயிரகிரிப் பட்டு வாய்த்ததோ வாழ்மயிலே

என்று இகலி வாழ்த்துகிறார்கள் மணமகளை.

இங்கே தங்கள் குடித்தலைவியாகிய மணமகளை உமாதேவியாருக்கு ஒப்பிடுகிறார்கள். 'பாண்டியனூர் தன் மகள்' என்றது உமாதேவியாரை.

தன் மைத்துனன் அல்லாத வேறு ஒருவனை விவாகஞ் செய்து கொள்ளும்படி மணப்பருவம் வந்த பெண் ஒருத்தியை வற்புறுத்துகிறார்கள் பெற்றோர். அக் கன்னி மரத்தின் கீழிருந்து விம்மி அழுது கொண்டிருப்பதை அப் பாதையால் சென்ற ஒருத்தி அவதானித்தாள். மறுகால் அவளை நேரில் சந்தித்தபோது, 'கண்டு விம்மிக் கீழிருந்து கண் கசக்கி ஏன் அழுதாய்?'' என வினவினள். ''நெருக்கம் பொறுக்காமல் நினைச்சழுதேன் மச்சானை'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள் அவள் முந்தியவளின் கேள்வியையும் பிந்தியவளின் மறுமொழியையும் ஒன்று சேர்த்தால்

கண்டு விம்மிக் கீழிருந்து கண்கசக்கி ஏன் அழுதாய்?
நெருக்கம் பொறுக்காமல் நினைச்சழுதேன் மச்சானை.

என்ற கவிச் சித்திரம் நம் கண்முன் மிளிர்கின்றது. இதுவும் ஓர் முஸ்லீம் நாட்டுப் பாடல், திருகோணமலைப் பகுதியில் வழங்குகிறது.

மச்சான் மச்சாள் மணம் கீழைத்தேசமக்கள் பலரிடத்தும் நெடுங்காலம் உள்ளது. பழந்தமிழ் மக்களோடு உறவு பூண்ட முஸ்லீங்களிடையும் இவ் வழக்கம் நிலவுவது வியப்பாகாது.

மன்னார்ப் பகுதிகளில் இக்கவி சிறிது உருமாறி வழங்கி வருகின்றது. ஏட்டுப் பிரதிமூலம் வரும் ஆன்றோர் செய்யுளுக்கே கால இட வேற்றுமைகளால் மாற்றம் உண்டாமாயின், மக்கள் நா மூலம் வரும் பாடல்களுக்கு மாற்றம் எத்துணை உண்டாம்!

கண்டு பிலா மரமே கண்கசக்கி ஏன் அழுதாய்?
நெருக்கம் பொறுக்காமல் நிண்டழுதேன் சந்தியிலே

கண்டு பிலா என்பன கன்று பலா என்னுஞ் சொற்களின் சிதைவு. உலக வழக்கில் இன்றும் இவ்வாறே பெரிதும் வழங்கும். பலாக்கன்று மெல்லிதாயும், நீண்டும், நுனி சடைத்தும் வளரும். இளம் பெண் களைக் கொடிக்கு உவமை கூறுதல் இலக்கிய மரபு.

கூலிக்கு நாற்று நடும் பெண்களும் ஆண்களும் பண்ணையார் வய லில் நாற்று நடுகிறார்கள். மச்சான் மச்சாள் இருவர் அதிற் கலந்து நின்று நாற்று நடுகிறார்கள். மச்சாள் பூப்பெய்திய பின்னர், அவ ளுடைய மச்சான் அவளோடு கதை பேசுவதை நிறுத்திக்கொண்டான். எவ்வளவு வாஞ்சை அவளுக்கிருந்தபோதும், உலகக் கட்டுப்பாட்டுக்கு அமைவாள்போல் அவளும் அவனோடு பேசவில்லை. தனிமையில் சந் திக்கவும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. அப்படிச் சந்திக்குமிடங் களில் எறி கதைகள் எறிந்து பேசுவார்கள். அவ்வளவுடன் இது காறும் திருப்தியுற்று வந்தனர். பாட்டுடன் நாற்று நடுகை வெகு மும்முரமாய் நடக்கின்றது. மச்சானின் பாடும் முறை வரவே:

> மாமி மகள் ஒருத்தி மாம்பழப்புப் போலிருக்காள்
> மாலை ஒன்று சூட்ட ஒரு மாசம் பிறக்குதில்லை

என்றான். எல்லோரும் கொல்லெனச் சிரித்தார்கள். மச்சாள் மாத் திரம் நாணமேலீட்டால் நிலத்தைப் பார்த்தபடியே மௌனமாக நாற்றை நட்டுக்கொண்டிருந்தாள். மச்சானோ பயிர் இல்லாத இடத் தில் நடுவதற்காக உள்ள இடத்தில் ஒரு பயிரைக் கொஞ்சம் ஊன்றி இழுத்தான். 'டப்' என்ற சத்தத்துடன் பயிர் வந்தது. அதன் வேரு டன் வந்த சேறு அவனின்று ஒன்பதாம் ஆளாக நின்று நாற்று நட்ட அவன் மச்சாளின் கண்ணுக்குள்ளே தெறித்தது. மச்சான் இதைக் கவனிக்கவில்லை. மச்சான் தனக்கு மண்ணால் எறிந்தான் போலும் என்று முதலில் நினைத்தாள். கண் கருக ஆரம்பித்தது. தன் முந்தானைத் தலைப்பால் கண்ணுக்குள் விழுந்த சேற்றை மெல்ல எடுக்க முயன்றாள். "என்னடி கண்ணுக்குள்ளே?" என்று கேட்டாள் அய லில் நின்றவள்:

> கல்லால் எறிந்தால் கலகம் வரும் என்றுஎண்ணி
> மண்ணால் எறிந்து மச்சான் மச்சிமுறை கொண்டாடுகிறார்

என்றாள் மச்சாள். நகைத்த நகைப்பில் நாற்று நடுகையே கொஞ்ச நேரம் நின்றுவிட்டது. மச்சானின் மானத்தை வாங்கினார்கள் அவன் அயலில் நின்று நாற்று நட்டவர்கள். அவன் கைகள் பதற்றமெடுத்தன. நினைவு தடுமாறி, தான் என்ன செய்கின்றான் என்பது தெரியாது,

நாற்றை நடுவதற்குப் பதிலாக, நட்ட நாற்றைப் பிடுங்கிக்கொண்டு நின்றான். மற்றவர்கள் ஓரடி முன்னுக்கு எடுத்து வைத்தபின்பே தன் நிலையை உணர்ந்தான்.

மச்சான் மச்சாள் இருவர் மட்டக்களப்பு முஸ்லீங்கள். ஒருவரை யொருவர் காதலித்தனர். சந்தித்துக்கொள்ள முடியாமல் திண்டாடினர் இருவரும். ஒருநாள் காதலியைத் தனிமையிற் சந்தித்தான் காதலன்.

அன்புக் களஞ்சியமே அழகொழுகுஞ் சித்திரமே
கற்புக் கணிகலமே—உன்னைக் காணவென்று காத்திருந்தேன்

என்று சொல்லிக்கொண்டே ஓடிச் சென்று அவளை வழி மறித்தான். நாணமேலீட்டால் அவனைப் பார்ப்பதும், நிலத்தைப் பார்ப்பதும், பின்பு நாற்புறமும் சுற்றிப் பார்ப்பதுமாக நின்றாள் பெண்.

மாமியட புள்ளே மகிழம்பு வாயுடையாள்,
பெருக்கப் பெருக்க—என்னோடு பேசமனஸ் தாபமென்ன

என்று கேட்டான். இதுவரை மௌனமாக நின்ற அவள் ஒருபக்கமாக ஒதுங்கித் தன் வழி செல்ல எத்தனித்தாள்.

அன்ன நடையே, அலங்காரப் பெண் மயிலே,
உன்னாலே என் தேகம் உருக்குலைந்து போகுதடி

என்றான் காதலன் மீண்டும். அதன் பின்பும் மௌனஞ் சாதிப்பதை அவள் விரும்பவில்லை:

என்னை நினைந்து மச்சான் ஏன்கவலை கொள்ளுகிறாய் ?
உன்னுடைய என் சடலம் உனக்கே உரியது கா

என்று சொல்லிவிட்டு எடுத்தடி வைத்தாள். அவன் மீண்டும் அவளைக் குறுக்கே மறித்து.

* சுந்தரியே அம்புயமே, சொல்லுக்கொரு நங்கணமே,
அந்தரித்த என்னை அழைத்தாதரிக்க மாட்டாயா ?

என இரந்தான். அவனை ஆதரிக்க வேண்டுமென்று அவளுக்கும் ஆசைதான். எனினும் காதலர் விருப்பப்படி காரியங்கள் கைகூடுகின்றனவா ?

வாவென் றழைத்திடுவேன், வாசலிலே பாய்தருவேன்,
வாப்பா அறிந்தால் வாளெடுத்து வீசிடுவார்

எனத் தன் வீட்டிலுள்ள கஷ்டத்தைக் கூறுகின்றாள். இருவருக்குமிடையே மௌனம் நிலவியது சிறிது நேரம்.

* அம்புயம் — தாமரை; நங்கணம் — நாகணவாய்.

கல்லும் உருகும் காராம்பசு கண்டனும்
மலையும் உருகும்—கிளியார்உன் மனம்உருக வில்லையோகா.

என மேலும் இரந்தான் காதலன். அருமைபற்றி "காராம்பசு கண்டனும்" என்றான், இன்மைபற்றியன்று.

மாமி மகனே—என்றை மருக்கொழுந்து வெற்றிலையே
இன்பக் கடலே—எனக்கு இரக்கமெல்லாம் உன்மேலே,

என்ற பதில் வந்தது.

அநேகமாகக் காலை நேரங்களில்தான் வயல்களிற் களை பறிப்பார்கள். கானக் கருகலில் ஒரு பெண் வயலுக்குள்ளே தனியே நின்று களை பறிப்பாளேயாயின் அதற்கு ஒரு காரணம் இராமலிராது. காரணம் இருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்வதுபோல்:

கானக் கருகலிலே களையெடுக்கும் பெண்மயிலே
நீலக் கருங்குயிலே—நான் நிற்கட்டோ போகட்டோ?

என்று பாடிக்கொண்டே வந்தான் அவள் காதலன். தேடிய பூடு காலுக்குள் வந்தது அவளுக்கு ஆனந்த மயமான சந்தோஷத்தை அளித்தது. எனினும் அவன் கேட்டுக்கொண்டுவந்த கேள்வி அவளைச் சிறிது நேரம் திண்டாட வைத்தது. மனம் நினைப்பதை வாய்விட்டுச் சொல்ல மறுத்தது.

துள்ளித்திரியும் இளங்காளை அவன். எள் என்னுமுன்னர் எண்ணெய் யாகவேண்டும் என்னும் மனப்பான்மை யுடையவன். வாய்விட்டு வார்த்தை சொல்லத் தயங்குவது தன் காதலை அவள் காற்றில்விடுவது போலிருந்தது அவனுக்கு:

உன்னாசை கொண்டுமல்லோ உலகமெல்லாம் போரானேன்;
என்னாசை உன்னிடத்தில் எள்ளளவும் இல்லையடி.

என்று குத்தலாகச் சொன்னான் காதலன். அச்சொற்கள் அவள் இதயத்தை வாள்கொண் டறுப்பதுபோல் வதைத்தன. எனினும் வெண்ணெய் திரளும்போது தாளியுடைவதை அவள் விரும்பவில்லை உடனே,

நில்என்றால் நிட்டூரம் போஎன்றால் பொல்லாங்கு
பாவி மகனே பழிகள்வரப் போகுதடா.

என எச்சரிக்கை செய்தாள் காதலி. அவனா இந்த மான்விழியாளின் எச்சரிக்கைக்கு மசிபவன்? 'கோடேறி வழக்குப்பேச வந்தாலும்

குற்றந்தான் கொடுக்கவரினும், இல்லை; காதலித்த குற்றத்துக்காகக் கழுவேறவேண்டி வந்தாலும், அவையாவும் அவளைக் கலியாணம்செய்த பின்பே' என்னும் அழுத்தந் திருத்தமான கொள்கையுடையவன்.

பழிகள்தான் வந்தாலும் பத்தெட் டிறுத்தாலும்
கழுவி லிருந்தாலும் காண்பேனடி உன்ஆசை.

என்று சொல்லிவிட்டு, அவள் முன் நட்ட மரம்போல் நின்றான். இவ்வளவு வீரமுள்ள வாலிபனை எந்தப் பெண்தான் விழையாள்? காதலர் இருவரும் கருத்தொருமித்தனர். அவள் மனம் நெகிழ்ந்தது.

முத்தத்து நிலவுஅது அத்தமித்துப் போனபின்பு
அன்பான மச்சான் அணைந்துகொள்ள வந்திடுமே.

என்றாள் காதலி. இருவரும் சந்தோஷமாக அவ்விடம்விட் டகன்றனர்.

நாட்டுப் பாடல்கள் எமக்குச் சேகரித்து அனுப்புவதென்றால் சிலர்க்கு ஒரு தனி இன்பம். அச் சிலருள் காரைநகர், மாணிடல், அன்பரும் ஒருவர். சென்ற ஆவணிமாதம் அவர் மனைவியின் பிரசவகாலம். அது காலை அவர் மருத்துவிச்சியின் தயையை நாடவேண்டி யிருந்தது. ஓடோடியுஞ் சென்று ஒரு மருத்துவிச்சியைக் கொண்டுவந்தார். குழந்தையும் பிறந்துவிட்டது. பிறந்த குழந்தை ஆணோ பெண்ணோ என்றறிய வெளியில் நின்றவர்கள் அவதிப்பட்டனர். உள்ளேயிருந்து ஒரு தகவலும் வருவதாயில்லை. திடீரென மருத்துவிச்சியின் குரல் கேட்டது:

அயலும் புடையும் வாழவும் வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழவும் வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழவும் வேண்டும்
அம்மானும் மாமியும் வாழவும் வேண்டும்.

இவ்வளவும் சொல்லிவிட்டாள். என்ன பலன்? பிறந்த குழந்தை ஆணோ பெண்ணோ என்றறியச் சிக்கலாயிற்றே. தந்தையொடு வெளியில் நின்றவர்கள் அமைதியை இழக்கும் நேரம். அவள் மேலும்,

(1) அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டாரே கொப்பர்

(2) நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

(3) உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி

(4) மஞ்சட் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி

(5) மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி

(6) காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி

(7) இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி

(8) உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி.

இளைய பேரனுக்குப் பால் பருக்கிக்கொண்டிருந்தாள் பாட்டி. உடுத்திவிட்ட சேலையை உரிந்து ஒருகையால் இழுத்துக்கொண்டும், மறுகையின் கட்டை விரலை வாய்க்குள்வைத்துச் சுவைத்துக்கொண்டும், தம்பியார் பால் குடிப்பதைப் பார்த்துக்கொண்டும் நின்றான் தமையன். திடீரென அழுகைக் குரல் கேட்கவே தாயார்வந்து பார்த்தாள். கைக் குழந்தை விம்மி விம்மி அழுகிறான். "பாட்டி அடிச்சாளோ" என வின வினள் தாய். ஓம் என்று சொல்லும் பாவனையாக, சொண்டைக் குவித்தான் குழந்தை. "அண்ணு அடிச்சானோ" என்று மேலும் கேட்டாள் தாய். அண்ணனைப் பார்த்தான் குழந்தை. "கூப்பிட்டுக் கேட்கட்டுமா?" என்றாள் பின். பொக்கைவாயில் சிரிப்புத் தவழ்ந்தது. வாய்விடும் மனித இனத்துக்கும் வாய்விடாத மனித இனத்துக்கு மிடையே நடந்த இச் சம்பாஷணை:

பாட்டி அடிச்சாளோ பால்வார்க்குஞ் சங்காலே,
அண்ணு அடிச்சானோ அரைஞாண் கயிற்றாலே,
ஆண்பனையில் நொங்கே அணில்கோதா மாம்பழமே,
கூப்பிட்டு நான்கேட்பேன் குஞ்சரமே கண்வளராய்.

என்னுந் தாலாட்டுக்கு அத்திவாரமாகத் திகழ்கின்றது. அரிதினும் அரிதான ஒரு பொருளை அத்திப் பூவுக்கும், ஆண்பனையின் நுங்குக்கும், அணில் கோதா மாம்பழத்துக்கும் உவமிப்பது உலக வழக்கு.

நெல் வயல்கள் தகப்பனுக்கு ஏராளமாயுள்ளன. வகை வகையான நெல்லுகளை அவற்றில் விதைத்து வீடுகொண்டுவந்து சேர்ப்பார் அவர். அவற்றுள் நேரிய சம்பா என்னும் நெல்லைச் சும்மா நெரித்தே ஆக்க-

லாம். அதைத்தானும் கூலிகொடுத்துக் குற்றுவித்தே ஆக்கினர். அவர் பெண் மக்கள் சோறு தின்னவே சோம்பற்பட்டு அவர்கள் அவல் இடிப்பித்துத் தின்றூர்கள். காலம் சதிசெய்தது. அவர்களுடைய தகப்பனுர் இப்போது இறந்துவிட்டார். நெல் வயல்கள் யாவும் பிறருக்குச் சொந்தமாய் விட்டன. பிச்சை எடுக்கும் நிலே ஏற்பட்டது. பிச்சை போடுபவர்களும் நெல்லேயே போட்டார்கள். எல்லோரும் ஒரே நெல்லேப் போட்டார்களில்லே. பல நெல்லும் வந்து சேர்ந்தன. பிச்சைப் பெட்டியில் வகைவகையாகப் பிரித்துக் குற்றி ஆக்கலா மென்றூலும் சேர்ந்த நெல்லுப் போதவில்லே. ஒவ்வொரு நெல்லுக்கும் பதம் வெவ்வேருனதால் சேர்ந்த நெல் யாவையும் ஒன்ருய் அவித்துக் குற்றி எடுக்க முடியவில்லே. எனவே அவற்றை இடித்து ஆக்கும் நிலே ஏற்பட்டது.

முன்பின் பழக்கமில்லாதவள் இடிக்கிருள். கைகளிரண்டும் கொப்புளித்துவிட்டன. மேலும் இடித்துக்கொள்ள முடியாமலிருக்கின்றது. பசி வயிற்றைக் குடைகின்றது. கண்கள் பூஞ்சலாடுகின்றன. நிலத்திலே குந்திவிட்டாள். தலே சுழன்றது. பக்கத்தே யிருந்த தூணிற் சாய்ந்தாள். பழைய ஞாபகங்கள் உதயமாயின. சலிப்புச் சலிப்பாய் வந்தது. வாய் பேசியது. கண்கள் நீரைக் கக்கின. என்ன சொல்வது, ஏது செய்வது எனத் தெரியாத நிலேயில் வார்த்தைகள் வெளிவந்தன:

> புங்கம் வயலில் நெல்லு—அப்பு புக்கைக்கோ ஏற்ற நெல்லு,
> ஆலம் வயலில் நெல்லு—அப்பு அவலுக்கோ ஏற்ற நெல்லு,
> நேரிய சம்பா நெல்லு—உமதுமக்கள் நெரித்தாக்க மாட்டாமல்
> ஏழூரிப் பிச்சை நெல்லு—இப்போ இடிச்சாக்க வல்லவையோ.

வறுமை கொடிது எனினும் வறுமை வாராக்கால் சங்க இலக்கியத்தில் சில அரிய பாட்டுக்களேயும், நாட்டினர் இலக்கியத்தில் இதுபோன்ற அரிய பாடல்களேயும் நாம் யாங்ஙனம் பெற்றிருப்போம்!

காலேயும் மாலேயும், கோடையும் மாரியும், புருஷனும் மனேவியும் வயலுக்குள் நின்று தினமும் வேலே செய்து வந்தார்கள். புருஷன் குப்பை அள்ளிக்கொட்ட மனேவி இருந்த இரையில் பரவுவாள். புருஷன் துலாவில் ஏற மனேவி பட்டையிற் கை பிடிப்பாள். சிறு சுமையை மனேவிக்குத் தூக்கிவிட்டபின் பெருஞ் சுமையைத் தான் தூக்கிச் செல்வான். இப்போது சில காலமாக மனேவி தனித்து நின்றே வயலுக்குள் வேலே செய்து வருகிருள். புருஷன் இறந்துவிட்டான். அவனுடைய ஒப்பாரி இது:

(1) கனக்கச் சுமக்கவிடார்—என்னைக் கைநோகச் செய்யவிடார்;
வேலை பொறுக்கவிடார்—என்னை வெய்யிலிலே நிற்கவிடார்.

(2) கனக்கச் சுமக்கிறேனே—நானும் கைநோகச் செய்கிறேனே;
வேலை பொறுக்குதனை—நானும் வெய்யிலிலே நிற்கிறேனே.

(3) செல்வம் நிலைக்கவில்லை—எனக்குச் சேர்ந்திருக்கக் கிடைக்கவில்லை;
வறுமை நிலைச்சுதனை—எனக்கு வாழ்ந்திருக்கக் கிடைக்கவில்லை.

(4) கைவிசேஷக் காரியேனை—நானும் கன்னிசிறை யானேனேனை;
முழுவியளக் காரியேனை—நானும் மூலைசிறை யானேனேனை.

(5) கோவில் தலமிழந்தேன்—நானும் கும்பிட்ட கையிழந்தேன்;
தீர்த்தக்கரை யிழந்தேன்—நானும் திருநீற்றுப் பூச்சிழந்தேன்

(6) தாலிக்கோ முந்தாமே—நானும் தலைவனையோ தோற்றுவிட்டேன்;
கூறைக்கோ முந்தாமே—நானும் கொழுநனையோ தோற்றுவிட்டேன்.

*தாலிக்கு முந்துவது என்பது மனைவி கணவனுக்கு முந்தி இறப்பது. இது முற்பிறப்பிற் செய்த புண்ணியம் ஆகுமென்பர் பெண்கள்.*

# யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிர்த்திச் சங்கம்

திரு. அ. சரவணமுத்து, காரியதரிசி

பண்டிதர், பாவலர், பாஷாபிமானிகள் முதலாய பலர் உடனிருந்து துணையாற்ற, யாதேனுமொரு மதத்தினர்க்காவது அல்லது குழுவினர்க்காவது சிறப்புரிமை பூணுது, நாடு, மொழி, நிறம், பிறப்பு முதலிய பாகுபாடுகளின்றி உயர்ந்த கொள்கையோடு இச் சங்கம் கிறிஸ்தாப்தம் 1921–ல் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பெற்றது. இதின் நோக்கம் வடமொழி தென்மொழிகளிலுள்ள புராதன நூற் கல்வியோடு அவற்றின் புராதன வரலாற்று ஆராய்ச்சியை ஊக்கப்படுத்தி இருமொழிக் கல்வியையும் வளர்த்தலாம்.

பற்பல அறிஞர்கள் முன்னரே தமிழ் வளர்ச்சி கருதி உழைத்தாராயினும், சங்கமாகக் கூடி முயற்சிசெய்வதில் ஈடுபட நிறுவப்பட்டது இச் சங்கமேயாகும். இது செய்துவரும் பல்வேறு பணிகளையும் நன்கு கவனித்த இலங்கைப் பல்கலைக் கழகத்தார் அதன் பேரவைக்கு இரு உறுப்பினரைத் தெரிந்து அனுப்பக் கொடுத்துள்ள உரிமையே சங்கத்தின் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

சென்ற இருபத்தெட்டாண்டுகளாகச் சங்கம் ஒழுங்காகப் பரீட்சைகள் நடாத்திவந்துள்ளது. இது நம் ஈழவள நாட்டில் பலர் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உயர்ந்த அறிவைப் பெறுதற்கு ஏதுவாயிற்று. இச் சங்கப் பரீட்சையிற் சித்திபெற்றோர் பாடசாலைகளிலும் மற்றுந் தொழிற்றுறைகளிலும் அதிகமாக நன்கு மதிக்கப்படுதற் குரியராவர். ஆங்கிலம் முதலிய மேற்றிசைமொழிகள் பெற்றுள்ள கலைவளத்தை நமது தமிழ் முதலிய கீழ்நாட்டு மொழிகள் பெறுமையால், கீழ்நாட்டு மொழிகளையும் அம்மொழிகளில் வித்துவான், பண்டிதர்களாயுள்ளவர்களையும் தாழ்வுபடுத்தும் எண்ணம் சுதந்திர இலங்கையில் மறைந்து போவதற்கான முயற்சிகளை இச்சங்கம் செய்து வருகின்றது. இதற்காகச் சங்கப் பரீட்சைகளும் 1952–ம் ஆண்டு தொடக்கம் புதிய சில அம்சங்களையும் ஏற்பாடுகளையும் கொண்டனவாயுள்ளன. அவ்வாண்டு தொடக்கம் இச் சங்கப் பரீட்சைகள் பல்கலைக் கழகப் பரீட்

சைகளோடொப்பப் படிமுறையான தோற்றுதல்களுக் குரியனவா யிருக்கும். இன்னும் தமிழ்ப் பண்டிதர்கள் பல் கலைத் தேர்ச்சியும் வாய்ந்திருக்க வேண்டுமென்னும் கருத்தினால், இது காலவரையும் இருந்த பாடத்திட்டத்திற் பிரதான இடம் பெற்றுள்ள இலக்கண இலக்கியங்களுடன் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் சமயங்களும், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, அரபு, சிங்களம் என்னும் மொழிகளும், கணிதம், விஞ்ஞானம், பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம், சரித்திரம், பொருளாதாரம், தருக்கம் முதலிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும் மகாநாடுகள்கூட்டி அறிவுரைகள் நிகழ்த்துவதிலும், நூல்கள் பத்திரிகை வெளியிடுவதிலும் சங்கப் பரீட்சைகளுக்குரிய வகுப்புகள் நடாத்துவதிலும் இச் சங்கம் பெரும் முயற்சி செய்துவருகின்றது. இன்னும் தமிழ்ப் பணியில் முன்னின்ற அன்பர்களின் வெளியீடுகளுக்குச்செய்த உதவிகளும் பலவாகும். சங்கஞ்செய்த வேலைக ளெல்லாவற்றுள்ளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது சங்க வெள்ளி விழாக் கொண்டாடியமையாகும். இது 1950-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10, 11-ந் தேதிகளில் பரமேஸ்வரக் கல்லூரி மண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது. இலங்கைப் பிரதமர் மகாகனம் டி. எஸ். சேனநாயகா அவர்கள் ஆரம்பித்துவைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் தெய்வாதீனமாக ஏற்பட்ட தடையால் அவர் மகனார் கிருஷிக மந்திரி கௌரவ டட்லி சேனநாயகா அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள். விழாவில் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பல அறிஞர்கள் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். அன்றியும் அதன் ஞாபகமாக வெள்ளி விழா மலரொன்றும் வெளியிடப்பட்டது. தமிழ்ப் பேரறிஞர் பலர் கட்டுரை எழுதி உதவினார்கள். இம் மலரின் அரிய கட்டுரைகளை யுணர்ந்த இச் சங்க வித்தியாலோசனைச் சபையார் 1952-ம் ஆண்டு தொடங்கிப் பாலபண்டித பரீட்சைக்கு இலக்கிய நூல்களிலொன்றாய்த் தெரிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழவள நாட்டில் தமிழ் வளர்ச்சிக்கு ஏதுவான இசைக் கலையும், தமிழ் ஆராய்ச்சிக்கு இன்றியமையாததான வடமொழி யறிவும், ஒத்துப் படித்து அறிதற்கும், தமிழ்த்துறை ஆராய்ச்சி செய்து தமிழர் நாகரீகத்தைப் பரப்புதற்கும் வாய்ப்பான ஒரு கல்லூரி அல்லது ஒரு அறிவு நிலையம் இத்துணைநாளும் இல்லாமற் போனது பெரிதும் இரங்கத்தக்கது. நீண்ட நாட்களாய்க் கிடந்துவரும் இக் குறையினைப் போக்கி எல்லாத் தமிழ் நன்மக்கட்கும் ஓர் ஊருணி என்னும்படி




[ அமைக்கப்படவிருக்கும் கல்லூரியின் மாதிரிப் படம். ]

ஒரு தமிழ் ஆராய்ச்சித் துறைக் கழகத்தினை விரைந்து அமைத்தல் வேண்டுமென்று மேற்படி சங்கத்தார் முடிவு செய்திருக்கின்றார்கள். வெள்ளி விழாக் கொண்டாடிய நன்முகூர்த்தத்தில், நீண்டகாலக் குத்தகைக்குப் பரமேஸ்வரக் கல்லூரியின் அதிகார சபையினர் மனமுவந்தளித்த நிலத்திற் சங்கக் கல்லூரிக்கு அஸ்திவாரக் கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இக் கழகத்திற்கு ஆயிரம் ரூபா நன்கொடை யளிப்பவர்களை அதன் தர்ம கர்த்தாக்களாக நியமிப்பதென்றும், நூறு ரூபா நன்கொடை யளிப்பவர்களைச் சங்கத்தின் சாஸ்வத அங்கத்தவர்களாக நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. சில வள்ளல்கள் ஆயிரம் ரூபா நன்கொடை யளிக்க முன்வந்துள்ளார். இக் கல்லூரிக்கான கட்டடச் செலவு குத்துமதிப்பாய் எண்பது ஆயிரம் ரூபாய்கள் ஆகும் என மேற்படி சங்கத்தார் எண்ணுகின்றனர். இறைவனருளாற் பொருட் செல்வம் வாய்க்கப்பெற்று ஈர நெஞ்சமும் மொழிப் பற்றுமுள்ள தமிழ் வள்ளல்கள் நமது நாட்டில் இல்லாமற் போகவில்லை. பொருட் செல்வம் மிக்க செல்வர்கள் தலைக்கு ஆயிரம் ரூபாய்கள் விழுக்காடு எண்பதுபேர் உதவினூர் என்றூற் கருமம் இலகுவிற் கைகூடும்.

மேலும் நமது நாட்டில் தமிழ் ஆராய்ச்சி செய்து தமிழை வளப்பஞ் செய்த சங்க அன்பர்களி லொருவரான ஸ்ரீமத் சுவாமி ஞானப்பிரகாசர் O. M. I. அவர்கள் நினைவுக்கு அடையாளமாய் ஆராய்ச்சி நிலையம் வழங்கப்படல் வேண்டுமென்று சங்கம் தீர்மானித்திருக்கின்றது. இசைநூல் ஆராய்ச்சி செய்து தமிழ் இசைக் கல்விக்கு உதவி செய்த அறிஞர் ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் நினைப்புக் குறியாய் இசைக் கல்லூரி வழங்கப்பட்டு வரல் வேண்டும். இனி இக் கழகத்தில் நூலாராய்ச்சி செய்வதற்கு வாய்ப்பான ஒரு நூல் நிலையமும் அங்கு அமைத்துக்கொள்ளல் வேண்டும். சங்க ஸ்தாபகராக இருந்து பல்லாண்டுகளாகப் பணிசெய்து தமிழ்வளம் பெறப் பெரிதும் உழைத்த முகாந்திரம் ஸ்ரீ. தி. சதாசிவஐயர் அவர்களின் ஞாபகார்த்தமாக இது நிறுவப்பட வேண்டுமென்றும் இச் சங்கம் உத்தேசித்துள்ளது.

இவையன்றித் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தலும், இறவாத புகழுடைய நூல்கள் எழுதுவார்க்கு "நோபல்" பரிசுபோன்ற பரிசில்கள் அளிக்க மூலதனம் ஏற்படுத்தலும், பல்கலைப் பொருளும் ஒருங்கே கூறும் நூற்றெருகுதிகளை வெளியிடுதலும் சங்க நோக்கங்களிற் பிரதானமானவையா யுள்ளன. இவையெல்லாம் இனிதுகூடி "இருந்தமிழே யுன்னுலிருந்தேன்" என்னும் பண்புடைமையைத் தமிழ் மக்கள் யாவருமெய்த யாவரும் முயலுவோமாக.

# நான்காம் தமிழ் விழா

### நிருவாக சபை

1. தலைவர்: திரு. எஸ். நடேசபிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்., சுன்னாகம்
2. உபதலைவர்கள்: 1. கௌரவ கே. கனகரத்தினம் அவர்கள், கல்வி மந்திரி, வட்டுக்கோட்டை
   2. திரு. எஸ். தொண்டைமான் அவர்கள், எம். பி., ரம்பொடை.
3. காரியதரிசிகள்: 1. திரு. க. நவரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம்
   2. முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள், வட்டுக்கோட்டை
4. தனாதிகாரிகள்: 1. டாக்டர் வி. குருசாமி அவர்கள், யாழ்ப்பாணம்
   2. திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள், பி. ஏ., சுன்னாகம்

### அங்கத்தவர்கள்

1. திருமதி செல்லம்மா பெருமாள்பிள்ளை அவர்கள், எம். ஏ., சுன்னாகம்
2. ,, மகேஸ்வரிதேவி நவரத்தினம் ,, யாழ்ப்பாணம்
3. ,, அருந்தவநாயகி கனகராயர் ,, தெல்லிப்பழை
4. திரு. ஏ. ஈ. தம்பர் அவர்கள், பி. எஸ்ஸி., யாழ்ப்பாணம்
5. ,, எஸ். எச். பேரின்பநாயகம் அவர்கள், பி. ஏ., மானிப்பாய்
6. ,, எம். ஆர். காராளசிங்கம் அவர்கள், வழக்கறிஞர், யாழ்ப்பாணம்
7. ,, கே. சண்முகம் அவர்கள் ,, யாழ்ப்பாணம்
8. ,, ஆர். என். சிவப்பிரகாசம் அவர்கள், ,, மல்லாகம்
9. ,, எஸ். சுவாமிநாதன் அவர்கள், பி. ஏ., மயிலிட்டி
10. ,, வி. விஞசித்தம்பி அவர்கள், வழக்கறிஞர், கோண்டாவில்
11. ,, வி. மாணிக்கவாசகர் அவர்கள், வழக்கறிஞர், கொக்குவில்
12. ,, வி. அருளம்பலம் அவர்கள், வழக்கறிஞர், கொக்குவில்
13. ,, அ. அருளம்பலம் அவர்கள், வழக்கறிஞர், யாழ்ப்பாணம்
14. ,, கே. ஐயாத்துரை அவர்கள், வழக்கறிஞர், யாழ்ப்பாணம்
15. ,, எஸ். ஆர் கனகசபை அவர்கள், கோப்பாய்
16. ,, ரீ. கே. இராசசேகரம் அவர்கள், எம். ஏ., தெல்லிப்பழை
17. ,, ஏ. டபிள்யூ. இராசசேகரம் அவர்கள், பி. ஏ., யாழ்ப்பாணம்
18. ,, வி. இராசசேகரம் அவர்கள், யாழ்ப்பாணம்
19. ,, கே. ஏ. கனகசபை அவர்கள், யாழ்ப்பாணம்
20. முதலியார் வி. முத்துத்தம்பி அவர்கள், யாழ்ப்பாணம்
21. திரு. எஸ். கந்தையா அவர்கள், நூதனசாலை, யாழ்ப்பாணம்

22. திரு. அ. மார்க்கண்டன் அவர்கள், பி. ஏ., பி. எஸ்ஸி., சுன்னாகம்
23. வண. சுவாமி. மதுரைநாயகம் அவர்கள், ஓ. எம். ஐ., யாழ்ப்பாணம்
24. திரு. ஐ. பி. துரைரத்தினம் அவர்கள், பி. எஸ்ஸி., தெல்லிப்பழை
25. ,, என். தம்பிரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம்
26. ,, இராஜ அரியரத்தினம் அவர்கள், சாவகச்சேரி
27. ,, ஆர். மருதையனார் அவர்கள், சரவணை
28. ,, எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள், எம். ஏ., யாழ்ப்பாணம்
29. ,, பீ. நவரத்தினம் அவர்கள், எம். ஏ., காரைநகர்
30. ,, எஸ். அம்பலவாணர் அவர்கள், பி. ஏ., மட்டக்களப்பு
31. ,, ஆர். இராசரத்தினம் அவர்கள், மட்டக்களப்பு
32. ,, வூ. சரவணமுத்து அவர்கள், தெல்லிப்பழை
33. ,, எம். எம். அப்துல் காதர் அவர்கள், பி. ஏ., யாழ்ப்பாணம்
34 ,, சீ. எஸ். கே. நமசிவாயம் செட்டியார் அவர்கள், யாழ்ப்பாணம்
35. ,, எஸ். கே. வேலாயுதபிள்ளை அவர்கள், நீர்வேலி
36. வித்துவான் எஸ். ஆர். கந்தசுவாமி அவர்கள், கரவெட்டி
37. திரு. ரீ. இராமலிங்கம் அவர்கள், எம். பி., பருத்தித்துறை
38. ,, ஆர். செல்லையா அவர்கள், யாழ்ப்பாணம்
39. ,, வீ. கார்த்திகேசு அவர்கள், யாழ்ப்பாணம்
40. ,, ரீ. சீனிவாசகம் அவர்கள், யாழ்ப்பாணம்
41. பண்டிதர் எஸ். ஆறுமுகம் அவர்கள், வலி-மேற்கு
42. திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள், வலி-மேற்கு
43. ,, ஏ. கே. ஆறுமுகத்தம்பி அவர்கள், அநுராதபுரம்
44. ,, வீ. ரீ. ஞானசூரியம் அவர்கள், மட்டக்களப்பு
45. பண்டிதர் ஏ. சரவணமுத்து அவர்கள், திருகோணமலை
46. திரு. ஆர். நமசிவாயம் அவர்கள், வழக்கறிஞர், கொழும்பு
47. ,, ஆர். ஏ. நடேசன் அவர்கள், கொழும்பு
48. ,, பீ. என். திருநாவுக்கரசு அவர்கள், யாழ்ப்பாணம்
49. ,, ஏ. எஸ். கனகரத்தினம் அவர்கள், சாவகச்சேரி

திருமகள் அழுத்தகம், சுன்னாகம், இலங்கை.